வண்ணச்சரபம்

தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள்

ஆய்வுப் பதிப்பு

தொகுதி - 1

பிள்ளைத்தமிழ்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

பதிப்பு
அ. சதீஷ்

வண்ணச்சரபம்

தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள்

ஆய்வுப் பதிப்பு

தொகுதி – 1

பிள்ளைத்தமிழ்

பதிப்பு

அ. சதீஷ்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை - 600 113.

2019

நூல் விவரக் குறிப்புகள்

நூலின் பெயர்	:	**தண்டபாணி சுவாமிகள் படைப்புகள் : பிள்ளைத்தமிழ்**
பதிப்பாசிரியர்	:	**அ. சதீஷ்**
வெளியீட்டாளரும் பதிப்புரிமையும்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம் தரமணி, சென்னை - 600 113. தொலைபேசி எண் : 044 - 2254 2992
வெளியீட்டு எண்	:	1012
பதிவு எண் (ISBN)	:	978-93-88972-15-4
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
வெளியீட்டு ஆண்டு	:	2019
தாள்	:	70 ஜிஎஸ்எம் என்.எஸ். புக் பிரிண்ட்
நூல் அளவு	:	1/8 டெம்மி
எழுத்தின் அளவு	:	12 புள்ளி
அச்சுப்படிகளின் எண்ணிக்கை	:	1000
பக்க எண்ணிக்கை	:	xxiv + 264
விலை	:	₹ 225/-
அச்சகம்	:	நவநீதம் அச்சகம் சென்னை
பாடம்	:	இலக்கியம்

பதிப்பு உருவாக்கக் குழு

ஆலோசகர்கள்
முனைவர் கோ. விசயராகவன்
தவத்திரு குமரகுருபர சுவாமிகள்
பேராசிரியர் சு. வேங்கடராமன்
பேராசிரியர் ஐ.கே. சுப்பிரமணியன்
முனைவர் கி. ஜெயகுமார்

முதன்மை ஆய்வாளர்
சு. கலைவாணி

ஆய்வாளர்கள்
இரா. சண்முகம்
கா. முரளி

கணினி அச்சு
ச. வாசுகி
மணிச்செல்வி

நூல் மற்றும் அட்டை வடிவமைப்பு
கதிர்

முனைவர் கோ. விசயராகவன்
இயக்குநர் (மு.கூ.பொ)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600113

அணிந்துரை

19ஆம் நூற்றாண்டில் அச்சு ஊடகம் பரவலாகத் தொடங்கியது. ஓலைச்சுவடிகளில் இருந்த தமிழ் இலக்கிய இலக்கணங்கள் அச்சு நூல்களாக மாறின. தனி நபர்களுடன், பல்வேறு நிறுவனங்களும் இப்பணியில் ஈடுபட்டன. பழந்தமிழ் நூல்கள் பதிப்பிக்கப்பட்டதன் விளைவாகவே தமிழர் வரலாறு மீட்டுருவாக்கம் செய்யப்பட்டது. பதிப்புப்பணி என்பது தொடர்பணியாகும். புதிய தரவுகள் கிடைப்பதும் முறையியலில் ஏற்படும் வளர்ச்சியும் புதிய பதிப்புகளுக்கு அடிகோலுகின்றன. ஓலைச்சுவடிகளில் இருந்த அனைத்து நூல்களும் பதிப்பிக்கப் பட்டுவிட்டன என்று கூறமுடியவில்லை. இன்னும் பதிப்பிக்கப் படாத ஏராளமான நூல்கள் சுவடிகளில் உள்ளன. இவைகள் பதிப்பிக்கப்படும்போது தமிழ்ச்சமூகத்தின் வரலாறு மற்றும் அதன் பண்பாட்டு மரபுகள் குறித்த பார்வை விரிவடையும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஓலைச்சுவடிகள் குறித்துச் சிறப்பு கவனத்துடன் செயல்பட்டுவருகிறது. உயராய்வு நிறுவனத்தில் ஆய்வுகள் எவ்வளவு முதன்மையானவையோ அதே அளவு மூலங்களை முறையாகப் பாதுகாப்பதும் அவசியமாகிறது. அந்த வகையில் நிறுவனத்தில் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம் உருவாக்கப்பட்டு சுவடிகள் முறையாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இம்மையத்தின் வழி அரிய ஓலைச்சுவடிகள் மின் எண்மம் செய்யும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பதிப்பு செய்வோருக்கான மூலத்தரவுகள் எளிமையாகக் கிடைக்க நிறுவனம் முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

தமிழ் நூல்களுக்கு ஓலைச்சுவடிகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுப்பதிப்புகள் கொண்டுவரவேண்டியது அவசிய மான பணியாக அமைகிறது. அந்த வகையில் பெரும்புலமை யாளரான வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய படைப்புகளில் பெரும்பாலானவை சுவடிகளில் உள்ளன.

இவற்றை முறையாகப் பல்வேறு தொகுதிகளாகப் பதிப்பிக்கும் பணி தற்பொழுது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்று வருகிறது. அத்திட்டப்பணியின் முதலாவது நூலாக இந்நூல் வெளிவருகிறது.

இத்திட்டப்பணியினை நிறுவனத்தில் நிகழ்த்துவதற்கான நிதியினை அளித்ததுடன் கௌமார மடாலயத்திலுள்ள சுவடிகளையும் இப்பணிக்காகக் கொடுத்துதவியவர் கௌமார மடாலயத்தின் தலைவர் தவத்திரு குமரகுருபர சுவாமிகளாவார். நிறுவனங்கள் இணைந்து செயல்படுவதன் மூலம் பயனுள்ள பணிகளைச் செய்யமுடியும் என்பதற்கு இது நல்ல உதாரணமாக அமைகிறது. அதற்காக கௌமார மடாலயத்தின் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தமிழ்வளர்ச்சிக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு ஒல்லும் வகையெல்லாம் தமிழ் வளர்த்து வந்த மேனாள் தமிழ்நாட்டு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றேன்.

தமிழ்வளர்ச்சிக்கும் இந்நிறுவன வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் **மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி** அவர்களுக்கும் இவருக்கு இணையாகத் தமிழை வளர்த்துவரும் **மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை** அமைச்சரும் **உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவருமாகிய திரு. க. பாண்டியராஜன்** அவர்களுக்கும் தமிழ் வளர்ச்சியில் எங்களை வழிநடத்திவரும் **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு. ஆ. கார்த்திக் இ.ஆ.ப. (மு.கூ.பொ.)** அவர்களுக்கும் என் இனிய நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இப்பதிப்புப் பணியினை ஒருங்கிணைத்துச் செயல்படும் இந்நிறுவனத்தின் தமிழிலக்கியம் மற்றும் சுவடியியல் புலத்தின் இணைப்பேராசிரியர் அ. சதீஷ் அவர்களுக்கும் அவரோடு துணைபுரிந்த ஆய்வுத் திட்ட உதவியாளர்கள் மற்றும் நூல் வெளிவரக் காரணமாக இருந்த நிறுவனப் பணியாளர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இயக்குநர்

சிரவை ஆதீனம்
தவத்திரு குமரகுருபர சுவாமிகள்
கௌமார மடாலயம்
கோவை - 641 049

ஆசியுரை

நமது ஆதீனத்தின் ஆதி குருமுதல்வராக விளங்கிய தவத்திரு இராமானந்த சுவாமிகளின் ஞானகுருவாக விளங்கியவர் மகான் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். இதன் காரணமாக நமது ஆதீனத்தின் ஞான பரம்பரையினரும் அடியவர்களும் இவரைத் தாத்தா சுவாமிகள் என்றே அழைகின்றனர். இரண்டாம் பட்டம் கந்தசாமி சுவாமிகளும் மூன்றாம் பட்டம் சுந்தர சுவாமிகளும் இவர் மீது அளப்பரிய பக்தி செலுத்தியதுடன் இவரது புலமையை வெளியுலகிற்குப் பரப்பவும் பெரிதளவு முயன்றனர். இவரது நூல்களை வெளிக்கொணரவும் இவரது நூல்களில் ஆய்வு நிகழ்த்தவும் நமது ஆதீனம் தொடர்ந்து முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

*வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் **(1839 - 1898)** திருநெல்வேலியில் அவதரித்தவர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிய அனைத்துவிதமான தமிழ்க்கவிதை மரபுகளையும் உள்வாங்கித் தமக்கான புலமைப் பாதையை உருவாக்கியவர். இசை ஒழுங்கும், பொருளாழமும், தெளிந்த நடையும் கொண்டவை இவர்தம் படைப்புகள். ஆறுவகை சமய நெறியைப் பின்பற்றித் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று இவர் இறை வழிபாடு செய்ததுடன் அங்கங்கு எழுந்தருளியிருக்கும் கடவுளர் மீது பாடல்களைப் பாடினார். இலக்கியம், இலக்கணம், தத்துவம், தன்வரலாறு, புராணம் என்று பல்வேறு துறைகளில் நூல்களை இயற்றியுள்ளதுடன் அந்நிய ஆட்சிக்கு எதிர்ப்பு, பெண்ணுரிமை காத்தல், புலால் மறுத்தல் என்னும் பல்வேறு சமூக சிந்தனை களையும் தம் கவிதையின் பாடுபொருளாகக் கொண்டவர்.*

இவரது படைப்புகள் பல ஓரிரு முறை பதிப்பாகியுள்ளன. பல இன்னும் சுவடிகளில் பதிப்பிக்கப்படாமல் உள்ளன. நமது ஆதீனத்தின் முயற்சியால் புலவர் புராணம், நெல்லைக் கலம்பகம்

முதலான நூல்கள் வெளிவந்தன. திருவாமாத்தூர் கௌமார சபையினர் பல நூல்களைக் கொண்டுவந்தனர். இவற்றையெல்லாம் சுவடிகளோடு ஒப்பு நோக்கி அவரது அனைத்துப் படைப்பு களுக்கும் திருத்தமான பதிப்பினைக் கொண்டு வரவேண்டும் என்பது நமது பெருவிருப்பம். அதற்கான முயற்சி தொடர்ந்து நடைபெற்று வந்தன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து அதற்கான பணிகள் தொடங்கப்பட்டன. நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்கள் தட்டச்சு செய்யப்பட்டு கணிணியில் பாதுகாக்கப் பட்டுள்ளன. பல்வேறு தொகுதிகளாக இவற்றைக் கொண்டுவரும் முயற்சியில் முதல் தொகுதியாக இந்தப் பிள்ளைத்தமிழ் நூல் வெளிவருவது மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. அனைத்துத் தொகுதிகளும் விரைவில் வெளிவர இறையருளும் குருவருளும் துணைபுரியட்டும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இப்பணி நடைபெற அனுமதியளித்து நூலினை வெளியிட்டுதவும் நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்களுக்கு என்னுடைய மகிழ்வைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இப்பதிப்புத் தொடங்கும் காலத்தில் தக்க ஆலோசனைகளை வழங்கிய, மறைந்த பெரும்புலவர் ப.வெ. நாகராஜன் ஐயா அவர்களை நினைந்து போற்றுகின்றேன்.

இப்பதிப்புப் பணியை நெறிப்படுத்திவரும் பேராசிரியர் சு. வேங்கடராமன் மற்றும் பேராசிரியர் ஐ.கே.சுப்பிரமணியன் ஆகியோருக்கும் எனது மகிழ்வைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சுவடிகளைப் பெயர்த்தெழுதிக் கணினி அச்சு செய்வதற்கான நிதியுதவியை வழங்கிய கௌமாரம் சுசீலா பன்னாட்டு உறைவிடப் பள்ளியின் நிறுவனர் தேவ பிரகாஷ் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இலக்கிய வகைமை அடிப்படையிலும் பொருண்மை அடிப்படையிலும் பல தொகுதிகளாக வெளியிடத் திட்டமிடப் பட்டுள்ள இப்பணியினை ஒருங்கிணைத்து, தமது ஆய்வு மாணவர்களோடு செயல்பட்டுவரும் உலகத் தமிழாராய்ச்சி

நிறுவனத்தின் இணைப் பேராசிரியர் அ. சதீஷ் அவர்களும் அவரது மாணவர்கள் அனைவரும் குருவருளாலும் இறைவனின் திருவருளாலும் எல்லா நன்நலன்களும் பெற்று நீடினிது வாழ வாழ்த்துகின்றோம்.

குமரகுருபர சுவாமிகள்

பதிப்புரை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்புலமை யாளர்களில் ஒருவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். இலக்கியம், இலக்கணம், சமயம், தத்துவம் முதலிய பல துறைகளில் அழுத்தமான பங்களிப்பனை நிகழ்த்தியுள்ளார். இவர்தம் படைப்புகளில் சில, அவர் வாழ்ந்த காலத்திலேயே அச்சு வாகனம் ஏறின. காகிதங்கள் மிகுதியான புழக்கத்திற்கு வந்திருந்த பொழுதும் இறுதிவரை ஓலைச்சுவடிகளிலேயே தம் படைப்பு களைப் பதிவு செய்துள்ளார். தம்முடைய காலத்தில் நிலவிய இலக்கிய வகைமைகள் அனைத்திலும் பாடல்களைப் புனைந் துள்ளதுடன் பழங்காலத்தில் நிலவிய அரிதான சில இலக்கிய வகைகளிலும் பாடல்களைப் புனைந்துள்ளார். யாப்பும், இசையும் பொருளும் இவரது பாடல்களில் இழைகின்றன. நுட்பமான, அரிதான யாப்பு வடிவங்களை மீட்டெடுத்து கவிபுனைந்துள்ள துடன் தமக்கு முந்தைய அறிவு மரபுகள் அனைத்தையும் ஆவணப்படுத்தவேண்டும் என்ற வரலாற்று ஓர்மையுடனும் செயல்பட்டுள்ளார்.

தண்டபாணி சுவாமிகளின் படைப்புகளில் அறுவகை இலக்கணம், புலவர் புராணம் முதலான சில நூல்களே மீண்டும் மீண்டும் அச்சாகியுள்ளன. பல நூல்கள் ஒருமுறை மட்டுமே அச்சாகியுள்ளன. இவ்வாறு அச்சான நூல்களில் சில தற்பொழுது எங்குமே கிடைக்காத நிலையிலுமுள்ளன. இன்னும் பல்லாயிரக் கணக்கான பாடல்கள் பதிப்பிக்கப்படாமல் ஓலைச்சுவடி களிலேயே உள்ளன. இதுவரை அச்சாகாத படைப்புகளைப் பதிப்பிக்கவேண்டும் என்பதுடன் அச்சான படைப்புகளையும் சுவடியுடன் ஒப்பு நோக்கித் திருத்தமான பாடத்துடன் கூடிய ஆய்வுப் பதிப்பு கொண்டுவரவேண்டியது அவசியமான பணியாகிறது. அச்சான படைப்புகள் பலவும் பல்வேறு சிக்கல் நிறைந்தனவாக உள்ளன. மூலத்திற்கு நெருக்கமான பதிப்புகளாக

அவைகள் அமையவில்லை. இந்நிலையில் தற்பொழுது கிடைக்கும் தண்டபாணி சுவாமிகள் படைப்புகள் அனைத்தும் (சில சுவடிகள் நீங்கலாக) அவர்தம் கைப்பட எழுதிய ஓலைச்சுவடிகளில் உள்ளன. இச்சுவடிகள் கோவை கௌமார மடாலயத்திலும் திருவாமாத்தூர் கௌமார மடாலயத்திலும் முறையாகப் பாதுகாக்கப்படுகின்றன. ஆசிரியர் எழுதிய மூலச்சுவடியே கிடைத்துள்ளது. இச்சுவடி எழுதி முடிக்கப்பட்ட பின்னர் மீண்டும் அவரால் சில திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே இவரது படைப்புகளுக்குப் பாடவேறுபாடுகள் கிடையாது. என்றாலும் சுவடியை வாசித்தவர்களிடையே சிற்சில மாறுபாடுகள் உருவாகியுள்ளன. சந்தி பிரித்துப் பல படைப்புகள் பதிப்பிக்கப் பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சீரான முறையியல் பின்பற்றப்பட வில்லை.

ஒரு படைப்புக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட முறையியல்களில் பதிப்புகள் வரவேண்டியது அவசியமாகும் . எந்தவொரு பதிப்பும் தற்காலிகத் தன்மைகொண்டவை என்பதோடு பதிப்பாசிரியரின் புலமைப் பின்புலச் சார்பும் கொண்டவை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது. தமிழ்ப் பயில்வு மரபில் நிகழ்ந்த சில விவாதங்கள் மரபான பயில்வுமுறையில் சில மாற்றங்களை உருவாக்கின. குறிப்பாகச் சந்தி பிரிக்காமலும் சீர் முதலிய யாப்பமைதி குன்றாமலும் அமைந்த பதிப்புகள் வெளியாகின. இப்பதிப்புகள் இசை ஒழுங்கு கொண்டவை என்பதோடு நினைவில் நிறுத்துவதற்கு எளிதானவை. மற்றொருபுறம் பொருள் புரிதலுக்கு எளிதாகச் சந்தி பிரித்த பதிப்புகள் வெளியாகின. இரண்டும் இரு வேறு வாசகத் தளத்திற்கானவை என்பதாக அடையாளப்படுத்தப்பட்டன. நவீனக் கல்வி பொருளுக்கு மட்டுமே முதன்மை அளித்தன. எனவே சந்தி பிரித்த பதிப்புகளே வாசகருக்கு எளிமையானவை என்னும் கருத்து முதன்மைப் பட்டன. இதனால் பழம்பனுவல்களை அவற்றின் மூல வடிவில் புரிந்துகொள்ளும் பயிற்சி தமிழ் மாணவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு அருகிவிட்டன. காலனிய ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்த அனைத்து நாடுகளும் தங்களுக்கான கல்வி மரபுகளை விவாதித்து முன்னெடுக்க வேண்டியதன் அவசியம் இன்று உருவாகியுள்ளது. நமது பாரம்பரிய மரபில் உள்ள அனைத்து அறிவுமரபுகளையும் மீட்டு எடுக்க வேண்டியது அவசியமானப்

பணியாகிறது. இச்சூழலில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள் மரபான பழம்பண்பாட்டுச் சூழலின் அறிவு மரபுகளைத் தாங்கி நிற்கும் படைப்புகள் ஆகும். அச்சு ஊடகம் விரைவாகப் பரவத் தொடங்கிய காலத்தில், காகிதம் புழக்கத்தில் வந்துவிட்ட காலத்தில், தம் படைப்புகள் தம் காலத்திலேயே அச்சு வாகனம் ஏறிய பொழுதும் ஓலை என்னும் ஆற்றல் வாய்ந்த ஊடகத்தையே இறுதி வரை பயன்படுத்திய பண்பாட்டுத் தொடர்பாளராகத் தண்டபாணி சுவாமிகள் விளங்குகின்றார். இவரது படைப்புகள் பல்வேறு அடுக்கு நிலைகளில் அமைந்துள்ளன. மிகக் கடினமான சந்தத்தில் அமைந்துள்ளது போன்றே மிக எளிமையான நடையிலும் அமைந்துள்ளன. இவரது படைப்புகளை வெவ்வேறு பதிப்பு முறைகளில் வெளியிட முடியும். குறிப்பாகச் சந்தி பிரித்து பதிப்பித்தல், உரை எழுதிப் பதிப்பத்தல், வரலாற்றுக் குறிப்புகள் கொடுத்துப் பிற நூல்களோடு ஒப்பு நோக்கிப் பதிப்பித்தல், ஒரு நூலுக்குள்ளேயே சந்தி பிரிக்காமலும் சந்தி பிரித்தும் என்று பல்வேறு பதிப்புகளைக் கொண்டுவர வேண்டியுள்ளது. இவற்றுக்கெல்லாம் அடிப்படையாகச் சுவடியை மூலமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட திருத்தப் பதிப்பு வெளிவர வேண்டியது முதன்மையான பணியாகும். இந்த அடிப்படையான பதிப்பைக் கொண்டு வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு முறையியல்களில் பலப்பல பதிப்புகளைக் கொண்டுவரமுடியும். அந்த அடிப்படையில் தண்டபாணி சுவாமிகள் கைப்பட எழுதிய படைப்புகள் சுவடிகளில் உள்ளன. அவற்றை முறையாகப் பதிப்பித்து வெளியிடும் நோக்கில் இத்திட்டம் தொடங்கப் பட்டது.

இதுவரை அச்சான தண்டபாணி சுவாமிகளின் படைப்பு களைத் தொகுத்தும் ஓலைச் சுவடிகளில் இருந்தவற்றைக் கௌமார ஆதீனப் புலவர் கிருஷ்ணய்யர் அவர்கள் பிரதி செய்து வைத்திருந்த கையெழுத்துப் பிரதியைக் கொண்டும் தட்டச்சு செய்யப்பட்டது. அவைகள் பெரும்பாலும் சந்திபிரிக்கப்பட்டு இருந்ததன் காரணமாகவும் யாப்புக்கு இயைபாக இல்லாமல் இருந்ததன் காரணமாகவும் அவற்றை மூலச்சுவடியைக் கொண்டு ஒப்பு நோக்கி இப்பதிப்பு அமைக்கப்பட்டது. இதன் காரணமாக காலவிரயமும் கடும் உழைப்பும் இதற்குத் தேவைப்பட்டது.

அச்சாகாத, கையெழுத்துப் பிரதி இல்லாத படைப்புகள் மூலச் சுவடியிலிருந்து நேரடியாகவே எழுதப்பட்டதுடன் மீண்டும் மீண்டும் மூலச்சுவடியுடன் ஒப்பு நோக்கப்பட்டன. இவற்றின் காரணமாகச் சுவடி வாசிப்பில் இயல்பாக நேரும் பிழைகள் பெருமளவு குறைந்தன. யாப்பு நோக்கி அமைக்கும் போது பிழைகள் சரிசெய்யப்பட்டன. இதன் காரணமாகத்தான் ஆதாரப் பதிப்பு அல்லது மூலப்பதிப்பு என்பது சீர் முதலிய யாப்பமைதியோடு கூடிய பதிப்பாக அமைவதே சிறந்த பதிப்பாகிறது. இதிலிருந்து அடுத்த கட்ட பதிப்புகளுக்குச் செல்லலாம். எனவே பின்னர் வெளிவரவுள்ள பல்வேறு வகையான பதிப்புகளுக்கான மூலப் பதிப்பாக இதனைக் கொண்டுவரவேண்டும் என்று திட்டமிடப் பட்டு இப்பதிப்பு கொண்டுவரப்படுகிறது.

தண்டபாணி சுவாமிகள் இலக்கணம், இலக்கியம், சமயம், தத்துவம், உரை எனப் பலதளங்களில் படைப்புகளை உருவாக்கி யுள்ளதால் இவரது பாடல்களின் தொகையை அருதியிட்டுக் கூற இயலாத சூழல் உருவாகியுள்ளது. அவரது பாடல்களின் தொகையைக் கூறிய அனைத்து அட்டவணைகளும் முன்முயற்சி களும் போதாமை நிறைந்தவையாகவே உள்ளன. சுவடிகளில் சில தவறியமை, சுவடிகள் இடம்பெயர்ந்தமை, சுருள் வடிவ சுவடிகளில் (ஓரிரு ஓலைகள்) சில இன்னும் வாசிக்கப்படாமை ஆகிய காரணங்களால் இப்பணி முழுமை அடையவில்லை. இப்பதிப்பு வரிசை நிறைவடையும் பொழுதே அவரது பாடல்களின் தொகையைத் துல்லியமாகக் கூறமுடியும்.

தண்டபாணி சுவாமிகள் தமிழகம் முழுவதும் பயணம் செய்துள்ளார். பல்வேறு ஊர்களில் உள்ள கடவுளர்கள் மீது பாடல் புனைந்துள்ளார். சில ஊர்களில் மிகுதியான பாடல்களும் சில ஊர்களில் குறைவான பாடல்களும் பாடியுள்ளார். ஊரோடு தொடர்பு இல்லாத பொதுநூல்கள் பலவும் பாடியுள்ளார். எனவே ஊர்ப்பெயர் அடிப்படையிலான பதிப்பு என்பது சரியான முறையியலில் அமையவில்லை. மேலும் கால வரிசையிலான பதிப்பும் அவரது படைப்புகளுக்கு சாத்தியமில்லை. சில முதன்மையான நூல்களை மட்டும் இவை முன், பின் என அறியமுடிகிறதே அன்றி அனைத்து நூல்களுக்கும் கால வரிசை அமைக்கமுடிவதில்லை. இதன் காரணமாக இலக்கிய வகைமை அடிப்படையில் - பிள்ளைத்தமிழ், கலம்பகம், தூது, அந்தாதி,

கோவை, மாலை, அலங்காரம், சதகம், பதிகம், இலக்கணம், புராணம், நீதிநூல் என அவரது படைப்புகளை அளிக்கலாம் என முடிவு செய்யப்பட்டது.

அந்த வரிசையில் முதல் தொகுதியாக இந்நூல் (பிள்ளைத் தமிழ்) வெளிவருகிறது. இதில் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய ஐந்து பிள்ளைத்தமிழ் நூல்கள் இடம்பெறுகின்றன. ஐந்து நூல்களிலும் பிள்ளைக்கவி என்றே தலைப்பிடப்பட்டுள்ளது. பிள்ளைக்கவி என்றுதான் இந்நூலின் தலைப்பு இருந்திருக்க வேண்டும். ஆனால் இன்று பொது வழக்கிலும் அறிஞர் வழக்கிலும் பிள்ளைத்தமிழ் என்பதே பயன்படுத்தப்படுகிறது. பிள்ளைக்கவி என்னும் வழக்கு அருகிவிட்டது. எனவே தலைப்பால் மயக்கம் ஏற்படாதிருக்கவே பிள்ளைத்தமிழ் என்று தலைப்பு அளிக்கப்பட்டது. உள்ளடக்கத்தில் தண்டபாணி சுவாமிகள் பயன்படுத்திய பிள்ளைக்கவி என்னும் தலைப்பே கொடுக்கப்பட்டுள்ளது. பாட்டியல் நூல்கள் பலவும் பிள்ளைக்கவி என்னும் பெயரினையே பயன்படுத்தியுள்ளன. நவநீதப் பாட்டியல் நூலும் முத்துவீரியமும் பிள்ளைத்தமிழ் என்னும் பெயரினைப் பயன்படுத்துகின்றன. பெருவழக்காகப் பிள்ளைக்கவி என்னும் பெயரே காணப் படுகிறது.

இப்பதிப்பில் இடம்பெற்றுள்ள ஐந்து பிள்ளைத்தமிழ் நுல்களில் ஒன்று பெண்பாற் பிள்ளைத்தமிழ். ஏனைய நான்கும் ஆண்பாற் பிள்ளைத்தமிழாகும்.

தண்டபாணி சுவாமிகள் தேர்ந்த வாசகராகவும் நுட்பமான ஆய்வாளராகவும் விளங்கியவர். அத்துடன் பனுவல்களை கால அடிப்படையில் அணுகும் வரலாற்று நுண்ணுணர்வும் அவரிடம் மிக்கிருந்துள்ளது. தமிழிலுள்ள பிள்ளைக்கவி நூல்களில் சிறந்த நூல்கள் எவை எனப் பட்டியலிடுவதுடன் ஏன் அவற்றின் மாண்பு குறைந்தது என்பதையும் ஆய்ந்து கூறுகின்றார். புலவர் புராணத்தில் இடம்பெற்றுள்ள பகழிக்கூத்தன் சருக்கத்தில்,

உறியில் பால்தயிர் கவர்ந்துண்டான் பருவங்கள் உன்னிச்
சிறிய பாக்களால் கோதைதன் தாதைசெப் பியபின்
குறிசொல் வாள்புணர் கொண்கனைப் பகழிக்கூத் தன்தான்
நறிய வண்ணமும் கலந்துசெந் திலில்அவை நவின்றான் ***(1868)***

அதற்பின் ஊமைவாய் திறந்தபா வலன்அவை அறைந்தான்
புதற்கொப் பாம்சில புலவர்பின் னரும்அவை புகன்றார்
இதற்குத் தக்கவண் ணத்திறம் இல்புலவோரும்
மதத்தி னால்துணிந் துரைத்து மாட்சிமை குறைந்தனரே *(1869)*

இதில் பெரியாழ்வார் கண்ணனைப் பாடிய பாடல்களும் பகழிக்கூத்தன் பாடிய திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழும் குமரகுருபரர் பாடிய மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ் மற்றும் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் ஆகிய நான்கு நூல்களைத் தலைசிறந்த பிள்ளைத்தமிழாகக் குறிப்படுகிறார். பிற பிள்ளைத் தமிழ் நூல்கள் எல்லாம் திறமையில்லாத புலவர்களால் மாட்சிமை குறைந்ததாகக் குறிப்படுகின்றார். தலைசிறந்த படைப்புகளை உள்வாங்கத் தெரிந்த புலமையாளராகத் திகழ்ந்துள்ளார் என்பது நோக்கத் தக்கது. தண்டபாணி சுவாமிகளின் படைப்புகளுள் ஐந்து பிள்ளைத்தமிழ் நூல்கள் கிடைக்கின்றன.

1. திருச்செந்தூர் வள்ளியம்மன் பிள்ளைக்கவி

கோவை கௌமார மடாலயச் சுவடிக்கட்டு எண் *16* இல் *157* ஆம் ஏடு தொடங்கி *173*ஆம் ஏடு வரையிலான *17* ஏடுகளில் இந்தப் பிள்ளைக்கவி எழுதப்பட்டுள்ளது. *38* செ.மீ. நீளமும் *3.8* செ.மீ. அகலமும் கொண்ட ஏடுகளாகும். காப்பு, நூற்பயன் உட்பட *102* பாடல்கள் இதில் உள்ளன. திருச்செந்தூர் தளத்திற்கு *16* இலக்கியங்களை பாடியுள்ளார் தண்டபாணி சுவாமிகள். அவற்றுள் முருகனுக்கு *12*, தெய்வயானைக்கு *1*, வள்ளிக்கு *1*, வீரவாகுக்கு *2*. இதில் வள்ளிக்கு பாடிய இலக்கியமே வள்ளியம்மைப் பிள்ளைக்கவி. பகழிக்கூத்தன் பாடிய திருச்செந்தூர் பிள்ளைக்கவியை இப்புலவர் விதந்து பேசுவதால் முருகன் மீது பாடாமல் வள்ளிமீது இந்நூலை இயற்றியதாகக் கொள்ளமுடியும்.

இந்நூல் திருச்செந்தூர் வள்ளிநாயகி பிள்ளைத்தமிழ் (வள்ளி குறவஞ்சியுடன்) என்னும் தலைப்பில் *1959*ஆம் ஆண்டு திருச்செந்தூர் தேவஸ்தான வெளியீடாக பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதனை பதிப்பித்தவர் தண்டபாணி சுவாமிகளின் பெயரனார் தி.செ. முருகதாச பிள்ளையாவார். இந்நூலுக்கு அன்றைய சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகா ஆணையர்

A. உத்தண்டராமன் அவர்கள் முன்னுரை வழங்கியுள்ளார். வேறு பதிப்புகள் இந்நூலுக்கு வரவில்லை.

2. பழனிப் பிள்ளைக்கவி

பழனித் தலத்தின் மீது தண்டபாணி சுவாமிகள் பாடிய பழனித் திருவாயிரம் என்னும் நூலில் 16 இலக்கியங்கள் உள்ளன. அதில் ஒன்று இந்தப் பிள்ளைக்கவியாகும். கௌமார மடாலயச் சுவடிக் கட்டு எண் 13 இல் ஏடு எண் 81 தொடங்கி 97 முடிய உள்ள 17 ஏடுகளில் இவ்விலக்கியம் அமைந்துள்ளது. ஏட்டின் நீளம் 32 செ.மீ. அகலம் 3.9 செ.மீ. ஆகும். திருவாயிரம் என்னும் இலக்கிய வகையில் உள்ள ஒரு நூல் ஆகையால் இதற்கென்று நூற்காப்பும் நூற்பயனும் தனியாகப் பாடப்படவில்லை. எனவே சரியாக 100 பாடல்களில் இவ்விலக்கியம் அமைந்துள்ளது.

இந்நூலுக்கு இதுவரை மூன்று பதிப்புகள் வெளியாகி யுள்ளன. முதல் பதிப்பு பழனித் திருவாயிரம் நூலில் பதிப்பானது. 1915 இல் தண்டபாணி சுவாமிகளின் குமாரனார் செந்தினாயகம் பிள்ளை அவர்களால் இந்நூல் பதிப்பக்கப்பட்டது. உடுமலைப் பேட்டை அ. கிருஷ்ணசாமி பிள்ளையவர்களது கிருஷ்ணன் அச்சுக்கூடத்தில் அச்சடிக்கப்பட்ட இந்நூல் வெளிவர பொருளுதவி செய்தவர்கள் கே. சண்முகவேலுப் பிள்ளை, பெரியசாமி நாடார் ஆகியோர்களாவர். இந்நூலில் பிள்ளைக்கவி என்ற பெயரே இடம்பெற்றுள்ளது. இதில் தண்டபாணி சுவாமிகளின் மாணவர்கள் சாற்றுக்கவி எழுதியுள்ளனர். இப்பதிப்பு சுவடியை அடிப்படையாகக் கொண்ட சுத்தப் பதிப்பு ஆகும்.

இரண்டாம் பதிப்பு பழனிப் பிள்ளைத்தமிழ் என்னும் பெயரில் ரசபதி என்பவரின் உரையுடன் வெளிவந்துள்ளது. இது பழனி ஸ்ரீ தண்டபாணி ஸ்வாமி தேவஸ்தான கும்பாபஷேக வெளியீடாக 1960இல் வெளியானது. இதில் உள்ள மூலம் 1915 ஆம் ஆண்டு பதிப்பினை அடியொற்றியது.

மூன்றாம் பதிப்பு பழனித் திருவாயிரம் நூலின் ஒரு பகுதியாக 1973இல் வெளியானது. இதனை பழனி அருள்மிகு தண்டபாணி சுவாமி திருக்கோயில் வெளியிட்டுள்ளது. இப்பதிப்பின் நோக்கம் குறித்து குறிப்படும் தி.செ. முருகதாஸ சுவாமிகள் “இன்று மக்கள் எளிதிற் படித்தறியும்படி சந்தி பிரித்தும்,

யமக அந்தாதி, திரிபு மஞ்சரி போன்றவைகட்கும், கலம்பகத்துள் வரும் இரு பொருளுடைய கவிகட்குப் பொருள் விளக்க மெழுதியும், அரும்பதக் குறிப்பை அங்கங்கே பாட்டின் கீழே இருக்கும்படியும் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது" என்று குறிப்படு கின்றார். இதற்கான சந்தி பிரிப்பு மற்றும் உரை எழுதியவர்கள் தி.செ. முருகதாஸ சுவாமிகள் அவர்களும் ப.வெ. நாகராஜன் அவர்களுமாவர். இப்பதிப்பில் ஏராளமான எழுத்துப் பிழைகளும் பாடப் பிழைகளும் காணப்படுகின்றன. இந்நூலில் பிள்ளைத் தமிழ் என்று தலைப்பிடப்பட்டுள்ளது. இம்மூன்று பதிப்புகளில் 1915 இல் வெளியான செந்தினாயகம் பிள்ளையின் பதிப்பே சுவடியை அடிப்படையாகக் கொண்ட சிறந்த பதிப்பாக அமைகிறது.

3. சென்னை மாநகர்க் கந்தசுவாமிபேரிற் பிள்ளைக்கவி

கோவை கௌமார மடாலயச் சுவடிக்கட்டு எண் 25இல் 104ஆம் ஏடு தொடங்கி 118ஆம் ஏடு வரையான 15 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 38 செ.மீ. நீளமும் 4 செ.மீ. அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இப்பிள்ளைக்கவியில் நூற்காப்பு, பயன் உட்பட 103 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் தண்டபாணி சுவாமிகள் வாழ்ந்த காலத்திலேயே பதிப்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. 1878 இல் அரம்பேடு சுப்பராய செட்டியாரவர்களால் ஊ. புஷ்பரத செட்டியாரின் கலாரத்நாகரம் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. இந்நூலில் சென்னை மாநகர்க் கந்தசாமிபேரில் பிள்ளைக்கவி, திருப்புகழ் வகுப்பு, பதிற்றுப்பத்தந்தாதி, வெண்பாக்கள், பதிகம் ஆகிய வற்றுடன் திருவல்லிக்கேணி பதிகம், திருவான்மியூர்ப் பதிகம், திருப்போரூர்ப் பதிகம், திருவொற்றியூர் வெண்பாக்கள் ஆகியன பதிப்பிக்கப்பட்டுள்ளன.

1963இல் சென்னைக் கந்தகோட்டம் முருகக் கடவுள் பிள்ளைத்தமிழ் என்னும் பெயரில் இந்நூல் மட்டும் தனியான பதிப்பாக வெளிவந்துள்ளது. இதனைப் பதிப்பித்தவர் தி.செ. முருகதாச ஐயா அவர்கள். இந்நூலினை சென்னை கல்யாணம் கம்பெனி வெளியிட்டுள்ளது. இந்தப் பதிப்பு சந்திபிரிக்கப்பட்ட பதிப்பாகும்.

4. தேவைப் பிள்ளைக்கவி [தேவக்கோட்டை]

கோவை கௌமார மடாலயச் சுவடிக்கட்டு எண் 2 இல் ஏடு 1 தொடங்கி 17 வரையான ஏடுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. 38.5 செ.மீ. நீளமும் 4 செ.மீ. அகலமும் கொண்ட ஏடுகளாகும். இதில் 102 பாடல்கள் உள்ளன. சுவடியின் தொடக்கத்தில் **தேவைப் பிள்ளைக்கவி** என்று தலைப்பிடப்பட்டுள்ளது. சுவடியின் இறுதியிலுள்ள நூற்பயன் பாடலில் **தேவைநகர் பிள்ளைக்கவி** என்று குறிப்படப்பட்டுள்ளது. இந்நூல் தேவகோட்டையிலுள்ள சிவன் கோயிலில் அமைந்துள்ள முருகன் மீது பாடப்பட்டதாகும்.

தேவகோட்டை நகரச் சிவாலயத்திலுள்ள முருகப் பெருமான் பிள்ளைத்தமிழ் என்னும் பெயரில் திருவாமாத்தூர் கௌமாரசபை இந்நூலினை 1955இல் பதிப்பித்துள்ளது. இதன் பதிப்பாசிரியர் தி.செ. முருகதாச பிள்ளையாவார். சிற்சில இடங்களில் சந்திபிரித்தும் பலவிடங்களில் சந்திபிரிக்காமலும் இப்பதிப்பு அமைந்துள்ளது.

5. தில்லை பாண்டிநாயகன்மேற் பிள்ளைக்கவி

சிதம்பரத்தில் உள்ள பாண்டிநாயகன் என வழங்கப்படும் முருகன் மீது பாடப்பட்டது இப்பிள்ளைக்கவி. கோவை கௌமார மடாலய சுவடிக்கட்டு எண் 26 இல் ஏடு 91 முதல் 105 வரையுள்ள 15 ஏடுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. 34 செ.மீ. நீளமும் 3.4 செ.மீ. அகலமும் கொண்ட ஏடுகளாகும். இதில் நூற்காப்பு, நூற்பயன் உட்பட 103 பாடல்கள் உள்ளன.

சிதம்பரத்தில் திருக்கோயில் கொண்டு விளங்குகின்ற பாண்டிநாயகன் என வழங்கும் திருமுருகப்பெருமான் பிள்ளைத்தமிழ் என்னும் பெயரில் இந்நூல் 1967ஆம் ஆண்டு பதிப்பாகியுள்ளது. பாண்டிநாயகன் திருக்கோயில் கும்பாபிடேக விழா நினைவு மலராக, திருவாமாத்தூர் கௌமார சபையால் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

தண்டபாணி சுவாமிகள் பாடிய பிள்ளைக்கவி நூல்களில் இந்த ஐந்து நூல்கள் மட்டுமே தற்பொழுது கிடைக்கின்றன. புதுவை முருகன் மீது ஒரு பிள்ளைக்கவி பாடியுள்ளார். அந்நூல்

கிடைக்கவில்லை. இங்குப் பதிப்பிக்கப்பட்டுள்ள ஐந்து நூல்களும் இதற்குமுன் பதிப்பானவை ஆகும். எனினும் இவைகள் மூலச்சுவடியுடன் கவனமாக ஒப்பு நோக்கித் திருத்தமான பாடத்துடன் இங்குப் பதிப்பக்கப்பட்டுள்ளன.

இம்முதல் தொகுதியில் இடம்பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை 510.

நன்றி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உருவாக்கப்பட்டுள்ள ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையத்திற்கு சுவடிகள் தேடும் பணியில் ஈடுபட்டிருந்தபொழுது பேராசிரியர் சு. வேங்கடராமன் அவர்கள் கோவை கௌமார மடாலயத்தின் தலைவர் தவத்திரு குமரகுருபர சுவாமிகளிடம் என்னை அறிமுகப்படுத்தினார். மடாலயத்தில் உள்ள தண்டபாணி சுவாமிகளின் ஓலைச் சுவடிகளைப் பார்வையிட அனுமதித்ததுடன் மின் எண்மம் செய்யப்பட்டிருந்த சில சுவடிகளின் மென்படியையும் அளித்துதுதவினார். தண்டபாணி சுவாமிகளின் பதிப்பாகாத நூல்களை வெளிக்கொண்டுவரலாம் என்ற எண்ணத்துடன் இதுவரை பதிப்பான நூல்கள் குறித்த விவரங்களை, முனைவர் பட்ட ஆய்வாளர் சு. கலைவாணி அவர்களைக் கொண்டு சேகரிக்கத் தொடங்கினோம். செம்பாதிக்கும்மேல் அவரது படைப்புகள் பதிப்பாகாமல் இருந்தன. இந்நிலையில் கோவை கௌமார மடாலயத்தின் தலைவர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு வருகைபுரிந்தார்கள். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அவரோடு நிகழ்த்திய உரையாடலில் தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள் அனைத்துக்கும் ஆய்வுப்பதிப்பு கொண்டுவருவதன் தேவை குறித்தும் முறையியல் குறித்தும் ஆலோசனை செய்யப்பட்டதுடன் அப்பொழுதே அதற்கான திட்டவரைவு உருவாக்கப்பட்டு அவரிடம் அளிக்கப்பட்டது. பதிப்பாய்வுப் பணிக்கு ஆகும் செலவினங்களை மடாலயம் ஏற்றுகொள்ளும் என்று உறுதியளித்ததுடன் உடனே பணியைத் தொடங்கவும் அனுமதி அளித்தார்கள். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் அவர்கள் இப்பணியைத் தொடங்க அனுமதி அளித்ததுடன் நூல்களை நிறுவனத்தின் வழியாக வெளியிடவும் இசைவு தெரிவித்தார்கள். எனவே இத்திட்டப்பணி

தொடங்குவதற்கு முதற்காரணமாக அமைந்தவர்கள் கௌமார மடாலயத் தலைவர் தவத்திரு குமரகுருபர சுவாமிகளவர் களும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் கோ. விசயராகன் அவர்களுமாவார்.

பேராசிரியர் சு. வேங்கடராமன் அவர்களின் வழிப் படுத்தலும் பதிப்புக்கு அவர் வழங்கிய ஆலோசனைகளும் இத்திட்டப்பணியில் முதன்மையான இடத்தைப்பெறுவன. இப்பதிப்பு தொடர்பாக கோவை மடாலயத்தில் நடைபெற்ற அனைத்து ஆய்வுக் கூட்டங்களிலும் பங்கேற்று தக்க ஆலோசனை களை வழங்கியவர் பேராசிரியர் ஐ.கே. சுப்பிரமணியன் அவர்கள். தமிழகத்திலுள்ள பல்வேறு நூலகங்களுக்கும் சென்று தண்டபாணி சுவாமிகளின் படைப்புகளில் பதிப்பான நூல்களைத் திரட்டியதுடன் இத்திட்டப்பணியின் முதன்மை யாய்வாளராகச் செயல்பட்டு வருபவர் செல்வி சு. கலைவாணி அவர்கள். சுவடிகளை ஒப்பு நோக்கும் பணியிலும் பாடல்களின் அமைப்பு முறைகளை ஒழுங்குபடுத்துவதிலும் எங்களோடு முழுமையாக ஈடுபட்டவர் முனைவர் கி. ஜெயகுமார் அவர்கள். சுவடியைப் பெயர்த்து எழுதுதல், பிழைத்திருத்தம் மேற்கொள்ளுதல் எனப் பலநிலைகளில் உதவியவர்கள் திட்ட ஆய்வாளர்கள் மற்றும் முனைவர்பட்ட ஆய்வு நண்பர்களான, இரா. சண்முகம், க. முரளி, அ. சண்முகம் ஆகியோர். தட்டச்சு செய்துதவியவர்கள் ச. வாசுகி, மணிச்செல்வி ஆகியோர். நூலினை வடிவமைப்பு செய்தவர் நண்பர் கதிர்.

இந்த ஒருங்கிணைந்த உழைப்பு தொடர்ந்து வருவதால் தண்டபாணி சுவாமிகளின் அனைத்துப் படைப்புகளுக்கும் ஆய்வுப்பதிப்பு அடுத்தடுத்து வெளிவருவது உறுதி. இப்பணியில் இவர்களோடு நானும் இணைந்துகொள்வதன்றி எவ்வாறு நவிலுவது நன்றி.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் — அ. சதீஷ்
சென்னை - 600113. — இணைப் பேராசிரியர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600113

பொருளடக்கம்

1
திருச்செந்தூர் வள்ளியம்மன் பிள்ளைக்கவி

காப்பு
நேரிசை வெண்பா

1. வள்ளைக் கொடியனைய வார்செவிச்சீர் வள்ளிமகிழ்
பிள்ளைக் கவிதை பிறக்கவே - கொள்ளைமதக்
குஞ்சரமும் வெள்ளைநிற கோகனத் தோதிமமும்
வஞ்சமின்றிக் காத்தருள்கா வல்.

நூல்
1. காப்புப் பருவம்

2. திருமகள் விரும்பிய துழாயொடு கவுத்துவந்
திகழு மகன்மார்பி னானைச்
செந்தாம ரைக்கண்முகி லனையானை யைம்படைத்
திறல்கொணாற் றோள்க ளானை
மருமலர்ப் புத்தேளை யுந்தியிற் றந்தருளும்
வரதனைச் சரத மாக
மாமியார் மக்கள்விடு தூதாகி னானைமிக
வந்தித் திறைஞ்சி நிற்பாங்
கருமலைக் குறவர்சிலர் கண்டெடுத் திட்டவொரு
கருகூல நீல மணியைக்
கமலமல ரொன்டிடக் கைகொண்டு செந்திலங்
கடவுள்வல நின்று ளாளை
வருமமொரு சிறிது மறியாவெள்ளை நெஞ்சினளை
வலியவந் தெனது கனவில்
வண்குறியு ரைத்தசிறு வள்ளியைத் தினமுருண்
மாறாது காக்க வென்றே. 1

3. அருமறை நூலறிந்த பிரமன தானமண்டை
யதனிடை யூணிரந்து கொள்ளுமெய்ப் பாட்டனா
மமலனை வாசமிஞ்சு மிதழியு நீரும்வெங்க
ணரவுநி லாவும்வண்டு மொய்சடைக் கூத்தனா
மரணைவி ணோர்தொடர்ந்து கதறிய போதுவம்பி
லமுதருள் வானைவஞ்சர் பொய்மொழித் தாக்குறா
வசலனை யானையொன்று புலியொடு சாகவென்று
மதள்கவர் சீலமிஞ்சு கையனைப் போக்கொணா
வொருமரு வார்களங்கொள் பரமனை யாலதன்க
ணுறைதாரு நால்வர்கண்ட சையலைப் போற்றுவா
ரயரநு பூதிகொண்டு பிறவியி லாதவின்ப
முறவிடு வானைவஞ்சி யொவ்விடைப் பாட்டியா
ருரைமையி னூடமிழ்ந்த கிழவனை நாவலம்பொ
னொடுபொரு மேருவங்கை வில்லெனத் தூக்குபே
ரரமுடையா னையன்று பரவின ரோடியைந்த
வுறுதிகு லாவநின்று கைகுவித் தேத்துவாங்
குருமணி நேர்நிறங்கொ டிருவுரு வோடுநின்ற
குமரனை மாவளைந்த மையலிட் டாட்கொளோர்
குமரியை மானுவந்து தரவரு வாளையும்பர்
குலமக ளார்வருந்தி யொல்கிடத் தேக்குசீர்
கொளுமிளை யாளைவென்றி மலிசிலை வாளிகொண்ட
குறவர்த மேனலொன்று செல்வியைப் பூத்துநீள்
கொடியனை யாளையன்பர் கனவினி லேபிரம்பு
கொடுகுறி யோதுகின்ற தையலைக் கூர்த்தவேல்
பொருமழ கார்கருங்கண் வனிதையை யூனிகழ்ந்த
புனிதையை நீடுசங்க மல்குபொய்ச் சீட்டுளார்
புனனிடை வீழவென்ற குறள்பகர் வீறணைந்த
புலவனை யீடறுஞ்சொ லௌவையைச் சேர்த்தொரேழ்
புதுமக வாதியங்கொர் மறைய னாலடைந்த
பொழுதவை யூடும்வந்த பிள்ளையைப் பூட்கைதோய்
புகர்மலை காணிலஞ்சு மரகத மாதைமஞ்சு
பொழில்மிசை மேவுசெந்தில் வள்ளியைக் காக்கவே. 2

4. கண்ணுதற் றிருமல்கு பண்ணவர்க் கதிமையல்
கம்முறப் புரிசெய்கை துன்னுகற் பாட்டிநீள்
கைம்முகத் தொருபிள்ளை சண்முகக் குகன்வௌவு

கன்முலைச் சிறுதையல் விண்ணின்விற் றோற்றசீ
ரொண்ணுதற் பிடிகள்ள மின்மனத் தினர்தெய்வ
முண்மையிற் குடிகொள்ளு நன்னிலைப் பேர்ப்பிலா
ளொன்னலர்த் திரள்நைய வென்முனைப் படைவெஃகி
யுன்னுநர்க் கவணல்கு கன்னிமுற் போற்றுவாம்
பண்ணும்வெட் கியசொல்லி தன்னைவிற் குறமள்ளர்
பண்ணுமெய்த் தவமொவ்வு பெண்ணினைக்
காட்டில்வாழ்
பைந்நிறத் தொருகிள்ளை யன்னபொற் பியையையர்
பன்னுசொற் கயவல்லி யெண்ணுறப் பார்த்துலாம்
வண்ணுடைக் களிவெள்ள மன்னுளத் தியைவெய்ய
வன்மமுற் றிடவையும் வன்மனச் சூர்ப்பொலான்
மன்முடித் துயர்வெய்து தொன்னகர்க் கிடைவைகு
மைம்முகிற் பொரும்வள்ளி யம்மையைக் காக்கவே.
3

5. அங்கண் மலர்க ளொருமூன்று
மணிவென் பிறைநேர் தனிமருப்பா
ரானை முகமும் புயநான்கு
மைந்து கரமும் படைமூன்றுஞ்
செங்க ணனலா சுரனுடலுஞ்
செமிக்கச் சிறந்த பெருவயிறுந்
திருத்தாட் டுணையு மாகுமுதற்
றிகழும் பிறவுந் தினநினைவாஞ்
சங்க மொருமூன் றினுநிலவுந்
தமிழ்தோய் செந்திற் குருபரனைத்
தன்கைத் தினைமாக் கொடுமயக்கித்
தருக்குந் தகைமைப் பெருக்கினளை
யெங்க டமைப்பெற் றருள்வாளை
யீரே ழுலகுண் டுமிழ்வான்றன்
னிடக்கண் மணியைக் குறவர்புனத்
திளங்கோ கிலத்தைப் புரக்கவென்றே. 4

6. அமலபர மவுனரக சியநிலையை யொருநொடியி
லரனறிய வருளியவி டங்கனைத் தாழ்ச்சிதீ
ரதிமதுர நயபுனித மருவுதமிழ் முனிபரவு
மழகியசண் முககுருப ரன்றனைச் சீர்த்துநீ

டிமயகிரி யுதவுசிறு குமரிதரு குழவியினை
யெனையனையர் பிழைசெயின்மு னிந்தொறுங்
கரச்செவே
லிறையவனை யொருவனிதை கரமுதவ வருகுகனை
யிமையவர்க ளொடுபொருவில் செந்திலிற்
போற்றுவாம்
விமலமுனி யிரலையொடு புணரவுடன் வருமகவை
விரிகமல மணிகர முறுங்குயிற் பேட்டைவாள்
விடுபகழி நெடியசிலை கொடுதிரியும் வனசரர்கள்
விரதபல மெனவருபெ ரும்புகழ்ப் பேற்றையோர்
கமலமடு விடைதவறி விழுமுதிய கிழமுனிவர்
கவலைதவிர் வுறவருண்ம டந்தையைச் சேர்கணார்
கலபமயி லனையவளை யெமையுதவு சிறுவயிறு
கவின்நட மிடுமரக தந்தனைக் காக்கவே. 5

7. விண்பூத்த கமலமலர் மீதழுது தவளநிற
வேழத் துதிக்கை வழிபோய்
வேள்விநா யகன்மனை யகம்புகுந் தயிராணி
மிகவரு மையிட மகிழ்ந்து
தண்பூத்த மென்சொற் பயின்றுபொற் பாவைநிகர்
தகையொடு வளர்ந்து செந்திற்
சரவணக் கடவுளை மணந்தகுஞ் சரியுபய
சரணங் களைப்ப ணிகுவாம்
வண்பூத்த சாரற் றினைப்புனத் திதணதனில்
வந்தசிறு பெண்பிள் ளையை
வரிசிலைக் குறவர்தஞ் சிறுகுடிச் சேரிவளர்
வள்ளி நாயகி யம்மையைக்
கண்பூத்த பைம்பொற் கலாபமயி லெனநிலவு
கருநிறக் கன்னி தன்னைக்
கறுவாது துணைவந்த காரணத் தினைநன்கு
கணருதியருள் புரிய வென்றே. 6

8. அலைகட லுடைதிக ழுலகினை யுணவென
வன்றுகொ ளத்தகும்மா
லகலம தனிலொரு மணியொடு குடிகொளு
மங்கனை யைக்குனிவார்

சிலைமதன் மலரவ னெனுமிரு மகவருள்
செந்திரு வைத்தமிழ்தேர்
சிறுமுனி பரவிய கமலையை வளமலி
செந்திலி னத்திடுவாம்
வலைமுத லியபல கருவிகொள் வனசரர்
மங்கையை மெய்ப்பசியான்
மறுகிய பெரியவ ரெனவணு கியகுகன்
வந்தனை யிற்களிகூ
ரிலையணி மரகத மணிநிற மயிலினை
யின்கவி தைப்புலவோ
ரிகழினு மகிழ்வுறு சிறுமியை யருளுட
னென்று மளித்திடவே. 7

9. சீலமிக் குறுதவள வாணிநட் பேற்றுவாழ்
சீர்படைத் தவனையெழு தாமறைச் சேர்க்கையான்
ஞாலமுட் படவுயிரெ லாமியற் றாற்றலார்
நான்முகத் தொருபிரம தேவனைப் போற்றுவாம்
வேலனுக் கினியவலை வாய்நகர்க் காக்கமா
மேவுமுத் தமியைமுதி ரெனலைப் பார்த்துநீ
டோலமிட் டிடுகுயில னாளைநற் பாக்களா
லோதுநர்க் கெளியகுற மாதினைக் காக்கவே. 8

10. அறமுத லென்றுள சதுவகை யும்பக
ரருமறை தந்துளநா
வரசியை யம்புய மலரவ னின்புறு
மபிநயங் மங்கையைவால்
நிறமவிர் மங்கலை தனையள வின்றிய
நிபுணப ரம்பரையோர்
நினைவில்வி ளங்குபெ ணமுதினை யன்பொடு
நிதமும்வ ணங்கிடுவாம்
விறல்மிகு வெஞ்சிலை வனசரர் தங்குலம்
விழைதரு பைம்பொனைநீர்
மிகைபடு செந்திலின் மருவுகு கன்புணர்
விரகியை மென்தழையோ
டிறகணி யுந்திரு வரையுறு கொம்பினை
யிமையவர்தம் பதியா

ளிகலவ ருஞ்சிறு பருவம டந்தையை
யினிதுபு ரந்திடவே. 9

11. கொல்லா விரதப் பெருந்தவமே
குறியா மென்ன மிகக்கருதிக்
குரவன் பகர்ந்த மொழிவழிபோய்க்
கோலம் புனைந்து குறைதவிரு
நல்லார் பரவிப் பணிந்துதின
நாடும் பலதே வருக்குரிய
நாம ரூப மனைத்தினையு
நாணா திறைஞ்சி நவிற்றுடுவா
மல்லார் பொழிற்செந் தூர்முருகோ
னருமை மனையாட் டியைக்குறவ
ராசை மகளை யெனைப்போலு
மறிவீ னரையும் பெறுந்தாயை
வல்லார் முலைக்குஞ் சரியுரைக்கும்
வழக்கைப் பொருளா மெனச்சிறிது
மதியா திகலு முழுநீல
வள்ளிக் கொடியைப் புரப்பதற்கே. 10

2. செங்கீரைப் பருவம்

12. தந்திமுக முன்னவன் றன்னோடு மாங்கனி
தனக்காக விகலி யன்னோன்
றன்துதிக் கைகொண்டு தந்தையா ரிண்டையணி
தலையினைச் சுற்று முன்ன
மிந்திரா தியர்பரவும் வேல்கொண்டு கலபமயி
லேறியுல கதனை வலம்வந்
திருவரும் புரிபிழைக் களவற முனிந்தமை
யியம்பு மெய்ப்புல வருக்கு
மந்திர சடாக்கரங் கருதித் தவம்புரியு
மாயோ கமுனி வருக்கு
மனநினை தரும்பய னனைத்துங் கொடுத்தருளி
வளமருவு சந்த வரைமே
செந்தினகர் வாழ்குகன் வணங்கவரு பெண்பிள்ளை
செங்கீரை யாடி யருளே

சிற்றேன சூழ்பரணி லுற்றோலி டுஞ்சிறுமி
செங்கீரை யாடி யருளே. 1

13. நனைமா மலர்பொகுட் டுறைபிரம தேவன்மு
னவின்றபழ மறைகளுக்கு
நாரிபா கத்தொருவ னாகமப் பெருநூல்க
ணாலேழி னுக்குமற்றும்
வினைமா சறுத்தமுனி வோர்சித்த ராதியர்
விளம்புபல பனுவல்கட்கும்
விதிவிலக் கருளியவை யுள்ளமைந் தமையாது
மேனின்று விண்ணூர்மலர்ப்
புனைமாது தெய்வானை வலிதினிற் புணர்கின்ற
போகத் தழுந்திடாமற்
பூரணா னந்தசற் குருவெனச் செந்திலிற்
பொலிபுகழ்க் குமரவேளைத்
தினைமா வருத்திமய லுறவிடுங் குறவள்ளி
செங்கீரை யாடியருளே
சிற்றேனல் சூழ்பரணி லுற்றோலி டுஞ்சிறுமி
செங்கீரை யாடியருளே. 2

14. அங்கசன் முதற்றொடுங் கணையென்ன வோபிரம
னானதுணை வனையளிக்கு
மன்னையென வோதன்னை யந்நாளின் மாமுகத்
தருளும்விழி யனையதெனவோ
கொங்கலர்த் தொகுதிகளின் முதலென்ன வோவளவில்
கோலாக லப்பெருக்கங்
கொண்டுதன் றாதையுர மகலா திருந்ததாய்
குடிகொண்ட மனையென்னவோ
பங்கமறு செந்திலம் பதியினைப் பரவுமெய்ப்
பத்தர்மன மனையதெனவோ
பன்னிரு கரத்தண்ண லானதன் கணவன்முன்
பழகிவளர் தொட்டிலெனவோ
செங்கமல மலரோன் றிடக்கையிற் கொண்டகொடி
செங்கீரை யாடியருளே
சிற்றேனற் சூழ்பரணி லுற்றோலி டுஞ்சிறுமி
செங்கீரை யாடியருளே. 3

15. கருமைப் புயற்பொருவு திருமேனி கொண்டுவெண்
கடலின்மிசை துயிலுவாற்குங்
கானவண் டினம்நுகர் களித்தேன் பிலிற்றுசெங்
கமலத் திருந்துளாட்கும்
பெருமைக் குழாத்துளுயர் பேறென்னு ஞானப்
பிழம்பாய முனிவனுக்கும்
பெண்ணினத் திற்குரிய கண்ணென்ன நூலெல்லாம்
பேசுமொரு பிணையினுக்கு
மிருமைக்கும் வித்தனைய மறைநெறி வழாதொழுகு
மீடுபெறு பகவனுக்கு
மெண்ணில்பல கோடிதவ முற்பவத் திற்புரிந்
திடுமாதி யெனுமவட்கு
மருமைக் குழந்தையென வருநீல வள்ளியினி
தாடியருள் செங்கீரையே
யலைவாயு கந்தவனை முலையால் வெலுஞ்சி றுபெ
ணாடியருள் செங்கீரையே. 4

16. கொன்றைச் சடைப்பரமன் விசயனுக் கந்நாட்
கொடுத்தமெய்க் காட்சியென்னக்
கூட்டமிட் டுக்குலவி வரிவிற் குனித்துக்
கொடுங்கணை மிகப்பொழிந்து
குன்றைப் பொருங்கரி களிற்கோடு கொண்டுவன்
கோளரிகட் டமையாளியைக்
கொடுவரிக ளைத்துரந் தருமைச் சிறாருவகை
கொள்வது குறித்தவற்றின்
கன்றைக் கவர்ந்துபல காய்கனி கிழங்குதேன்
கைக்கொண்டு வேடர்பெருமான்
கவின்மலி குறிச்சியைக் கருதிவரும் வழியிற்
கடைக்கணீர் பாயவழல்கண்
டன்றைக் கெடுத்துமனை யவள்கையிற் றருமதலை
யாடியருள் செங்கீரையே
யலைவாயு கந்தவனை முலையால் வெலுஞ்சிறுபெ
ணாடியருள் செங்கீரையே. 5

வேறு

17. வானை யளவும் பசுஞ்சோலை
மலருங் கனியும் விடுநறுந்தேன்
மடுக்க ளிடைதோய்ந் தவைபொங்கி
வழிய வயலி னிடைபாய்ந்து
பானைப் பனைக்கட் புனன்மாந்தும்
பள்ளர் வரம்பைத் தறித்துவிடப்
பரவைப் புனலின் புலவகற்றும்
பழுதில் வளஞ்சேர் திருச்செந்தூர்க்
கோனைக் கிழவே தியனெனவே
குறித்து நெருக்குந் தொறுமிகழ்ந்து
கோதை மடவார்க் குளபேதைக்
குணத்தா லொருசொற் கூறவரு
மானைக் கொதுங்கி வலிதணைந்தா
யாடி யருளாய் செங்கீரை
யயில்வே லெனுங்கட் குறமகளே
யாடி யருளாய் செங்கீரை. 6

18. மச்ச மலிநீர்ப் பணைசூழும்
வளத்தா லுயருந் திருச்செந்தூர்
மன்னன் வலிதிற் புணர்ந்துசுகம்
வருத்து மகவான் மகளிருக்க
நிச்சல் கருது முனிவருக்கு
நிறைசொன் மதுரப் புலவருக்கு
நிகழ்த்தும் பிறர்க்கு மொல்காம
னீதி முழுது மறந்தான்போல்
பொச்ச வடிவம் பலகாட்டிப்
புதுத்தே னளைந்த தினைமாவும்
போதப் புசித்துக் குழைவுறுமப்
போது பகரென் றிடல்கண்டு
மச்ச முறுமா றுரைசெய்தா
யாடி யருளாய் செங்கீரை
யயில்வே லெனுங்கட் குறமகளே
யாடி யருளாய் செங்கீரை. 7

வேறு

19. இறுதியு நடுவொடு முதலுமில் பெருமைகொ
ளீசன்ம கிழ்ந்தோதி
யிடமுறு முமையவள் விழியெதிர் குதிகொள
வீரிரு திண்டோள்கள்
பெறுமர கதமலை நிகர்முர கரிபுனை
பீடுபி றங்காழி
பிழைபட லொழிவுற மலரய முதலிய
போதுய ரந்தீர
மறுவணு வளவுமில் பெரியவர் பரவிய
மாணுறு செந்தூரின்
மறிதிரை யுத்தியி னடுவள ரொருபெரு
மாவைவ கிர்ந்தாடு
மறுமுக குருபரன் மருவிய குறமக
ளாடுக செங்கீரை
யணிகவ ணொடுபரண் மிசைநில வியகுயி
லாடுக செங்கீரை. 8

20. வேடர்பி ரான்மனை யாண்மடி மீதுறு
மேதகு பெண்பாவை
மேலுல காணமக வான்மக ளார்துயர்
மீறவி டும்பூவை
பாடல்வி னோதமெ லாமுணர் வார்மிசை
பாசமி கும்பேதை
பார்மகள் பூமகள் சேர்திரு மாலிட
பால்விழி யன்றீயு
மேடவிழ் தாரணி கார்குழன் மாதர
சேதமில் செந்தூரி
வீரிரு தோளுடன் வாழும்வி சாகன
தேவல்கொள் சிங்காரி
யாடக மால்வரை நேர்முலை யாளினி
தாடுக செங்கீரை
யாசில்க லாபம தாமுடை யார்குயி
லாடுக செங்கீரை. 9

21. சிவனுமை கண்டுள மகிழவ ருங்கொடி
செங்கோ செங்கீரை
தினைகவ ருங்கிளி யொருவுமி ளங்குயில்
செங்கோ செங்கீரை
சிவணிய பைங்கதிர் மரகத சுந்தரி
செங்கோ செங்கீரை
சிலைவலி மிஞ்சிய குறவர்பெ றும்பொருள்
செங்கோ செங்கீரை
திவவுறு செங்கர முனியையமு னிந்தவள்
செங்கோ செங்கீரை
சிறுகுடி லும்பெரி துயரவி ழைந்தவள்
செங்கோ செங்கீரை
திவளவ ணங்கிய குகனைம ணந்தவள்
செங்கோ செங்கீரை
செயமிகு செந்திலி னிளையசு மங்கலை
செங்கோ செங்கீரை. 10

3. தாலப் பருவம்

22. கந்த மலியு மலர்க்கொன்றைக்
கண்ணி யுடையார் நுதல்விழிச்செங்
கனலிற் பொறியா மெனத்தோன்றிக்
காவிக் கமலத் தடத்துருவா
யந்தண் மதியம் புணர்மடவா
ரறுவர் முலைப்பால் மிகப்பருகி
யதனிற் றணியாப் பசியொடுமிக்
கழுது சிவைபா லருந்திமகிழ்ந்
தெந்தம் வினைமுன் றுறழ்தகுவ
ரினத்தோ டழியப் பொருதமரர்க்
கின்பம் வருத்தித் திருச்செந்தூ
ரினைவிட் டகலா திருக்கவென
வந்த பவளக் கிரியினுக்கு
வலம்வாழ முதே தாலேலோ
மலர்பற் பலபூத் தொளிருமொரு
வள்ளிக் கொடியே தாலேலோ. 1

23. திலகச் சிலைவா ணுதற்றிருவுந்
திகழ்வெண் கமலத் துறைவாளுந்
தேவர்க் கிறைவன் மனைவிமுதற்
செப்பு மணங்கா ரனைவர்களு
மலகின் றியபே ரழுக்காற்றா
றழுங்க வுமையா ளெனவடிவுற்
றசலப் பிறப்பும் பொருந்தியவ
ளருமைக் கிசைந்த மருமகளாய்க்
குலவுங் கனக மணிச்சிகரிக்
கோயிற் றிருச்செந் தூரன்னறியக்
கொற்ற வடிவேற் படையேந்திக்
கோலா கலச்சீர் நடம்பயில்வான்
வலமுற் றுவக்கு முழுநீல
வன்னக் குயிலே தாலேலோ
மலர்பற் பலபூத் தொளிருமொரு
வள்ளிக் கொடியே தாலேலோ. 2

24. கஞ்ச மலரோன் றெடுத்தருகிற்
கணவ னிடங்காட் டியகரத்தாய்
கானக் குறவ ரிறைமனைதன்
கலச முலைப்பால் கமழ்வாயா
யஞ்ச மனைய நடைபயிலு
மணித்தா ளுடையா யருணகிரி
யனைய புலவோர் பலர்பரவு
மருள்வா ரிதியி னமுதானாய்
பஞ்ச மறியாத் திருச்செந்திற்
பதிக்கோ யிலில்வாழ் பசுங்கிள்ளாய்
பலகண் ணுடையான் மகள்வாழ்விற்
பாதி யதன்மேற் பறிகொண்டாய்
வஞ்ச மெனுந்தீ தணுகாத
மனமா மயிலே தாலேலோ
மலர்பற் பலபூத் தொளிருமொரு
வள்ளிக் கொடியே தாலேலோ. 3

வேறு மகுடம்

25. செந்தா மரையி லயன்போலுந்
தெய்வ மறையோர் திருக்குழுவுந்
தெண்ணீர்ப் பொதியை முனியனைய
செஞ்சொற் புலவோர் செறியவையுங்
கொந்தார் வேப்பந் தொடைப்புயத்தாற்
குலவு மகமே ருவைப்புடைத்த
கொற்ற வழுதி யனையபல
கோர வீரர் குலப்பெருக்கு
மிந்தார் சடிலத் தனுக்கும் விலை
யீந்தா னனைய வணிகர்களு
மெச்சி லெனமுத் தெறிந்தான்போ
லேராள் பவரு மிலங்குசெந்திற்
சந்தா சலத்தான் வலத்துறைவாய்
தாலோ தாலோ தாலேலோ
தவளத் தரள நகைவள்ளி
தாலோ தாலோ தாலேலோ. 4

26. பொங்கு புனற்செஞ் சடையாற்கும்
பொதியை முனிக்கு மருணகிரிப்
புலவன் றனக்குங் கிடைத்துளமெய்ப்
பொருளே பொருளா மெனக்குறியா
தெங்குந் திரிந்து பலவாறு
ளிடைந்து தவிக்குந் தமியேனோ
டியம்புஞ் சிலர்க்குந் திருவடிப்பே
றெளிதீந் தருள வெனக்கருதிச்
செங்குங் குமவெற் பெனக்கரத்திற்
றிகழும் வடிவேற் படையேந்தித்
தேவர் முதலோர் மிகப்பரவத்
திருச்செந் தூரிற் றினந்தினமுந்
தங்குங் குகவேண் மனங்கவர்ந்தாய்
தாலோ தாலோ தாலேலோ
தவளத் தரள நகைவள்ளி
தாலோ தாலோ தாலேலோ. 5

வேறு

27. பைந்தகைய முகில்வந் துறங்குதண் பொழிலினிடை
பன்மலர்த் துணர்விரிந்தும்
பழவகை கனிந்தும்வழி தருதேனின் மூரிப்
பகட்டிப மதங்கலந்து
செந்தமிழ்ச் செந்தின்நக ரைப்பரவு மெய்த்தொண்டர்
செய்தவ மெனப்பிறங்குந்
தெண்ணீர் வளத்தருவி யொடுகூடி யங்குள்ள
செடிமரம் பலபறித்து
வெந்தறுகண் வல்லியங் கரடியரி யாளிமுதல
விருகங்க டம்மையீர்த்து
வெண்நித் திலம்பவள மாதியா பொருளுதவும்
வேலைக் களிக்கும்வியனார்
சந்தவரை யிற்குகன்ம ணந்தசிறு பெண்பிள்ளை
தாலேல தாலேலவே
தள்ளரிய சீர்குலவு வள்ளிநா யகியம்மை
தாலேல தாலேலவே. 6

28. ஈரமுறு தழையுமென் பீலியுங் கொடியினிடை
யிறகுறமுடிந்த கலைசூயி
ழெழிலரையு மலைவா யுகந்தகுக வேடனயி
லென்றிலகு விழிவனப்புங்
காரனைய கூந்தலிற் கூதளமு மாவரைக்
கண்ணியுமணிந் தவியனுங்
கவினுறு தினைக்கதிர்ப் பின்னியம தாணியுங்
கட்டையொடு சோகிநிரையுங்
கோரமிகு வல்லியப் பல்லுமிடை யிடைகோத்த
கோவையுறு பூகமிடறுங்
குறிபகர் பிரம்புமொரு கூடையுங் கொண்டுள்ள
கோலமுங் குலவநித்தந்
தாரகமெ னத்தொண்டர் கனவினும் வருஞ்சிறுமி
தாலேல தாலேலவே
தள்ளரிய சீர்மருவு வள்ளிநா யகியம்மை
தாலேல தாலேலவே. 7

வேறு

29. சோரவி காத மனேகம் நாள்புரி
சூர்நேர் தீயோரூர்
சூழ்கட லூடமிழ் வாகிட வேல்விடு
தோள்வேள் வாழ்வாலே
காரண காரிய மோர்பெரி யோரொடு
காவார் வானூரார்
காதலெ லாம்நிறை வாதலி னாலுயிர்
காதா வூனா ரா
நீரவர் மேலிட லான்முது நூல்வழி
நேரா தேசூறார்
நீசர்கு ழாமடி யோடற நாடிடு
நீறார் சேர்வாலே
தாரணி யோர்புகழ் சீரலை வாயின்
டாலோ தாலேலோ
சாயக வேடுவர் கோன்மக ளாயவ
டாலோ தாலேலோ. 8

30. தந்திர முழுது முணர்ந்தவர் வழிபடு
தாயே வானூர்வாழ்
தந்தியின் மகணமன நொந்திட வெனவரு
தாரார் கோதாயோர்
மந்தி ரனது சங்கணி செவியிடை
வாயா லேமேனாள்
வண்பட நுவல்குர வன்தொழ மகிழ்சிறு
மாதே மான்நேர்வாய்
வெந்திறல் வனசர புங்கவ ரிடுபரண்
மீதே வாழ்பூவாய்
விண்டுவின் விழிமணி யென்றுண ரடியவர்
வீயா வாறாள்வாய்
சந்திர வதனசு மங்கல வடிநயை
டாலோ தாலேலோ
தண்டமிழ் வளமலி செந்திலி நிளையவ
டாலோ தாலேலோ. 9

31. மலையா கியகுடை யுடையான் விழிவரு
மணியே தாலேலோ
மறைமா முனிபுணர் வனமா னுதவிய
மகளே தாலேலோ
வலைவாள் சிலைகணை புனைவார் குடிலிடை
வளர்வாய் தாலேலோ
மலையா சலமுனி யனையார் மனமலர்
மருவே தாலேலோ
தலைமே நிறமலி தருமா வரையணி
தகையாய் தாலேலோ
சரணா யுதநிகர் கவுமா ரரையரு
டருவே தாலேலோ
வலைவாய் நகர்மரு வியநா யகனுக
ரமுதே தாலேலோ
வடியே னொடுமொரு குறியோ திடவரு
மருளே தாலேலோ. 10

4. சப்பாணிப் பருவம்

32. வெண்பணில மீற்றுளைந் துமிழுமுத் தின்குவையு
மென்சிறை வண்டி னங்கள்
விளைநற வருந்திமயல் விஞ்சிக் கிடப்பனவும்
விரவு பொறக்கமல நிரையுங்
கண்பகைப் பதுகண்டு களையெனக் கடைசியர்கள்
களைதொறு மடர்ந்து மலருங்
காவியுங் கமுகினிற் கதலியிற் குலையறக்
கண்டு முகிலைக் கிழித்து
விண்படு முடுக்களை யுழக்கித் திரும்பிவரு
மீனி னங்களும் வரம்பின்
மிசைதுயிலு மோதிமக் குலமுநெற் பயிரும்மத
வேள்சிலைத் திரளு மிளிருந்
தண்பணைச் செந்திலா திபனிளைய மனையாட்டி
சாப்பாணி கொட்டி யருளே
தமநியக் கமலமல ரனையகைக் குறவள்ளி
சப்பாணி கொட்டி யருளே. 1

33. மதிமரபில் வரும்வழுதி மகள்குதிரை முகம்வனச
மலரணைய தாகநாடி
வாரியில் விடும்பகடு மிளநீர் முதற்பிறவும்
வந்துகரை சேரநண்ணி
விதியனைய வேதிய னிமித்தமொரு பூனையுயிர்
மீளப்புரிந் தோர்ருமை
வெண்கமல வாணியும் வியப்புறுந் தமிழ்பாடும்
வியனருளி விரதசீல
நிதியமுறழ் பாணன்மகள் களிகூர வருளியிவை
நிகரும்விளை யாடல்கோடி
நீணிலத் தோர்களு மறிந்திடச் செய்தவித
நிசமென்றெனக் குணர்த்தத்
ததிகருதி செந்திலான் தன்னுயிர்த் துணைமனைவி
சப்பாணி கொட்டியருளே
தமநியக் கமலமல ரனையகைக் குறவள்ளி
சப்பாணி கொட்டியருளே. 2

34. கொண்டல்புரை யுங்கருநி றத்தலகை யும்பெருங்
குன்றும் பிளக்கவென்று
கொற்றவாள் புனைமன்ன னம்புயக் கண்பறி
கொடுத்துப் பெறப்படுத்தி
யொண்டரு மணிப்பெரும தாணியொரு வற்குதவி
யொருவன்முற் றென்னை நெற்றங்
குதிர்வுறக் காட்டியொரு புளியிற் பெருங்கொப்
பொடிந்துகீழ் விழமுறித்துத்
தொண்டனொரு வற்குநெற் சுமைமுதற் பற்பல
தொகுத்துக் கொணர்ந்துநல்கித்
துதிகூறி மெய்யருட் பெறுவதென் றென்றடிமை
துயருறக் கண்டுமிளிருந்
தண்டமிழ்ச் செந்திற்பி ரான்வலத் துறைகுமரி
சப்பாணி கொட்டியருளே
தமநியக் கமலமல ரனையகைக் குறவள்ளி
சப்பாணி கொட்டியருளே. 3

வேறு மகுடம்

35. கூட்டியுழுது சிசிவரு முன்ன விழக்கப்பெறுங்
கனைபகட் சைந்தசைந்து
கடைவாயில் வெண்ணுரை பிதுங்க வசையிட்டுமலா
கமலவாவி யிலிறங்கி
மட்டிலு வகைப்பெருக கானகமிக வுழக்கிமும்
மாழையங் குடநிலாவவரு
மகளிர் சேறுகண்டி கழவதுபொறாது
வெளிவருவன் வெனபெயர்ந்து
செட்டிலுயர் வார்மனைத் திருடாிற் கமுகனைய
செங்கரும்பிற் புகுந்து
தின்னுமட்டுங் கறித்துக் கணுவின் முத்தெலாஞ்
சிந்தித் தெவிட்டுவதனாற்
கொட்டிலைக் கருதிக் குதித்துவரு செந்திலாய்
கொட்டியருள் சப்பாணியே
கோகனக மலரொன்று கொண்டகைக் குறவள்ளி
கொட்டியருள் சப்பாணியே. 4

36. நீலமலை யென்றிலகு வேழமத்தக மதனி
னின்றிழியு மதசலத்தி
னிறைபுனற் றடமருவு கமலத்தி னீலத்தி
னெய்தலினெருங் குபைந்தண்
சீலமலி சோலையிற் செய்யிழை மடர்ந்தையர்கள்
செறிகுழற்கற் றை தன்னிற்
சீதமதி யாலருவி சொரிதருப் பளிக்கறைத்
திறன்மதன் விழாவனப்பில்
வேலணியு மெந்தைபன் னிருதோளி னிறுமுதல்
விரியு மலர்மாலை
வகையின்மென் சிறையு மறுகாலும் வெறியுமின்றா
யினின்விழிகளெ னவேவிளங்குங்
கோலவரி வண்டிசை பயின்றசெந் தூருளாய்
கொட்டியருள் சப்பாணியே
கோகனக மலரொன்று கொண்டகைக் குறவள்ளி
கொட்டியருள் சப்பாணியே. 5

வேறு

37. விமலர் தமக்கோர் பொருளுதவி
வேழம் புரந்தான் றனதாழி
விளங்க விளக்கிக் கமலமலர்
வேதன் கதற மிகப்புடைத்துச்
சமர்செய் முதுசூர் குடிகெடுத்துத்
தருவாழ் வுடையார் சிறைநீக்கித்
தமிழ்மா முனிவன் முதலாய
தவத்தோர் பலருக் கருள்புரிந்து
சிமயக் குவடு தொறுநடித்துச்
செங்கை வடிவேற் படைப்பூசைத்
திறத்திற் சிறிதென் றனக்களித்துத்
திருச்செந் தூரிற்றினந் தினம்வாழ்
குமர குருதே சிகன்மனையாள்
கொட்டி யருளாய் சப்பாணி
கொல்லா விரதந் தருங்குறத்தி
கொட்டி யருளாய் சப்பாணி. 6

38. கெடுக்குந் திரியே டணைப்பிணியாற்
கேடுற் றொழியா தெழுத்தாறுங்
கிளத்தி மலயச் செழுந்தமிழாற்
கிளிபோ லருமைக் கவிதைபல
தொடுக்கு நலமு முயிர்த்தொகைக்கோர்
துன்பம் புரியா திதம்புரியுந்
தூய குணமும் பெரியோர்தந்
தொழும்பு மருவித் துணையாமென்
றடுக்கு மவருக் கணிமாவே
யாதியாஞ் சித்திரு நான்கு
மருளா னந்தப் பரமசுகத்
தழுந்திப் பிறப்பற் றவிர்வீடுங்
கொடுக்குந் திருச்செந் தூர்ச்சிறுதாய்
கொட்டி யருளாய் சப்பாணி
கொல்லா விரதந் தருங்குறத்தி
கொட்டி யருளாய் சப்பாணி. 7

வேறு

39. அன்றரன் முதலிய புங்கவர் விழைதரு
மற்புத மெய்க்கோல
மம்புவில் வழுதடி கொண்டுப லுயிர்களை
யட்டுணு முற்சாக
நன்றறி கிலர்பொருள் கொண்ட தரிடைமிக
நைத்துவெ ருட்டாண்மை
நஞ்சுமிழ் கணபண வங்கத மெனவரு
நட்பில்க னற்கோப
மின்றமிழ் பொருமது வுண்கையின் மிகும்வெறி
யெச்சில ளித்தார்வ
மெஞ்சலில் கதிபெறு கின்றவ னினமெனு
மெய்ப்பில்பு கழ்ச்சீர்கொள்
குன்றவர் குடிலிடை சென்றுமுன் வளர்கொடி
கொட்டுக சப்பாணி
குன்றலில் வளமுறு செந்திலில் வளர்குயில்
கொட்டுக சப்பாணி. 8

40. நிலவர வலைபுன லிதழியொ டணிசடை
நித்தனி டப்பாதி
நெளிதரு மரவணை மிசைகட லிடைதுயி
னித்திரை யைப்பேணு
மலர்விழி நெடியவ னுரமதில் மாதிரு
மற்றையர் கற்காத
மறையவ னுதின மருவிய கலைமகள்
வச்சிர மற்றோள்கொள்
பலவிழி மகபதி புணர்ச்சி முதன்வல்
பச்சைம யிற்சாயல்
பதிதரு வனிதைய ரனைவரு மறுவறு
பட்சமி குத்தோதல்
குலவிய வருளின ளலைவள நகரிடை
கொட்டுக சப்பாணி
குறவர்கள் குடிலிடை வளர்கிளி யனைவள்
கொட்டுக சப்பாணி. 9

41. குரவொடு கூதள மணிகுழ லார்மயில்
கொட்டாய் சப்பாணி
குளிர்புன மூடொரு பரண்மிசை வாழ்குயில்
கொட்டாய் சப்பாணி
குரவர னேகரை யுதவிய கோமளை
கொட்டாய் சப்பாணி
குலமணு காவண மெறிகவ ணார்கிளி
கொட்டாய் சப்பாணி
குரவைமி னார்பலர் வளைதர வாழ்பவள்
கொட்டாய் சப்பாணி
குறைவறு பேரருள் வளமுறு மான்மகள்
கொட்டாய் சப்பாணி
குரகத மாமென வயமிவர் வான்மனை
கொட்டாய் சப்பாணி
கொதிகடல் மாமணி யெறியலை வாயினள்
கொட்டாய் சப்பாணி. 10

5. முத்தப் பருவம்

42. காவாய் மரங்க டொறுமிருந்து
கனற்கண் வல்லூ றனையவற்றாற்
கலங்குற் றெயினச் சிறுவர்கைவிற்
களிமண் ணுண்டை களுக்கொதுங்கிக்
கூவா வணுகி யிரைகேட்குங்
குஞ்சு முதலாக் குழுமிவருங்
கூட்ட முறுபுட் குலமுழுதுங்
குலையக் கவண்கற் குறித்தெறிந்தும்
பாவா ணருக்கோர் தலையாய
பைம்பொற் கிளியை யகவிநடம்
பயிலு மயிலைப் பகல்விளக்கும்
பான்மை திகழ்போர்ப் பறவையினை
மூவா தளிக்குங் குறக்கொடியே
முத்த மளித்தாண் டருள்வாயே
முழங்குங் கடற்செந் தூர்ச்சிறுதாய்
முத்த மளித்தாண் டருள்வாயே. 1

43. பெருகு புனல்சூ ழிவ்வுலகிற்
பெரியோர் பகர்நூல் விதிசிறிதும்
பிழையா மனித வடிவாகிப்
பிறந்து வளர்ந்தும் பேதமையா
லருக னரச நிழற்பவுத்த
னாதிய வர்க்கா ளாகாம
லாறு பொறியுங் கருதுநல
மடியார் வேடத் துடனளித்துப்
பருவம் வருமுன் பலகனவிற்
பழய பிறவி முதலாய
பரிசா யிரஞ்சொற் றயினெடுவேற்
படையோ டுளத்திற் பதிந்தொளிரு
முருக னுரைசத் தியமானான்
முத்த மளித்தாண் டருள்வாயே
முழங்குங் கடற்செந் தூர்ச்சிறுதாய்
முத்த மளித்தாண் டருள்வாயே. 2

44. பழியும் பவமும் மிகவளர்க்கும்
பாவப் பிணியே முதலாய
பலவா தனையு மடியோடு
பறிபோ யென்றூழ் பார்த்திருக்க
வழியு மிரத்த முடல்சொரிய
மலைமீ துருண்ட பயன்முதலா
மனத்திற் கருதி யவைமுழுதும்
வந்து பொருந்தும் வளமையினால்
விழியு முகில்போற் புனல்பொழிய
மெய்யுஞ் சிலிர்த்து விதிர்விதிர்க்க
விண்ணோர் கரிய பேரின்ப
வெள்ளப் பெருக்கால் விம்மிவிம்மி
மொழியு மொழிகேட் டுவப்பதற்கோர்
முத்த மளித்தாண் டருள்வாயே
முழங்குங் கடற்செந் தூர்ச்சிறுதாய்
முத்த மளித்தாண் டருள்வாயே. 3

வேறு மகுடம்

45. பைந்நா கணையிற் றுயில்வானும்
பதுமா தனத்துத் திருமாதும்
பரவை யுடுத்த பார்மகளும்
பழிதீர் தருசீர்த் தவமுனியும்
மன்னோன் புணர்பொற் பொறிமானு
மாதி யெனுமோ ரருட்கொடியு
மவடோள் விரும்பு மந்தணனு
மடல்வா ளெயினர் பெருமானு
மைந்நா கமதே நிகருமவன்
மனையாட் டியுஞ்சீ ரலைவாயின்
மருவுங் குகனுந் தமிழ்ப்பனுவல்
வளந்தோய்ந் திலங்கும் வாய்க்கிளியு
முந்நாள் பெறுவ தாமருமை
முத்த மெனக்கின் றருள்வாயே
முளரி மலர்க்கைக் குறக்கோதாய்
முத்த மெனக்கின் றருள்வாயே. 4

46. இருந்தை நிறத்து நெடுமேனி
யெரிகட் சினவே டுவர்தவமே
யெண்கட் பிரமன் றனைப்பயந்தா
னிடக்கண் மகவே யிணர்த்துணர்த்தண்
குருந்தைப் பெருமான் வழிபடுஞ்சற்
குரவன் பரவுங் கோமளமே
குன்ற முழுதுஞ் சீதனமாக்
கொடுசெந் தூரிற் குடிகொண்டாய்
வருந்து மடியார் துயர்தவிர்க்கு
மருந்தே விளைந்த மரகதமா
மணியே மகவான் மகளடைந்த
வாழ்வைப் பகிர்ந்தும் வழக்காடு
முருந்து நகையாய் நின்கனிவாய்
முத்த மெனக்கின் றருள்வாயே
முளரி மலர்க்கைக் குறக்கோதாய்
முத்த மெனக்கின் றருள்வாயே. 5

வேறு

47. பல்வகைய மெய்த்தொண்டர் தம்பெருங் குழுவுமுதிர்
பைந்தமிழ்ப் புலவ ரவையும்
படவரவ நிகரல்குன் மடவார்க ளாடலும்
பாடலும் பகழி மழைதோய்
வில்வலித் திண்புய மகாரதர் படைத்திரளும்
வேதா கமம்ப யின்று
விண்ணவரு முனிவருஞ் செயசெய குகாவென
மிகப்பரவு திருவி ழாவு
மெல்வனப் புறுவேலு நீலகிரி வயிரமலை
யென்றில கிரண்டு புள்ளு
மின்னமிவை யன்னபல சின்னங்க ளும்புணரி
யிடைவிடா தென்று முதவுஞ்
செல்வமும் பொலிசெந்திலா னுயிர்த்துணை மனைவி
செம்பவள முத்த மருளே
தெள்ளிய தினைக்குறவ ரள்ளிமுத் தியவள்ளி
செம்பவள முத்த மருளே. 6

48. நந்தையணி யுஞ்செவிப் பரமனுக் கொருமகவு
நற்குருவு மாகி நின்ற
ஞான பண்டித னுனதுநாயக னெழிற்செந்தி
னகர்புரந் தருள்வி சாக
னெந்தைபெரு மானன்றொர் கவிஞனுக் கினமணி
யிழைத்துள பதக்க மொன்றை
யீடாக நல்கியொரு தொண்டனைக் கொண்டுபொரு
ளீந்ததுவு மவனி சைத்த
விந்தைமிகு பனுவலும் புனைதன்மை கருதிநீ
வேறுவித மொன்றி யிற்றி
விட்டுவிட லாமென்று சற்றுமெண் ணேலெனை
விரைந்தெடுத் துச்சி மோந்து
சிந்தைத் திருத்தியொடு முத்தநிரை வைத்துள்ள
செம்பவள முத்த மருளே
தெள்ளிய தினைக்குறவ ரள்ளிமுத் தியவள்ளி
செம்பவள முத்த மருளே. 7

49. இந்திர னும்பல வும்பர்க ளுந்தம
திட்டமு றத்தகுமு
ரெண்கண னங்கச னந்தக னென்பவ
ரிச்சைந டக்கருமூ
ரந்திநி றம்பெறு கந்தனை யண்டர்மு
னச்சுதன் மெச்சியவூ
ரைந்துமு கன்கட லுண்டவ னன்றுண
ரத்த முணர்த்திடுமூர்
செந்திரு வுங்கலை மங்கையு மிஞ்சிய
சித்தம கிழ்ச்சிகொளூர்
செந்தி லெனுந்துணி வொன்றிய தொண்டர்கள்
சிற்றனை நட்பினிலே
முந்திய பெண்கொடி யின்றும கிழ்ந்தொரு
முத்தம ளித்தருளே
மொய்ம்புறு குன்றவர் தந்தப சுங்கிளி
முத்தம ளித்தருளே. 8

50. அருளணு வேனுமில் கொடியவர் பாழ்நெறி
யற்றொழி யச்செயுமா
றநுதின மாதவ முயல்கவு மாரர்சொ
லற்புத முத்தமிழ்மால்
பெருகிய வாறிரு புயமுரு கோன்மயல்
பெற்றபு னக்குயிலே
பிறையணி வாருமை மருமக ளேயுதிர்
பிட்டவல் சர்க்கரைதே
னுருள்சினை மோதக மனையவை யீபவ
ருக்கரு ளத்தியினா
லுளம்வெரு வாவல மருமயி லேயயி
லொத்தொளிர் கட்கடையாய்
முருகவிழ் தார்குழ லுறுகுற மாதொரு
முத்தம ளித்தருளே
முனைமலி வாளினர் தொழுமலை வாயினண்
முத்த மளித்தருளே. 9

51. முரன்மாய் வுறநூ றியமான் மகளே
முத்தந் தந்தருளே

முதிரே னலினோர் பரண்மீ துறைவாய்
முத்தந் தந்தருளே
முரன்மா மலிகூ தளமா லிகையாய்
முத்தந் தந்தருளே
முனிவே ரரசா தியர்பே ணியதாய்
முத்தந் தந்தருளே
முரசார் மலைதோ றுமுலா வியமான்
முத்தந் தந்தருளே
முதுகா டடையா துயும்வாழ் வருள்வாய்
முத்தந் தந்தருளே
முரண்வே டுவர்பால் வளர்கோ கிலமே
முத்தந் தந்தருளே
முறையா லலைவா யுறைதா தையினீ
முத்தந் தந்தருளே. 10

6. வாரானைப் பருவம்

52. தேனோ வமுதோ வடுபாலோ
திரள்பா கதுவோ வெனவினிக்குஞ்
செஞ்சொற் குயிலே பிரம்பேந்தித்
திரியு மயிலே செயுந்தவத்தான்
மானோர் புனத்திற் றருமதலாய்
மகவான் வளர்த்த மகண்மிகவும்
வருந்தக் குகனைத் தினைமாவால்
வசஞ்செய் துவக்கு மணிப்பாவாய்
கூனோங்கிய விற்சிலை வேடர்
குலமும் பொருளா கிடவளர்ந்தாய்
கொல்லா விரத நெறிகருதாக்
கொடியோ ருணராக் குணக்கடலே
வானோர் பரவுந் திருச்செந்தூர்
மருவுஞ் சிறுதாய் வருகவே
வனச மலரேந் திருயகரத்தோர்
வள்ளிக் கொடியே வருகவே. 1

53. கருமங் கருதி யளவுபடாக்
கடல்போற் பெருகு முயிர்த்தொகையைக்

கணக்கிட் டுடலம் வகுப்பாற்குங்
கரும்புச் சிலையின் மலர்க்கணையாற்
பருவங் கருதியவற் றைமிகப்
படுத்தி யுவகை யளிப்பாற்கும்
பானன் மலரோன் றெடுத்திநிற்கும்
பைம்பொற் பிடிக்குந் துணையானாய்
பொருவில் கருணைத் திருமாற்கும்
பூமா தினுக்கு மகவானாய்
புலவர் பலர்க்கோ அரனையானாய்
புணரி யொலிச்சீர் பொலிசெந்தூர்
மருவுங் குமரன் றனக்கினைய
மனைவி யானாய் வருகவே
வனச மலரேந் தியகரத் தோர்
வள்ளிக் கொடியே வருகவே. 2

54. கொள்ளைக் களிவண் டிசைபாடுங்
குரவுங் கடம்புங் கூதளமுங்
குல்லை புனலி குவளைமுதற்
கூறுற் மலரும் புனைதோளில்
கிள்ளைச் சுமையுஞ் சமர்ச்சேவல்
கிளர்கே தனமு மயின்முதலாக்
கிளத்தும் படையும் பெரியோர்தங்
கேடில் பனுவற் றொகுதியுமென்
வெள்ளைக் கவியுங் கொடுகுணபால்
வேலைக் கரையின் றிருச்செந்தூர்
விளங்கப் புரக்குங் குருபரன்றன்
மெய்மைத் தவத்தால் விளைபயனா
வள்ளைக் கொடிபோற் செவிவளர்ப்பார்
மனையில் வளர்ந்தாய் வருகவே
வனச மலரேந் தியகரத்தோர்
வள்ளிக் கொடியே வருகவே. 3

வேறு மகுடம்

55. சயிலந் தோறுங் கவுமாரத்
தவத்தோர் புடையி னடுவேபோய்ச்

சந்த முதலாந் தமிழ்க்கவிதை
தடையின் முகில்போன் மிகப்பொழிந்து
வெயிலொன் றியவேற் படைப்பூசை
விதத்தா லிகலோர் குலமுழுதும்
வேரோ டறுத்து விளங்குநலம்
விரும்பு தலைநீ யறியாயோ
மயிலின் புறத்திற் றிருச்செந்தூர்
மறுகில் வருவா னீயுரைக்கு
மாற்றந் தனையு மறுப்பதுண்டோ
வஞ்சம் புரிதன் மகவிடத்தோ
வயிர மனத்து மறக்கொடியே
வருக வருக வருகவே
வள்ளித் தாயே யிதுதருணம்
வருக வருக வருகவே. 4

56. ஐயர்க் கிறைவன் றனதுகளி
றந்நா ளெடுக்க வளர்ந்தவளா
மன்னை யினைப்போ னீயுமெனை
யடுத்துப் பழகா திருந்திலையே
பைய நடந்தென் கனவதனிற்
பருத்த பிரம்புங் கூடையொன்றும்
பற்றி விளங்கிப் பலமாற்றம்
பகர்ந்தா யலையோ வொருவசனஞ்
சைய மணக்குங் கழற்செந்தூர்த்
தலைவ னொடுசொற் றருளாமற்
சாதிக் குரிய குறச்சாலந்
தனய னிடங்காட் டிடத்தகுமோ
வையத் துணிந்தே னெனமுனியேல்
வருக வருக வருகவே
வள்ளித் தாயே யிதுதருணம்
வருக வருக வருகவே. 5

வேறு

57. மண்புனற் றேயுவளி வெளிகுடிலை யெனுமாறும்
மலர்வதன வரிசை யாக

வாரண முரித்தவன் சமயமுத லீராறு
மந்தரத் தோள்க ளாகப்
பண்புகு மறைப்பொருளு மாகமப் பயனுமிரு
பாததா மரைக ளாகப்
பகரரிய திருவருட் சத்திவே லாகப்
படைத்து மலைதொறு நடித்து
விண்புரந் தவுணர்குல வேர்களைந் தரியதமிழ்
விதிப கர்ந்தவ னாதியோர்
மெஞ்ஞான வாழ்வுறச் செய்துபற் பலவாறு
மேன்மேலு மாடு கின்ற
வண்புகழ்ச் செந்திலான் மனதுக் கிசைந்தவெழின்
மரக தக்குயில் வருகவே
வன்சார்பி ராளெடுத் தன்பொடு வளர்த்தருளும்
வள்ளி நாயகி வருகவே. 6

58. சீரிய சினைச்சங்கு முத்தமும் பவளமுஞ்
செம்மணியு நீல மணியுந்
திகழுமர கதவயிர மாதிய விரத்தினத்
திரளுந் திருக்கை முதலாம்
பேரியல் கயற்குலங் கமட மாதியவும்
பிறங்கிழை மடந்தை
பேணிய குழற்கற்றை யனையசை வலமுமுறை
பேனமும் பெரியோர்களுக்
காரியர்க் கிரவலர்க் கணுவளவு பொருளுநல்
கறியார் கலங்கள் கவிழ்வுற்
றதனான் மிதந்தபல பண்டமுந் தொண்டர்சில
ரள்ளியெறி தமிழு மலைநீர்
வாரிதி கொடுக்குந் திருச்செந்தி லானுரிமை
மனையா மென்னை வருகவே
வனசரர்பி ராளெடுத் தன்பொடு வளர்த்தருளும்
வள்ளி நாயகி வருகவே. 7

வேறு

59. கண்ட நிறையு நஞ்ச முடையர்
கண்க ளுதவும் மதலையே

கங்கை யிடையில் வந்தொ ரறுவர்
கஞ்ச முகையென் முலைகொள்வாய்
தொண்டன் மகளி லன்று பணிசெய்
துங்க வுமைத னருமையாய்
துண்ட மதியென் வெண்ப லவுணர்
துஞ்ச முனியும் வயவனே
தண்ட மணிகை கொண்ட குரவர்
தங்கள் புடையி னரசனே
தங்க மலைய தென்று குலவு
தந்தி துணைவ வெனவிடா
தண்டர் பரவு செந்தின் முருக
னன்பு மனைவி வருகவே
யம்பை யனைய கண்கொள் குறமி
னஞ்ச லுதவ வருகவே. 8

60. தொழுதி றைஞ்சு மடியர் தங்க
டுயர்க ளைந்த கருணையாய்
சுடர்வி டும்பல் பணிய ணிந்த
சுரம டந்தை பகையுளா
யெழுத ருஞ்சொன் மறைய வன்பொ
னிரலை யொன்றை மருவுநா
ளெழிம லிந்த புனம தன்க
ணினிது வந்த குழவியே
கழுவி லன்று மடியும் வம்பர்
கழறு கின்ற விதிகொள்வார்
கவியி கழ்ந்த புனித மொன்று
கமல மென்ற சரணியே
வழுவில் செந்தி லிறைவ னெஞ்ச
மகிழு மங்கை வருகவே
மறவர் தங்கள் பரணி டங்கொண்
மயி லிரங்கி வருகவே. 9

61. மருவ றாத துளவ மால்கண்
மதலை வருக வருகவே
மறவ ரேன்ன மயிலை நேரும்
வனிதை வருக வருகவே

தருவ லாரி மகளின மீறு
தகையள் வருக வருகவே
சலதி போலும் விழிகு லாவு
தருணி வருக வருகவே
யருவ வாத ரறியொணாத
வமலை வருக வருகவே
யடல்கொள் சூரன் மடியுமூரி
னரசி வருக வருகவே
குருதி வேலன் வலம்வி டாத
குமரி வருக வருகவே
குறிய நாளின் மொழியு மாறு
குலவ வருக வருகவே. 10

7. அம்புலிப் பருவம்

62. மானினுற வென்றென்று மகலா வனப்புடல்
வயங்கப் பெருஞ்சிறப்பு
மலையிடை யுதித்துவிரி ககனத் துலாவியலை
வாரியரு கடையுமாண்பு
நானில மதிக்கும்விறல் வேள்சென் னியிற்சரண
நாண்மலர்பதிக் கும்வீறும்
நந்துலவு செந்திற் குகேசன்மயல் கொண்டுருகு
நாரியர்களே சுமியல்பும்
பானிறத் தந்தமுறு நாகமெதிர் தோன்றிற்
பயந்துதடு மாறுபண்பும்
பைங்கதிர்த் தொந்தமு முனக்குள்ள வண்ணமிப்
பாவைக்கு முண்டுகண்டா
யானியில் பெரும்புகழ்க் கைக்கொண் டழைப்பதா
லம்புலீ யாடவாவே
யறம்வளர்த் தவடன்மரு மகளாய் வள்ளியுட
னம்புலீ யாடவாவே. 1

63. பருவதச் சுமைகொண்ட வரியினகல் கண்ணொர்பொற்
பாவையொடு தந்தபண்பா
பன்றிபின் றொடர்வேடர் சென்னியிற் கொண்டருமை
பாராட்டு கின்றபரிவாற்

பொருவறும் புவனியெங் கணுநிறைந் தருளெனப்
பொலிதரும் பனிநீரதாற்
புலவர்பற் பலருக்கொர் திலகமென மிளிரவல
புந்தியைத் தருபுதுமையான்
மருவளரு முற்பல மலர்ந்துறத் திகழ்கின்ற
வதனத்தி னானெருங்கி
வட்டமிட் டிலகுமொரு பரிவேட மாலினால்
வாவென் றழைக்கலுற்றா
ளுருவவா திகண்மருவொ ணாதசெந் தூரியினிண்
தம்புலீ யாடவாவே
யறம்வளர்த் தவயன்மரு மகளாய வள்ளியுட
னம்புலீ யாடவாவே. 2

64. ஓகைமலி மேடத்துணைப் போலுயிர்த் துணையொ
டொவலொர்கா லுற்றிலாளோ
வுயர்புகழ்ச் செந்திலிற் காளைமிதுனம் பெற்று
வந்திலாளோ கடகமீன்
வாகைவிற் சீயநிறை கும்பமா தியகொண்டு
வளர்கின்ற கன்னியலளோ
வாய்மொழிக ளிற்பொருவி லமுதப் பெருந்தாரை
வைத்திருக் கின்றிலாளோ
சோகைநிகர் காமுகரை நீவருத் துதலிற்
றொழும்புரியா ரைமிடியாற
சுடுகின்றி லாளோவிவட் கிணைய தென்றுனைச்
சொல்லத் தகுந்தகுங்கா
ணாகையா லுனையழைத் திடும்வித மறிந்தருகி
லம்புலீ யாடவாவே
யறம்வளர்த் தவள்டன்மரு மகளாய வள்ளியுட
னம்புலீ யாடவாவே. 3

வேறு மகுடம்

65. மன்மதன் கொண்டுள்ள கவிதைநீ யிவளவன்
மனப்பிரிய முற்றதங்கை
வானவர் பிரானேவல் செய்வைநீ யிவளவன்
வழுத்துசெந் தூரன்மனைவி

புன்மறு மிகுத்துள்ள தேகிநீ யிவளனுப்
போலுமறு வில்லாதவள்
பூரணப் பருவமுற் றுந்தேய்வை யிவளப்
புரைத்தன்மை யொன்றிடாதாள்
கன்மனக் கயவர்க்கு மற்றோர்க்கு மொருவாறு
கலைபொழிகு வாயிவன்னை
கற்றுணர்ந் தோர்க்கலது கருணைபுரி யாளுனைக்
கருதலுன் றவமல்லவோ
வன்மலி குழற்றெய்வ யானைதன் றுணைவியுட
னம்புலீ யாடவாவே
யள்ளுமருள் வெள்ளத்து வள்ளிநா யகிமகிழ
வம்புலீ யாடவாவே. 4

66. மாதமொ ருடல்கொண்டு தப்பாது மாய்வதுன்
வழக்கமிவ ளுக்கதில்லை
மலைமக ளுனைப்பதத் தாலரைத் தாளிவளை
மருமகளெ னருமைசெய்வாள்
சீதரன் துயிலணையை நினையினுமுன் னெஞ்சந்
திடுக்கிட்டு வசமாறிடுஞ்
செப்புமப் பகவன்மலர் விழியிற் பிறந்துவளர்
செல்வியிவள் செந்தூரினிற்
சூதமற வென்றவன் றொண்டர்களி லொருவனீ
சொல்லுமவன் மாவிரந்து
தொண்டுசெய் தணையவரு தோகையிவ ளிவ்விதஞ்
சொல்லிடிற் றொலையாதுகா
ணாதலா லிப்பொழு தழைக்குங் குறிப்பறிந்
தம்புலீ யாடவாவே
யள்ளுமருள் வெள்ளத்து வள்ளிநா யகிமகிழ
வம்புலீ யாடவாவே. 5

வேறு

67. உன்னைப் பரிதி யவமதித்துள்
ளூட்கி யொளிமங் கிடச்செயுந்தீ
தொழியப் பன்னீ ரிலைத்திருநீ
றுடனா றெழுத்து முறப்பெறலாம்

பொன்னை யிரும்பைக் கொடுசமைத்தாற்
போலும் பணிக ளோரிரண்டின்
பொல்லாப் பொழிய மயிற்பரியைப்
பொருசே வலினைத் துணைக்கொளலா
முன்னை மறுவைக் கிளிப்புலவன்
முதிர்சொற் பனுவல் பொழியமுதான்
மூடிக் கொளலாந் திருச்செந்தூர்
முருகப் பெருமான் முயங்குறுமென்
னன்னை யிவளீண் டழைப்பதனா
லாட வாரா யம்புலியே
யருமைக் குறவர் சிறுமியுட
னாட வாரா யம்புலியே. 6

68. வடிவேற் படையால் விறல்வீர
வாகு முதலோர் தம்முறவால்
வாதிட் டெதிர்க்கு மசுரர்பய
மாறி யினத்தோ டுயப்பெறலா
மடியா வரமா தியதோய்ந்து
மலைய முனிபோல் வாழ்வுறலார்
மறலி பொருநோய்க் குலத்தொன்று
மருவா நலமு மெளிதாகுந்
துடியார் கமலக் கழற்குமரன்
றொழும்பர் புடையி னடுப்புகலாந்
தூய வளமைத் தமிழ்ச்செந்தூர்த்
தொல்சீ ருரைக்கச் சலியாமெய்
யடியார்க் கெளிய வள்ளி மகிழ்ந்
தாட வருவா யம்புலியே
யருமைக் குறவர் சிறுமியுட
னாட வாரா யம்புலியே. 7

வேறு

69. திறன்மிகு சேவலை யிரைகவர்
நேமிய சீர்வீ யென்றெணிடேல்
சிகியெனு நாமமு மணிமயில்
வாயிடை சேரு ணின்பகைகா

ணறமுணர் மாதவர் வெருளமு
னாள்வரு மாடோ நன்றலநீ
யறிகுவை யாயிரம் விழிமக
வானிவ ராண்வே ழம்பணிவீ
றுறவளர் மால்கரி கவளம
தாமென வோர்போ துண்டிடுமே
யுயிரைவெ றேலணி திகழலை
வாயுறை வோன்மோ கங்கொளுமோர்
மறமக ளாகுமென் னையினி
தாடிட வாவா வம்புலியே
மரகத நேர்வடி வினள்கையி
லாடிட வாவா வம்புலியே. 8

70. உன்றனை யாருமி கழ்ந்திட
நாடொறு மோயா துண்டுமிழீ
டொன்றிய பானுவ ழும்படி
போய்முனி வோன்மா யும்படிபோர்
வென்றவில் வீரனி னைந்திடி
னீயிங்ன மேவா தெங்கொழிவாய்
விந்தம தால்வழி மங்கிய
நாள்விடு மேலோ னன்பனலோ
குன்றதி னீவரல் சென்றிட
லாமிவள் கோமா னங்கிலனோ
குண்டக ழோலிடு செந்திலின்
மேவிய கூர்வே லன்குரவார்
மன்றல்வி சாகன்வி ரும்பிளை
யாளெதிர் வாவா வம்புலியே
வன்றிறல் வேடுவர் பைங்கிளி
யாடிட வாவா வம்புலியே. 9

வேறு மகுடம்

71. வரமுர கரிமலர் விழிதரு
மணியெதிர் வந்தா டம்புலியே
மகபதி மகள்விய னுறுமெழி
லினள்கையில் வந்தா டம்புலியே

வரவொடு செலவறு பொருளரு
ளனையிடம் வந்தா டம்புலியே
மதனய னதுதுணை வியர்களில்
லிளையண்முன் வந்தா டம்புலியே
மரணமில் பரர்சிறு மருமகள்
விழைதலின் வந்தா டம்புலியே
மதகரி யறிதர முயன்மண
மயில்வயின் வந்தா டம்புலியே
மரகத நிறமுறு மறமகண்
மகிழ்வுற வந்தா டம்புலியே
மறியலை வளநக ரிறைமனை
வெகுளுமுன் வந்தா டம்புலியே. 10

8. கழங்குப் பருவம்

72. துணர்விரி கடப்பமலர் மாலையிற் செந்தமிழ்
தொடுக்கின்ற புலவ ரவையுஞ்
சூராதி சூரர்நிர்த் தூளிபட வெல்கின்ற
துங்கவாள் வீரகுழுவுந்
தணவரிய மும்மலக் காடுந்து றந்துமெய்த்
தவமுயல்வலோர் பெருக்குந்
தரளமணி வடமனைய வெண்நகைப் பாவையர்
தயங்குநிறை மேடை மறுகுங்
கணபண வனந்தன்முடி நெரிதர நிமிர்ந்திலகு
கனககோ புரமாதியாங்
கவின்மருவு கோவிலுஞ் சந்தனா சலநிலவு
காட்சியுங் கமழ்சோலையும்
புணரிவள மும்பொலி திருச்செந்தி லான்மனைவி
பொற்கழங் காடியருளே
புனவேடர் செல்வமென வனமா னளித்தமகள்
பொற்கழங் காடியருளே. 1

73. வழிநறுந் தேனுகரும் வண்டிசை படிக்கையா
மலர்துணர் பொலிந்த சீரு
மாவினிற் பலவினிற் கதலியிற் கனிசிந்தும்
வான ரத்திர ளாடலுங்

கழிபடும் பறவையினம் வெவ்வேறு தொனிதருங்
கவினு முகி லோவுறாது
கண்டுயிலும் வளமையும் புணரியில் வருந்திருக்
கன்னியக லாத மனையும்
பழிபெறு மதன்கடைப் பாணமு நிறைந்துள்ள
பலவாவி யிலகு பண்பும்
பைம்பொனக ரிற்கற் பகத்தரு வினத்தோடு
பழகு நலமுஞ் செழிக்கும்
பொழில்குலவு செந்தூர னிளையமனை யாளினிது
பொற்கழங் காடி யருளே
புனவேடர் செல்வமென வனமா னளித்தமகள்
பொற்கழங் காடி யருளே. 2

74. பகரரும் விலாசமுறு பாராதி யாகின்ற
பஞ்சவித பூதத் தையோ
பதுமமல ரிற்குடிகொள் பிரமன்முத லாமைவர்
பற்றுமைந் தொழில்க டமையோ
நிகரில்சொற் சீருதவு பாரதிமு னாமென
நிகழ்த்து மைஞ்சத் திகளையோ
நிறமைந்தை யோவலது பொறியைந்தை யோவைந்தென்
னீக்கறு மவத்தை களையோ
திகழ்கருப் புச்சிலைக் கணையைந்தை யோவலது
செப்புமெப் பொருளைந் தையோ
செங்காந்த ளங்கையிற் கொண்டுவந் தாய்திருச்
செந்தூர் விசாக னுள்ளிற்
புகவும்வல நின்றுவகை நல்கிடவும் வல்லநீ
பொற்கழங் காடி யருளே
புனவேடர் செல்வமென வனமா னளித்தமகள்
பொற்கழங் காடி யருளே. 3

வேறு மகுடம்

75. வாடரு மலர்க்கூந்த லயிராணி யாதியரை
மனதினு நினைக்கொ ணாது
மால்விடைப் பரமனார் மனைவிமா ரிருவர்களு
மாமிமார் வனச மலர்மென்

பீடமிசை யுற்றவளும் வாரிதி யுடுத்துள்ள
பேதையும் பெற்ற தாய்மார்
பிறைமருப் பானைமுகன் மனைவியாம் வல்லவை
பிணக்கமிகு மோர கத்தி
கூடவுற் றாடு தற்கிவரெலா மாகார்கள்,
குண்டிகைப் பிரமன் மனையுங்
கொற்றவேண் மனையுமச் சினிமார்க ளாதலாற்
கொண்டாடி யுவகை பேசி
யாடலா மாடலா மையுறே லவரோடு
மாடியரு ளாய் கழங்கே
யலைவா யுகந்தவற் கானசிறு மனையாட்டி
யாடிய ருளாய் கழங்கே. 4

76. கஞ்சனைக் குட்டிய கரத்தெம் பிரானுரிமை
கண்டுவகை கொள்ளு நீநின்
களிகண் டழுக்கா றடைந்தாலு முன்னம்
கழுத்துக் கொடுத்து ளானை
நெஞ்சமதின் மதியாதி ருப்பதுவு முன்னையவ
ணிந்திப்ப தும்பி ணக்க
நீணிலத் தோர்க்குவகை யெங்களைப் பெற்றதாய்
நீயெனினு மவளு மெம்மை
வஞ்சமற வமுதூட்டி யாதரிப் பதுமுண்டு
வம்பினீர் சண்டை யிடலான்
மனவாதை யல்லாது சுகமொருவ ருக்குமிலை
மால்விழியில் வந்த தெண்ணி
யஞ்சன விழித்தெய்வ யானையுட னெந்நாளு
மாடி யருளாய் கழங்கே
யலைவா யுகந்தவற் கானசிறு மனையாட்டி
யாடி யருளாய் கழங்கே. 5

வேறு

77. வின்னேர் புருவத் துணையாட
வேலே யனைய விழியாட
விளங்கு மிருநாற் கலைப்பிறைநேர்
வியனார் குளத்தில் வெயர்வாட

தன்னேர் மணிப்பொற் குழைதூங்குஞ்
சவடிக் கொடிநேர் செவியாடத்
தரள நகைச்செங் கனிவாயிற்
றமிழ்நின் றாடத் தழைகூந்தல்
பின்னே சரிந்து சரிந்தாடப்
பிறங்கு பலபூண் பொறுத்தமுலைப்
பெருக்க மாட மலர்க்கரத்திற்
பெய்யும் வளைகள் பெரிதாட
வன்னேர் மேனி அசைந்தாட
வாடி யருளா யணிக்கழங்கே
யலைவா யுகந்தோன் புணரிளமா
னாடி யருளா யணிக்கழங்கே. 6

78. கமல மலர்க்கண் நெடுமாலுங்
கனக நிறத்துத் திருமாதுங்
கடலே மூடுத்த புவிமகளுங்
கண்டு களிக்கக் கறைமிடற்று
விமலர் தாமு மவர்மருங்கின்
மேவு முமையு மலைநெடுங்கை
வெண்நீர் மகளு மறியாது
வேழ மகள்கண் மிகக்கூசத்
தமரக் குழல்மங் கையர்பலபேர்
தாழ்ந்து வருந்தித் தலைகவிழத்
தருக்கி முழங்கான் மடித்திருந்து
தானை யுலையச் சரிகழல
வமரர் முனிவோர் குலமுய்ய
வாடி யருளா யணிக்கழங்கே
யலைவா யுகந்தோன் புணரிளமா
னாடி யருளா யணிக்கழங்கே. 7

வேறு

79. அருணையில் வருமொரு கிளிபகர் பலகவி
யமைந்த தாருடையா
யவிர்மயிலி றகிலை மரவுரி
யதளிவை யணிந்த சீரரையா

யிருகுட மெனமர கதமணி
முகமுட னிலங்கு பூண்முலையா
யிமையவர் பரவிய மகபதி
தருபிடி யிடஞ்ச தாவிகல்வாய்
தருமமும் வளமையு நிறமுறு
தமிழொடு தழைத்த சீரலைவாய்
தனில்வளர் குருபர முருகனை
மயல்கொடு தகைந்த கோமளமே
கருமணி மலையென நிலவிய
குறமகள் கழங்கொ டாடுதியே
கயிலையி லரர்தகு தியில்வரு
மருமகள் கழங்கொ டாடுதியே. 8

80. விதிதவ றறிகிலன் மொழிதரு கவியையும்
விரும்பு பேரருளாய்
விரைமலி குரவொடு புனலியும் வனைதொடை
மிலைந்த கார்குழலாய்
பொதியையில் வதிதரு குறுமுனி யனையவர்
புகுஞ்ச ரோருகநேர்
புதுமல ரடியுள குகன்வழி படவருள்
பொழிந்த கூர்விழியாய்
நிதியர சினைநிகர் பலர்மரு வியநல
நிறைந்த சீரலைவாய்
நினைவக மதனிடை திகழினு மகிழ்பவர்
நிதஞ்சொல் வீறுடையாய்
கதிபவ மெனுமிரு விதமருள் பொறியுறழ்
கழங்கொ டாடுதியே
கயிலையி லரர்தகு தியில்வரு மருமகள்
கழங்கொ டாடுதியே. 9

81. கருமப ரம்பரை யினரிக முங்குயில்
கழங்கொ டாடுதியே
கவலைத விர்ந்துள மகிழவி
டுங்கிளி கழங்கொ டாடுதியே
கருதுந லம்பெற வுதவுசு மங்கலை
கழங்கொ டாடுதியே

கவனுட னன்றொரு பரணிலி ருந்தவள்
கழங்கொ டாடுதியேன்
கருகிய புறதமி ழினுமகிழ் பெண்கொடி
கழங்கொ டாடுதியே
கலிதவிர் செந்திலின் முருகனு
கந்தவள் கழங்கொ டாடுதியே
கருணைமு திர்ந்துள சிறியவு டம்பினள்
கழங்கொ டாடுதியே
கவின்மலி யுஞ்சிறு குடிலில்வ ளர்ந்தவள்
கழங்கொ டாடுதியே. 10

9. அம்மானைப் பருவம்

82. தனையனைய வேயுயிர்த் தொகைமுழுது மென்னவுணர்
தன்மை யில்லாது வீணிற்
றகர்கொன்று வெந்தருந் துதல்பாவ மென்னுநற்
றகுதி யுடையர் கன்மமும்
வினைவலிக் குயர்வோதி மெலியாது மூர்த்தியென
மேதினி யெலாந்து திக்க
விளையாடி வென்றிபெறு பேராண்மை யைக்கருதும்
வீறு ளார்மெய்ப் பத்தியுந்
தினையளவும் விலகாது காலமொரு மூன்றிலுள
சீருந் தெரிந்து மற்றோர்
தேகமினி வாராது மெய்ஞ்ஞான வழியினிற்
சென்றுளார் சேரும் வீடு
மணையமூன் றுருவாகி யவிர்கின்ற நின்கரத்
தம்மானை யாடி யருளே
யடியார் மிகுஞ்செந்தின் முருகோன் விரும்பும்பெ
ணம்மானை யாடி யருளே. 1

83. காமமொடு கோபமு மயக்கமு மெனப்பெரியர்
கழறிடுங் குற்றமூன்றுங்
கமலமல ரான்மதனன் மறவியென் றறிவுளார்
கருதிடும் பகைகண் மூன்றுந்
தாமத மிராசதஞ் சத்துவ மெனப்புலவர்
சாற்றுங் குணங்கண் மூன்றுந்

தணிவி லாணவமாயை கன்மமென நின்றுபல
சதிசெயு மலங்கண் மூன்று
மாமதலை யௌவனம் வயோதிக மெனச்சொல்ல
வந்துறும் பருவ மூன்றும்
மருவுநன வுங்கனவும் வன்சுழுத் தியுமென
வழங்கிடு மவத்தை மூன்று
மாமனைய மும்மற மெலாமொருவ மூன்றாகு
மம்மானை யாடி யருளே
யடியார் மிகுஞ்செந்தின் முருகோன் விரும்பும்பெ
ணம்மானை யாடி யருளே. 2

84. மின்னவிர் சடாடவியில் விதிவிளஞ் சேயினொடு
விடவர வணிந்துளானும்
வேதமுத நூல்பல விரித்துளா ளுங்குடிகொள்
வெண்ணிறத் தொருமுட்டையும்
பன்னரும் விலாசமுறு பாற்கடலி னாகணைப்
பள்ளிகொண் டுள்ளமாலும்
பழுதறு மறங்களை வளர்த்தாளு முற்றுவரு
பைந்தகைய பேரண்டமும்
புன்னளிர் புனற்கடம் புத்தகமு தற்கொண்டு
பூவிடத் துறைகுவானும்
பொருள்முதற் பகருமெண் டிருவைத்து ளாளுமுறை
பொன்மைதிகழ் சினையதொன்று
மன்னமூன் றுருவாகி நின்கரத் திலகுமெழி
லம்மானை யாடியருளே
யடியார் மிகுஞ்செந்தின் முருகோன் விரும்பும்பெ
ணம்மானை யாடியருளே. 3

வேறு மகுடம்

85. சங்கரன் றிருமா லயன்புரந் தரன்முதற்
சகலதே வரும்விரும்பிச்
சந்ததம் புகழிரு தலைச்சூலம் வச்சிரஞ்
சாபமுனை வாளிவிதிர்வாள்
பைங்கதிர்க் கேடகஞ் சக்கரஞ் சேவற்

பதாகைமிளிர் பாசாங்குசம்
பதுமநிக ரபயவர தந்திகழ் திருக்கரம்
பன்னிரண் டுடையமுருகோன்
றிங்கள்முக மாறுமொன் றாகவடி வேலொரு
திருக்கையிற் கோலதாகச்
செம்பவள மேனியிற் றிரைநரை துலங்கத்
திணைப்புனத் துலவுநாளி
லங்கசனை வெல்லுமா றருள்செய்த குறவள்ளி
யாடியரு ளம்மானையே
யலைமுழங் கியசெந்தி னகர்புரந் தருள்பைம்பொன்
னாடியரு ளம்மானையே. 4

86. சகலபுவ னமுநிறையு முயிர்பலவு மகிழவரு
டருகரிய முகிலை நிகர்மால்
சலதிநடு நெளியுமர வணையின்மிசை யிருமகளிர்
தமதிடையில் விழிக டுயில்சீர்
திகழொரு நொடியினிடை யிரையதென வுதறிவிழி
செறிகலபம் விரிய விமையார்
சிறிதுவிடம் வரினுமுய மெனவெருள முனிவரர்கள்
செயசெயவென் மொழிகள் பகரா
மிகமறுக வநுதினமு முறைகமல மலர்தவறி
விழுமொருவ னலற வருள்வார்
விசனமுட னுருளுதலின் வசமுமழி வுறமனைவி
வியன்மலய வடைய விசையோ
டகவிநட மிடுமயில்கொள் குகன்மருவு குறவனிதை
யாடி யருளம் மானையே
யலைமுழங் கியசெந்தி னகர்புரந் தருள்பைம்பொ
னாடி யருளம் மானையே. 5

வேறு

87. பொன்னே பொருளா மெனக்கருதிப்
புலையர் தமையு மதித்துழலு
புன்மைக் குணமும் பொருந்தவிடும்
பொல்லா மிடியாற் புலராம
மின்னேர் வடிவேற் படைப்புகழே

விரும்பித் தவஞ்செய் தருட்செந்தூர்
மேவித் துதிப்பார்க் காதரமா
மேனாண் மலய முனியுதவுந்
தன்னேர் மணிச்சீ ரியற்றமிழுந்
தபனன் போலு மிசைத்தமிழுந்
தவள நிறநா டகத்தமிழுந்
தாமே யுருவாய்ச் சமைந்தனபோன்
றன்னே நின்கைக் கமைந்தனநன்
றாடி யருளா யம்மானை
யள்ளற் களப முலைவள்ளி
யாடி யருளா யம்மானை. 6

88. வையம் பரிக்கும் பனியரசு
வசம்போய்த் தயங்கித் தலைசாய்த்து
வரிக்காற் றுணையாற் கிழித்தன்பால்
வயங்கித் தனதோர் பெயர்புனையுங்
கைய மதமா வினநடுங்கக்
கறுவிச் சிறகா லடித்தெரியுங்
கனல்போ லொளிருஞ் சிகைநிமரக்
கரத்தா லிமையோர் செவிபுதைக்கச்
செய்ய வல்பே ரொலிகாட்டித்
திறல்வா ளவுணர்க் கருவறுக்குஞ்
சேவற் கொடியா லுயர்ச்சிபெறுஞ்
சிந்தூர் புரக்குஞ் செழுஞ்சுடர்வே
லையன் மனைமார் களிலிளையா
ளாடி யருளா யம்மானை
யள்ளற் களப முலைவள்ளி
யாடி யருளா யம்மானை. 7

வேறு

89. வாசவன் வெண்கொடை நீழலி லொன்றிய
வானோர் தம்மாதர்
வாடி யழும்படி வேலைகொள் வஞ்சியர்
வாழ்வா மவன்மரவை
வீசலை யின்புடை மாமணி சிந்திய

வீரார் முந்நீரை
வேழ முகம்பெறு தாருக வஞ்சனை
வேதரவின் மீறு
தேசவிர் கும்பனு மாலுறு குன்றைமெய்
தேர்வார் தம்மோடு
சேதரு பண்புறு சீயனை வென்றுயர்
சீர்வேல் கொண்மீளி
யாசறு செந்திலின் மேவிய பைங்கொடி
யாடா யம்மானை
யாகுல மின்றிய வேட மினின்றினி
தாடா யம்மானை. 8

90. மதிவத னங்கொடு மலரினி டந்திகழ்
மானேர் பொன்வாழு
மருமமு குந்தனொர் விழியில்வ ருஞ்சிறு
மாதே விண்ணோர்கள்
பதியில்வ ளர்ந்தவண் மெலிவுறு சண்டைசெய்
பாடா ரம்மேபொய்
பகர்பவர் நெஞ்சறி வருமொழி யென்றுள
பாகா யுன்னாது
துதிபுரி கின்றவர் கவியும ணிந்துள
தோளான் மண்ணாடர்
சொலவும்வி ளங்கிய புகழினன் வன்புறு
சூர்மாய் மன்மாற
னதிகச வுந்தர முருகன்வி ரும்புற
வாடாய் யம்மானை
யறமிகு செந்திலின் மருவுமி ளங்குயி
லாடா யம்மனை. 9

91. அரிநிறை யுங்கழன் மறவர்செ யுந்தவ
மாடா யம்மானை
யதிநய விங்கித மொழிபகர் பைங்கிளி
யாடா யம்மானை
யதியப தந்தரு திருவருண் மங்கலை
யாடா யம்மானை
யலைகட லுண்டவ னனையர்வி ரும்பனை

யாடா யம்மானை
யரிசன முங்கமழ் புழுகு மணிந்தவ
ளாடா யம்மானை
யசல மடங்கலு முடையப ரம்பரை
யாடா யம்மானை
யரிபுக ழுங்குகன் வலிதிம ணந்தவன்
ளாடா யம்மானை
யறமிகு செந்திலின் மருவுமி ளங்குயி
லாடா யம்மானை . 9

10. ஊசல் பருவம்

92. பேதமொட பேதங்க ளத்தனையு மாகியொளிர்
பிரணவம் பலகை யாகப்
பிழைதவிர் நலங்கண்மிக வுதவியச டாக்கரம்
பீடுறும் வடங்க ளாக
வேதமுட னாகம மெனக்குலவு மிருநூல்
விதித்தபொருள் நிலைய தாக
மெய்ஞ்ஞான வாழ்வணையில் விட்டமா கக்கருணை
மிகையெழில் விதான மாகச்
சீதபங் கயமலரின் மீதழுது வானில்வளர்
தெய்வானை தோழி யாகத்
செங்கைவே லவனிருவர் நடுவாக வரமகளிர்
சேர்க்கைபரி சனம தாக
பூதபெள திகமொடு சராசரம் விளங்கவொரு
பொன்னூச லாடி யருளே
பொருவில்செந் தூரன்வல மருவுசிங் காரமயில்
பொன்னூச லாடி யருளே. 1

93. கானமிகு கின்னரரு னாரத னொடுள்ளசில
கடவுளரும் வீணை யேந்தக்
கண்ணிமைப் பிலர்கற் பகத்தினறு மலர்தூய்க்
கரங்கொடுப லியமி ழற்ற
நானமுத லாயமும் மதமிகப் புனையுமுலை
நாரியர்கள் நடன மாட
நான்மறைத் திரிசுதந் தரராதி வேதியர்க

ணழுவாது சுருதி யோத
வானளவு மிமகிரி வளர்த்தமக ளுங்கடலில்
வந்தவளும் வாணி யுந்தம்
மணவாள ரொடுகண்டு களிகூர மலயமலை
வயின்மருவு முனிவன் முதலோர்
மானமலி முத்தமிழ்க் கவிகொண்டு துதிசெய்ய
மணியூச லாடி யருளே
மறுவில்செந் தூரன்வலம் மருவுசிங் காரமயின்
மணியுச லாடி யருளே. 2

94. கைகுலவு மான்மழு வுடைப்பரம னார்திருக்
கண்டங் கறுக்க வைத்த
கட்செவிக் கயிறுவளை மலையினைக் கொண்டுவெண்
கடலைக் கடைந்த கால
மெய்குளிரு மதியமொடு வேரியங் கமலையொடு
வேதண்ட மெனநி லாவும்
வேழமொடு வேண்டுவன நல்குமைந் தருவினொடு
வியனிதிய மொடுவி னோதஞ்
செய்குணத் தரியினுரு மணிமணியி னொடுமற்றொர்
செம்மணிய தொடுக லாபத்
தேனுவொடு மாயா தளிக்குமமு தொடுவந்து
சேண கத்தினில் வசிக்கு
மொய்குழற் பாவையர் வடந்தொட் டசைந்தாட்டு
முத்தூச லாடி யருளே
முடிவில்செந் தூரன்வல மருவுசிங் காரமயின்
முத்தூச லாடி யருளே. 3

வேறு மகுடம்

95. சென்னியிற் கூதாள மும்குரவுந் நீபமு
தெற்றியொடு சுற்றி யாட
செவியிலணி குழையாட வேன்முதற் பகருந்
திறற்படை யனைத்துமாட
பொன்னியன் மணிப்பணிகண் முந்நூ லொடாடப்
புயத்திலொரு கிள்ளை யாடப்
பொருசேவ லாடமயி லாடவணி கோசிகம்

புறமாட முன்னுமாட
மன்னியசி லம்புகழ லாடமலர் செஞ்சரண்
வருந்தமலை தோறுமாடி
வானவர்க ளனைவரையு மாடவிடு செந்தூரன்
மனம கிழவா தாடுவா
யன்னிய நெறிக்கயவர் பகைமிகுமெ னெஞ்சமென
வாடி யருளணி யூசலே
யறமிகுந் திறலாளர் மறவாத குறவள்ளி
யாடி யருளணி யூசலே. 4

96. சிலைவே ளெரிந்துபொடி படவென்ற கண்ணுடைய
சிவனம் பலத்தி லாட
செந்துவர்க் கனிவாய்கொள் சிவகாம சுந்தரி
திருக்கரங் கொட்டி யாட
தலைமீது பீலியை முடித்துநெடு மாயனொரு
சற்பத்தின் மீதி லாடத்
சலசமல ரிற்குடிகொ டிருமாத ரெண்மருந்
தமிழ்நாடு தன்னி லாட
வுலைவில்சுரு தித்தலைவன் மாலுந்தி யினிலாட
வொப்பில்கலை வாணி யுன்றன்
னுபயமல ரடிகருது மவர்நாவி நின்றாட
வுலக முற்றும் பராவு
மலைவாயி னடமாடு மவனிளைய மனைவியினி
தாடி யருளணி யூசலே
யறமிகுந் திறலாளர் மறவாத குறவள்ளி
யாடி யருளணி யூசலே. 5

வேறு

97. கங்கை யறுகு பிறையிதழிக்
கண்ணி முதலா வனவரன்றன்
கவினார் சடைக்காட் டிடையெடுத்துக்
கடத்துாற் றொழியாத் தலைக்கணிந்துங்
கொங்கை யருத்தி வளர்த்தாட்காக்
கொதிநீர்க் கடலின் மறையெறிந்துங்
குளிர்கா விரியைப் பொருநையினைக்

கொடுத்துந் தமிழ்ச்சொற் கொடுதுதித்த
நங்கைக் கழியாப் பதமீந்து
நாரி யொருத்திக் கிதம்புரிந்து
நாயிற் கடையா மெனையொருக்கா
னனைத்தும் பலவா விளையாடு
மங்கைக் களிற்றுக் கிளையானோ
டருளா ரூச லாடுதியே
யாழி யொலிச்செந் தூர்ச்சிறுதா
யருளா ரூச லாடுதியே. 6

98. வாளுங் கணையு மனையவிழி
வணிக மகளைக் கடைச்சங்க
மருவுஞ் சிலருள் வலியவனை
மதுர மிகுஞ்சொற் பசுங்கிளியைத்
தாளுங் கருகக் கொடும்பாலை
தன்னி னடந்த புலவனைநீர்த்
தரங்கக் கடலி னிடைவீழ்த்திற்
சயில முகட்டிற் றிகழ்ந்தானை
வேளும் வியக்கும் பெருங்காம
விடனைத் திருமந் திரத்தூரின்
மேவு மிருவர் தமையனைய
மேலோர் பலரை வினைப் பிணிதீர்த்
தாளுங் குமர குருபரனோ
டருளா ரூச லாடுதியே
யாழி யொலிச்செந் தூர்ச்சிறுதா
யருளா ரூச லாடுதியே. 7

வேறு

99. மலைசார் புனமதி லொருமா னுதவிய
மாதே வில்வேடர்
வளர்சே ரியிலுயர் கருகூ லமதென
வாழ்வாய் நல்லோர்க
டலைமீ தணிதரு மிருதாண் மலர்பெறு
தாயே வெள்ளானை
தருவா ளெதிரணு வளவா யினுமொழி

தாழா வல்லாண்மை
நிலையா மனமட மயிலே யநுதின
நேர்வா ருள்ளேகி
நிசமா கியவர முடனே யிலைபொதி
நீறீ கைதோயு
மலைவா யினன்மரு வியகோ மளையினி
தாடாய் நல்லூச
லருள்வா ரிதிபொரு குறமா துவகையொ
டாடாய் நல்லூசல். 8

100. பூரண சற்குரு வாயடி யர்க்கெதிர்
போம்வே ளெல்லூடு
போதநி னைக்கவ லார்தமை விட்டயல்
போகா னல்லாக
நாரணன் முற்பகர் சீல நெழிற்றமிழ்
நாடாள் வைவேலன்
ஞானவி ளக்கமெ லாம்மொழி யத்தகு
னாவான் மல்லாடும்
வாரணம் வைத்தபு யாசல முத்தையன்
வானோர் கள்வாழ
மாயையின் மக்கடம் வேரைய றுக்குமுன்
மாசார்சொல் லோது
மாரண னைக்கறு வாண்மை யனத்துமி
னாடாய் நல்லூச
லாழிவ ளத்தலை வாய்நக ரிக்குயி
லாடாய் நல்லூசல். 9

101. அம்புவி லுள்ளவர் தங்குடில் வைகின
ளாடாய் நல்லூச
லந்தரர் செல்வியு ணொந்திட வைபவ
ளாடாய் நல்லூச
லம்புயல மையகல் சிந்துறழ் செவ்வியன்
ளாடாய் நல்லூச
லங்கசன் வெஃகொரு தங்கையென் மெய்யின
ளாடாய் நல்லூச
லம்புலி நைவுற வெம்புமை யொவ்வணை

யாடாய் நல்லூச
லஞ்சலி செய்பவர் தந்துயர் கொய்பவ
ளாடாய் நல்லூச
லம்புய னொல்கமு னிந்தவன் வெளவுபெ
ணாடாய் நல்லூச
லன்பர்க ளுய்தரு செந்திலில் வள்ளிமி
ளாடாய் நல்லூசல். *10*

நேரிசை வெண்பா

102. சித்துப் பெருக்கமுறு செந்தில்வள்ளி சிந்தைமகிழ்
பத்துப் பருவம் பகுத்தோதி - வைத்துளவிப்
பிள்ளைக் கவிப்பனுவற் பேணுநலம் பெற்றோர்க்கும்
வெள்ளைக் கவிகையெய்து மே.

2
பழனிப் பிள்ளைக்கவி

1. காப்புப் பருவம்

திருமால்

1. ஆனைமுக முன்னவற் கிளவலென மதிசூடி
யழல்விழியில் வந்து விண்ணோ
யன்றுபடு மின்னலுடன் ரவுணருறு மார்வமு
மழித்துத் தெழித்த பூத
சேனையொடு லாவுபெரு வடிவங் கரந்தெமது
சிறுமன முந்நாடு தற்கா
தேசிக வுருக்கொண்டு பழனிமலை மிசைநிலவு
செவ்வே டனைப்பு ரக்கச்
சோனைமுகி லேயனைய தனதுரு மறைத்தலைக
டுள்ளும் வெண்பாற் கடலின்வாய்
சுரகணமொ டசுரகண மிடுமலை சுமந்தெழு
சுதைத்திரள் பகிர்ந்தி டற்கா
மானைநிக ருருவுஞ் சமைந்துதகு வர்க்கிறுதி
வருவித் தரன்ற னுள்ள
மருளூற மயக்கியொரு மதலையு மளித்தவரி
மலரடி வழுத்து துமரோ. 1

சிவன்

2. அசிபதாதி முப்பதமு நினைகுவார் தமக்குதவி
யவிர்கலா லடிக்கணுறை வாரைப் பிறப்புறா
தளவில்கோடி சத்திகளு மருவுசீர் பொறுத்தவரை
யமலஞான சித்தர்மற வாமற்குறிக் குமீர
டியுளாரை யித்தரையி னடுவினீடு பொற்சிலையி
லரவநாணி யிட்டிகல்வெல் வீரத்த ரைப்பொனூ

ரமரர்சேனை சுட்டபொடி நிறையுமேனி யிற்பகுதி
யறமெலாம்வ ளர்த்தவள்கொ ளார்வத் தரைக்கெடா
விசிகநாடி மெய்த்தவசு புரிகிரீடி யைப்புரையும்
விரதசீலர் முற்செயும்வி னோதத்தரைக் கையால்
விசிறும்வார்வ லைச்சமனு மதனுநான் முகத்தயனும்
வெருளுமாறு றுக்கியெழு கோபத்த ரைத்தெணீர்
விதுவரா வெருக்கலரி யிதழியார் முதற்சொல்பல
மிளிர்சடாட விக்கிழவன் னானுரைத்த தமிழ்ச்சொலா
மிகவுநாளு மெச்சுமொரு சதுரர்மா மனத்துலவும்
விடைவலாரை விப்பிரர்க டேவைப் பழிச்சுவாம்
வசியமோக னக்கருணை கொடுமினார் பலர்க்கவரும்
வளமையாள னைச்சகல லோகர்க்கு நட்பனா
வருகுமார னைப்பொருவின் முருகநா தனைக்கலப
மயில்விசாக னைச்சமர்செய் சேவற்க ரத்தனா
வளர்குகேச னைப்பரணி லுறையுமா னளித்தமயன்
மலிவதானம ரத்துருவு மாமுத் தனைச்செவேல்
வலதுதோளில் வைத்தவுணர் குலமெலா மறக்கறுவும்
வயவனான சற்குருவை வானத்தர் வெட்கவே
பசியினொ டுறக்கமுறு முனிவர்யா வருக்குமறை
பகர்கிலாமு தற்பொருள் சொல்வானைக் கனற்கணோர்
பருவதாக ரத்தில்வருத் தாகடாவி வெற்றிபெறு
பலமுளானை யத்திமகள் கோனைப்பல் பத்தர்சூழ்
பவளமேரு விற்பெரிய சலதடா கமத்திவரு
பரமசீல சற்குணவி லாசத் தனைபொனேர்
பதுமகோம ளைக்கினிய னுயிர்கொல்வானை முத்தருணர்
பழனிமாம லைக்குமர வேளைப் புரக்கவே. 2

அம்பிகை

3. அருவம தத்தினர் சிறுமன மத்தியி
லமரும்வி ருப்பறு சுந்தரப் பார்ப்பதீ
யழகிய லட்சுமி சரசுவ திக்கொடி
யநுதின மெச்சிவ ணங்குபொற் றாட்பிடீ
யருணவ ரைக்கரு கொருகன விற்றமி
யனையவ ணச்சிய விர்ந்தசிற் றாக்கையா
யசலவி னத்திறை புரிதவ சிற்பெருக்

கமகிழ் வுற்றொரு குஞ்செனத் தோற்றினாய்
சருவம தத்தரு மிகழிட வெய்ப்பறு
சகளவு ருப்பல தந்தசித் தாட்டுளாய்
சரத நினைப்பொடு வழிபடு முத்தமர்
தமர வருக்கும்வ ரங்கள்மிக் காற்றுவாய்
தமிழ் கொடுசெப்பிய புலவனு ணப்பல
தரமுலை வைத்தமு துஞ்சமைத் தூட்டினாய்
தனதுயி ரிற்றிகழ் தருதிரி யக்கர
சவுரிய நச்சிநின் முன்கைகட் கூப்புவேன்
மருவல ருக்கெம னெனநிகழ் சத்திர
வயவர்வ ழுத்திய செஞ்சொன்மிக் கேற்றசேய்
மரகத ரத்தின மெலியுநி றத்தனி
மயிலை நடத்துது ரங்கமொப் பாக்கொள்வான்
மறவர் குறிச்சியி லொருகுடி லுற்றுமுன்
வளர்சிறு மிக்குந யங்கள்செப் பாற்றலான்
மகபதி முற்றமல் கியகரி புத்திரி
வனமுலை முட்டிய விங்கிதப் போர்ச்செவேள்
பருவத முற்றுமொர் குடையினுள் வைத்துள
பழையவன் மொய்த்த கடம்பலர்த் தார்க்கொள்கோ
பறிதலை யிற்புழு நெளிதரு துட்டர்கள்
பதறி யழப்பதி கங்கள்சொற் றார்த்ததோர்
பனவனு முக்கிர வழுதியு முற்படு
பலரையி ழுத்துவி ழுங்கருட் கூத்தன்மால்
பகர்பெரு மைக்குகன் வளமலி வுற்றுயர்
பழனிம லைக்கும ரன்றனைக் காத்திடே. 3

விநாயகர்

4. கனியாதி மிக்கசுவை யுணவான்ம கிழ்ச்சியுறு
கடமாமு கக்கடவு ளானைநட் டார்க்கொரேழ்
கடல்நேர் பிறப்பொழிய நினைவானை யொப்பில்பர
கதிஞான வித்தனைய தாரகக் கோட்டுளே
தனியான தத்துவனை யொருமூவ ருக்குவகை
தருகேள்வ னைத்தண்வய லூர்முகப் பாச்சொல்சீர்
தகுசார லிற்குலவு கணநாத னைப்பெரியர்
தணவாது முற்றொழுமொர் தேவினைப் போற்றுவா

மநியாய முற்றுபல தகுவேசர் சுற்றமுட
னழிவாகி டப்பொருமவை வேலனைத் தோட்கண்மீ
தணிசாரு வைப்பரவு புலவோர் கவித்தொடையி
லதியாசை யுற்றகும ரேசனைத் தூர்த்தர்நேர்
பனியாது றுக்கவல கவுமார ருக்கினிய
பயன்யாவு நித்தமருள் வானைமைச் சூற்கொண்மூ
படர்சோலை சுற்றுகவி னுலவாது யர்ச்சிபெறு
பழனா புரிக்கிரி விசாகனைக் காக்கவே. 4

திருமகள்

5. பவளாச லம்புரையும் வடிவொடும லர்க்கண்மால்
பதையாத நெஞ்சிலுறு மனைவியையி மைப்பிலார்
தவயோகர் முன்பகர்பு ணியர்பலரு நச்சவே
சலசாத னந்தனில்வை கியகொடியை மெச்சுவா
முவமான மின்றியசண் முகவரத னைப்பனூ
லுணர்வார் புகழ்ந்தகுர வனைவிடை கைத்துவாழ்
சிவனார்ப யந்தசிறு மதலையினை முத்தர்சூழ்
திருவாவி னன்குடியின் முருகனை யளிக்கவே. 5

சரசுவதி

6. அலர்கம லத்தவி சுறைதரு விப்பிர
னகமுரு கப்புண ரோதிமச் சீர்பெணா
ளலைகட லுட்கொளு முனிவன் வசிட்டன்மு
னவிர்தரு மக்கள்பல் கோடிபெற் றாட்கொள்வா
டலமுழு திற்றிக மூயிர்கள் சிருட்டிசெய்
தருமம தற்கொர்ச காயசித் தாட்டுளா
டவளநி றப்பிடி யனையவள் சத்திய
சரசுவ திக்கொடி தாள்களைப் போற்றுவா
மலகில் படைப்பொலி வுறுதகு வர்க்கெதி
ரயிலைவி டுத்துவெல் வாகுவிற் பூத்தபூ
வவளவு மிட்டுள குமரன் மயிற்பரி
யழகனெ மக்கொரு தாயெனத் தோற்றுசேய்
பலபல வெற்பினில் வளரெயி னத்திரள்
பணியு முவப்பவன் வானவர்க் காத்தகோ

பரசணி யத்தரும் வழிபடு பொற்புறு
பழனிம லைக்குரு நாதனைக் காக்கவே. 6

நவக்கிரக தேவர்கள்

7. வருக்கர்மன நாணமுற வாழ்துருவ னங்கையால்
வளைத்துவிடு நேமிபுனை மாமணியி லொன்றியே
நருக்கெனவெ நாளும்வட மேருவைவ லஞ்செய்சீர்
நவக்கிரக தேவர்களை நான்மிகவ ணங்குவேன்
மருக்கமழு நீபமலர் மாலைபுனை கந்தவேள்
வலக்கையக லாதவிர கோரசெய தண்டுளா
னிருக்குமுத லாயமறை கோடிபுகழ் தம்பிரா
னெழிற்பழனி மேவுமுரு கோனலம் விரும்பியே. 7

நல்ல தெய்வங்கள்

8. நாயு நரியா தியபிறவுந் நச்சி
யருந்தத் தகுமூனு
நரரிற் கடையா மவர்பருக நாறு
மரக்கு நவைக்கள்ளுந்
தோயுங் கொடும்பூ சையின்விருப்பந் துகளொன்
றளவா யினும்பொருந்தாத்
தூய கடவு ளினமுழுதுந் துதித்தே
நாளுந் தொழுதெழுவாந்
தேயும் பிறைவா ணுதற்கவுரி செங்கைக்
குருந்தைச் சிவபெருமான்
செவியிற் பரம ரகசியஞ்சொல் சிறுவாய்க்
குமர குருபரனைப்
பாயுந் தகரு மயிலேபோற் படியிற்
ககனத் துறச்செலுத்தும்
பணைத்தோண் முருகப் பெருமாளைப் பழனிப்
பதியிற் புரப்பதற்கே. 8

மெய்யடியார்

9. சத்தசுர நான்மறைச் சமயங்க ளாறினுந்
தரணி மண்டல மாதியாச்

சாற்றிபுவ னங்களினு மென்றென்று முற்றபல
தரமாய தொண்டர் கட்கும்
புத்தமுத மனையதுதி சொற்றவர் பதாம்புயப்
பூந்து கண்முடிக் கணிந்து
புலையுடைக் கயவர்மனை புகுதரத விரதமொடு
போத வஞ்சலி செய்குவா
மத்தமறு காத்திகொக் கிறகாதி யணிசடில
வள்ளல்விழி யுதவு மகவை
மயிலேறி யண்டபகி ரண்டமெங் கணுமுலவும்
வரதனைச் சரத மிகழாப்
பத்தர்மன பங்கயத் திற்றனிய னாநிலவு
பரமதே சிகனை யந்தண்
பழனியங் கிரியில்வளர் குமரபுங் கவனைநனி
பாதுகாத் தருள வென்றே. 9

பொதுத் தெய்வம்

10. அகில மனைத்துந்தன் வசமில கக்கொண்டு
மமைவரு நிர்த்தொந்த மானதைச் சூட்டுவா
லனமிவர் பொற்கஞ்ச னுததிந டுத்துஞ்சு
மரியொரெ ழிற்கொங்கை பாதியிற் காட்டுவா
னனையர்வ ழுத்துஞ்சொல் வனைவத னைப்பொங்க
மவிர்கரு ணைச்சிந்தை மோனவித் தாப்பலோ
ரறிபெரு மைக்குன்றை வெளிநிறை யத்துன்று
மதிசய முற்றெஞ்சு றாததைத் தீக்குநேர்
திகிலொழி யச்சந்த தமுமுணர் கற்பன்பர்
செபதவ முற்றுங் கொடாள்வதைக் காக்கைபோல்
சிலர்தெரி யக்கொஞ்ச மிளிர்பொருளைக் கண்கள்
செறியுட லத்தும்பர் கோனிசைக் கேக்கறார்
திரண்முழு குத்துங்க மருவிய தைப்பண்செய்
திருமறை கட்கந்த மாமுதற் பேற்றையூர்
தினகர சற்சங்க முழுமையும் வெட்குண்கொள்
சிவபர் வத்தென்ற தேவைமிக் கேத்துவாம்
வகிர்வடு விற்கண்கொள் குறமக ளைக்கெஞ்சு
மகிமையு டைக்கந்த வேடனைக் கோட்டுமா
மகபதி தற்சொந்த வரண்மனை யிற்கொண்டு

வரவளர் பொற்கொம்ப னாண்முலைப் போர்க்கவா
மலிகுக னைக்கும்ப முனிவன்மு தற்றொண்டர்
மலையம லைக்கண்ப ராவுசொற் பாக்களான்
மகிழ்பவ னைக்கங்கை யருள்சுதனை சிங்கன்
மடியவ தட்டுங்கு ரூரனைத் தோற்றதோர்
பகிரத னுக்கம்பு வியினர சைத்தந்து
பகையும றுக்குங்கை வேலனைப் பூக்கொய்தே
பதமல ரிற்சிந்து தொழிலினர் முற்பொங்கு
பதிதர்கு லச்சங்க நாசனைக் கோட்டிறால்
பலமது வைச்சிந்து பொழிலினி டத்தண்டர்
பழகும்வி யப்புந்து சாரலிற் சேற்கொணீர்
பரவையெ னக்கண்ட வளமலி யக்கொண்ட
பழனிம லைத்தண்ட பாணியைக் காக்கவே. 10

2. செங்கீரைப் பருவம்

11. திங்கள்வெண் குழவிதவழ் சடிலச் சிவன்றனது
தேவியையு நீத்து நெடுநா
டெக்கண முகத்தனாக் கல்லால நீழலிற்
செய்த வமுதிர்ந் திட்டதாற்
பங்கயம் பொருதழல் விழிப்பொறிக ளாவந்து
பைம்புனற் சரவ ணத்திற்
பாலக னுருச்சமைந் தாறன்மின் னாரறுவர்
பால்கு டித்தும் பசித்துச்
சங்கலம் புறுமென்கை யுமையவ ளெடுத்தமுது
தரவுண் டுவந்து நீடித்
தகுவரை யழித்தமரர் படுசிறை தவிர்த்தருட்
சற்குரவ னாகி யப்பாற்
செங்கரும் பினனாணும் விளையாடல் பல்செய்வாய்
செங்கீரை யாடி யருளே
திருவாவி னன்குடியின் மருவுமுரு கேசனே
செங்கீரை யாடி யருளே. 1

12. சைவமா தியவருட் சமயங்க ளுக்குந்
தடஞ்சிலை யனைத்தி னுக்குஞ்
சலதியுண் டவன்முதற் றவசிக ளெவர்க்குந்
தமிழ்ச்சங்க மியாவி னுக்கு

மெய்வரோ தயஞான தேசிக ரெவர்க்கும்விறல்
வீரரொடு சார தர்க்கும்
விண்ணவர் திரட்குமகன் மண்ணவர் தமக்கும்
வளமிஞ்சுபல் புனங்க ளுக்குங்
கைவழா தமர்முடுகு சேனா திபர்க்குங்
கலாப மயில்சேவ லுக்குங்
கனலுதவு தகருக்கும் வெள்ளிவெற் பெனமிளிர்
களிற்றி னுக்குங் கருங்கட்
டெய்வயா னைக்குமற வள்ளிக்கு நாயகா
செங்கீரை யாடி யருளே
திருவாவி னன்குடியின் மருவுமுரு கேசனே
செங்கீரை யாடி யருளே. 2

13. பொய்வே தனைத்தொழிற் கிரவுஞ்ச வெற்பினும்
புலைவெங் களிற்றின்மீதும்
பூதரொடு வீரரைக் கொடுபெரும் புணரியிற்
போமாய வாளியினிலுந்
தெய்வேந்தி ராதியர்க ளூறுதுய ரனைத்தினுந்
தீயவெம் சூர்மாவினுஞ்
சிலையிறை தருங்கவுரி யுறுபெருந் தாகத்
தியக்கத்தினும் பல்பொருள்டோய்
மைவேலை யுறழ்பனுவ னுவல்கீர னடைபட்ட
வரையினு நிறங்கறுத்த
வடவைபுரை யலகையினு மற்றுமிவை யன்னபல்
வயிற்றொறும் வலம்புயத்துச்
செவ்வேல் விடுத்துச் செயம்பெற்ற சேவகா
செங்கீரை யாடியருளே
திருவாவி னன்குடியின் மருவுமுரு கேசனே
செங்கீரை யாடியருளே. 3

14. மின்படு நெடுஞ்சடைச் சிவனிக ரகத்தியனும்
வீணைவல நாரதனுநல்
விரதமுசு குந்தனுங் கங்கைவரு மாறுதவ
மிகமுயல் பகீரதனுமோர்
வன்பனை மணந்துற்ற வணிகமக ளும்புலமை
வலிபெறு தமிழ்க்கீரனு

மாறில்பொய் யாமொழியு மருணைநக ரின்சிகரி
வடவருகி லுயந்துளானுங்
கொன்பரவை நீந்திப் பிழைத்தசிவ ஞானியுங்
கோவலூர் வந்துதொண்டன்
குறைதவிர் பிறப்புதவு முனிவனும் போரூர்
குலாவவரு வாநிகர்பே
ரன்பரெதிர் மயிலேறீ யாடிவரு மழகனே
யாடியருள் செங்கீரையே
யணிபொழில் பழனிமலை யாளுமுரு கையனே
யாடியருள் செங்கீரையே. 4

15. கொம்புடைக் கரியுரிவை போர்த்தவ னுரத்தினுங்
குன்றமகண் மடிமீதினுங்
கும்பமுனி யாதியர் சிரத்தினுங் குஞ்சரி
குறக்கோதை யங்கைகளினும்
பைம்புனற் சாரற் குறிச்சிகளி னும்பல
பருப்பதச் சென்னிகளினும்
பாவலவர் சித்தர்மன் னவர்முதலி னோர்களவை
பலவற்றி னும்பனைக்கைச்
செம்புகர்க் களிறாடு மயிலிடப முதுகினுந்
திருவருணை யூர்ப்புலவனோர்
சீரியவர் கவியெழுது சுவடிகளி னுந்தினந்
தினமணங் கமழ்வதாய
வம்புயப் புதுமல ரெனக்குலவு பாதனே
யாடியருள் செங்கீரையே
யணிபொழிற் பழனிமலை யாளுமுரு கையனே
யாடியருள் செங்கீரையே. 5

வேறு

16. செம்பொற் பணிக ளவிர்ந்தாடத்
திருவாய் மலரி னகையாடச்
சீரார் நுதலில் வெயர்வாடச்
செழுமா மலர்ச்சீ ரடியாடக்
கொம்பொற் றையுளா னுடனாடக்
கோலா கலமா மயிலாடக்

கூவுஞ் சேவற் கொடியாடக்
குழுவு மமரர் குலமாடப்
பைம்பொற் கவுரி களியாடப்
பழமா மறையி னிசையாடப்
பலதா னவருட பயமாடப்
பாம்பும் புலியும் பார்த்தாட
வம்பொற் சிலையோன் கூத்தாட
யாடி யருள்செங் கீரையே
யருள்கூர் பழனிக் குருபரனே
யாடி யருளாய் செங்கீரை. 6

17. கணியார் புனங்காப் பிதண்டமடவார்
கவணுங் களமுந் தருமொலியுங்
கரடி புலியா தியபிறழுங்
கானாற் றொலியுங் கணைசொரிவிற்
றிணியார் புயவேட் டுவரொலியுஞ்
சிகியா தியபுட் டிரலொலியுந்
தெய்வத் தகைசா லரமகளிர்
தினமா டியதாள் சிலம்பொலியும்
பணியா மகிழ்மா தவரொலியும்
பறையா தியல்பல் லியத்தொலியும்
பைங்கண் ரொலியு மெதிரொலியும்
பரவிப் பசும்பொன் னகர்வியக்கு
மணியார் குறிஞ்சிக் கிறையவனே
யாடி யருளாய் செங்கீரை
யருள்கூர் பழனிக் குருபரனே
யாடி யருளாய் செங்கீரை. 7

வேறு

18. மறியணி கரதலன் முதலிய கடவுளர்
வாட லொழிந்தார்கண்
மகபதி யுடனுள புலவர்க ளனைவரும்
வாழி மொழிந்தார்கள்
செறிதரு கடலினு மிகைபடு மவுணர்கள்
தீரமி ழந்தார்கள்

செபதவ நெறியிடை வழுவறு முனிவரர்
தீவினை விண்டார்கள்
பறிதலை யமணரு மவரது பிறகுசெல்
பாவரு நொந்தார்கள்
பதிதர்கள் குடைநிழ லைமெனு மிழிவினர்
பாறினர் கண்டாய்மெ
யறிவினை யறிபவர் வழிபடு மிறையவ
யாடுக செங்கீரை
யழகிய பழனியி லமர்சிவ குருபர
வாடுக செங்கீரை. 8

19. பத்திநெ றிக்கண்மி கத்துணி வுற்றவர்
பாழின்ம யங்காது
பற்பல சித்திகள் பெற்றில கத்துதி
பாடிநின் முன்போதி
முத்திவி ருப்பின்மு மூக்குறு சற்சனர்
மூடரி டம்போய்வெண்
முத்தொடு பொற்பண நெற்குவை யிச்சைகொண்
மோகம மிந்தேக
நித்திரை யொக்குமி ருட்க ணுவப்புறு
நீசர கங்கார
நெட்டுர மற்றிட மற்றையர் கட்டம
நேகமும் விண்டோட
வத்திமு கக்கட வுட்கொரு பிற்றுணை
யாடுக செங்கீரை
யற்புத மிக்கதி ருப்பழ னிக்குக
னாடுக செங்கீரை. 9

20. பார்வயின் வாழ்பல வூரவர் கூடிய
பந்தா னஞ்சோலை
பாகுறழ் பாடல்வ லாரிசை வாலுயர்
பண்பா டுஞ்சீல
நார்வழு வாதசி வோகமெ ஞானியர்
நண்பார் சந்தோட
நாரிய ரோடுவி ணோர்கள் சதாவர
நந்தா வண்சாரல்

போர்வய வீரர னேகர்கள் சூழ்தகை
புண்பா டொன்றாத
பூசுரர் சேகர நீர்வள மாதிய
பொங்கோர் குன்றாத
சீர்வய லூர்மலை மேல்வளர் தேசிக
செங்கோ செங்கீரை
சேவல்நி லாவிய கேதன மாரத
செங்கோ செங்கீரை. 10

3. தாலப் பருவம்

21. சீரார் குறிச்சி தொறுநடித்துச்
சிறுமென் முலையார் பலபேரைத்
திருடிப் புணர்ந்து தமிழ்ப்புலவர்
சிந்தை கவர்ந்து சிறிதேனும்
பாரா தியின்மா லணுகரிய
பரமா னந்தத் தவசிகளுள்
பதுமம் புரையு மனத்தவிர்ந்து
பங்கே ருகனைச் சிறைப்படுத்திக்
காரார் வடிவத் திருநெடுமால்
களிக்கத் தகுவர் களைத்தடிந்து
கண்மூன் றுடையாற் குபதேசங்
கழறி யிருமா தரைக்கலந்து
தாரார் கடம்பு புனைந்தகுகா
தாலோ தாலோ தாலேலோ
தண்டேந் தியகைப் பழனியப்பா
தாலோ தாலோ தாலேலோ. 1

22. முன்னம் பனுவற் றொகைவகுத்த
முனிக்கோன் விதிக்கா விப்பருவ
மொழிகின் றனனீ யிதுதானே
முற்று நலமா மெனுந்துணிவா
லின்னந் துயிலக் கருதாதே
யிந்நாட் டுயிலு மறல்வேண்டு
மேரா ருசற் றுதியாக்கொண்
டினர் குடைத்தீங் கொழித்தெமையா

கன்னங் கரிய விழிமடவார்
கலவிப் போது மெய்யடியார்
கருதும் போது முபநிடதக்
காட்டின் முடிவிற் கவின்றாங்கு
தன்னந் தனியாய்த் திகழ்முருகா
தாலோ தாலோ தாலேலோ
தண்டேந் தியகைப் பழனியப்பா
தாலோ தாலோ தாலேலோ. 2

23. அருவு முருவு மருவுருவு
மாமோர் மூன்றுந் தனவேயென்
றறிவார் தமக்கு மொருபடித்தே
யாவாயெனப் போற்றி சைப்பார்க்கு
கெருவச் சமணா தியர்பலருங்
கெடுமா றியற்றத் தவம்புரியுங்
கிளர்ச்சி யினர்க்குங் கொடுங்கோன்மைக்
கீழோர் மருமங் கிழிப்பார்க்கும்
பருவ மதிநேர் முகமடவார்
பரவும் பெருமை படைத்தோர்க்கும்
பகரும் பிறர்க்கு மவரவர்தம்
பான்மை யளவி லருள்புரியுஞ்
சருவ குருதே சிகமுருகா
தாலோ தாலோ தாலேலோ
தண்டேந் தியகைப் பழனியப்பா
தாலோ தாலோ தாலேலோ. 3

24. கண்ணா யிரத்தான் மகள்கணவா
கானக் குறத்தி பணிபுரிவாய்
கதிர்வேற் படைக்கைக் காவலவா
கயிலைக் கிரியார் விழிப்புதல்வா
வெண்ணார் குடிக்கோர் நெருப்பாவாய்
யீரே ழுலகுந் தகருகைப்பா
யெல்லா முணர்ந்த முழுப்புலவா
விரங்கா மனத்தார்க் குணர்வரியாய்
மண்ணாட் டினிற்சிற் சிலமனித
வடிவுஞ் சமைவாய் மரகதமா

மயிலூர்ந் துப்பா யுலகளிக்கு
மாயோன் மருகா மழைமலிவாற்
றண்ணார் பொழில்சூழ் பழனிமலைத்
தலைவா தாலோ தாலேலோ
தவத்தோர் பலர்க்கு மொருகுருவாஞ்
சரதா தாலோ தாலேலோ. 4

25. அகர முதலே யெனக்குலவு
மைம்பத் தொன்றா மக்கரமு
மவற்றாற் றொனிக்கு நான்மறையு
மாக மாதிப் பலநூலும்
பகலு மிரவுங் கதிர்மதியும்
பகுத்தோ தரும்பற் பலகோளும்
பாரா தியவைம் பூதமுமப்
பாப்பா னிகழ்பல் பவுதிகமு
மிகழ்வும் புகழ்வும் பொலிந்துளவா
மெண்ணில் சமயப் பெருங்காடு
மேக பரவாதமு மொன்றென்
றிரண்டென் றுரையாப் பொதுநிலையுஞ்
சகள மொடுநிட் களமுமொரு
தானா முருகா தாலேலோ
தண்ட மொடுவேல் கொடுபழனி
தனில்வாழ் குமரா தாலேலோ. 5

வேறு

26. பண்டைநான் மறையினது முடிதொறு மவிர்ந்துள
பருப்பதந் தொறுநடித்துப்
பரமனுஞ் சிவையுமவர் விழிகளி லணிந்துமுகர்
பங்கே ருகங்களாகித்
தொண்டையங் கனிவாய் மடந்தையர்கள் வாழ்மனை
தொறுந்தொறு நடந்துமெய்ம்மைத்
தொண்டர்க ளனேகரைத் துய்த்துமிழக லாததொர்
சுதந்தர சுபாவமெய்திக்
கண்டையுஞ் சங்கமுங் காகளமு மாதியன
கல்லென் றொலிப்பநாளுங்

கமனசித் தேசரும் பூசனை செயும்படி
கவின்தந்து கழல்சிலம்பு
தண்டைபுனை செஞ்சரணென் முடிமிசை தரித்தவா
தாலேல தாலேலவே
தண்டொன்று பழனிமலை தனிலூன்று குருபரா
தாலேல தாலேலவே. 6

27. கவளமென் றமுதமுண் டுண்டுதுயி லாதுலவு
கனகநகர் வேழமொன்றுங்
கமலாத னத்தில்வளர் பிரமா விருப்பமுறு
கவினார்ந்த வன்னமொன்றுங்
குவலய மளித்துண் டுமிழ்ந்தநெடு மாலுவகை
கூரவரு முவண மொன்றுங்
கொற்றமுத் தலைவே லுடைச்சிவனை முதுகினிற்
கொண்டுலவு மிடப மொன்றும்
பவளமால் வரையனைய கணபதித னாகுப்
பதாகை ஒன்றுங் கவுரிதன்
பங்கிலுள சிங்ககே தனமொன்று மற்றுமுள
பலவுந்நா ணிப்பராவு
தவளவண் சேவற் கொடிக்கந்த நாயகா
தாலேல தாலேலவே
தண்டொன்று பழனிமலை தனிலூன்று குருபரா
தாலேல தாலேலவே. 7

வேறு

28. மெய்த்தவ முற்றவர் கற்பரு மைக்குணம்
வீணே போகாமே
விட்டுணு முற்புக ழத்தகு னிச்சைகொண்
மேலோர் தாழாமே
கைத்தசு வைக்கவி நச்சிவ சைப்படு
காதார் வாழாமே
கற்பம்வ ரைக்கு மிறப்பறு சித்தர்த
காநீர் தோயாமே
பைத்தலை யுற்றபு விக்கிட ரைப்புரி
பாழா ராளாமே

பக்குவ மெட்புரை யக்கொடு நிற்கிலர்
பாய்மா நேராமே
சத்தசு ரச்சுரு திப்பொருள் வித்தக
தாலோ தாலேலோ
தக்கதி ருப்பழ னிக்கிரி யிற்குக
தாலோ தாலேலோ. 8

29. சேவலொ டோர்கிளி மேவிய தோள்பெறு
சீர்மா றாவேடா
சீகர நீர்முத லாவன சூடியொர்
சேவூர் வார்பாலா
காவள நாசம தேவிழை வார்கள்வி
காதா மாபோதா
காரண காரிய மாகிநி லாவும
காரா வோகாரா
மாவடு சேவக மோதிய பாவலர்
வாழ்வா வாய்மாயா
வாசனை தீர்பர ஞானியர் சேகர
மாவீ டார்பாதா
தாவற நீடுக லாபசி காவள
தாலோ தாலேலோ
சாதனர் சூழ்பழ னாபுரி வேலவ
தாலோ தாலேலோ. 9

30. பனிமலர் முழுமையு மணிதரு சரவண
பவனே தாலேலோ
பகலுட னிரவறு வெளியிடை நிலவிய
பழையோய் தாலேலோ
தனியென வுணர்பவர் விழைதரு பயனருள்
சரதா தாலேலோ
தமிழ்நய மறிபவர் பலர்பர வியவொரு
தலைவா தாலேலோ
குனிதரு சிலைவலி வயவர்கள் பலர்பணி
குழகா தாலேலோ
குமரிய ிருவரொ டொருமயின் மிசையிவர்
குரவா தாலேலோ

முனிவர்த மரகூட னொருபொரு ளுவலிய
முதல்வா தாலேலோ
முருடரும் வழிபடு பழனிம லையில்வளர்
முருகா தாலேலோ. 10

4. சப்பாணிப் பருவம்

31 மந்திர சடாக்கரம் பகருமெய் யடியவர்தம்
வல்வினை யனைத்து மோட
மரகதக லாபமயி லொடுவேலை நினையுமவர்
வந்துவந் தினிது கூட
தந்திரக லைப்பிரியர் தாமுமவ ருக்குரிய
தருமத் தமைந்து வாழத்
தகுவருஞ் சமணருஞ் சாக்கியரு மாதியர்
தருக்கக மிழந்து தாழ
விந்திர னுடன்றேவர் தாமுமிறு சமயத்
தியைந்தோரு முவகை பொங்க
விஞ்சையுங் கொலைபுலையு மருவியவரி யாவர்களு
மிரவிமுற் பனியின் மங்கச்
சந்திர சடாடவிக் கிழவர்தரு பாலகா
சப்பாணி கொட்டி யருளே
தமிழ்வளம் பெரிதுவளர் பழனியங் கிரிமுருக
சப்பாணி கொட்டி யருளே. 1

32. அண்டபே ரண்டங்க ளிடமுற்ற பாம்பின
மனைத்தும்வச மாற வகவுற்
றரிதாய நாதத் துவம்வரை கலாபத்தி
னணிகிளர்ந் திடவி ரித்துக்
கொண்டல்சூழ் குலவரைக டவிடெனப் பொடிபடக்
குதுகூல நடன மாடிக்
கோரமிகு தானவர்கள் பைசாசர் முதலினர்க்
கொத்திக் கிழித்த ருந்தி
யெண்தகு திசைப்பால னத்தர்முத லியதேவ
ரியாவரையு மாத ரித்திட்
டிணையில்குடி லைச்சத்தி யென்றுணரு மறிஞருக்
கினியவ நுபூதி யுதவுஞ்

சண்டவே கத்தனி மயிற்பரி யுகைப்பவா
சப்பாணி கொட்டி யருளே
தமிழ்வளம் பெரிதுவளர் பழனியங் கிரிமுருக
சப்பாணி கொட்டி யருளே. 2

33. மகமுயன் றிடுநார தாதிமுனி வோரெலா
மனநடு நடுங்கியொட
வானத்து மேடமுங் குசனாடு மக்கினிதன்
மைப்பரியும் வெட்கியுட்க
மிகமுழங் கிக்கரிய கோடிரண் டொடுநிலவு
மேருவரை யெனவுதித்து
விண்ணிற்பு குந்திந்தி ரன்றனக ரிற்றேவர்
வெருளுற வெகுண்டுமுட்டி
நிகரில்கம லாதனத் துற்றபிர மன்றனகர்
நெளிநெளி தரக்கலக்கி
நெடுமாய னகரினும் புக்களவி லின்னல்க
ணிறைத்துலா வித்திகழ்ந்த
தகரினை யடக்கியொரு பரியெனக் கொண்டவா
சப்பாணி கொட்டியருளே
தமிழ்வளம் பெரிதுவளர் பழனியங் கிரிமுருக
சப்பாணி கொட்டியருளே. 3

34. கங்குலின் றியபொன் நகர்க்கடவுளி யானைதரு
கன்னிமன நொந்துவாடக்
ககனமுனி மொழிவழி கடுக்கென் றெழுந்தொரு
கருங்கான கம்புகுந்து
வெங்குறவ ரேனலரு கிற்சிறுமி யைக்கண்டு
வேடம்வெவ் வேறுகொண்டு
வேங்கைமர மென்றுநின் றவடரு தினைப்பிண்டி
மிகவுண்டு மேலுமேலும்
பொங்குமயல் வாரிச் சுழிப்பட் டலைந்தொரு
புகர்க்கரிசெ யுதவியதனாற்
போதப்பு ணர்ந்தவள்சொல் குற்றேவன் முற்றும்
புரிந்துவகை பொலியுந்தொறுங்
குங்குமத் தோள்கொட்டி யாடுமதி காமுகா
கொட்டியருள் சப்பாணியே

குளிர்பொழிற் பழனியினில் வளர்குமர குருபரா
கொட்டியருள் சப்பாணியே. 4

35. சீலத்த போதனர்க ளானந்த மீறித்
திருக்கணீ ரருவிகொட்ட
தேவர்கின் னரர்கருடர் கந்தருவ ராதியோர்
செங்கைமலர் மாரிகொட்டப்
பாலத்தி னாட்டம் படைத்தவனொ டுமையும்
பழிக்கருந லுவகைகொட்ட
பருவதா காரப் பெரும்பூத கணநாதர்
பல்லியங் கொட்டமுற்று
மாலத் தெழுந்தகுவர் நெஞ்சகம் பறைகொட்ட
வரமகளிர் வீணைகொட்ட
வறநீதி மன்னர்மனை தோறுமுர சங்கொட்ட
வசலந் தொறுங்களிப்பாற்
கோலக் குறச்சிறுவர் தொண்டகங் கொட்டநீ
கொட்டியருள் சப்பாணியே
குளிர்பொழிற் பழனியினில் வளர்குமர குருபரா
கொட்டியருள் சப்பாணியே. 5

வேறு

36. பலபன் மடவார் விளையாட்டும்
பங்கே ருகமுங் குவலயமும்
பவளச் சிறுகா லோதிமமும்
பருவால் வளையுங் கயற்றிரளு
மலகில் பரிமா வெனப்பாயு
மலையின் குழுவு நவமணியு
மறிவிற் பெரியா ரநுட்டான
மனந்த விதமாச் செயுமழகு
முலவுங் கவரி சிலபுனல்புக்
குழக்கும் வனப்பு மிவையனைய
வோரா யிரஞ்சி ருள்ளனவு
மொழியா தென்றுந் தடந்தோறுங்
குலவும் பழனிப் பதிமுருகா
கொட்டி யருளாய் சப்பாணி

கொல்லா விரதர்க் கருள்குமரா
கொட்டி யருளாய் சப்பாணி. 6

37. நாறு மலர்ப்புங் கவன்சொன்மறை
நான்குங் கயிலைக் கிரிக்கடவு
ணவிலு மெழுநான் காகமமு
நளிர்தென் பொதிய மலைக்குவட்டி
லேறுங் குறுமா முனிபகர்நூ
லெண்ணில் பலவுந் தனிநாவா
யிடத்திற் பிறந்தான் காவியங்க
ளீரொன் பதுயிநற் கீரனுவ
லாறு பகுதிப் பனுவலொன்று
மருணைப் புலவோன் றிருப்புகழு
மணிப்போ ரூரான் முதலினர்சொ
லருமைக் கவிக ளளவிலவுங்
கூறுந் திருவாவினன் குடியாய்
கொட்டி யருளாய் சப்பாணி
கொல்லா விரதர்க் கருள்குமரா
கொட்டி யருளாய் சப்பாணி. 7

வேறு

38. நிறைபெறு மகளிரும் வயமலி புருடரு
நெய்த்தம லர்ச்சோலை
நிலவிய வமரரு முனிவரு மனமிக
நெக்குரு கிப்பாடு
மறையவர் களுமர சினர்களும் வணிகரு
மற்பணை யிற்சாலும்
வகைபடு பயிரிடு தொழிலினர் களுநுவல்
மற்றைந லத்தோரு
முறைவழி வழுவற வொழுகலி னருணெறி
முற்றுத லுற்றாசு
முழுமையு மிரிதர மகபதி நகரமு
தற்சொல் பவற்றோவெல்
குறைவறு வளமுறு பழனியி னிறையவ
கொட்டுக சப்பாணி

குறுமுனி பரவிய சரவண பவகுக
கொட்டுக சப்பாணி. 8

39. படவா ளரவா யிரகோ டியுமா
பத்தடை யக்கூவு
பசுமா மயில்வா கனமே றியவா
பற்பனம லைக்கோயி
லிடமே கதியா விழைவா ரெதிர்போ
யிச்சைய ளித்தாளு
மிளையாய் குறமான் மகிழ்கா வலவா
வெற்றுமு ரற்கால்கொள்
கடமா மகவான் மகள்சேர் கணவா
கட்கவ லித்தீர்
கணநா டியதோர் துணைவா விணைதீர்
கட்டழ குக்கார
குடவால் வளையூர் வயலூர் முருகா
கொட்டுக சப்பாணி
குமரா குழகா குரவா குகனே
கொட்டுக சப்பாணி. 9

40. நற்றவ முற்றவ ரைப்பழி செப்புத
னட்டார் கெட்டேக
நக்கனை யச்சுத னைக்கம லத்தனை
நத்தார் கட்கூறு
முற்றவி ரக்கமி லர்க்கிடர் மிக்குற
மொய்த்தா ரிற்பாடு
முத்தமிழ் விற்பனர் முற்கலி யச்சுற
முத்தே யொப்பாய
பற்றகை பெற்றவ ரிட்டம யக்கிடை
பட்டேனுக் காசில்
பத்திய ளித்தது மெய்ப்பட மிக்கசெ
பத்தார் கட்சூழ்பல்
குற்றம றுக்குமு ழுக்கரு ணைக்குக
கொட்டாய் சப்பாணி
கொற்றமு டைப்பழ னிக்கிரி வித்தக
கொட்டாய் சப்பாணி. 10

5. முத்தப் பருவம்

41. சித்தர் பலர்க்கோ ரரசாகித்
திகழ்வெண் கயிலைக் கிரிமிசைவாழ்
சிவனார் தாமு மவரிடபாற்
சிறிதும் பிரியா வுமையாளுஞ்
சுத்த மலிபா கீரதியுஞ்
சுடர்நே டுடுக்க ரோராருந்
தும்பி முகத்தோர் துணைவோனுஞ்
சுரரூர்ப் பிடியுங் குறக்கொடியு
மித்தரை யின்கா ழியிற்கூட
லிடத்தி லிருதம் பதிமாரு
மிணையி லருணைக் கிளிதானு
மெய்தப் பெறலாலி யான்விழைந்தேன்
முத்தர் வருசீர்ப் பழனிமலை
முதல்வா முத்தந் தருகவே
மூவா வமரர் நகர்க்காவன்
முருகா முத்தந் தருகவே. 1

42. அந்நா ளெனது கனவில்வலி
தளித்த முத்தம் பலவுளவீண்
டவற்றின் மகிமை சிறிதேனு
மவிர்கின் றிலதா லயர்கின்றே
னிந்நா ணனவிற் றருதல்பெரி
திலங்கிற் றெனினு நலமாநின்
னிதயத் தருட்பண்பெங் னுளதோ
வெனைநீ மகவென் றதும்படிறோ
பொய்ந்நா னுரையே னெனுநிசமிப்
புவியோ ருணரப் போகாதோ
புகழ்சால் வீர வாகுமுதற்
புத்தே ளிரினு நரர்மேலோ
முந்நா ளெறியும் புகழ்வயலூர்
முதல்வா முத்தந் தருகவே
மூவா வமரர் நகர்க்காவன்
முருகா முத்தந் தருகவே. 2

43. கோங்கே யனைய முலைமடவார்
குளிர்சேல் விழிப்பார் வையினருமை
குறியா விளமைப் பருவத்தாட்
கொண்டு தமிழ்ச்சீர் கொடுத்ததுவுந்
தீங்கை யடுபே ராசையினாற்
றிருமா மலைமேற் சென்றருள்கால்
செத்துத் தொலையா தளித்ததுவுஞ்
செப்பா தனமிக் குரைத்ததுவும்
வேங்கை யணுகல் முதற்சொலவ
மிருத்தா யிரமுன் விலக்கியதும்
வீணே மறையத் தகுங்கொல்லோ
வியன்கூ டலிலோர் வணிகன்மனை
மூங்கை மகவு மாம்பழனி
முதல்வா முத்தந் தருகவே
மூவா வமரர் நகர்க்காவன்
முருகா முத்தந் தருகவே. 3

44. கருமம் பரமென் பவருணராக்
கருணைக் கடற்பே ரமுதாய
கந்தா யுமையாண் மனத்தொடுகண்
களிக்க வருசீர்க் கான்முளையே
பெருமந் தரநேர் முலையாரற்
பெயர்மங் கையரோ ரறுவர்களும்
பெருகா தரத்தால் வளர்க்கவளர்
பிள்ளாய் வள்ளற் பெருந்தகையாய்
குருவென் றவிர்வா ரனைவருக்குங்
கொடுக்குங் கலையா யிரம்பொருந்துங்
குழகா சேவற் கொடிக்குமரா
குலவு மறையா கமங்குறிக்குந்
தருமம் பொலிதென் பழனிநகர்த்
தலைவா முத்தந் தருகவே
தமிம்ழா முனியா தியருணர்மெய்த்
தயையாய் முத்தந் தருகவே. 4

45. குலிசா யுதத்தோ னகர்ப்பிடியுங்
குறிச்சிக் குறவ ரிளங்குயிலுங்

கொஞ்சி யணையும் பொதுக்கணவா
கோலா கலப்போ கனுங்கொலைவெம்
புலிவா கனனா தியபலரும்
புரிபூ சனையேற் றருள்செய்தாய்
பொல்லா வசுரர் குலகாலா
புலைவே றறுப்பார்க் கெளியானே
பலியேற் பவர்போ லுருச்சமைந்து
பலமங் கையர்கற் பழித்தார்தம்
பாலா வேலா வயலநெடும்
பாம்பிற் றுயின்மா யவன்மருகா
சலியாக் கொடையோர் வளர்பழனித்
தலைவா முத்தந் தருகவே
தமிழ்மா முனியா தியருணர்மெய்த்
தயையாய் முத்தந் தருகவே. 5

வேறு

46. இருக்கின்முடி வைச்சிவனு மலையமலை யாதிபனு
மெளிதுணர்ந் திடவிசைத்தா
யிபமுகனொ டமர்செய்து மாயவ னொருக்கா
லிழந்தசக் கரமளித்தாய்
மருக்கிளிர் சரோருகப் பிரமன தகங்கார
மாய்வுறச் சிறையிலிட்டாய்
மலையினஞ் சலியா தடக்கும்வச் சிரபாணி
வன்றுய ரறக்களந்தாய்
செருக்கியல் பெரும்புலமை யுற்றுநற் கீரன்முன்
செய்தகவி மாலைகொண்டாய்
சிறியனேன் மனமறியு மாடல்பல கனவினிற்
செய்துநன வினின்மறைந்தாய்
முருக்கிதழ் கடுக்குஞ்செவ் வாய்கொண் டிவ்வேளையொரு
முத்தங்கொடுத் தருள்வையே
முகில்பொதிந் திடுபழனி மலையினின் றருள்குமரா
முத்தங்கொடுத் தருள்வையே. 6

47. பொழில்வளம் பெறுநெல்லை நகரினு மடுத்தொழுகு
பொருனைமா நதிநடுவினும்

புணரியொலி குன்றாத செந்திலம் பதியினும்
புதுவையொடு சென்னையினிலுங்
கழிநலம் பொலிகேர ளத்தினும் வியன்குலவு
கனல்வரைச் சராலதினுங்
கழறுயிவை யனையப லிடங்களினு நீவந்து
கனவினிற் சொன்னசொற்கள்
பழிபடினு மேகுகவி வடிவார மெய்திறின்
படிவங் குறித்திருந்த
பலவேளை யிற்றமிய னெஞ்சகமு மும்பரும்
பரமயோ கியருமறிய
மொழிபவா யினுமெய்ப் படும்படிநின் வாய்கொண்டோர்
முத்தங்கொடுத் தருள்வையே
முகில்பொதிந் திடுபழனி மலையினின றருள்குமர
முத்தங்கொடுத் தருள்வையே. 7

வேறு

48. அருகனை யேவழி படுமவ ராணவ
மற்றொழி யச்செயும்வீ
றறைபவ ரியாவரு நலமுறு மாறுசெ
யற்புத சற்குருவே
யொருகவி யாசைகொ டழல்படு பாலையி
லுற்று மகற்குயாவர்
வுரைசெயும் நாவல மயிலுட னாடுமு
கைப்பத னுக்கிசைவாய்
மிருகசு பாவமெய் தியகொடி யோர்கள்வெ
வெறுக்கும்வ னப்புடையாய்
விலைமக ளார்மனை தொறுமலை வானையு
மெய்க்கிளி யிற்புனைவாய்
முருகவிழ் தாதகி யணிசடை யார்சுத
முத்தம ளித்தருளே
முதிரருள் சேர்குக பழனியிலி யானுய
முத்தம ளித்தருளே. 8

49. பாவ மனேகமேநாளு விடாது செய்ய
பற்பலரைப் புகழ்வார்

பால்புரை நீறணி லாருனு மாறுமோர்
பற்றுமித் துணியார்
சேவ னிலாவிய கேதன மானுவல
சிட்டர்களைப் பணியார்
சீதை மணாள னாரர சாளவனது
சித்தமதிற் கருதார்
பூவ லமாகு தனோதவ நாடுநர்
புத்தியைமிக் கிகழ்வார்
போல்பவ ரோடு சதாவ கலாது
புணர்ப்புறு மக்கினிபோன்
மூவகை யோனை தீர்தர நீயொரு
முத்த மளித்தருளே
மூதறி வார்பழ னாபுரி வாழ்குக
முத்த மளித்தருளே. 9

50. கற்றுணர் வித்தக ருற்றத மிழ்ச்சபை
கற்பினு யர்ச்சியதார்
கட்டழ குக்கொடி யொப்பவ ருப்பொடு
கட்டுணர் மிக்கலர்கா
மற்றுவ மைப்பொரு ளற்றத வத்தின்
மனத்தைநி றுத்தவலார்
மற்சர மற்றுவ சிக்கு டத்தொகை
மட்டில்கொ டைத்தொழிலோ
ருற்றுயர் மச்சும னைத்திரள் சத்திர
முக்கிர மற்பயில்வா
ருட்டின மற்றம ணிக்கழ கத்தணி
யொத்தன பற்பலசீர்
முற்றுதி ருப்பழ னிப்பதி யிற்குக
முத்தம ளித்தருளே
முப்புர மட்டந கைப்பார் கட்சுத
முத்தம ளித்தருளே. 10

6. வாரானைப் பருவம்

51. அயில்வேற் படையுந் திருத்தண்டு
மகலத் தொடுதிண் கையிற்றாங்கி

யங்கை மலரோன் றிடப்பாகத்
தவிருங் கடிமீ தமைதரவைத்
தெயில்வே வுறநக் கவர்மகவென்றி
யாரு மறியும் படிமுழுநீற்
றியக்கங் காட்டிக் கண்டிகையு
மேற்ற வயின்தோ றினிதணிந்து
கயிலைக் கிரியி னிரசிதம்போல்
கவின்கோ வணங்கீ ளொடுதரித்துக்
கழற்றாட் கருட்பா துகைசாத்திக்
கனிவாய் முறுவ லொடுநின்றாய்
மயில்வா கனத்தி லொருக்கான்முன்
வருக வருக வருகவே
வளந்தோய் பழனி மலைக்குரவா
வருக வருக வருகவே. 51

52. சந்தா சலத்துப் பனவரெனத்
தவவே டத்துப் பெரியரெனத்
தமிழ்தேர் புலமைப் பழையரெனத்
தனிவேல் புனைதோள் வயவரெனக்
கொந்தார் மருமத் தரசரெனக்
கொடுஞ்செட் டொழியா வணிகரெனக்
குவளைத் தொடைநீர்க் குலத்தரெனக்
குறிச்சி யிடைவாழ் குறவரெனப்
பந்தா டியகைச் சிறுவரெனப்
பலநாட் கனவில் வந்ததன்றிப்
பசும்பொற் கலப மயின்மீதும்
பரணிற் கலந்தா ளொடுஞ்சிலகால்
வந்தாய் நனவி னிலுமொருக்கால்
வருக வருக வருகவே
வளந்தோய் பழனி மலைக்குரவா
வருக வருக வருகவே. 2

53. அந்தண் பொதியைக் குறுமுனியை
யமர ருலகி னாரதனை
யறுனகை பெறும்பொன் னனையாளை
யலகைத் துயர்தீர்ந் தவிர்ந்தானை

வெந்த சுரத்தை வியந்தானை
விண்ணூர் வரைபோய் மீண்டானை
மிளிர்பொற் பணிபெற் றளித்தானை
வேலா வலயங் கடந்தானைப்
பந்த மறுநூ லுரைத்திறமைப்
பயிர வலனைமற் றிவர்போலும்
பலரைக் கருதித் தினந்தோறும்
பரவச் சலியாப் பத்திசெயு
மைந்த ரெனையுஞ் சொலும்படிமுன்
வருக வருக வருகவே
வளந்தோய் பழனி மலைக்குரவா
வருக வருக வருகவே. 3

54. களையா மெனப்பங் கயம்பொலிதண்
கழனித் தொகையில்லை யெறியுங்
கவினார் தருபற் பலதடத்திற்
கணக்கின் மனைமுன் றிலின்சாலி
லிளையா ருருகச் செயும்பார்வை
யெழின்மங் கையரியாழ் புரைகரத்தி
லிடுப்பின் குடத்திற் பலபணிக
ளிடும்பொற் கழுத்தி னெடும்பொழிலி
லளைபால் கவர்ந்துண் டவன்றானே
யனையார் பலர்த மணிவாயி
லரம்பை கமுகா தியின்குருத்தி
லலங்க மதில்கோ புரமருகில்
வளையோ விடுந்தென் பழனிநகர்
வாழ்வா முருகா வருகவே
மழமால் விடைப்பண் ணவனுதற்கண்
மணியா மதலாய் வருகவே. 4

55. எடுக்க வருக மலர்க்கரத்தி
லேந்த வருக தளிர்மடிமீ
திருத்த வருக வுச்சிமுகந்
திணையி லுவகை யுறவருக

வடுக்கண் களிக்கும் படிவருக
வனச முகைமென் முலைத்தீம்பால்
வழிய வருக பலபணியு
மலரும் புனைய வருகவென
நடுக்கந் தவிர்த்தாண் டருள்கருணை
நணுகு முமையாள் சொலுந்தொறும்போய்
நந்தா மகிழ்ச்சி யுறுங்குமரா
ஞானப் புலவா நவிறுதிச்சொன்
மடுக்குஞ் செவியாய் பழனிநகர்
வாழ்வா முருகா வருகவே
மழமால் விடைப்பண் ணவனுதற்கண்
மணியா மதலாய் வருகவே. 5

வேறு

56. கரவுபடு நெஞ்சருறு பலமத விகாதமுங்
கதிரெதிர்ப் பனியதாகக்
காலியொடு கன்றினம் வதைத்துண் டுவக்குமவர்
கனலிவிழு பூளையாகப்
பிரமன்மிசை பழிசொல்லி யங்கிமு னசக்கொலைசெய்
பேயருந் தூயராகப்
பெத்தமதை யேமுத்த மென்றுமகிழ் வுற்றிலகு
பித்தருஞ் சுத்தராகத்
தரமதர மறியார் தமைப்பரவு பாவலவர்
தாமுமதி நேமராகச்
சந்ததங் கருதியுனை வந்தனைசெய் கின்றேன்
றவித்துச் சலித்திடாதோர்
வரமுதவு தற்குறித் திக்கண மயிற்பரியில்
வருகநனி வருக வருகே
வயலூர்ம லைத்தலையில் வாழும்வடி வேலவா
வருகநனி வருக வருகே. 6

57. சங்கையறு மெஞ்ஞான சாரமறி வார்களு
சகலதே வருநெருங்க
தபனனிக லவனுயிர்கொள் பவன்முதலி னோர்தொழத்
தக்கபல் லியமுழங்கக்

கங்கைபுதல் வன்கரிய மாயன்மரு கன்குகன்
கார்த்திகே யன்கடம்பன்
கருணா கரக்குமர னென்றுதமிழ் வாணர்பலர்
கவிகளாற் றுதிசெய்திடக்
கொங்கைகள் குலுங்கவர மாதர்நட னஞ்செயக்
குக்குகூ வென்றுசேவற்
கொடியோ லிடக்ககன வனிதையுங் குறவர்தரு
கோதையு மெனக்குலாவு
மங்கையர்க ளிருவருட னிக்கண மயிற்பரியில்
வருகநனி வருகவருகே
வயலூர் மலைத்தலையில் வாழும்வடி வேலவா
வருகநனி வருகவருகே. 7

வேறு

58. அறிவினை யறிபவ ரநுபவ முழுமையு
மதுவா மிளிர வருள்செய்வா
யருணையி லொருமுது சிகரியின் வடபுற
மமவா னுவல்பல் கவிகொள்வாய்
மறியொடு மழுவணி தருகரர் விழியுமிழ்
மணியா மெனமுன் வருகுகா
மகிதல மளவிய நெடியவ னமரர்முன்
வழுவா துரைசெய் புகழுளாய்
வெறிகமழ் குரவமென மலரலர் புயமிசை
விதிர்வேல் புனையும் வயவனே
விடவர வினமழ வகவிய மயின்மிசை
விரைவா யுலகை வளைகுவாய்
பறிதலை யமணர்கள் குடிகெட வெகுள்சிறு
பனவா வருக வருகவே
பழனிம லையிலநு தினம்வளர் சரவண
பவனே வருக வருகவே. 8

59. கசமு மரியு மளவில் கிளைகொள்
கடலின் மரமு டவலாய்
கமலம் விரவு குவளை யனைய
கருணை விழிகள் பலகொள்வாய்

நிசமி லமணர் கழுவின் மடிய
நிகரில் கவிகள் பகர்பவா
நிதமு முயிர்கொல் வினைசெய் புலைஞர்
நிரைய முழுக முடுகுவாய்
வசவ னெனமெ யடியர் பணிசெய்
மகர்த மனதை யகல்கிலாய்
மதுர வசன சரசுவதியுண்
மகிழ்வொ டுணர்பல் வகைசொல்வா
யசல முழுது மயிலின் முதுகி
லலையும் வலவ வருகவே
யரிய பழனி மலையின் மருவு
மதுல முருக வருகவே. 9

60. குமரகுரு பரமுருக சரவணசண் முகவரத
குறைவிலநு பவசரத வருகவே
குலகிரிக ளுடனுலக முழுமையுமெ யடியருணர்
குடைநிழலி னிடைகொள்குக வருகவே
சமரபிர பலவயவ ரனைவர்களு நினையுமொரு
சகளசரு வுணுமதலை வருகவே
சரபமுட னிகலியடு மொருபறவை யினதுசிறை
தகரவடர் தடிகொள்கர வருகவே
பமரமுரல் குரவமலர் விழையுமட மகளிர்பல
பலர்கலவி நுகரிளைஞன் வருகவே
பகடனைய வடிவுகொடு வருதமய னுதவிகொடொர்
பரணருகின் மகிழ்கடவுள் வருகவே
யமரர்படு சிறைதவிர வசுரர்களை யடுதலினெய்
தரிவைமண மகன்வருக வருகவே
யருள்வளமை பொலிபழனி மலையினில வியவொருவ
னநுதினமெ னெதிர்வருக வருகவே. 10

7. அம்புலிப் பருவம்

61. கயிலைப் பெருங்கடவுள் விழியிற் பிறந்தலைக்
கயநீர் முழுக்காடினாய்

கற்பகநி ழற்புலவ ரவுணரான் மடியாது
கனவுதவி செய்தளித்தாய்
வெயிலைத் தரும்பரிதி யுடலுட் புகுந்துற்று
மீண்டுங் குளிர்ச்சிகுன்றாய்
மேடத் திவர்ந்திணையி லிடபத்து மேறியே
மிதுனத்திலா சைகொண்டாய்
சயிலத் தலைத்தொந்த மொருநாளு மொழிகிலாய்
தாரகைக் கூட்டம்விழைவாய்
தாமோத ரன்றனக சம்பந்த மெய்தலாற்
றானவர்க் கூறுசெய்தா
யயிலைப் பொருந்துமுரு கையனுனை யனையனா
லம்புலீ யாடவாவே
யன்பர்மலி தென்பழனி யின்கண்வளர் கந்தனுட
னம்புலீ யாடவாவே. 1

62. மாநிலத் துற்றபல மக்கட்கு விளையாடும்
வாஞ்சைவரு வித்தலாலும்
வானுல குடைக்காம தேனுவின் பாலனைய
வாலொளி பரப்பலாலுங்
கானிடத் திற்குடிகொள் வார்களுங் கண்டுளங்
களிகூர வருதலாலுங்
கயிரவம் விழைந்திடுத லாலுஞ்சின் மாதரைக்
கவலாது மகிழவைத்து
வேனின்மத னாற்சில மடந்தையர் துயர்ப்பட
விடுத்திடுத லாலுமொருமால்
வேழத்தி லேறிமிளிர் வதனாலு மீசன்றன்
வேணிமணம் வீசலாலு
மானியில னானகும ரேசனை நிகர்த்தியா
லம்புலீ யாடவாவே
யன்பர்மலி தென்பழனி யின்கண்வளர் கந்தனுட
னம்புலீ யாடவாவே. 2

63. கொங்கைமயி லேயனைய மங்கைய ரனேகர்மயல்
கொண்டுவலி தணையுமழகுங்
கூறுமொரு பதினாறு கோலத்த னெனமறைக்
குலமிசைக் குஞ்சிறப்பும்

பங்கய மலர்த்திர யெலாமொல்கு பேரெழில்
படைத்தவா னனமுமுள்ள
பன்னிரு நெறிக்கொண்டு மேகுதிற மும்பிறர்
பழிக்கரிய மானமும்பாழ்ங்
கங்கைநரி நாயையனை யார்புரி புலைப்பூசை
கருதாமை யுங்கழைக்கைக்
காமனைக் கீழ்ப்படுத் துங்கனமு மெய்தலாற்
ககனம்விழை தருமெம்பிரா
னங்கைமல ராலுனை யழைப்பதறி வாயென்னி
லம்புலீ யாடவாவே
யன்பர்மலி தென்பழனி யின்கண்வளர் கந்தனுட
னம்புலீ யாடவாவே. 3

பேதம்

64. வையகத் துள்ளவர்க ளுங்காண நாடொறும்
வருமெளி யைநீயி வன்றான்
மலநிகள முறிவுபடு சிவயோக சாதனர்த
மனவெளியி லுலவ வல்லான்
சையமோ ரிரண்டன்றி வேறுபயி லாயிவன்
சகலமலை யினும்வாழ் பிரான்
றகைகுன்றி நீடிவெகு வாறாதி நீயிவன்
றணவரு மொரேதன் மையான்
பையரவி னச்சம் படைத்துளாய் நீயிவன்
பரியுமதை யுண்டு வக்கும்
பட்சியொன் றொவ்வொர்கா லுனையணையு மிவனைமுப்
பறவைதொட் டுற்ற கண்டா
யையகோ யிவனுன்னை விழைவதுன் தவமாகு
மம்புலீ யாட வாவே
யன்பர்மலி தென்பழனி யின்கண்வளர் கந்தனுட
னம்புலீ யாட வாவே. 4

65. இந்திரன் றனதேவ லாளனீ தேவனவற்
கினியவர சுரிமை யீந்தோ
னிகலவுண ரைக்காணி லஞ்சுவாய் நீயிவ
னெடுத்தவேல் கூறு செய்யு

மந்திர சடாக்கர செபஞ்செய்கு வார்திரு
மனத்தினிடை யன்றி நுழையான்
வானில்வரு மேகங்க டோறுநுழை வுற்றொளி
மழுங்கி மிளிர்தர நாணிடாய்
தந்திர கலைப்புலவ ருக்கிவ னடங்கிடான்
றக்கன்மக வருகி னொந்தாய்
சலனமிவ னுக்கில்லை யுன்றனக் கோடலே
தரும மாகியது கண்டா
யந்திபகன் மாறிடவும் வல்லசிறு பெருமாளொ
டம்புலீ யாட வாவே
யன்பர்மலி தென்பழனி யின்கண்வளர் கந்தனுட
னம்புலீ யாட வாவே. 5

66. இழைத்த மணிப்பொற் பணிக்கரத்தா
லிவனுன் றனையீண் டழைப்பதனுக்
கென்ன தவமுற செய்துனையோ
வெய்தா திருக்கை முறைதானோ
குழைத்த வமுதே நிகர்மொழியார்
கூறும் வசைத்தீக் கொளுஞ் செவிக்கென்
கோலா கலச்செந் தமிழ்ச்சந்தக்
கொழும்பாட் டொலிகைத் துளதேயோ
தழைத்த கலைதேய்ந் திடும்பாவந்
தவிரப் பெறலா மரவுன்பேர்
சாற்றி டினுமச் சுறுபேறுந்
தலைமேற் கொளலாந் தாமதியா
தழைத்த வுடனே வரனலங்கா
ணாட வாரா யம்புலியே
யழகார் பழனிக் குமரனுட
னாட வாரா யம்புலியே. 6

67. வடியாப் பிறவிப் பெருங்கடலும்
வடியப் பெறலாம் பலகோடி
மறைக்கு முதலாம் பிரணவத்தின்
வண்மைப் பொருளுந் தெரிதரலாங்
கொடியார் பலர்க்கோர் நமனாகுங்
கொற்றந் தானுங் கொளலாகுங்

குன்று தொறும்போய்த் தமிழ்ப்பாடல்
கொழிக்கும் புகழுங் கைகூடும்
விடியா மாயை யிருள்விடியும்
விளங்கு மொளிச்சீர் மறையாது
வீணே தருக்கி மெலிவடையேல்
வெளிமன் றகத்தின் மிகநடிக்கு
மடியார்க் கெளியான் றருமகவோ
டாட வாரா யம்புலியே
யழகார் பழனிக் குமரனுட
னாட வாரா யம்புலியே. 7

வேறு

68. அளவறு முனிவோர் வெருளுற வருபே
ராடூர் கின்றிலனோ
வமரர்கள் பலல்லோர் நொடியிடை பிணமே
யாநீர் கண்டிலையோ
குளவன விழியா வரனரு ளியசீர்
கூர்கோ ரந்தெரிவாய்
குருதிபெய் தொருமா மரமாற வடும்வேல்
கோல்வீ ரங்குறியா
யிளமைய னெனவே யெணியவ மதியே
லேனோ வந்திலைபோ
யிடல்பல குரவோர் வழிபடு பதிகாணி
யான்வீண் விண்டிலனே
வளமலி கிரிதோ றுலவிய குகனேர்
வாவா வம்புலியே
மயிலிவர் வயலூ ரிறைமகிழ் வுறவே
வாவா வம்புலியே. 8

69. ஆணவ மார்முது சூரென மாய்வுற
லாகாயந் தனில்வாழ்
வாமிரு பானெழு தாரகை மாதர
மூாவா றின்றுணர்வாய்
காணம தேபொரு ளாமென நாடுநர்
காதோ நின்செவிமா

காதலொ டியானுவல் பாடலி னோசைபு
காவாறென் புகலாய்
வேணவி காதமி தால்விளை மெய்வீணே
விளைவாகு மெய்வீணே
வம்புசெயேல் வேழமிதோரிலி வேளை யுணாமல்
விடாதே வென்றிகுலாம்
வாணவ வீரர்ச காயவி சாகன்முன்
வாவா வம்புலியே
வாழ்வய லூர்முரு கேசனொ டாடிட
வாவா வம்புலியே. 9

70. அரன ருந்தவ முதிரி லம்பக
வழலில் வந்தவிரவா
னசல மெங்கணு மயில்வி டுங்குக
னகள நெஞ்சினர்கோ
வரம னந்தமு முதவு புங்கவன்
மகிமை கண்டறியா
மலினர் தங்களை யடுத லுஞ்செயும்
வயவ னெண்டிசையோர்
புரநி றைந்துள திருவி னும்பழி
புகலும் வன்புடையார்
புகழ்பெ ருந்தகை முருகன் வண்டமிழ்
புரைக டம்பணிசேய்
மரக தம்புரை யுமைம கன்றன்முன்
வருக வம்புலியே
வளம விந்துயர் பழனி நண்பன்முன்
வருக வம்புலியே. 10

8. சிற்றிற் பருவம்

71. ஆரார் சடிலப் பெருங்கடவு
ளனற்கட் பொறிக ளெனத்தோன்
டங்கார கனும்பவனனு கொண்ட
றலூடி டுயப்பத் தருவுருளாய்த்
தாரா கணமங் கையரறுவர்
தடமா முலைப்பா னனியருந்தித்

தருமம் வளர்ப்பா டருமமுதுஞ்
சாலப் பருகி விளையாடிக்
கூரார் வடிவே லாதியன
கொண்டு தகுவர் குடிகெடுத்துக்
குன்று தொறும்போய்த் தினமுலவிக்
கோலா கலக்கோ மளத்தமிழ்ச்செஞ்
சீரார் பழனி நகரில்வளர்
சேந்தா சிற்றிற் சிதையேலே
சிலம்பு புலம்புந் துணைச்சிறுதாட்
செல்வா சிற்றிற் சிதையேலே. 1

72. பங்கே ருகப்பூந் தடம்பரப்பிற்
பலபன் மடவார் விழிக்கடையிற்
பாச மறுமா தவருடையிற்
பழமை யுணர்பா வலர்மனத்திற்
கொங்கேய தருமென் துணர்ப்பொழிலிற்
கோழிக் கொடியின் கொழுஞ்சூட்டிற்
குலையா வீர ரிலைவேலிற்
கோர மலியுந் தகர்ப்பரியிற்
பொங்கேர் பெறுமோ திமத்தாளிற்
பொலிநெற் கதிரிற் புனைகடம்பிற்
போதக் கொடுப்பார் பொதுக்கரத்திற்
பொன்னார் மதிள்கோ புரப்பெருக்கிற்
செங்கேழ் பிறங்கும் பழனிநகர்ச்
சேந்தா சிற்றிற் சிதையேலே
சிலம்புந் துணைச்சி றுதாட்
செல்வா சிற்றிற் சிதையேலே. 2

73. உன்னைப் பொருளா மெனக்கருதா
தொருங்கியாங் கூடிக் களிக்குதுமா
வொருவ னுன்னில் வலியானீண்
டுள்ளா னெனும்பொய் யுரைத்தேமா
வன்னைக் குயர்பே ரருள்கொளுநீ
யாட வருமா றெண்ணிலமா
வடுத்த வுடனிற் கடங்கார்போன்
றதட்டிச் சிலசொல் லறைந்தேமா

மின்னைப் புரைபே தையரிடைநீ
வேண்டு மவரை மணந்துகொள
வேண்டா மென்னத் தடுத்தேமா
வெறுப்புன் னுளத்தே னுதித்ததுவோ
தென்னைப் பொழில்சூழ் பழனிநகர்ச்
சேந்தா சிற்றிற் சிதையேலே
சிலம்பு புலம்புந் துணைச்சிறுதாட்
செல்வா சிற்றிற் சிதையேலே. 3

74. பவளம் புரையுந் திருமேனிப்
பாங்கும் பலபொற் பணித்திரளும்
பட்டா டையும்பங் கயத்தாளும்
பாரிற் புழுதி படலாமோ
சிவனு முமையு மலர்விழியிற்
சேர்ப்ப துனதுபத மன்றோ
தெருணான் மறையின் சிரத்தவிருஞ்
சீர்த்திக் கிஃதோர் சிறுமைகண்டாய்
கவளக் கரிமா முகற்கிளையாய்
கவினார் குறிஞ்சிக் காவலவா
கந்தா முருகா வெனப்போற்றிக்
கரங்கூப் பிடுநீர் கடவேமா
லவலந் தணந்தாண் டருள்செயுநீ
யணியார் சிற்றி லழியேலே
யருமைத் திருவா வினன்குடியா
யடியேஞ் சிற்றி லழியேலே. 4

75. சந்தோ டத்தான மணற்கொழித்துச்
சமைத்த வருத்த மறியாயோ
தமிழ்மா முனிவன் புனைந்துயுநின்
றாட்டா மரைக்கித் தகைதகுமோ
பைந்தோ கையபுட் பரிநீத்துப்
பாரின் மிதிக்கை முறைதானோ
பல்வீழ்ந் தறியாச் சிறுவர்களைப்
பகைத்திட் டொறுக்கப் படுங்கொல்லோ
திந்தோ மெனநா டகம்புரியுஞ்
சிவனு மவன்ற னிடம்பிரியாச்

சிவையு முனைத்தான் றேடாரோ
செயுமுற் றவத்தாற் றிகழ்தரு
யந்தோ வுடனுற் றாடாம
லணியார் சிற்றி லழியேலே
யருமைத் திருவா வினன்குடியா
யடியேஞ் சிற்றி லழியேலே. 5

வேறு

76. அண்டமிசை யுற்றவர்கள் வாழ்வையு மதித்திடா
தாறெழுத் தோதியோதி
யஞ்சுத் துடலினுட் புக்குமீண் டவனனைய
ரரியதமி ழாற்றுதித்துக்
கண்டத்த துவவாதி கட்குமத னேனைய
கணத்தோர்க்கு நடுவினின்று
காசினிக் கிடர்செயுங் கயவர்குல வேரறக்
கடிவதே கருதிநொந்து
தொண்டரது பாதபங் கயமல ருகுக்குமென்
றுகன்முடி யினுக்கணிந்து
சுத்தவுண வல்லா தசுத்தவுண வுண்ணார்
தொடர்ச்சியே கொண்டுவந்து
தெண்டனிட் டுனையே விரும்புமடி யேஞ்செய்த
சிற்றிற் சிதைத்திடேலே
திருவாவி னன்குடியின் மருவுமுரு காவெமது
சிற்றிற் சிதைத்திடேலே. 6

77. மாகநக ரிற்புலவ ரின்புறச் சூரன்முதல்
வல்லவுண ரைத்தடிந்தாய்
மரகத கலாபச் சிகிப்பரியின் மிசையேறி
மாநிலஞ் சுற்றிவந்தாய்
சோகமலி வெய்துமோ ராயிரந் தவருயச்
சூழ்வரைக் குகையிடித்தாய்
தொடுவளை முதற்சொற்சில பணிகளுட னங்கையொரு
தோகைநல் லாட்களித்தாய்
சாகத் துணிந்துசிக ரியிலேறி வீழ்ந்தான்
றனைக்கிளி யெனப்புனைந்தாய்

சாற்றுமிவை யனையபல விளையாட லின்னமுந்
தரையினுஞ் செயவல்லநீ
தேகமுதன் மூன்றுங் கொடுக்குமடி யேஞ்செய்த
சிற்றிற் சிதைத்திடேலே
திருவாவி னன்குடியின் மருவுமுரு காவெமது
சிற்றிற் சிதைத்திடேலே. 7

வேறு

78. அத்தர்க் கொருபொரு ளைச்சொற் றருள்சுத
வத்திக் கிளையானே
யற்பிற் பணிபுரி பத்தர்க் கெளியவ
வக்கத் திரடோய்வாய்
சத்தக் கடலினி டத்துத் தகுவர்க
டத்துப் படநேர்வாய்
சட்டச் சதுமறை விற்பத் தியனெதிர்
தக்கித் துயர்சீலா
புத்தர்க் கமணர்த மக்குப் புலைமலி
பொக்கர்க் கெமனாவாய்
புற்றுட் பணிகலு மட்குற் றிடமுரல்
பொற்புச் சிகியூர்வாய்
சித்தர்க் குயிர்நிலை யொத்துத் திகழ்குக
சிற்றிற் சிதையேலே
செப்பொப் பறுபழ னிச்சற் குருபர
சிற்றிற் சிதையேலே. 8

79. மாதவர் சேகர நான்மறை யோர்குழு
மச்சக் கொடியோன்னோர்
வாழ்வுறு காவலர் பேரவை வாணிப
மல்பெற் றுயர்சீரார்
பூதல மேதுணை யாமென வேருழு
பொற்புத் தொழிலோவார்
போல்பவர் யாவரும் வாழ்மறு கூடு
புழைக்கைக் கரிதேர்மா
வேதமி லோதையு மாதர்க ளூடியி
டத்தக் கனபூணா

லோர்தரு பேரொளி மாலையின் வாசமு
மெய்ப்பற் றுறுமாணார்
சீதள நீர்வய லூர்முரு காவெமர்
சிற்றிற் சிதையேலே
தேவர்த மூரழி யாதருள் வேலவ
சிற்றிற் சிதையேலே. 9

80. முக்கணவிர் பொற்பறுமு கத்தினுமு ளானே
முப்புர மெரித்தபரன் முத்தமிடு பாலா
சக்கரமெ டுத்தவரி தத்தறவெல் வானே
சட்டி விரதத்தினர் தமக்கெளிய வேலா
மக்களுரு வத்தொடும் வரத்தகு செவேளே
மத்திநிலை பெற்றதவர் மட்டுமரிய பாதா
செக்கர்நிற முற்றகுக சிற்றிலழி யேலே
தெட்டுபழ னிக்குமர சிற்றிலழி யேலே. 10

9. சிறுபறைப் பருவம்

81. திகழ்சித்தி முத்தியெனு மிருபேறு மாதவச்
செல்வமே யாகுமென்றுஞ்
செந்தமிழ்ச் சந்தக் கவிச்சுவை நுகர்ந்திடார்
செவிடரே போல்வரென்று
மகவென வுயிர்த்திர ளனைத்தையும் விழைந்திடா
மன்னர்புலி யனைய ரென்றும்
வட்டிக்கும் வட்டிகள் வகுக்கின்ற தீவணிகர்
மறவேடர் புரைவ ரென்று
நிகரிலுழ வுத்தொழி னடத்தியுமி ரயவாத
நெஞ்சமெரி தரும் லோபமே
நித்தமுஞ் செய்யுமவர் நீசரிற் கடையரே
நிச்சயமி தென்று மென்றுஞ்
செகமெங் கணுஞ்சென்று சென்றுசலி யாமனின்
சிறுபறை முழக்கி யருளே
திருவாவி னன்குடியி லொருவா விரைந்துனது
சிறுபறை முழக்கி யருளே. 1

82. உயிரொன்றி னுக்குமிடர் சிறிதுஞ் செயாமையே
யுயர்வாய தரும மென்று
மொருதீவி னைத்தொடர்பு மின்றிமுயல் கின்றதே
யோங்குபொரு ளாகு மென்று
மயில்போலு மங்கையரு மாடவரு மொருமைபடன்
மாசற்ற வின்ப மொன்று
மறைமுடி பொருளன்றி மற்றொன்றும் வெஃகாமை
மன்னுபர முத்தி யென்றுங்
குயில்போலும் வடிவமுட னிசையுங்கொள் கானக்
குறத்திக்கு மூத்த நங்கை
குவலய முயும்படியோர் வெண்பாவி னனன்கன்று
கூறிவைத் துள்ள படியே
செயிரியாவு நீக்கவல பன்னிருக ரங்களாற்
சிறுபறை முழக்கி யருளே
திருவாவி னன்குடியி லொருவா விரைந்துனது
சிறுபறை முழக்கி யருளே. 2

83. மார்க்கண்ட முனியனைய மனவலியு ளார்களே
மாண்பிரம சரிய ரென்று
மறையினைத் தமிழ்செய் திருவள்ளுவனை யனையர்புகழ்
மருவுகிர கத்த ரென்றும்
பேர்க்கரிய சீர்பெறும் வசிட்டனிகர் வானப்
பிரத்தரே பெரிய ரென்றும்
பிறர்தொழில் வசப்படா வல்லமனை யனையரே
பிரமபத முத்த ரென்று
நீர்க்கட லுடுத்தளவி லாதமலை யாதிய
நெடுஞ்சுமை பொறுத்து மாயன்
நிறைமகிழ் வுறப்புணர்ந் துள்ளபார் முதலா
நிலாவுலக மெங்க ணும்போய்ச்
சீர்க்கமல மலரனைய செங்கையின் குணில்கொண்டு
சிறுபறை முழக்கி யருளே
திருவாவி னன்குடியி லொருவா விரைந்துனது
சிறுபறை முழக்கி யருளே. 3

84. தேவதுந் துமியொலியி லமராவதிப் புலவர்
சிந்தைமகிழ் வெய்தி வாழச்
செங்கட் பெரும்புலியை நிகர்தான வக்கொடியர்
தீநெஞ்சு பறைய டிப்பப்
பூவகத் துற்றசதுர் முகன்மறைக ணான்குநுவல்
பொதுநெறிக ளாறு மோங்கப்
புலைகொலைக் கஞ்சாத புன்சமய மெல்லாம்
புகைந்துநீ றாகி யொழியச்
சேவலிட பங்கருட னாதிய வரைந்துள்ள
சீர்க்கொடிகளி யாவும் வெல்லத்
தீயன வரைந்தகொடி முழுதழிய வறமெலாஞ்
சிதறாம லெங்கும் வளர
பாவமென் பனமுற்று நசிவுற நினைந்துசிறு
பறைமிக முழக்கி யருளே
பழனியங் கிரியின் மிசைவளரு நங்குமரசிறு
பறைமிக முழக்கி யருளே. 4

85. சருவசித் துஞ்செய்ய வலனா முனக்கு
முன்றனைநம் பெனக்கு மென்னைச்
சார்ந்தொழுகு மொருதொண்ட னுக்குமெய் தியமூன்று
தரமாய மூன்று கிணறும்
பொருவில் பெருநீரூற் றுதித்துலக மெங்கணும்
புகழ்நலம் பெறவு மீனப்
பூசனைகொ ளும்புலைத் தேவதைக ளும்பெரும்
புனித முற்றிட வும்பொலாக்
கெருவமுற் றியசமய வாதருங் கவிஞருங்
கேடுபட் டிடவுங் நல்லோர்
கேளிரொடு வாழவுங் கவுமார நெறியோர்
கிளர்ச்சி யுறவுங் குறித்துப்
பருவதகு லந்தோறு முலவுமுரு கையசிறு
பறைமிக முழக்கி யருளே
பழனியங் கிரியின்மிசை வளருநங் குமரசிறு
பறைமிக முழக்கி யருளே. 5

வேறு

86. காவாள் பவர்க்கோ ருயிர்த்துணையாங்
கந்தா கதிர்வேற் படையேந்திக்
கலப மயிலூர்ந் துலகையொரு
கணத்தில் வளையுங் கதியுடையாய்
சேவார் கொடிப்புங் கவனெடுநாள்
செயுமா தவத்தின் பயனானாய்
சிலம்புக் கிறைமுன் றருகவுரி
செங்கைக் கணியாஞ் சிறுகுருந்தே
நாவா ணியும்போற் றிடப்பலநூ
னவிலும் புகழு முழுப்புலமை
ஞானக் கடலும் புணர்குரவா
நாறிய மலர்த்தார் பலபுனைவாய்
மூவாப் பழனிப் பதிமுருகா
முழக்கி யருளாய் சிறுபறையே
முந்நீர்ப் புவியுண் டவன்மருகா
முழக்கி யருளாய் சிறுபறையே. 6

87. கழங்கொன் றியகைச் சிறுமடவார்
கனிவாய்க் குரவைத் தொனியுமிளங்
காளை யனையார் பலர்பயிலுங்
கழகத் தொனியுங் கனிமலர்த்தேன்
வழங்கும் பொழிலிற் ககத்தொனியு
மாறுற் றிகல்வா னரத்தொனியும்
வானோர் தொனியும் பசுத்தொனியும்
வாவிக் கரையின் வளைத்தொனியும்
பழங்கன் றினுக்கு சொரிதருவெண்
பாலார் கவரிப் படைத்தொனியும்
பரியுங் கரியுந் தேருமுதற்
பலவற் றுதித்துப் படர்தொனியு
முழங்கு பழனிப்பதி முருகா
முழக்கி யருளாய் சிறுபறையே
முந்நீர்ப் புவியுண் டவன்மருகா
முழக்கி யருளாய் சிறுபறையே. 7

வேறு

88. இரட்டு கவரிகண் முதற்சொல் வனகொளு
மெழிற்பெண் மிகையுடையா
யிலக்கர் நவர்பல கணத்தர் தலைவர்க
ளினர்க்கோ ரனையனையாய்
திரட்டு மமுதையு மிகழ்ச்சி செயுமதி
திறத்த ருணர்குரவா
திருக்கு மமிகரு மருப்பொ டுலவொரு
சிவத்த தகரிவர்வாய்
கரட்ட னொருதொகை விகற்ப நுவலிய
கனத்த புலமைவலாய்
கவிச்சொ னயமறி கிலர்க்கொ ரிடியுறழ்
கனைப்ப ரொடுதிரிவாய்
முரட்டு மதகரி முகற்கொ ரிளையவ
முழக்கு சிறுபறையே
முனைத்த பழனியில் வசிக்கு மிறையவ
முழக்கு சிறுபறையே. 8

89. சத்திரமெ டுத்தவர்த மக்குளொரு பெரியாய்
சத்தியொரு பக்கமுறு சற்குரவன் மதலாய்
நத்தியவை முற்றுமரு ணற்கருணை முருகா
நச்சரவி னுச்சியி நடிக்குமயி லிவர்வாய்
பத்தியைவெ றுத்திகழ் படிற்றறிஞர் பகைவா
பற்பலம லைத்தலை பதக்கமல மணிவாய்
முத்திருவு டைக்குக முழக்குசிறு பறையே
முற்பழனி வித்தக முழக்குசிறு பறையே. 9

90. தவமலதெ மக்கொர்துணை யிலையெனயு னைப்பரவு
தகவினர் தயக்க மறவோர்
தகர்விடுதி றத்தையனு தினநுவல் கவிப்புலவர்
தமையெதிர் துடுக்கர் கெடவேல்
குவடுறழ் புயத்தின் மிசையணிதரு சிறப்பையுணர்
குறியிடை நிலைத்த முனிவோ
குகுகுகுவெ னத்தொனிசெய் பறவையைய மைத்தெழுது
கொடிபுவன முற்றும் வெலநீ

யவனவள தற்குளும்வை கியநிசமி கத்தெரியு
மவர்பிறவி யற்றொ ழியநா
னலைகடன் முதற்சொல் பலபுனலொடு கனற்குளிடு
மரிய தமிழ்கைக்கு வரவே
சிவசுதர்க ளிற்சிறுவ னெனின்மகிழ்த கைக்குமர
சிறுபறை முழக்கி யருளே
செயமலிதி ருப்பழனி மலைமுடியி லுற்றகுக
சிறுபறை முழக்கி யருளே. 10

10. சிறுதேர்ப் பருவம்

91. காரின மழுக்கா றடைந்திட வோராயிரங்
கண்ணா னிவர்ந்த தேருங்
கமலாத னப்பிரம னிவர்தேரு மாயன்
கவின்தே ருடன்க டுக்கைத்
தாரிறைவ னேறிய பெருந்தேரு மோராழி
தகுமிர வியின்றே ருமோர்
சற்றுமெலி வடையாம லதனதன் செலவினிற்
சஞ்சரித் திடவும் வெங்கோல்
சூரினது தேருமவ னினமான தானவர்
தொடுத்தேறு கோடி தேருஞ்
சூடேயொர் வடிவாய்த் துலங்குபேய்த் தேருந்
தொலைந்திட நினைந்து சுத்தச்
சீரியவர் வாழ்பழனி மாநகர்த் தெருவிலொரு
சிறுதே ருருட்டி யருளே
சேவலொலி நீடுந் திருக்கைவடி வேலவா
சிறுதே ருருட்டி யருளே. 1

92. மருவார் குடிக்கொரு நெருப்பாய கவுமாரர்
மனதினிடை வீரம் வளர
வண்டமிழ்ச் சந்தக் கவிப்புலவர் சங்கத்தின்
மாறாத வுவகை வளர
பொருவாத சத்துவ குணத்தேவ ராலயப்
பொலிவுதொறும் விழவு வளரப்
புலையாடு தற்குரிய பேய்ப்பீட மெங்கணும்
புற்றினொ டெருக்கும் வளர

குருவார்த்தை யேமறை யெனக்கொள்ளு மாதவர்
குழாத்திலரு ளாடல் வளர
குகரத் தொனிப்பறவை யெழுதிய பதாகையிற்
குன்றாத வென்றி வளர
திருவா வினன்குடியில் வளர்குமர குருபரா
சிறுதே ருருட்டி யருளே
சேவலொலி நீடுந் திருக்கைவடி வேலவா
சிறுதே ருருட்டி யருளே. 2

93. வருமந் தவிர்ந்தமன மாதவர் வலக்கைதொறுந்
மன்னுசெப மாலை யுருள
வாதவூர் முனியனைய புனிதர் விழிகளி
லன்புமலி கணீர்மணி யிருள
தெருமந்து நல்லோர் வருந்தமுயல் பாதகர்
சிரம்படு களத்தி லுருள
தெய்வமங் கையரவுண மகளிர்பணி நீத்தாடல்
செயுமெழிற் பந்து முருள
கருமம் பரம்பொரு ளெனுஞ்சிறுவ ரருளாடல்
கண்டுதுயர் மிஞ்சி யுருள
கன்மலைத் தலையுருண் டுய்ந்தசில கவுமாரர்
கலிபுறங் காட்டி லுருள
தெருவெங்கும் வால்வளைக ருருள்பழனி யாதிபா
சிறுதே ருருட்டி யருளே
சேவலொலி நீடுந் திருக்கைவடி வேலவா
சிறுதே ருருட்டி யருளே. 3

94. அட்டமா சித்தியொடு முத்தியும் பெறுவதற்
காகிய தவஞ்செய்யவு
மருமறையு மாகமபு ராணமிதி காசமு
மறைந்தபொரு ளாராயவும்
பட்டவர்த் தனர்மகுட வர்த்தனர்க ளாதியவர்
படுகளை செயந்தோயவும்
பருமணிக் குவையுமம் பொற்பணக் குவியலும்
படமுதலி யவுமெய்தவுங்
குட்டகுன் மங்கண்முத லானபல நோய்களுங்
குடியோடு நலமேவவுங்

கூறுமற் றையபயன தொவ்வொன்று நெஞ்சிற்
குறித்தபடி பெற்றுய்யவுஞ்
சிட்டர்பற் பலர்நாளும் வருபழனி நாயகா
சிறுதேரு ருட்டியருளே
சிவஞான தேசிகத் தலைமைபெறு பாலகா
சிறுதேரு ருட்டியருளே. 4

95. மாதர்மொய்க் கும்படியொர் பைங்கிளிப் பரியில்வரு
மதனவேள் வெட்குமழகு
மரகத மணிக்கிரியெ னக்கட னடுத்துயிலு
மாயவன் புகழ்வீரமும்
போதகத் திற்குடிகொள் பிரமாவும் வாணியும்
போற்றிடத் தகுகல்வியும்
புற்றி னரவப்பணி புனைந்தவன் பரவுபரி
பூரணா னந்தநிலையு
மாதவனு மம்புலியு மங்கியுங் கருதற்
கமைவரு பெருஞ்சோதியு
மனையநல முள்ளனவெ லாமணைந் தென்றென்று
மாறெழுத் தோதுமன்பர்
தீதறுக் குந்தொழில் செயும்பழனி நாயகா
சிறுதேரு ருட்டியருளே
சிவஞான தேசிகத் தலைமைபெறு பாலகா
சிறுதேரு ருட்டியருளே. 5

வேறு

96. நாதக் கழற்றாட் குகவேளே
நளினப் பிரமா வழப்புடைத்தாய்
நயன மறுமூன் றுடையானே
நறும்பூங் கடம்பு புனைமார்பா
சீதக் களபக் குரும்பைமுலைத்
தெய்வா னையுங்கா னகத்திலிளங்
தினைகாப் பவளும் புணர்கணவா
செங்கேழ்ப் பவளக் கிரிபோல்வாய்
வேதக் கலைமேற் பொருளானாய்
விண்ணோர் குடிக்கோர் காவலவா

வீரர் பலருந்தொழு மொருவா
வெற்பா யிரத்து மிளிர்தேவே
யோதக் கடலுண் டவன்குரவா
வுருட்டி யருளாய் சிறுதேரே
யுலகோர் புகழ்சீர் வயலூரா
வுருட்டி யருளாய் சிறுதேரே. 6

97. நீச்சுக் கடங்காக் ககனவெளி
நிறைய வெயிலு நிலவுமுமிழ்
நீர்மைச் சுடர்க ளுருளாக
நிகமத் தொகைவாம் பரியாக
வீச்சுக் கசைதா ரகமாக
வெற்புச் சிலையும் பணிநாணும்
விழியாக் கணையுங் கொளும்பித்தன்
வென்றி விழைய மிறையாக
பேச்சுத் தொழிலோ வருமனையும்
பிரச மலர்ப்பீட முந்தவத்தோர்
பெருங்கூட் டமுந்தோய் கிழப்பனவன்
பிழைதீர் தருசா ரதியாகி
யோச்சும் புவியாம் பெருந்தேர்மீ
துருட்டி யருளாய் சிறுதேரே
யுலகோர் புகழ்சீர் வயலூரா
யுருட்டி யருளாய் சிறுதேரே. 7

வேறு

98. கலப்பில் பிழைமுயற் றிருட்டு நினைவினர்
கருத்தி னுழையாதாய்
கதிக்கொர் விதையென வுரைத்த கிளியமர்
கனத்த திரட்டோளா
வலப்பு மலியவெ னுளத்தில் வெகுவித
வவிர்ச்சி தருகோலா
வகத்தி யனைநிகர் சிலர்க்கொர் பிரணவ
வருத்த நுவல்வாயா
நலப்ப னிருநெறி யினர்க்கு மொருபொது
நடக்கை யருள்பாதா

நரைத்த மழவிடை முகத்தொர் பெரியனு
நடுக்க முறுகோபா
வுலப்பில் பழனியில் வசிக்கு மிறையவ
வுருட்டு சிறுதேரே
யுமைப்பெண் முலைநுகர் சிவத்த நிறமக
வுருட்டு சிறுதேரே. 8

99. மைக்கிரிந டத்தியொர் மயிற்பரியு மூர்வாய்
மத்தகய மொற்றையுண்ம திக்கவிவர் வானே
சுக்கிரன டிப்பணிசெய் துட்டர்குல காலா
சுத்தபர தத்துவசு கித்தர்குரு நாதா
வெக்கியம திற்றகரி றைச்சிநுகர் தீயோ
ரிட்டமுமோர் சற்றருளி றைக்கினிய சேயே
யுக்கிரனு ளூற்றவ வுருட்டுசிறு தேரே
யொப்பில்பழ னிக்குகவு ருட்டுசிறு தேரே. 9

100. அவனாதிமுத் தினணியாயெட் டரிதாகு மெய்ப்பொருளே
யருணாசலத் துறுகோபுரத் தவிர்சாரு விற்கெளியாய்
சவமாவிழற் கிசையாமுழுத் தவர்மாமனத் தணைவாய்
தமிழ்மாரிகொட் டிடுமேகமொத் தவர்மாலறத்
தொடர்வாய்
கவளாசலத் தொருதோழமைக் கருணாகரக் குமரா
கடலேழுடுத் தவள்வாழ்வுறக் கருதாருயக் குறியாய்
சிவனார்விழிப் புதல்வா வெழிற் சிறுதேருருட் டுகவே
திருவாழ்தகைப் பழனாபுரிச் சிறுதேருருட் டுகவே. 10

3

சென்னை மாநகர்க் கந்தசுவாமி பேரிற் பிள்ளைக்கவி

காப்பு
நேரிசை வெண்பா

1. பைந்தமிழ்ச்சீர் மன்றுசென்னை பட்டினத்தூர் வாழவந்த
கந்த சுவாமி களிகூருஞ் - சுந்தரஞ்சேர்
பிள்ளைக் கவிதருவான் பேழைவயிற் றானைமுகக்
கொள்ளைக் கவின்மருவுங் கோன்.

2. வல்லாண்மை துன்றுசென்னை மாநகரில் வாழ்குகன்மே
லெல்லாரு மெச்ச வயம்புவாய் - பொல்லா
விடம்பருகு மீசனொடு மேனா ளுதித்தாய்
கடம்பனைய பிள்ளைக் கவி.

நூல்
1. காப்புப் பருவம்

திருமால்

3. மணிநிலவு மரகதப் பிடிமருவு பாகத்து
வள்ளலார் தவமு திர்ந்து
வன்னிவிழி வழியாறு பொறியென வுருக்கொண்டு
வருமுருக வேளை மகுடத்
தணிநிலவு தலையாறு மங்கத மிலங்குபுய
மாறிரண் டும்பொ ருந்து
மையனைச் சென்னைமா நகரிலுறை கந்தனை
யளித்தருள வேண்டு மென்றே
பணிநிலவு பாற்கடற் பள்ளிகொண் டானையெழு
பாருமுண் டுமிழு மாலைப்

பசுநிரை வருந்தாத வண்ணமந் நாளுயர்
பருப்ப தக்குடை பரிக்குந்
திணிநிலவு தோளானை யாழியொடு சங்கமுந்
திகழச் சிறந்து ளானைச்
செல்வியுறு மார்பனைப் பலவிதத் தினுமிகச்
சிந்திக் குமெம துள்ளமே. 1

பரமசிவன்

4. அன்னமாமென வேதன் விண்ணிலே கிடவேன
மன்னமேல் கொடுமாயன் மண்புகப் பார்த்துளா
ரண்ணமா முடிமீது வெண்மைசேர் மதிசூடு
மண்ண லாடகமாகு மம்பலக் கூத்தனா
ரன்னையா யுலகேழு முன்னமீ னியபாவை
யங்ஙனோர் புறம்வாழ வுங்கொள்பொற் பேற்றதே
வம்மை வாதனை தீருமுண்மை மாதவமீயு
மம்மநீ றணிவார்கள் சிந்தையிற் றேக்குவார்
கன்னல்வார் சிலைமார னென்னுமோர் படுபாவி
கன்னிமார் பலர்சூழ வந்தெதிர்த் தார்த்தநாள்
கண்ணினா ரழல்வீசு தன்மையார் மழுமானொர்
கம்மினோ டவிர்சூல மொன்றுகைத் தீர்த்தனார்
கண்மைதீர் தமிழ்நால்வர் தம்மைநா டியசீலர்
கன்ம மாதியவாம லங்கெடத் தாக்குவார்
கைம்மதா சலமாய வுன்னினார் பலவாய
கண்ணியா ரவர்தாளை யஞ்சலித் தேத்துவாம்.
வன்னமா யிரகோடி துன்னுசீர் பெறுதோகை
மஞ்ஞைவா கனமேறு மைந்தனைப் பூட்கையால்
வண்மைதோய் தரநீடு பெண்ணினா ருயிர்போலு
மன்னைமால் வரைசார்ப சுந்தினைக் காட்டில்வாழ்
வன்மைவே டுவர்பேதை கிண்ணமா முலைமோக
மன்னுசா மியைஞான பண்டிதப் பேர்ச்சொல்வார்
மம்மர்நோய் மருவாது மெய்ம்மைவீ டதுசேரும்
வண்ணமோர் குருவாகு நண்பனைக் கூர்த்தவேல்
சின்னதே யெனநாளு மெண்ணியே சிடுமீனர்
தென்னனூர் புகமோதும் வன்பனைப் பாக்கொடோர்
தென்னனா ருயிர்சோரும் வெம்மைபோய் மிகுகூனல்

செம்மையாய் நிமிர்சீர்செய் தன்பில்பொய்த் தீர்க்கமே
செம்மு சாரணராதி யெண்ணிலார் கெடுபோர்கொள்
செம்மலா முருகோனை யம்புயப் பூக்கணீர்
செந்நெலார் வயலூடு மென்மையோ திமமோவில்
சென்னைமா நகர்மேவு கந்தனைக் காக்கவே. 2

பராசத்தி

5. அமல பரசிவ பசுபதி யெனுமொரு
கணவர் தனதிள முலைமயல் கொடுதின
முன்னிட்ட மெப்படிய வண்ணத்தி ருப்பனெனு
மொழியொ டநுதின மடிதொழ வுளமகிழ்
சிவையை யிமவரை தருமக வெனவரு
சின்னக்குயிற் பெடையென் வண்மைத் தனிக்கொடியை
யகில முழுமையு முதவிய சிறுவயி
றுடைய கவுரியை மதன்வழி படவொரு
கன்னற்சிலைத் திறமைதன் னைக்கொடுத்த வளைவாடாதே.
யளவில் சுகமுற வுதவிடு மிறைவியை
மரண மொடுபவ மெனுமிரு ளிரிதலை
நண்ணிக் கழற்கமல முன்னித் தனக்குரிய
பொறிக ளுவன்முழு மவுணிக ளதுசுழி
முனையி னடமிடு முதல்வியை முருகவிழ்
வன்னத் தகட்டிதழ்க டுன்னுற்ற புட்பவகை
யணியு மழகிய குழலியை யனநிகர்
நடையி னொயில்மலி வனிதையை யொருகவி
பின்னுற்றுவப் படிசிலுண்ணச் சமைத்தவளை
வாளேநேர்
சமர பிரபல பலமரு வியவிழி
யிலகு திரிபுர தகனியை யடியவர்
கண்முற் றிகழ்ச்சிதரு கன்னிக்கி ளிப்பிளையை
வெளிறு மலர்மிசை மதியென நிலவிய
சரசு பதிதிரு மகளெனு மிருவர்க
ளென்னச் சொலிப்பரவு தன்மைக்கு மொத்தபிடி
தனையெ னிகலவ ரடியொடு கெடவரு
முனிவின் மிகைகமழ் திருவுள மிசைவுறு
பொன்னைப்பணத் தின்மகிழ்புன் மைக்குணத்தினரை
நாடாதாள்

சகுண முதன்மைகொள் பகவதி பயிரவி
விமலை யதிநய விகசித மொழிபல
பன்னித் தொடுத்துவரு பெண்ணொப்பில் கற்பினவ
ளறியி லறிவரு செயலின ளெனவுணர்
பெரியர் தலையிகழ் கொடியவர் குடரணி
மின்னக் குதிப்பவளை நன்மைக்கு வித்தனைய
தரும மயிலினை யிமகர னெனவொரு
பணியை விடுகரு ணையின்முதி யவடனை
யுண்மைக்கவிப் புலவருண்ணிற் குமுத்தமியை
நானோர்வே
முமல முதவிய திரிகுண வழிசெலு
மனதை யிருபத மலர்களி லொருவித
மன்னத் திருத்தியருண் மெய்ம்மைக் குருக்களரன்
மதலை யெனலையு மவர்பணி கொளுமுயர்
குரவ ரெனலையு நிசமெனு நிலையினர்
விண்ணைக் குறிக்குமவ ரின்னற்ற விர்த்தகுகர்
முகுள சததள பரிமள மதுகர
சலச மலர்திகழ் கரமுறு குறமக
ளெண்ணத்திருப் பதையுமுன் னிட்டியற்றுமதி
மாலேர்வார்
மொளுமொ ளெனுமொலி யொடுமத வருவிகள்
வழிய விடுமெழில் குலவுறு மவையவ
வெண்மைக் களிற்றின்மகள் பொன்மைக் குருக்கமிகுவர
சரவண பவர்கதி ரயில்வலி
யதுகொ டவுணர்கள் குலமற முனிபவர்
மொய்ம்மொய்த் திசைக்கவலர் செம்மைக் கடப்பமலர்
முருகு சொரிதரு குரவமென் மலர்செழு
மலரிபுனலி மலிகைதுள வறுகிவை
சென்னிக்கு மிட்டுரைசெ யெண்ணிக்கை யற்றமலை
மேல்வாழ்வார்
கமல மிசைவளர் திசைமுக னதுதலை
யுடைத லிலதுபல வயினுயர் தரவுள
கைம்மற் செலுத்துமவர் முன்னைத்
தொழிற்செய்தவர்

திருட னெனவொரு தரமரு ணையிலொரு
புலவ னுவல்கையி லமைவரும் விழைவொடு
மென்னைச் சொலச்சொலிய கண்மைத் தலைக்கடவுள்
கடலி னொடுபொரு நையு முதலிய
புனலி லனலின்முன் முழுகிய பனுவல்க
ளிம்மைபிறப் பினிலென்முன் னிற்பதைக்கருது
சீர்தோய்வார்

கமட முதுகினி லொருமலை யினையலை
தவள னதியி டுநடு மரிபுகழ்
திண்ணப் புயத்தொருவர் தொன்மைக் குடைச்சரணர்
தனன தன தன தன
தன தன தன
தன்ன தனதன தனதன தனதன
தன்னத் தனத்ததன தன்னத் தனத்தவெனல்
கழறி யலகைகள் குதிகொள வமர்பொரும்
வயவர் தமிழ்நய மொடுபொருள் வளமுறு
சென்னைப்பதிக் குமரர்தம் மைப்புரக்க
வெனவேதானே. 3

விநாயகர்

6. மும்மையுல கோரென்று மூலவித் தாச்சொலோர்
முன்னவனை யீசன்றன் மேனியிற் போர்த்ததோ
லம்மைநினை வூடொன்ற லாலெழிற் பூட்கையே
யன்னமுக மாவந்து ளானைமிக் கேத்துவாம்
வெம்மைமலி சூரென்ற மாவறத் தாக்கும்வேன்
மின்னுமகன் மார்பங்கொள் வீரனைப் போற்றுவார்
செம்மையுறல் காணுங்கு கேசனைக் கீர்த்திதோய்
சென்னைநகர் வாழ்கந்த சாமியைக் காக்கவே. 4

திருமகள்

7. பங்கய மலர்ந்தனைய கண்குலவு கொண்டல்புணர்
பன்னியா கியவிளைய தையலைத் தேக்குபால்
பம்புகட லம்புலியு டன்றரவ ரும்பெருமை
பன்னுவார் பெறுகருணை வல்லியைப் போக்கொணா

மங்களம னந்தமுறு செந்திரும டந்தையினை
வண்மைதோய் முனியரசு சொல்லுநற் பாக்களாம்
வந்தனைபு னைந்தவளை யிதிரர்தொ ழுஞ்சரண
மன்னுவா டணையிணையில் செல்வியைப் போற்றுவாம்
வெங்கணர வஞ்சநட னம்பயில் சிகண்டிமிசை
மின்னும்வே லுடனிலவு செய்யனைச் சேட்டையே
மிஞ்சமணர் துஞ்சமுதிர் செந்தமிழ்பொ ழிந்தவனை
வென்னிடர் தமர்புரியும் வல்லமைத் தோட்கள்சேர்
சிங்கநிக ரொன்பதின்மர் தந்துணையை யும்பர்புகழ்
சென்னியா றுடையமுதல் வள்ளலைக் கோட்டிலோர்
செண்டுகொட றைந்துமகிழ் துங்கனைவ ளம்பெருகு
சென்னைமா நகரின்முரு கையனைக் காக்கவே. 5

பிரமன்

8. மண்ணு முயிர்களி னுடன்முற் றுமிட்டதாம்
வண்மைதிகழ் மலரெட்டும் வித்தை மாகா
தண்ண மிளிர்சது முகநட்பு முற்றுவா
லன்ன மிசைவரு மயனைப்ப ழிச்சுவாம்
விண்ணு ளிமையவ ருறவைத்த சத்திவேல்
வெண்மை நிறமலி தருகுக்கு டப்புள்வாழ்
திண்ண மொழிபவர் பலர்மெச்சு பொற்பினோர்
சென்னை நகருறை குகனைப் புரக்கவே. 6

சரசுவதி

9. என்றனது நாவினுமி ருக்கைக் கிசைந்தவளை
யெண்ணிலா மறையோதி வைத்தாற்றல் பெற்றதா
லெண்டிசையி னாவலரு மெச்சச் சிறந்தவளை
யின்னநூல் பலபாடு நட்போர்க்கும் வித்தெனா
நின்றவளை வாலியநி றப்பொற் பமைந்தவளை
நின்மலர் கரஞான முற்காட்டு பெட்பதே
நெஞ்சில்வளர் பேதையையி டுக்கத்தில் வந்துதவும்
நின்னயா தரவாணி யைப்போற்றி நத்துவாம்
வன்றகுவர் வேரற றுத்துக் கடம்பணியும்
வண்மைசேர் புயவீர னைக்கார்த்தி கைப்பெணார்
மஞ்சுதிகழ் மால்வரையெ னத்தக்க கொங்கைநுகர்

வண்ணவா யுறுசேயை விற்கோட்டு மற்செய்வார்
சென்றமூம்வி னோதிய ரிலக்கத்தி னொன்பதின்மர்
தென்னுலோா கனும்நா ணுறத்தாக்கும் வெற்றிதோய்
திண்பெறமு னீபவனை வித்தைத்தி றம்பெருகு
சென்னை மாநகர்வேல னைக்காத்த ளிக்கவே. 7

கிரகங்கள்

10. சூரியன் றிங்களங் காரகன் புந்திகுரு
சுக்கிரன் சனியி ராகு
தொந்தமுறு கேதுகுளி கன்சிலை யிராசிநா
டூமகே துபரி வேடம்
வீரியக் களரிகா வலன்முதற் பெரியோர்
விளம்புபல கோட்க ளுக்கும்
விரதாதி யுற்றுந் துதித்துந் தினந்தோறு
மேன்மேலு மஞ்ச லிப்பா
மாரிய மருந்தமிழ் முதற்பரவு கலைமுழுதும்
மறிபுல வனைக்கி ரியெலா
மாடரங் காமுருக வேடதனைத் தேவர்புக
ழயில்வே லனைக்கு றத்தி
சீரிய முலைத்துணைக் குருகுமதி மோகனைத்
தெய்வா னைபுணர் கேள்வனைச்
சென்னைமா நகரில்வரு கந்தசா மியைமிகச்
சிந்தித் தளிக்க வென்றே. 8

பலதேவர்

11. உயிரொன் றுழல வருத்தாமை
யொருவர் தருமூன் புசியாமை
யோரஞ் சிறிது முரையாமை
யுதவுந் தொழிலிற் சலியாமை
பயிலு முதுநூற் பழியாமை
பாழ்த்த முகத்தோ டலையாமை
பழகு மனத்தார் தொழுமளவில்
பலதே வரையும் பணிந்தெழுவாம்
மயிலிற் பவனி வருவானை

வடிவே லணிந்த புயத்தானை
மலையா வினும்போய் நடிப்பானை
வணங்கு மவருக் கெளியானைக்
கயிலைக் கிரியார் தருமகவைக்
கழனி வளஞ்சேர் சென்னைநகர்க்
கந்தக் கடவு டனைநாளுங்
காப்ப துமக்கே கடனெனவே 9

ஒருமை

12. அருளுததி யிடையுலக முழுதுமுத வியபொருளை
யன்னையென வவைதுன்று முயிர்வகை தமக்கெலா
மமுதுதவி விழிதுயில விடுமுதலை வடவனலை
யன்னசின மொடுகொன்று மகிழ்வதனை நுட்பமா
மறிவையறி வரியதிரை யிடுகொடுமை யுடையதனை
யம்மைவினை தவிர்வென்றி தருகுரவர் பற்பலோ
ரரசதென மிளிர்சுடரை யுளசமைய நியதிகளில்
லண்ணியக பெருவஞ்ச மருவியதை நட்பினோ
ருருவமெனி லுருவுமரு வெனிலுருவு நிகழ்வதனை
யுன்னுமன தினுமொன்று செயலினதை முத்தர்தா
மொருநொடியி லெளிதிலுணர் தரவுதவு முடிவையமு
துண்ணுமிமைய வர்சிந்தை யணுகரியதைத் ததொனூ
லுரையதனின மருவிமரு விலதையமர் செயமுடுகு
மொன்னலரை யடுசிங்க மனையரைவெ றுத்திடா
வுரிமையொடு நிலவியதை யணுவிலணு வெனநிறையு
முண்மைவடி வெனநின்ற வொருமையை வழுத்துவாம்
வருமமிகு தகுவர்குல மழியவிடு மயிலணியு
மன்னவனை யரனன்று வழிபடும் விதத்தினான்
மறைபலவு நுவலுமுயர் பிரணவமெ னொருபொறியின்
மன்னுபொரு ளினைவிண்ட வரதனைவி டப்பலால்
வலிமருவு முரகபதி நெளியநட மிடுமயிலின்
வன்னமள வறவிஞ்சு கலபநிழ லிற்பொனேர்
வனிதையர்க ளிருவரொடு திகழ்குமர குருபரனை
வண்மையுறு பலகுன்றி லமர்குகனை யற்றைநாள்
செருமுமொலி யொடுகனலில் வருதகரி லிவரவல
சின்னவனை யுயர்தென்றல் வரையினில்வ சிக்குமோர்

சிறுமுனிவன் மயல்களையும் விழியினனை யருணகிரி
திண்ணமொடு பகர்செஞ்சொல் விழைபவனை மிக்கவேய்
செறிவன மதனிலெனது கனவின்மிக வுறுதிபகர்
தென்னவனை யனம்வந்து வயல்களின்வ ரப்பிலே
தினமடையும் வளமருவி யமரருல கென்நிலவு
சென்னைநக ரினில்வந்த முருகனைய ளிக்கவே. 10

2. செங்கீரைப் பருவம்

13. திருமகள் விரும்பியவண மருமக ளுடன்பணி
தினஞ்செயும் பெருமை பெற்ற
சிவையெடுத் துச்சிமோந் தென்னுயிர்த் துணைவனார்
செந்தழல் விழிப்பி ழம்பில்
வருமதலை யேயெனது மாதவப் பயனே
வருந்திடே லென்று கொஞ்சி
வளையணி கரங்கொண்டு நீராட்டி யுயிரெலாம்
வாழ்வது குறித்து முன்னா
ளருமறைக் கிழவன் படைத்தபுவி யைக்கைவிர
லாலுரைத் துத்தி லகமிட்
டணிமுலை சுரந்தபா லுதவிடக் களிகூரு
மறுமு கக்கும ரேசனே
செருமலியு நவவீரர் துணைவந்த முருகனே
செங்கீரை யாடி யருளே
சென்னைமா நகர்தழைய வருகந்த சாமியே
செங்கீரை யாடி யருளே. 1

14. மாதவரும் வானவரு மற்றையவ ருந்தினம்
வருந்தித் தொழற்கி ரங்கி
மணிமிடற் றிறைவனார் புரிதவ முதிர்ந்தவர்தம்
வன்னி விழியிற் பொறிகளா
யேதமற வந்துசர வணவாவி யிற்கமல
மேறித்த வழ்ந்து மடவா
ரிருமூவர் முலையமு தருந்தியு பசிகொண்
டியங்கும வான்வ ளர்த்த
காதலி முலைத்துணைக் கலசத்தி னமுதம்
களித்தருந் தும்ப வளவாய்க்

காங்கேயனே யடியர் பிழைமுழு தொழிக்குங்
கடைக்கண் மூவாறு கொண்டாய்
சீதள மலர்க்குரவ மாலையணி தோளனே
செங்கீரை யாடி யருளே
சென்னைமா நகர்தழைய வருகந்த சாமியே
செங்கீரை யாடி யருளே. 2

15. உலகினிற் றிசையாறெனச் சத்தியாறென
வொழிக்கருந் தொழி லைந்தினோ
டொன்றுபுண ராறென வெழுத்தா றெனச்சமைய
முள்ள வான வெண்ணிலார்
பலவிதம் பகர்வரு ளானந்த வாரியிற்
பத்திநீ ரிடைம லர்ந்த
பதுமமல ரெனமிளிரு மறுமுகக் குமரனே
பன்னி ருபுயத் தண்ணலே
மலரவன் றருமறையு மரனுதவு மாகமமும்
வாய்விட்டு ரைத்து முரையா
வண்மையே வடிவாய திருவடிக் குரவனே
வானுலக மங்கை யர்க்கோர்
திலகமென வளருமொரு தெய்வானை மகிழ்கணவ
செங்கீரை யாடி யருளே
சென்னைமா நகர்தழைய வருகந்த சாமியே
செங்கீரை யாடி யருளே. 3

16. அத்திரத் தாருகனை வெற்பொடு தடிந்தாயோர்
ராயி ரமுகச் சிங்கனா
மவுணனை யவன்சிறிது மதியாத வச்சிர
மதைக்கொண் டழித்து கந்தா
யெத்திரத் தோர்மனமும் வெருளவளர் சூர்மா
விரண்டு கூறாக வெட்டி
யிமையவர் படுந்துயர் தவிர்த்தாய் வியன்றிக
ழிளங்கிழை மடந்தை நல்லார்
பொய்த்திரத் திற்குருகு மென்போலி யர்க்குமெய்ப்
பொருள ளிப்பது குறித்துப்
புவியிலுள மலைதோறு நடனம் புரிந்தாய்
பொறித்தோகை மயிலி வர்ந்தாய்

சித்திரச் செங்கைவடி வேலணியு முருகனே
செங்கீரை யாடி யருளே
சென்னைமா நகர்தழைய வருகந்த சாமியே
செங்கீரை யாடி யருளே. 4

வேறு மகுடம்

17. இன்பமலி யுஞ்சசியு மிந்திரனு மற்றுள்ள
விமையவரும் வந்து நின்றா
ஈரிரு முகப்பிரம னுந்தவள வாணியுநி
னிசையெடுத் தேத்து கின்றார்
பொன்பரவு மார்பினிற் பைந்துள வணிந்தமுகில்
போலுமரி மிகவி ழைந்தான்
புரமெரிய நகைசெய்த புண்ணியப் புனிதர்தாம்
புரிதவப் பயனி தென்ன
வென்பலரு மிதழியுட னணியுமொரு நான்குபுய
மெட்டா கிடக்க ளித்தா
ரிமையமக ளளவற்ற வாஞ்சைகொண் டுருகித்த
னிருமுலைப் பால்சொ ரிந்தா
ளன்பரெண் ணியபடி விளங்குமுரு கேசனே
யாடி யருள்செங் கீரையே
யன்னமலி சென்னைநகர் தன்னில்வளர் கந்தனே
யாடி யருள்செங் கீரையே. 5

18. வண்டமிழ்ச் செஞ்சொற் கவித்தொடை தொடுக்குமவர்
வறுமைநோய் முற்று நீங்கு
மாநிலத் திற்றிங்க ளொன்றுக்கு மும்மாரி
வந்துவந் தினிது பொழியுந்
தெண்டனிட் டுன்னைமிக நம்புமவர் தமைநிந்தை
செய்யுமவர் குலந சிக்குஞ்
செங்கோல் விளங்கிக் கொடுங்கோல் பிடிக்குமவர்
சீரழிந் திடும வுணராற்
றண்டமடை யாதும்பர் களிகூர்வர் மாதவந்
தழையுமல ரோன்வ குத்த
சட்சமைய மும்பெருகு மற்றையர் விளம்புபொய்ச்
சமைய மெல்லா மொளிக்கு

மண்டமுக டெங்கும்விரி யுங்கலப மயிலாளி
யாடி யருள்செங் கீரையே
யன்னமலி சென்னைநகர் தன்னில்வளர் கந்தனே
யாடி யருள்செங் கீரையே. 6

வேறு

19. பணிபவர் சிந்தையி லுண்மைந லந்திகழ்
பத்தி மிகுத்தாடப் பங்கய மாதர ருட்சிவை யோடு
பரிந்து வியந்தாடத் திணிபெறு தோள்வய வீரரி கற்பிணி
தீர்கை நினைத்தாடச் செங்கண் முராரிமு தற்பல கொண்ட
திடுக்க மொழிந்தாட மணியுமிழ் கட்செவி யாடிட வாடு
மயூரமுடன் சேவல் வாழியெ னக்கவி பாடுந ராட
வனப்புறுகிண் கிணியோ டணிகல னாட வசைந்தும
கிழ்ந்தினி
தாடுக செங்கீரை யாசறு சென்னையில் வாசமு றுங்குக
னாடுக செங்கீரை. 7

20. சந்தத மன்பர்கள் சிந்தையி லுற்றொளிர்
சண்முக மதியாடச் சத்தி முதற்பல பற்றிய செங்கை
தடம்புய முடனாடக் கொந்தலர் வெட்சிக டம்புகு ராமலர்
கூதளமோ டாடக் குஞ்சி மணித்திரு வரையொடு பண்டி
குலுங்கிடு நகையாட

செந்தமி ழிற்றுதி செய்பவ ருக்கருள்
சீறடி யுங்கழலுஞ் சீர்மலி தண்டையு நூபுர முந்திகழ்
செங்கன கப்பதிசே ரந்தர வாணர்கள் சென்னியு மாடிட
வாடுக செங்கீரை யாசறு சென்னையில் வாசமு றுங்குக
னாடுக செங்கீரை. 8

வேறு மகுடம்

21. மும்மல வெம்பவ மின்றிய மேலவர்
முன்கூ றுஞ்சீர்கொண் முன்னவ னென்றொளி ரும்பல
யானைகள்

மொய்ம்பார் கொம்போடு தம்மத மிஞ்சிமு ழங்கியு லாவிய
சஞ்சா ரஞ்சோலை தண்முகில் பைந்தினை யுந்திவில் வேடுவர்
தங்கூர் வன்பாரு மெம்மத மொன்றிய தொண்டரு
மேவியிதெந்

தேவின்தேனானவ மென்னவி ளம்பிவ ணங்க நிலாவிடு
மின்பா ருங்கோவில் செம்மணி கொண்ட குறிஞ்சியின்
வானவ
செங்கோ செங்கீரை சென்னையில் வந்தம ருங்கதிர் வேலவ
செங்கோ செங்கீரை. 9

22. சின்னமொ ழிந்தபெ ரும்புக ழீபவ
செங்கோ செங்கீரை
செம்மணி யென்றநி றம்பெறு சேவக
செங்கோ செங்கீரை
சின்னவ னென்றிடி னுங்களி கூர்குக
செங்கோ செங்கீரை
தென்னவ னென்றும்வ ருங்கரு ணாகர
செங்கோ செங்கீரை
சின்னலம் மென்றனொ டும்பகர் வேலவ
செங்கோ செங்கீரை
திண்மை பொருந்திய செந்தகர் மாவல
செங்கோ செங்கீரை
சின்னமு ழங்கவ ருங்குரு தேசிக
செங்கோ செங்கீரை
சென்னையில் வந்தம ருங்கதிர் வேலவ
செங்கோ செங்கீரை. 10

3. தாலப் பருவம்

23. நீறு புனைந்த கனகவரை
நெருப்பு மலையொன் றளித்தாற்போ
னிலவுங் குமர குருபரனே
நெடுவே லணிந்த புயத்தானே
யாறு முகத்தெம் பெருமானே
யடியார்க் கெளிய முருகோனே

யனந்தம் விளையாட் டுடையானே
யருண கிரிக்கன் றருள்புரிந்து
கீறும் பவள முகத்தினொரு
கிளிய தாக்கிமணி யொடுபொன்
கிளர்கே யூரத் தணிந்தோனே
கிரிகண் முழுதுந் திரிவோனே
சீறு மரவ மிசைநடிக்குஞ்
சிகியாய் தாலோ தாலேலோ
சென்னை நகரிற் பவனிவருஞ்
சேந்தா தாலோ தாலேலோ. 1

24. சீரார் பரங்குன் றாதியெனச்
செப்பும் படைவீ டாறோடுஞ்
செந்தூர் முதலாத் தமியேன்சொற்
றிகழு மாறா றுவந்தோனே
யோரார் மயிலிற் கதிர்வேல்கொண்
டிமையார் பரவ முனிவர்தொழ
வியம்பற் கரிய சமராடி
யிகல்வா ளவுணக் களைகளைவாய்
காரார் மேனித் திருமாலின்
கண்ணின் மணியா மெனவுதிக்குங்
கன்னி மார்க ளிருவர்முலைக்
களபங் கமழும் கவின்மார்பா
வாரார் சடிலத் தரனுதவு
மமுதே தாலோ தாலேலோ
வணியார் சென்னைப் பதிபுரக்கு
மரசே தாலோ தாலேலோ. 2

25. பாக முணராப் புன்கவிஞர்
பனுவற் றொகைக்குவர் விரும்பும்
பரிசீந் தருள்வேனென வொருக்காற்
பகர்ந்த பவளக் கனிவாயாய்
சோக முழுது மறக்களைந்து
சுகவாழ் வுதவும் பெருங்கருணை
துலங்கு விழிக ளீரொன்பான்
றோய்ந்த முகமா றுடையானே

யேக மாகிப் பலவாவா
யிமையார் சேனைக்கொரு தலைவா
வெண்ணா யிரவர் கழுவேற
வியலாற் கறுவு மிளையோனே
நாகமணி வார்பர வுகுரு
நாதா தாலோ தாலேலோ
நலஞ்சேர் சென்னைப் பதியாளா
நம்பா தாலோ தாலேலோ. 3

26. பத்தி நலத்தோர்க் கெளியோனே
பரமா னந்தத் திருநடனம்
பயிலும் பரமன் விழிப்பொறியாய்ப்
பதுமத் தடம்புக் குருவானாய்
சித்தித் திறலு மெஞ்ஞானச்
சீருங் கொடுக்குஞ் செயலோனே
செங்க ணெடுமால் மருகோனே
திகழ்வே லணியுந் திரடோளா
முத்தித் தலைவா முழுமோன
முதலா முருகா நறைகமழு
மொய்யார் கடம்பு புனைவோனே
மொழிதற் கரிய புகழாளா
தித்தித் திடுஞ்சொற் குறமகள்சேர்
தேவே தாலோ தாலேலோ
சென்னை நகரில் விளையாடுஞ்
செல்வா தாலோ தாலேலோ. 4

வேறு மகுடம்

27. வாவி மலர்ந்த நறுங்கமல
மலர்மேற் புதுநீர்த் திரையொதுக்க
மணிச்சூன் முதிர்ந்து பெரிதொலிக்கும்
வளைவாழ் வதனைக் கயல்பாயக்
காவி லுலவிச் சிலவீதி
கடந்து பலவா மனைவாயிற்
கடையிற் புகுந்து மடமாதர்
கழுத்தி னெழில்கண் டுளநாணிச்

சேவி லவர்வார் செவிக்கணியாந்
திறமை நாடிக் களிகூர்ந்து
தெண்ணீர்ச் சாலி னருகின்மணி
திகழக் கான்று துயில்வளஞ்சேர்
தாவில் சென்னைப் பதிமுருகா
தாலோ தாலோ தாலேலோ
தனிவேற் குமர குருபரனே
தாலோ தாலோ தலேலோ. 5

28. காருங் குளிர்தென் றலுமுலவுங்
கவினார் சோலைக் குரங்கினினங்
கமழ்பூந் துணரின் கள்ளருந்திக்
களித்துக் குதித்துத் திரிதல்கண்டு
வாருங் கிழியப் பணைத்தமுலை
மடவார் படைசூழ் மதவேடன்
வரியார் கருப்புச் சிலைவாங்கி
மலர்வா ளிகளைப் பொழிவதனாற்
சோரு மயல்கொண் டொன்றையொன்று
தொழுது புணர்ந்து பலவினது
சுளைவிட் டெறிந்து விளையாடித்
துலங்கும் வளத்தாற் சுரர்புகழ்சீர்
சாருஞ் சென்னைப் பதித்தலைவா
தாலோ தாலோ தாலேலோ
தனிவேற் குமர குருபரனே
தாலோ தாலோ தலேலோ. 6

வேறு

29. பரமன் விரும்பிய பிரணவ மெய்ப்பொருள்
பகர்தரு சண்முகனே
பங்கய மங்கையர் தங்கண வர்க்கருள்
பன்னிரு தோளானே
சரவண வாவியி னூடுபி றந்து
தவழ்ந்தமு தற்பொருளே
தண்ணருண் மாரிபொ ழிந்தடி யார்புடை
தன்னை யளிப்பவனே

குரவம லர்த்தொகை சூடிம டந்தையர்
கோல மொழிப்போனே
குன்றுதொ றாடியென் னெஞ்சினும் வந்து
குதிக்கு மெழிற்குகனே
சரபமெ னத்தகு சேவல ணிந்தவ
தாலோதாலோ தாலேலோ
தாழ்வறு சென்னையில் வாழ்வுறும் வேலவ
தாலோதாலோ தலேலோ. 7

30. கஞ்சம லர்ப்பிர மன்றனை வென்றுயர்
கையுறு செய்யவனே
கார்கட லன்னநி றத்திரு மாலருள்
கன்னியர் தங்கணவா
நஞ்சம யின்றபி ரானழ லம்பக
நல்கவ ரும்புதல்வா
ஞானவி னோதசி வோகமு ளார்பணி
நண்ணிய புண்ணியனே
யஞ்சல ளித்துமெ னெஞ்சம் வருந்த
லறிந்துறை யுங்குகனே
யானைமு கத்தொரு வன்றுணை யாவரு
மாறுமு கத்தரசே
சஞ்சல முற்று மொழிக்கும கார
தாலோதாலோ தாலேலோ
தாழ்வறு சென்னையில் வாழ்வுறும் வேலவ
தாலோதாலோ தலேலோ. 8

வேறு

31. தத்தையி லங்கிய பன்னிரு தோள்கொள்வி
சாகா தாலேலோ
சற்சனர் சிந்தையி ளண்ணிட வீயுமு
தாரா தாலேலோ
சித்தையி கழ்ந்தவ ருன்னரி தாகிய
தேவா தாலேலோ
செக்கரு மொஞ்சிய செம்மைகு லாவிய
தேகா தாலேலோ

நத்தைய ணிந்துள கைம்முகில் பேணிய
நாதா தாலேலோ
நக்கன்வ ணங்கலி னுண்மையை யோதிய
நாவா தாலேலோ
வித்தைய னந்தமு மன்னிய நீறணி
வேளே தாலேலோ
விற்பனர் மிஞ்சிய சென்னையில் வாழ்கதிர்
வேலா தாலேலோ. 9

32. சருவசு தந்தர சண்முக தேசிக
தாலோ தாலேலோ
தகுவர்ப யங்கொள மின்னிய வேலவ
தாலோ தாலேலோ
தருவரை யன்றரு கன்னிகை நாயக
தாலோ தாலேலோ
சமணழி யும்படி பன்னிய பாவல
தாலோ தாலேலோ
சருவொடு செந்திணை தன்னையு மார்பவ
தாலோ தாலேலோ
சரவண மொன்றிய தண்மலர் வானவ
தாலோ தாலேலோ
தருமனை வென்றவர் கண்மணி யானவ
தாலோ தாலேலோ
தமிழ்நய மிஞ்சிய சென்னையில் வாழ்குக
தாலோ தாலேலோ. 10

4. சப்பாணிப் பருவம்

33. குரவமல ருஞ்செச்சை மலருமலர் நீபமுங்
கூதாள மும்பு னைந்து
குன்றங்க டோறுங் குறிச்சிதொறு நடமிடுங்
கோலா கலக்கு மரனே
யரவரசி னுடலநெளி வுற்றுலைய விளையாடு
மணிமயிற் கலப நிழலூ
டரிவையர்க ளிருவரொடு பவனிவரு மொருவனே
யமரரொடு முனிவர் தாமும்

பரவநிசி சரர்தமது குலமறக் களையும்வேற்
படைகு லவுபுய வீரனே
பங்கய மலர்ப்பொகுட் டுறையும்விதி யறியாத
பரமரக சியமு ணர்ந்துஞ்
சரவணப் புனலிலொரு சிறுகுழவி யானவா
சப்பாணி கொட்டி யருளே
தன்னைநிகர் சென்னையினின் மன்னிவளர் சண்முகா
சப்பாணி கொட்டி யருளே. 1

34. கானவர்கள் கண்டெடுத் துக்குடிலில் வைத்தெமது
கருகூல மென்று கொஞ்சிக்
கண்குலவு பீலியந் தானையும் பலகறைக்
கலனுந் திருத்தி யப்பா
லேனலிற் பரண்மீ திருத்திடக் கவணோ
டிளங்குயி லெனக்கு லாவு
மெம்மைதரு தினைமா விழைந்துகிழ முனிவேட
மிட்டு முன்பட்ட பாடு
வானவர்கண் மகளறிந் தூடிக் கொளக்கெஞ்சி
வஞ்சமன் றுன்ற னாவன்
மனதிலவ ளாவலுட லத்தெனச் சொல்லியவண
மகிழுங் குறிப்ப றிந்து
தானணுகி மெல்லெனச் சருவுமண வாளனே
சப்பாணி கொட்டி யருளே
தன்னைநிகர் சென்னையினின் மன்னிவளர் சண்முகா
சப்பாணி கொட்டி யருளே. 2

35. கொங்காரு மென்மலர்த் துணர்மருவு கற்பகக்
குளிர்சோலை நீழ லின்கட்
குலவுநவ மணியாதனத் தமரர் பலருங்
குனிந்திறைஞ் சக்கு விவுறா
வங்காவி மலரனைய விழிமினார் நடமாட
வம்புயப் பருமல ரைநே
ராயிரங் கண்ணோடு கொலுவிருப் பவன்வலிவி
தளித்த மகளருகி ருக்கப்
பைங்கான கத்தொரு குறத்திக்கு மயல்கொண்ட
பணிபினா னம்பு மன்பர்

பலர்நிற்க வென்னைப் பரிந்தாண்டொ ருண்மையும்
பகரத்து ணிந்த முருகா
சங்காய குழை நம்பர் தரவந்த கந்தனே
சப்பாணி கொட்டி யருளே
தன்னைநிகர் சென்னையினின் மன்னிவளர் சண்முகா
சப்பாணி கொட்டி யருளே. 3

வேறு மகுடம்

36. வஞ்சக மனக்கயவ ருணர்வரிய புகழ்கொண்டு
மலைதோ றிலங்கு மரசே
வள்ளியினு மென்றனக் கினிதாகு மன்பர்பகர்
வண்டமி ழெனப்ப கர்ந்தாய்
செஞ்சரண யுகளங் குறிப்பார்க டமைநிந்தை
செய்யுமவர் குலம ழிப்பாய்
சேவலங் கொடியொன்று திண்புயங் கருதுநர்
செயம்பெறக் கண்டு மகிழ்வாய்
சஞ்சல மொழித்தெழிற் பன்னீரி லைக்குளுறு
தவள வெண்ணீறு தானே
சருவபிர சாதமென நம்பிடுங் கவுமாரர்
சமரச விளக்க மாவாய்
குஞ்சர முகக்கடவு ளுடன்வந்த துணைவனே
கொட்டி யருள்சப் பாணியே
குற்றமறு சென்னையினி லுற்றகும ரேசனே
கொட்டி யருள்சப் பாணியே. 4

37. வாரமிகு பொன்னகர்த் தேவர்கோன் மனைமுன்றில்
வாயின்மும் முரசு கொட்ட
வளமருவு பாற்கடலில் வந்தமின் னாருளம்
மகிழ்ந்து நெடுவீணை கொட்டச்
சூரன்முத லாமவுணர் நெஞ்சிற் றிடுக்கெனத்
தொலை யாதபறை கொட்டவூன்
றுய்க்குமகல் வாயசுர மங்கையர்கள் கண்ணீர்
தொடுத்தருவி யென்று கொட்ட
பூரமிவர் வாள்கணவ னெடுமாயன் னன்னவர்கள்
புந்தியினி லுவகை கொட்டப்

பொதியைமா முனியனைப் புண்ணியர்கண் மதுரம்
பொலிந்ததுதி கொட்ட மற்றுங்
கோரமிகு பூதகணர் தோள்கொட்ட வின்றுநீ
கொட்டி யருள்சப் பாணியே
கொற்றமிகு சென்னையினி லுற்றகும ரேசனே
கொட்டி யருள்சப் பாணியே. 5

வேறு

38. ஆலக் கொடுவாய்ப் பணியணிபூண்
டருந்து மிரையு மதுவாக்கொண்
டதன்மே னடிக்கு மயில்விரிக்கு
மழகார் தோகைப் பெருநிழலின்
ஞாலத் தினையுண் டுமிழ்ந்தபிரா
னளின மலர்க்கண் றுதவுமிரு
நல்லா ரருகிற் களிகூர
நடுவீற் றிருந்து ஞாங்கர்முனைச்
சூலப் படைவெண் குலிசமுதற்
றுலங்கு மவைபற் பலபூண்டு
தொண்டு புரிவார் வசிக்குமிடந்
தோறுந் தினம்போய் விளையாடுங்
கோலக் குமர குருபரனே
கொட்டி யருளாய் சப்பாணி
குறைதீர் சென்னைப் பதிமுருகா
கொட்டி யருளாய் சப்பாணி. 6

39. மதிக்குந் திருப்பாற் கடலமுதம்
வழியு மொழிப் பாவையர்சூழ
வன்னக் கிளிமேற் றினம்பவனி
வருவான் றொடுக்கு மலர்க்கணையால்
விதிக்கு முதுநூ னெறிதவறி
வீணாட் கழித்து மனம்புண்ணாய்
வெறுக்கை யுடையார் மனைதொறும்போய்
வெதும்பி யெனைப்போன் மெலியாமற்
கதிக்கு விருப்புற் றருந்தமிழாற்
கனவி னிடத்துங் கடம்பணியுங்

கழலைப் பரவி யெழுத்தாறுங்
கருதும் பெரியோர் கண்காணக்
குதிக்குங் கருணைக் குகவேளே
கொட்டி யருளாய் சப்பாணி
குறைதீர் சென்னைப் பதிமுருகா
கொட்டி யருளாய் சப்பாணி. 7

வேறு

40. கணவரொ டூடிய கன்னியர் சிந்திய
கற்பணி மிக்கேய்தல்
கதிரவ னார்வெயி லென்ன விலங்கிடல்
கைக்களி றுற்றாசின்
மணமத நீரொரு மும்மையு மிஞ்சிடன்
மட்குத லற்றூரும்
வளையுமிழ் மாமணி வெண்மைது லங்கிடன்
மத்தமெ ருக்காதி
யிணரொடு சூடின ரன்னவர் தம்புடை
யித்திற மொப்பாகு
மெழில்வள மாயிர மன்னுநெ டுந்தெரு
விற்றொறு மெய்ச்சீர்கொள்
குணதரர் வாழ்வுறு சென்னையில் வந்தவ
கொட்டுக சப்பாணி
குருபர னாகிய சண்முக புங்கவ
கொட்டுக சப்பாணி 8

41. மதியணி வார்சடை யண்ணல்வ ணங்கலின்
மற்றையர் கற்காத
மறைபொருள் ளோதிய வண்மைபெ றுங்குக
மற்புய விற்காரர்
துதிபகர் சேவக விண்ணவர் முன்படு
துக்க மொழித்தீடில்
சுவணநி லாவிய நன்னக ரின்பருள்
சொற்பெரு மைச்சீல
விதியழ மோதிய பன்னிரு திண்கர
வித்தக முற்பாவ

வினைமலி சாரணர் தம்மைமு னிந்தவ
வித்தைக ளொப்பாய
கொதிதிரை யோலிடு சென்னைபு ரந்தவ
கொட்டுக சப்பாணி
குருபர னாகிய சண்முக புங்கவ
கொட்டுக சப்பாணி. 9

வேறு மகுடம்

42. கூர்நெ டுங்கதிர் துன்னயில் வல்லவ
கொட்டாய் சப்பாணி
கோமள மொன்றிய கன்னியர் புல்புய
கொட்டாய் சப்பாணி
கூரறி வின்சில புண்ணிய ருள்பவ
கொட்டாய் சப்பாணி
கோபமி குந்தக ரின்மிசை யெய்தினை
கொட்டாய் சப்பாணி
கோரணி மிஞ்சிடும் மமணர் வைவினை
கொட்டாய் சப்பாணி
கோகன கம்பொரு பன்னிரு கைகொடு
கொட்டாய் சப்பாணி
கோரமில் சுந்தர மன்னிய செய்யவ
கொட்டாய் சப்பாணி
கோதில்வ ளந்திகழ் சென்னையில் வைகினை
கொட்டாய் சப்பாணி. 10

5. முத்தப் பருவம்

43. சாலிப்பயி ரில்விளைந்த முத்தும்
தவளநிறச் சங்குமிழ்ந்த முத்துஞ்
சசியின்முகி லிற்றழைத்த முத்துந்
தந்திமருப் பிற்றயங்கு முத்தும்
வேலிக்கழை யில்வெடித்த முத்தும்
வென்றிமதன் கைச்சிலையின் முத்தும்
விளம்பு மிவைநேர் முத்தனைத்தும்
விரும்பிச் சிறிதும் மெலிவடையேன்
பாலிப் பவனான் முகன்கனகப்

பதியோன் பெறும்வாழ் வையும்வெறுத்துன்
பதன்பே ணிடுவார் தமைப்பணிவேன்
பரிதி யிருமூன் றெனத்திகழும்
மோலிக் குமர குருபரனே
முத்தந் தருக முத்தமே
முழங்குங் கடற்சென் னையிற்குமரா
முத்தந் தருக முத்தமே. 1

44. அழியும் பொருளீ தழியாம
லவிரும் பொருளீ தழிந்ததுபோன்
றழியாப் பொருளீ தெனமூன்று
மறியப் புரியும் பிரணவத்தி
னுழியொன் றியமெய்ப் பொருளைவிரித்
துமையா ளமரு மிடப்பாகத்
தொருவன் றனக்கு மலயமலை
யுறையுந் தமிழ்க்கா வலன்றனக்கும்
பொழியு மதுரக் கவிபாடும்
புனிதக் கிளியா மருணகிரிப்
புலவன் றனக்கும் வளங்குலவும்
போரூர் முனிவன் முதற்பலர்க்கு
மொழியும் பவளத் திருவாயா
முத்தந் தருக முத்தமே
முழங்குங் கடற்சென் னையிற்குமரா
முத்தந் தருக முத்தமே. 2

45. திருந்துந் தவளக் கமலமலர்ச்
சீரார் பொகுட்டின் மிசையனம்போற்
றினம்வீற் றிருந்து கலைமுழுதுந்
தெரிக்குங் கருணைப் பெருமாட்டி
கருந்தும் பிகளா டியகூந்தற்
கற்றை யனைய வியற்றமிழ்க்குங்
கரந்தா ளிதழ்போற் சிவந்திலங்குங்
கவினா ரிசைக்குங் கலன்கலைமேற்
பொருந்து நிறநா டகத்தினுக்கும்
புலவர் விரும்பு மவைகொடுத்துப்
பொருப்புத் தொறும்ஆ டிடுமவனே

புத்தே ளினர்கோ வெனல்கடவேன்
முருந்து நகைவாய் யிருமூன்றான்
முத்தந் தருக முத்தமே
முழங்குங் கடற்சென் னையிற்குமரா
முத்தம் தருக முத்தமே. 3

46. மின்னார் முலைக்குங் குமக்கோட்டில்
வேரிக் குமுத மலர்வாயில்
விடவா ளரவக் கடிதடத்தில்
வீணே மயல்கொண் டுழல்வேனைத்
தன்னால் வலியத் தடுத்தாண்டு
தமிழ்வா ரிதியின் முழுக்காட்டித்
தடமா மலையின் மிசையுருட்டித்
தனித்தோர் கனவிற் றருமுத்த
மென்னா ருயிரி னழுக்ககற்றி
யிமையார்க் கரிய பெருவாழ்வை
யீய விலையால் விழைகின்றே
னின்னே தரினனறி யாவருக்கு
முன்னா முளைத்த முருகோனே
முத்தந் தருக முத்தமே
முழங்குங் கடற்சென் னையிற்குமரா
முத்தந் தருக முத்தமே. 4

வேறு

47. எப்பொழுது மம்பலத் தாடிக் கபாலத்
திரந்துண்ட தந்தை யாரு
மிழையெனத் திகழ்சிற் றிடைப்பேதை யென்றுரு
வெடுத்துற்ற வன்னை யாரு
மெய்ப்பொழுது காட்டுமொரு சுடருற்ற வயிறிலகும்
வேழமுக வண்ண னாரும்
வேலையிற் கமடமொடு மீனாகி யுஞ்சிறிது
விளையாடு மாம னாரு
மிப்பொழுது வரல்போத லென்னுமொரு நிலையற்
றிலங்குதிரு மாமி யாரு
மிருமனைவி மாருமொரு கிளியு மெனதுள்ளமு
மியம்பரிய வுவகை கொண்டு

முப்பொழுது முத்தமிடு முருகைய னேயின்று
முத்தங் கொடுத்த ருள்வையே
முதிர்புகழ்ச் சென்னையிற் குடிகொண்ட கந்தனே
முத்தங் கொடுத்த ருள்வையே. 5

48. சத்தியம தாகவொரு முத்தமென் கனவினிற்
றந்ததுண் டருண கிரிநீ
தானெனப் பலகா லுரைத்ததுண் டின்சொற்
றமிழ்க்கட லுயர்ச்சி யென்று
பத்தியறு சாட்சியறி சீட்டுக் கொடுத்தவுட்
பட்சமுண் டிணையில் கலிநோய்
படருற்ற பேரெனப் பொருளிரந் துழலெனப்
பலவூர்க் கனுப்ப லுண்டு
பொய்த்திரை யெனத்தக்க மூவே டணைப்பேய்கள்
போராட விட்ட துண்டு
பொதியைமுனி யாதியர் மகிழ்ந்துதழு வத்தகும்
போதசா ரத்தை நல்கி
முத்திதர லுண்டென்னிள் மயின்மீது வந்துதின
முத்தங் கொடுத்த ருள்வையே
முதிர்புகழ்ச் சென்னையிற் குடிகொண்ட கந்தனே
முத்தங் கொடுத்த ருள்வையே. 6

வேறு

49. எட்கு ணிறைந்திடு மெண்ணெயை யொவ்விடும்
மியல்பா நிற்கும் புங்கவனே
யெற்குநி னைந்திடும் வண்மையை நல்கிட
வெனவே நித்தஞ் சிந்தை செய்வாய்
கட்குடி வண்டுகள் பன்னிய பஃறொடை
கனபூண் மொய்க்குந் திண்புயனே
கற்புமலிந்துள பன்னியர் நல்லுரை
கழறார் வத்தின் சம்பிரமா
புட்குற வன்குக னென்னினு மெய்யருள்
பொழிசீர் முற்றுங் கண்குவியாய்
புத்தியில் வஞ்சக முன்னிய மெய்கொடு
புகழ்வாழ் வுற்றுன் றன்கழலாம்

முத்தியில் வந்திருண் மும்மையை வெல்லுவன்
முடியா முத்தந் தந்தருளே
முப்பொரு ளுந்திகழ் சென்னையில் வைகிய
முருகா முத்தந் தந்தருளே. 7

50. விதிமறை யிற்பகர் மகமென மன்னுயிர்
வெருள்கூ ரக்கொன் றுண்டறியார்
விலைமக ளிர்க்கதி மயல்கொடு சொன்னவை
விரைவா யிட்டுந் தொண்டுசெயா
ரதிவிதி சித்திர மதுரவி யன்மலி
வமர்பா டறக்கண் டும்பழியா
ரருள்விழி யைத்தரு குரவரின் முன்னவ
னயில்வேல் பற்றுஞ் சிங்கமதே
துதிமினெ னப்பகர் புலவர்ம தன்மலர்
தொடநா ணுற்றஞ் சுந்தெளிவோர்
துரியப தத்துறு முழுநிலை துன்னினர்
சுரரான் மெச்சும் பண்பினர்நேர்
முதிரறி ஞர்க்குயி ரெனவளர் சண்முக
முடியா முத்தந் தந்தருளே
முறையின டப்பவர் பலர்வளர் சென்னையின்
முருகா முத்தந் தந்தருளே. 8

வேறு

51. வயமத னாணது புன்னைம லர்ந்தருண்
மற்கண்மி குத்துணலான்
மயல்கொடு பாடிட விண்முகி லம்பிடை
மட்டில்பு னற்கொடுபே
ரியல்புறு மோரொலி பண்ணிட ஞெண்டின
மிற்பிற கிற்செலலா
லெமனென நூல்வலை பின்னிய வன்கைய
ரெய்த்து நுளைசியர்பா
னயமொடு பேசிட மின்னுசெ ழுங்கய
னற்பனை மட்டையின்மே
னகுகனி சூழ்குலை யின்மிசை யுந்திட
நச்சர வக்கடிநேர்

முயலுட லான்மகிழ் சென்னையில் வந்தவ
முத்த மளித்தருளே
முழுதுணர் பாவல சண்முக முங்கொடு
முத்த மளித்தருளே. 9

52. முருகுநி லாவிய பன்மலை கொண்டவ
முத்த மளித்தருளே
முனைமலி வேடுவர் பெண்ணைம ணந்தவ
முத்த மளித்தருளே
முருகுகு கூதள மன்னு நெடும்புய
முத்த மளித்தருளே
முதிர்கவி வாணவர்க ளெண்ணம றிந்தவ
முத்த மளித்தருளே
முருகுகெ டாதுறும் வண்மைபெ றுங்குக
முத்த மளித்தருளே
முதல்வர்வி னாவிய வுண்மைமொ ழிந்தவ
முத்தம ளித்தருளே
முருகுயர் வீதிகொள் சென்னையில் வந்தவ
முத்த மளித்தருளே
முழுதுணர் பாவல சண்முக முங்கொடு
முத்த மளித்தருளே. 10

6. வருகைப் பருவம்

53. கந்தா வருக திருஞானக்
களிறூர்ந் தருமைக் கவுமாரர்
கண்முற் றிகழ்வாய் வருகநறுங்
கமல மலரிற் கடவுண்மிகச்
சிந்தா குலத்திற் படமுனிந்து
சிரத்தி லிடித்துத் தளைபூட்டுஞ்
செல்வா வருக சிவன்பணியுந்
தெய்வக் குரவா வருகவிரு
பந்தா முலைக்குஞ் சரிதழுவும்
பவள மலையே வருகவொரு
பரண்மீ திருந்தா ளடிபரவிப்
பணிவாய் வருகப் பார்ப்பதியாண்

மைந்தா சென்னைப் பதிக்குமரா
வருக வருக வருகவே
மயில்வா கனத்துப் பெருமாளே
வருக வருக வருகவே. 1

54. தளஞ்சேர் கமல மலரோங்குந்
தண்ணீர்த் தடத்திற் பசுந்தேனுந்
தயங்கு மிசைவண் டினமுமிமணி
தருஞ்சூ லுளையும் வளைத்திரளுங்
குளஞ்சேர் மொழியார் விளையாட்டுங்
கொல்லு மவர்கண் மலர்க்கொதுங்குங்
குவளைத் திரளு மகல்வானிற்
குதிக்கச் சலியாக் கொழுமையுறு
மிளஞ்சேலி னமுமுழு கியெழு
மெருமை முலைக்கண் சொரிபாலு
மெகினத் தொனியு மிருக்கையுதோய்ந்
திமையா ருலக மெனத்தோன்றும்
வளஞ்சேர் சென்னைப் பதிமுருகா
வருக வருக வருகவே
மயில்வா கனத்துப் பெருமாளே
வருக வருக வருகவே. 2

55. ஆட வருக வெடுத்துமுகந்
தணைக்க வருகப் பலபணியு
மணிய வருக திருமுலைப்பா
லருந்த வருக வலருமலர்
சூட வருக வுடற்புழுதி
துடைக்க வருக குதலைமொழி
துலங்க வருக மடிமீதிற்
துயில வருக வெனவுமையாள்
கூட விருக்கும் பெருமான்கண்
குழைச்சங் கணிகா தொடுகுளிரக்
கொஞ்சி யழைக்கில் வருங்குமரா
கூவு மொழிகேட் டிலைகொல்லோ
மாட மலிசென் னையி லொருக்கால்
வருக வருக வருகவே

மயில்வா கனத்துப் பெருமாளே
வருக வருக வருகவே. 3

56. தறுகு மருமைத் திருவுளத்தி
றாயார் முலைப்பான் மணங்கமழ்பற்
றவிர்ந்து மடவா ரிதழ்விரும்பத்
தகும்பன் முளையாப் பருவத்தே
பெறுதண் டமிழான் மிகத்துதித்தும்
பிரச மலர்ப்பூ சனைபுரிந்தும்
பெரியோர் பதந்தோய்ந் துதிர்ந்ததுகட்
பிறங்குஞ் சுடர்முற் றலைக்கணிந்தும்
வறுமைக் கனலாற் சூடுண்டு
மலைமீ துருண்டுந் தமியேன்முன்
வந்தா யிலையே யந்தோவென்
வருத்த முழுது மறியாயோ
மறுவில் புகழ்ச்சென் னையிற்றலைவா
வருக வருக வருகவே
மயில்வா கனத்துப் பெருமாளே
வருக வருக வருகவே. 4

வேறு

57. முத்தமிழ்ப் பனுவற் பெருக்கினைக் கனலினொடு
முந்நீரில் விட்டெ றிந்து
முப்பத்து முக்கோடி தேவர்முதலி யாவரையு
முறைமாறி நிந்தை செய்துஞ்
சத்த விதபேதங் கலந்தபொது வேடந்
தரித்தும் பொருட் கலைந்துந்
தரளநகை மதிவதன மகளிரிள முலைநலந்
தன்னைக் குறித்து ழன்றுஞ்
சுத்தபர மானந்த முற்றவல் லோர்கள்பலர்
சூழமகிழ் வாழ்வி னிச்சை
தொலையாது வளரப் புரிந்தனை யுனைக்கண்டு
தொழநாடி மிகமெ லிந்தேன்
சித்தருக் கரசாய சிவனும்வழி படநிலவு
தெய்வ நாயக வருகவே

சென்னைமா நகர்தழைய வருகந்த னேயதிக
சீக்கிரத் தினில் வருகவே . 5

58. அருணகிரி தானென்றொ ராயிரந் தரம்வந்
தருட்கன விடத்து ரைத்து
மஞ்சலென் றிருகரங் காட்டியும் பொருளிரந்
தலைய விட்டனை யன்றியுஞ்
சருவபிர சாதமென் றுலையிலுறும் வெண்ணீ
தந்துமட மங்கை நல்லார்
தருமயலு மலிவுறக் கண்டனை யிவற்றினொடு
சாற்றிடத் தக்க வாய
பெருவழக் கின்னமு மனந்தமுண் டன்பரெதிர்
பேசாமல் விடுவ தில்லை
பீலிநிழ லிற்றிகழும் வேலினொடு நனவிற்
பிறங்கா திருக்கை முறையோ
திருமகள் பிரானுக்கு மருமக னெனக்குலவு
தெய்வ நாயக வருகவே
சென்னைமா நகர்தழைய வருகந்த னேயதிக
சீக்கிரத் தினில்வ ருகவே. 6

வேறு

59. அரன்வழி படமகிழ குருவென மொழியினு
மன்னவ னுதலூ டவிர்வதா
மழல்விழி தரவரு சிசுவென நுவலினும்
மங்ஙன மிசைவா மியல்பினா
னிரவல ரொடுபல புலவர்கள் மிடிகெட
விம்மையி லருள்கூர் பெருமையா
னிமகரர் மறுவிலர் சிலருல விடனிக
ரென்னுநன் முகமா றுடையவேள்
சரவண பவனழ கியமயின் மிசைதிகழ்
தன்மைய னடியார் பகைவரூர்
சலதியின் முழுகிட முனிபவன் மறமகள்
சம்மத வழிபோ நடைகொள்சேய்
திரமுறு பரமெனும் நிலைதவ றிடனொளிர்
செந்நிற முகிலே வருகவே

தெளிதமிழ் நயமுண ருணர்வினர் மருவிய
சென்னையின் முருகா வருகவே. 7

60. அலைகட லணிபுவி மலர்மக ளொடுதின
மண்ணிய புயமான மருகனே
யரவமு மதியமு மிதழியு மவிர்சடை
யண்ணலை யகலாள் புதல்வனே
கொலைமலி நிசிசரர் தமையவர் பவமொடு
கொன்முனை நெடுவேல் வயவனே
குகுகுகு குகுகுகு வெனுமொலி தருகொடி
கொண்மலை நிகர்தோள் வரிசையாய்
நிலைதொனி சுவைநிற மறிகிலர் கவியையு
நெய்ம்மலி குரவோ டணிகுவாய்
நெறிகளி லுயர்வது கருணைய தெனுமொரு
நின்னய முடையா ருறவனே
சிலைமதன் மலர்தொட வனசரர் குடிலிடை
சென்மல ரடியாய் வருகவே
தெளிதமிழ் நயமுண ருணர்வினர் மருவிய
சென்னையின் முருகா வருகவே. 8

வேறு

61. பருவ மகளி ருருகி யினிது
பன்னு மழக வருகவே
படிறர் கதறி மறுகு கொடுமை
பண்ணு மொருவ வருகவே
யிருமி னிடையி னிலவு பவள
மென்னு முருவ வருகவே
யிமய மகளு மரனு மருமை
யெண்ணு புதல்வ வருகவே
கருணை யருவி சொரியும் நெடிய
கண்ணின் மிகைய வருகவே
ககன வனிதை முகர வுதவு
கன்ன வணிய வருகவே
செருவி லுயரும் வலிமை குலவு
தென்னர் தலைவ வருகவே

திருவும் விதியின் மனையு
மருவு சென்னை முருக வருகவே. 9

62. வள்ளி மாக்கொ டுண்ணு மாண்டி
வருக வருக வருகவே
வைத பாட்டு நண்ணு சேந்தன்
வருக வருக வருகவே
வள்ள லாக்க மன்னு மாண்பன்
வருக வருக வருகவே
மையின் மேற்கொ டுன்னு பாங்கன்
வருக வருக வருகவே
வள்ளை மாப்பெண் முன்னு காந்தன்
வருக வருக வருகவே
வல்ல வேற்கை துன்னு தோன்றல்
வருக வருக வருகவே
வள்ளர் போற்று மஞ்ஞை தாங்கி
வருக வருக வருகவே
வைய மேத்து சென்னை வேந்தன்
வருக வருக வருகவே 10

7. அம்புலிப் பருவம்

63. சீதகிர ணப்பிரபை மலிவுற்று வெண்ணிறந்
திகழவரு கின்ற சீருஞ்
சேயிழை மடந்தையர்கள் சிலர்நிந்தை செய்யச்
சிலர்க்குவகை நல்கு பண்பும்
வேதனொடு வந்தமத வேளுக்கு மேலென்ன
மெய்ப்புலவர் செப்பு புகழும்
வெள்ளத்தி னும்பொருவில் வெற்பினு மிகச்சென்று
விளையாடு கின்ற வியனு
மாதமொரு நாளுலகி லனைவோரும் விரதமொடு
வழிபடத் தக்க மாண்பு
மழுவாளி கண்ணில்வரு வோனெனப் பலநூலு
மாறாது ரைக்கு மியல்பு
மாதவ னடுச்சென்று மீளலு மிவற்குமுள
தம்புலீ யாட வாவே

யன்னமர் செய்குலவு சென்னைமுரு கையனுடம
னம்புலீ யாட வாவே. 1

64. நல்லகிர்த் திகைமகளிர் காதல னெனப்புலவர்
நவிலச் சிறந்து பல்லோர்
நடுவினிற் கொலுவிருந் தும்பர்வழி யாயிந்த
நானில சுற்றி மலரோன்
சொல்லவள ரோராறு நெறிகளின் பொதுவாய்த்
துலங்கியொரு மங்கை வலிதிற்
றோயுநல மெய்தியீ ரெண்கலையின் வெவ்வேறு
தோற்ற மெனவுரு வெடுத்து
வெல்லவல மேடத்தின் மீதேறி மற்றுமனம்
வேண்டு சிலவா கனத்தின்
மேற்கொண்டு பல்லுயிரும் வெருளவுல கெங்கணும்
விரிந்தெமனும் வெட்க நிற்கு
மல்லற முனிந்திடுத லிருவர்க்கு முடைமையா
லம்புலீ யாட வாவே
யன்னமமர் செய்குலவு சென்னைமுரு கையனுட
னம்புலீ யாட வாவே. 2

65. செங்கரும் புச்சிலைக் கஞ்சித் தொடற்கரிய
சேயிழையை மருவு பண்புஞ்
சித்திரத் தினுமதிக வுல்லாச மாகச்
சிறக்கின்ற பெருவ னப்பும்
பங்கய மலர்த்தொகுதி நாணுமுக முந்துணைப்
பட்சமும் பட்சி யுறவும்
பனிமலர்த் தருநிழற் புலவர்குலம் வாழமுன்
பாடு பட்டுயர் கீர்த்தியுஞ்
சங்கரன் சடிலந் தொடும்பேறு மொருகளிறு
தலையாற் சுமக்கு நலமுஞ்
சலதிநடு விற்சென்று மீளலுங் கொளுமிவன்
றனையனை யனீயெ னத்தேர்ந்
தங்கரங் கொண்டுவா வாவென் வழைப்பதா
லம்புலீ யாட வாவே
யன்னமமர் செய்குலவு சென்னைமுரு கையனுட
னம்புலீ யாட வாவே. 3

66. பதினாறு கலையுடைய னீயிவன் கலையாறு
பத்தோடு நாலு நம்பும்
பத்தருக் குதவுவோ னரவினைக் கண்டுட்
பயந்தது விழுங்கி யுமிழுந்
ததிநாடி மெலிவைநீ யிவனேறு மயிலுந்
தடந்தோ ளிலுறு சேவலுந்
தடையறக் கொத்திக் கிழித்துண்ணு மிந்திரன்
றனதேவல் செய்கு வாய்நீ
புதிதாய மணிமுடி தரித்தவன் விரும்புமுயர்
பொன்ன கரில்வைத் தோனிவன்
போரவுணர் பெயர்சொலி னடுங்குவாய் நீயவர்
புறங்காண வல்லா னிவ
னதியாவ லுற்றுனை யழைக்கத் தகாதுகா
ணம்புலீ யாட வாவே
யன்னமமர் செய்குலவு சென்னைமுரு கையனுட
னம்புலீ யாட வாவே. 4

67. முன்போது சூரியர்கள் பலர்நாண மிளிருமணி
மணிமுடி யாறு கொண்டோனிவன்
முளரிமகி ழொருபரிதி முற்படினு முள்ளவொளி
முழுமையு மழுங்கு வாய்நீ
பொன்போகம் விழைகின்ற தேவர்களி லொருவனீ
புரதகனன் னாதி யோரும்
போற்றுமுயர் புகழ்துன்று புனிதவே ளிவன்மதன்
புனையுமொரு குடையா வைநீ
மின்போலு மலர்மக ளிடத்தவனை யீன்றவனும்
மெச்சவரு சாமி யிவனீ
வெளிறிலகு சயரோகி யிவனருட் சுடரா
விளங்குதிரு மேனி யுடையா
னன்போடு வாவென வழைப்பது னதிட்டமே
யம்புலீ யாட வாவே
யன்னமமர் செய்குலவு சென்னைமுரு கையனுட
னம்புலீ யாட வாவே. 5

68. மலரவன் கைகொண்டு சிட்டித்த பொருணீ
வருத்தி யவனழ விடித்து

வன்றளையி லிட்டகை யுடையனிவ னின்னுடல்
வளர்ந்து குறைவா மிவன்றன்
னிலகுட லொரேதன்மை யென்றென்றுநிற் கும்விண்
ணிடமன்றி யறிகி லாய்நீ
யிவனண்ட பிண்டங்க ளெங்கணுந் திரிகுவா
னிடைவிடா மறுவு னக்குண்
டுலகறிய யொருசிறிது மறுவில்லை யிவனுக்
குனக்கி றப்பும் பிறப்பு
முண்டிவனை நம்புமவர் தொண்டர்க்கு மவையுறா
துவகை யுற்றுனை யழைத்தா
னலகில்வள மருவுமலை தொறுநட மிடுங்குகனொ
டம்புலீ யாட வாவே
யன்னமமர் செய்குலவு சென்னைமுரு கையனுட
னம்புலீ யாட வாவே. 6

வேறு

69. மயிலா லரவப் பகைநீங்கி
மலர்க்கண் ணருளான் மறுத்தீர்ந்து
வழங்கு மிலைவெண் டிருநீற்றான்
மாறாச் சயநோய் வழக்கொழிந்து
கயிலைக் கிரியார் செவிகேட்கக்
கழறும் பொருளை யுணர்வதனாற்
கால பயமுந் தவிர்ந்துமலர்க்
கடவுள் விதியுங் கடந்துதமிழ்ப்
பயிலு முனிவன் முதலாய
பழமைக் கவுமா ரரிற்கூடிப்
பலவர் றாடும் பெரும்பேற்றைப்
பரிசா மெனப்பெற் றிடலாகு
மயில்வேற் குமர குருபரனோ
டாட வருவா யம்புலியே
யழகார் சென்னைப் பதிக்குகனோ
டாட வருவா யம்புலியே. 7

70. வேலு மயிலுந்துணை யெனுஞ்சொல்
விளம்பி யறியாக் கவிஞரையும்

வேதன் வகுத்த நெறியாறும்
விடுத்தோ ருயிர்கொன் றுணவுகொள்ளு
மாலுந் தியபாழ் மதம்புகுந்து
வஞ்சம் புரிவோர் தமையும்வென்று
வல்லோர் வணங்குந் தலந்தொறும்போய்
வளமைத் தமிழாற் றுதிபாடிப்
பாலு மமுதும் பலகோடி
பத்த ருடனே பகிர்ந்தருந்திப்
பாருள் ளளவுந் திகழ்புகழும்
பதமும் பெறலாம் படப்பாம்பும்
மாலுந் துயின்மான் மருமகனோ
டாட வருவா யம்புலியே
யழகார் சென்னைப் பதிக்குகனோ
டாட வருவா யம்புலியே. 8

71. உன்னை விழுங்கி யுமிழ்வானை
யொருக்காற் பிடித்துக் கொடுவந்தோ
னுடலை யிவன்றொண் டரிலொருவ
னுரவாட் படையா லொறுத்ததுவும்
பொன்னை நிகரு மிவன்றோகைப்
புரவி திருமா லிவர்கருடப்
புள்ளை யெளிதிற் புசித்ததுவும்
போத னிவர்வா லோதிமப்புட்
டன்னை யிவன்கைப் பெருஞ்சேவற்
டட்டா தெடுத்துப் பருகியதுஞ்
சரதந் தகருண் டானையுண்டு
தறுகண் கொளில்லெவ் விதமாமோ
வன்னை யெனும்வேற் படையானோ
டாட வருவா யம்புலியே
யழகார் சென்னைப் பதிக்குகனோ
டாட வருவா யம்புலியே. 9

வேறு

72. தந்தியு னைப்பொரும் வெண்ணிற மாமமு
தங்கவ ளங்கொளலே

சண்டைவி ருப்புட னுன்னிடு மேடம
தன்பகை நின்குலமே
திந்திமி தித்தக தொம்மென வாடிய
செஞ்சிகி நஞ்சுணலே
திண்பெறு குக்குட மன்னிய காலிகல்
சிந்தமு னிந்திடலே
வெந்திடு மக்கினி யென்னவ வீரர்கள்
வென்றிம லிந்துளதா
மின்றிகழ் சத்திகொண் முன்னவ னாடிடும்
விந்தைசெய் கின்றவரே
மந்திர முற்றருள் சண்முக வேளிடம்
வந்தரு ளம்புலியே
மங்கள மிக்குயர் சென்னைவி சாகன்முன்
வந்தரு ளம்புலியே. 10

8. சிற்றிற்பருவம்

73. அருமைப் புலவர் பகர்தமிழ்ப்பாட்
டனந்தம் வினவிக் களிகூர்ந்து
மமபொற் பிடியுங் கருங்குயிலு
மனையார் மகிழ்முத் தாடியுநற்
றருமத் தொடுபா வமுமிமையாத்
தடங்கண் மலராற் பார்வையிட்டுந்
தாய்மா ரெழுவர் முலைப்பாலுஞ்
சருவுந் தினைப்பிண் டியும்புசித்து
மருமுற் றியசெங் கடம்பாதி
மலர்மிக் கணிந்து மலைதொறும்போய்
மாறா நடனம் புரிந்துநிகழ்
வழக்க முழுது மறந்தனையோ
திருவுக் கினிய மருகோனே
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே
சென்னைப் பதிவாழ் குமரகுரு
தேவா சிற்றிற் சிதையேலே. 1

74. பொல்லார் நிணத்தைச் கழுகாதி
புசித்து மகிழுஞ் சமராடப்

புலவர் பதியி லவுணர்குலம்
புகுதா வண்ணம் புரந்துவக்கக்
கொல்லா விரதப் பெருந்தவமே
குறியென் றுணரார் சமையநெறி
குலையத் திருவாய் மலர்திறக்கக்
குறவர் மகளு குஞ்சரியுங்
மல்லா டிடுமுன் னடுத்தீர்க்க
மதுரத் தமிழை யிகழ்தீயோர்
மணிநா வறுத்துக் கனலிலிட
வழுத்து மவர்க்கு வரமுதவ
செல்லா தெமையோ ரெதிராக்கிச்
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே
சென்னைப் பதிவாழ் குமரகுரு
தேவா சிற்றிற் சிதையேலே. 2

75. மருத்தா மரையா னுணர்வரிய
மறையின் சிரத்தி லாகமத்தின்
மதியம் புனல்கொக் கிறகாதி
வயங்குஞ் சடையில் வானுலகத்
தருத்தார் ரகத்தா ரெலும்பணியுந்
தடமார் பகத்திற் றமிழ்முனிவன்
றனதுள் ளத்தி கவுமாரத்
தவத்தோர் வரையத் தகுமேட்டில்
விருத்தா கரக்குங் குமத்தனத்து
மேனை மகளார் மேகலையில்
விழியிற் பலவா மலைக்குவட்டில்
விளங்கித் தொனிக்கும் வியன்சதங்கைத்
திருத்தாண் மலரிற் பொடிதோயச்
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே
சென்னைப் பதிவாழ் குமரகுரு
தேவா சிற்றிற் சிதையேலே. 3

76. யாங்கள் வருந்தி மணற்கொழித்தீண்
டிதுசோ றடும்வீ டிதுகூட
மிரவிற் றுயிலு மரங்கிது
நிற்கியைந்த பூசைக் கிடமிதுநற்

பாங்கர் மகிழ்பட் டகசாலைப்
பக்கத் திண்ணை யிதுவிதெனப்
பலவா றாகப் பெயரமைத்துப்
பகுத்துச் சமைத்த விதம்பாராய்
தாங்க லரிய துயரெமக்குத்
தந்து மகிழே லெம்மொடுநீ
தானு மிருந்து விளையாடிற்
றலைமை யுனதென் பதுந்தவறோ
தீங்கர் ருணராப் புகழோனே
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே
சென்னைப் பதிவாழ் குமரகுரு
தேவா சிற்றிற் சிதையேலே. 4

77. அன்ன முதற்பல் லுணவுமுனக்
களித்து வணங்கி நீமகிழ்வுற்
றருந்திக் கழிக்கு மவைதாமே
யருள்வாழ் வெனப்பெற் றமையேமா
வன்னத் தளிர்மெல் லிளமேனி
மகளி ரினத்தி னீவிரும்பும்
வண்ண மணத்தற் குதவேமா
மதிவா ணுதலில் வெயர்வரும்ப
வின்ன பணிகண் முடித்ததற்பின்
னேன்வந் தனையென் றிசைத்தேமா
யாது பிழையா மிழைத்தேமென்
றிவ்வா றுளத்திற் சினங்கொண்டாய்
சின்ன விரற்றாட் டுணைநோவச்
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே
சென்னைப் பதிவாழ் குமரகுரு
தேவா சிற்றிற் சிதையேலே. 5

வேறு

78. தந்தியின் போரொலியு முகிலொலியு மேலிடத்
தாவிப் பயந்தொதுங்கிச்
சந்தவண் டமிழெனப் பொழிகின்ற பெருமழைத்
தாரைகள் சகித்திடாமற்

கந்தியிற் றென்னையிற் பூவிரியு மடலெனுங்
கவிகையின் கீழ்க்கிடந்து
கதிர்வெயிற் கண்டுடன் பலவினிற் பாய்ந்துமுதிர்
கனிகளைக் கீறியுண்டு
மந்திர சடாக்கரஞ் சிறிதுமொழி யாதகவி
வாணர்க னெனப்பிணங்கி
வண்டுண்டு மிஞ்சிய மலர்கட் குடித்துவெறி
மண்டைமேற் கொண்டுகனிகட்
சிந்திடும் பொழின்மருவு சென்னைமா நகர்முருக
சிற்றிற் சிதைத்திடேலே
சிறியேமை யெதிரா மெனக்கொண்டு நாஞ்செய்த
சிற்றிற் சிதைத்திடேலே. 6

79. வாயஞ்சி டாதிரக் கின்றவர்மு னிடிபோலும்
வன்சொல் லுரைத்துளேமா
வந்தவர் பசித்திருக் கப்புசித் தேப்பமிடு
மாகொடுமை கற்றுளேமா
நீயன்றி வேறுமொரு தெய்வமுண் டெனவெங்க
ணெஞ்சிற் குறித்துளேமா
நெறிதவறி யுயிர்வதைத் தூனுண்டு தடுமாறு
நீசரை யடுத்துளேமா
பேயஞ்சி வம்பினி லுயிர்ப்பலி கொடுக்கின்ற
பித்தரை மதித்துளேமா
பெரியோரை யும்புலவர் தங்களையு மதியாத
பேராண்மை கொண்டுளேமா
தேயமெங் கும்பரவு சென்னைமா நகர்முருக
சிற்றிற் சிதைத்திடேலே
சிறியேமை யெதிரா மெனக்கண்டு நாஞ்செய்த
சிற்றிற் சிதைத்திடேலே. 7

80. நம்பிவந் தவர்தமது கண்களைக் கட்டியு
நடுக்காட்டில் விடலாகுமா
நானுனக் கடிமையென வழிபடுமெ யடியவர்க
ணைவுறச் செயலாகுமா
தம்பியொரு வனையேவி யந்நாள் ளுரைத்தமொழி
தனைமறந் திடலாகுமா

தண்டமிழ்ப் பொதியைவரை தருசெம்பு நதியினிடை
சாற்றல்பொய்த் திடலாகுமா
கொம்பினிற் றிகழ்முலைக் கோதையர்க் குருகியுட்
கூச்சமிக் குறலாகுமா
குற்றம் பொறுத்தெம்மை யாண்டுகொண் டாலுலகு
குடிபோகு மெனலாகுமா
தெம்பிலுயர் வார்மருவு சென்னைமா நகர்முருக
சிற்றிற் சிதைத்திடேலே
சிறியேமை யெதிரா மெனக்கொண்டு நாஞ்செய்த
சிற்றிற் சிதைத்திடேலே. 8

வேறு

81. உயிர்வதை யாதிய புன்மைகொள் வாரிட
முற்றுத் தவியாதே
யுலகமெ லாமிகழ் துன்மதி யாளரொ
டொத்துப் பழகாதே
பயிரனை யார்களை யன்னவ ராலிடர்
பட்டுச் சுழலாதே
பதுமமு ளானுவல் சண்மத வாணர்கள்
பற்றைப் பழியாதே
வயிரவ லாரிதன் விண்ணுல காசையின்
மட்குற் றொழியாதே
மதுரித கோமள நன்னய வாணர்சொல
வைப்பைக் கழியாதே
செயிரறு சீர்தரு சின்மய தேசிக
சிற்றிற் சிதையேலே
தெளிவினர் மேவிய சென்னையில் வேலவ
சிற்றிற் சிதையேலே. 9

82. திருமக ளார்தரு கன்னியர் நாயக
சிற்றிற் சிதையேலே
சிவபெரு மானது கண்ணருள் பாலக
சிற்றிற் சிதையேலே
திருகிய கோடுறு செந்நிற மாவல
சிற்றிற் சிதையேலே

செறிபொழில் சூழ்தரு பன்மலை யாதிப
சிற்றிற் சிதையேலே
திருடியு மோர்கவி தன்னிட மீபவ
சிற்றிற் சிதையேலே
திகழ்துவர் மேல்கொடு பொன்மயில் லூர்குக
சிற்றிற் சிதையேலே
திருவருண் மேலிடு சின்மய தேசிக
சிற்றிற் சிதையேலே
தெளிவினர் மேவிய சென்னையில் வேலவ
சிற்றிற் சிதையேலே. *10*

9. சிறுபறைப் பருவம்

83. தெய்வமொன் றன்பர்க ணிமித்தம்பல் வாறாய
திருவுருக் கொள்ளு மென்றுஞ்
செந்தமிழ்ச் சந்தக் கவிச்சுவைக் குயர்பேறு
செவிகளுக் கில்லை யென்று
மெய்வழி கிடக்கப்பொய் வழிதேடி யுழலுவது
வெவ்வினைக் கொடுமை யென்றும்
வீடுபெற் றுப்பிறவி நோய்தவிர்ந் தொழிவதே
மேலான பெருமை யென்று
மைவனப் பிலகியகண் மங்கையர்க ளின்பத்தின்
வாஞ்சையற வருமை யென்று
மாலயன் முதற்றேவர் தாமுமா னிடராகி
வருவதுஞ் சரத மென்றுஞ்
செய்வளம் பெரிதிலகு சென்னைநகர் வேலவா
சிறுபறை முழக்கி யருளே
சிவபிரான் வழிபடத் திகழ்ஞான தேசிகா
சிறுபறை முழக்கி யருளே. *1*

84. அம்பொன்வார் சிலைகொண்டு முப்புர மெரித்தவனு
மாடலம் பிகையுமுன்னா
லமரர்குலம் வாழ்வுறக் கடல்கடைந் தமுதுதவ
வரிவையுரு வாயினானுங்
கொம்பொன் றொடித்திகலு மவுணேச னாருயிர்
குடித்துக் களித்துளானுங்

குலவுகர மாயிரங் கொண்டிருட் பகைவென்று
குவலயஞ் சுற்றுவானும்
பைம்பொன் மழைக்கோண் முதற்குரவர் பலரும்நின்
பதுமமுக மாறென்னமெய்ப்
பத்தருணர் வுற்றபடி பலருந் தெரிந்துயப்
பதினாலு லோகத்தினுஞ்
செம்பொன்மா மதில்குலவு சென்னைநகர் வேலவா
சிறுபறை முழக்கியருளே
தென்பொதியை முனிபரவு சிவஞான தேசிகா
சிறுபறை முழக்கியருளே. 2

85. வெளிறுபடு பலமுத்தி னங்களுஞ் சூலுளைவு
மிஞ்சியிரை கின்றசங்கும்
வித்துரும மிகையுமணி வகைகளும் பலர்மனம்
வெதும்பப் பறித்தபொருளாற்
களிபெருகி வேறொருவ ருக்குமிட் டுண்ணாது
காலங்கழிக்கு மவர்தாங்
காசொன்று நூறாகு மெனமரக் கலமதிற்
கட்டிவிட் டிடுவபலவுங்
குளிர்கமல முங்குவளை யும்புரையு மலர்வகைக்
குவியலுந் தினமிரந்து
கொள்ளுமவ ருக்காய கலமும் பசுந்தழைக்
கொத்துமுத லாயபிறவுந்
தெளிகடற் றிரைசிந்து சென்னைநகர் வேலவா
சிறுபறை முழக்கியருளே
செந்தமிழ்ப் பைங்கிள்ளை யுணர்ஞான தேசிகா
சிறுபறை முழக்கியருளே. 3

86. வயமருவு கவுமார மாதவர்கண் மிகவேலு
மயிலுமென வேமுழக்க
மதிசூடி யைப்பரவு வார்பலரு மரகர
மகாதேவ வெனமுழங்க
வியனிலகு பஞ்சா யுதக்கடவு ளாதியரை
வேண்டுவா ரவரவர்க்கு
விழைவான படிமுழக் கக்கலிக் கஞ்சாது
விப்பிரர்கண் மறைமுழங்க

நயமலியு விழிமகளிர் செம்பவள வாய்கொண்டு
நற்குரவை யொலிமுழக்க
நால்வகைப் புலவோர்கள் கவிமுழக்கத் தோளி
னடுநின்று சிறகடித்துச்
செயமுழக்குங் கொடிகொள் சென்னைநகர் வேலவா
சிறுபறை முழக்கியருளே
தென்போரி யானனையர் தெரிஞான தேசிகா
சிறுபறை முழக்கியருளே. 4

87. ஒன்றுபடு மாழியந் தேருடைச் சுடரோனை
யுச்சியிற் காணுமுன்ன
முழவரேர் விட்டவிழ்க் குங்கரும் பகடுபல
வோடிக்குதித் துவப்புற்
றன்றுமலர் தாமரைத் தெண்ணீர்த் தடத்திடை
யவாவறமுழுக் காடிமீண்
டணிவே யெனக்குலவு கன்னலங் காவினி
லதட்டிப் புகுந்த வற்றை
மென்றுசில முத்தைக் கடித்துமிழ்ந் தகடளவின்
மேய்ந்துசெவி யசையவாயில்
வெண்ணுரை யுகச்சுவைத் தங்கை யொன்றில்லாத
வேழமா மெனநடந்து
சென்றுதொழ விற்றுயில்கொள் சென்னைநகர் வேலவா
சிறுபறை முழக்கியருளே
தெண்டனிடு வார்க்குதவி செயுஞான தேசிகா
சிறுபறை முழக்கியருளே. 5

வேறு

88. காவற் கடவுன் மகளிர்மனங்
களிக்கும் விளையாட் டுடையானே
கருது மவரைக் கனற்கோபக்
கால னணுகா தருள்வோனே
யேவற் றொழிலும் புரிந்துசில
ரியம்பும் பனுவல் புனைவோனே
யீரா றுருவ னெனப்பெயர்கொண்
டெண்ணில் வடிவ மெடுப்போனே

சேவற் கொடியொன் றுடையானே
சிறுதாட் கொடியிற் சலியானே
சீரார் கொடியிற் புனைபீலிச்
சேலைக் கொடிபா லிரந்தோனே
மூவற் றவிர்மெய்ப் புகழோனே
முழக்கி யருளாய் சிறுபறையே
முதிர்வண் டமிழ்ச்சென் னையிற்குமரா
முழக்கி யருளாய் சிறுபறையே. 6

89. கன்னித் தமிழை வேறுளபல்
கலையோ ரிகழ்ந்து கழியாமற்
காயுங் கனியு மிருக்கவுடற்
காதி யெவரு மருந்தாமல்
வன்னிக் கரத்தா ரெனவிரக்கும்
வல்லார் பெருமை மறையாமல்
வரையா மொழியு மாகமத்தின்
வகையுஞ் சிறிது மழுங்காமற்
பொன்னிற் பெரிதொன் றிலையென்னப்
புகல்வா ராண்மை பொலியாமற்
பொய்மெய் யாகிமெய் பொய்யாய்ப்
போகி டாமற் புகழ்வார்தம்
முன்னிற் பவனே யுலகெங்கும்
முழக்கி யருளாய் சிறுபறையே
முருகார் பொழிற்சென் னையிற்குமரா
முழக்கி யருளாய் சிறுபறையே. 7

90. தீது மலிதா ருகனுடலிற்
றீரா மயனோய் தருமலையிற்
றெண்ணீர்க் கடலிற் றிறன்மாவிற்
றிகழ்வா ளொடுநேர் வருஞ்சூரி
லோதுமெழுவர் வெளிற்று டம்பில்
லுரஞ்சேர் குதிரைத் தலைப்பேயி
லோராயிரவ ருறுங்கு கையி
லொருபாட் டுணர்வான் றனையெதிர்த்து
வாது புரிவார் நடுமார்பில்
வலந்தோய்ந் திலகுமுது குளத்தூர்

வந்தாற் பகைத்தோன் மந்திரத்தில்
வழுத்தச் சலியார் மனத்துயரின்
மோதும் வடிவேற் குகவேளே
முழக்கி யருளாய் சிறுபறையே
மூவாப் புகழ்ச்சென் னையிற்குமரா
முழக்கி யருளாய் சிறுபறையே. 8

வேறு

91. உனதிரு பதமலர் நண்ணிய மாதவ
ருவப்பு மலிவுறவா
னுலகின ரவுணர்கள் பண்ணிய தீதறு
முயர்ச்சி பெறமலர்மீ
தனவர தமுமுறை புண்ணிய வேதிய
னணைக்கு மிளமுலையா
ளனையவர் தமையிரு டுன்னிய மூடர்க
ளதட்டும் வினைகெடநீள்
கனமென உதவிடு தன்மையை நாடிய
கருத்தர் பலர்தழல்னோர்
கலியிடை முழுகிய புண்ணற வார்புவி
களித்து மெலிதுயர்போய்
முனமென மிளிர்தர முன்னியெ நேரமு
முழக்கு சிறுபறையே
முதுகட லொலிமலி சென்னையில் வாழ்குக
முழக்கு சிறுபறையே. 9

92. முத்தந கைச்சிவை முன்னருள்
பாலக முழக்கு சிறுபறையே
முப்புர மட்டவர் கண்மணி
யானவ முழக்கு சிறுபறையே
முத்தர்பெ றத்தகு மெய்ம்முத
லோர்பவ முழக்கு சிறுபறையே
முற்றுமு ணர்த்திடும் வண்மைகொள்
பாவல முழக்கு சிறுபறையே
முத்தம ளித்தொரு சொன்னுவல்
வானவ முழக்கு சிறுபறையே

மொய்க்குற வுற்றலர் பொன்மலை
நேர்புய முழக்கு சிறுபறையே
முத்தமிழ் கற்றவ ருன்னிட
லீபவ முழக்கு சிறுபறையே
முட்டுத லற்றுயர் சென்னையில்
வாழ்குக முழக்கு சிறுபறையே. 10

10. சிறுதேர்ப் பருவம்

93. புன்னைமலர் வண்டினிசை குயில்பாடு மிசையினொடு
பொலிவுறப் புனல ருந்தும்
புயலினொடு தென்றல் வந்துலவ மரகதநிறப்
புள்ளிமா மயில்க லாபந்
தன்னையுஞ் சிறகையும் விரித்தகவி நடமிடத்
தாவு கோடர மகிழ்ந்து
தண்ணுமையின் முட்கனி தனைக்கொட்டி யகனமலர்த்
தாள முமிடக் கண்டதாற்
பொன்னைநில மாவுடைய புனிதநகர் மங்கையர்
பொறாமை யுற்றுக்க ணிமையாப்
புலர்வுறத் திகழ்பொழிற் செறிவுடுத் திணையின்மெய்ப்
புகழ்பொ றுத்துக்கு லாவுஞ்
சென்னைமா நகரினிற் குடிகொண்ட கந்தனே
சிறுதே ருருட்டி யருளே
சிவன்விழிப் பொறியெனச் சரவணத் துற்றவா
சிறுதே ருருட்டி யருளே. 1

94. சங்கரன் வியந்துகொளு மிருதலைச் சூலமுந்
தமநி யப்பதி புரக்கு
தலைவன்முத லோர்புகழும் வயிரமுஞ் சாபமுஞ்
சாயகமுந் நெடிய வாளுந்
துங்கமுறு பலகையுஞ் சக்கரமும் வளையுந்
துறட்டியுங் கயிறு மேந்திச்
சுடரனைய செஞ்சூட்டு வாரணம் பற்றித்
துலங்கு மிலைவே லணைத்துக்
கங்கண மிலங்கச் சிலர்க்கபய வரதமுங்
காட்டி யிவையன்றி மற்றுங்

கழறுவார் கழறுமவ் வண்ணமவர் நெஞ்சிற்
கவின்றிலை விபூதி யுதவுஞ்
செங்கமல மலரனைய கைகொண்டு சென்னையிற்
சிறுதே ருருட்டி யருளே
தெண்டிரைத் திரள்குலவு சரவணத் துற்றவா
சிறுதே ருருட்டி யருளே. 2

95. அரிநெடுங் கணையாக மேருமலை வில்லாக
வரவரசு நாண தாக
வமரரும் பூதரும் படையாக நான்முக
மமைந்த வன்சூ தனாக
விரியுமறை யொருநான்கு மாவாக நீயுணரு
மெய்ப்பொரு ளிருந்த பதியாய்
வெள்ளை யறியுள்ளவரும் விள்ளக் கிடந்தபொறி
விசைகொண்ட கசைய தாகப்
பரிதிமதி யுருளாழி யினமாக வரையினம்
பரவையின மாதி யாவும்
பலவகை யுறுப்பாக நகையினுங் கனலுடைப்
பரமனொரு தலைவ னாகத்
திரிபுரம் பொடியாக வருபெருந் தேரிலொரு
சிறுதே ருருட்டி யருளே
சென்னையின் புகழனைய சரவணத் துற்றவா
சிறுதே ருருட்டி யருளே. 3

96. பாலுடைக் கவரியின முழுகிட வவற்றினது
பருமடியின் மீது முட்டிப்
பைங்கன்றெனக் குழைந்தவை சொரிந்தி டன்மிகப்
பருகிப் பருத்து வப்பால்
வாலுடற் குருகினந் தனைவெருட் டிக்கமுகில்
வாழையிற் றாழை தன்னின்
மலிகுலை யறப்பாய்ந்து மின்னெனக் கோடரமும்
வாளரவு மஞ்ச வுன்னிச்
சாலுமுகி லைக்கிழித் தாதித்தன் மண்டலந்
தாண்டி யிமகரன் வசிக்குந்

தலமும்விட் டுத்தனது பெயர்புனையு முடுவினந்
தனையுழக் கித்தி ரும்புஞ்
சேலுலவு புனல்வளச் சென்னைநக ராதிபா
சிறுதே ருருட்டி யருளே
செம்பவள மலையெனச் சரவணத் துற்றவா
சிறுதே ருருட்டி யருளே. 4

வேறு

97. கைந்நீ டியசெம் புகர்வனப்புக்
களிறு பொழியு மதப்புனலுங்
கதலிக் கனிமாங் கனிபலவின்
கனியா தியவிற் கசிதேனு
மைந்நீங் கரிய விழிமகளிர்
வனச முகைப்பொற் புறுமுலையின்
மாறா திழியு மணச்சேறும்
வாவிக் கமல மணிக்குவளை
மொய்ந்நீ தலிற்சிந்திய நறவு
மொழியு மிவைநேர் வனபிறவு
முந்நீர்க் கடலின் புலவகற்றி
முகிலு மலையு மணங்கமழச்
செய்ந்நீர் திகழ்சென் னையிற்குமரா
சிறுதே ருருட்டி யருள்வாயே
செவ்வே லணிந்த புயமுருகா
சிறுதே ருருட்டி யருள்வாயே. 5

98. வல்லா ருளத்திற் குறியுருள
வாக்கி லிருமூன் றெழுத்துருள
மலர்மென் கரத்தில் மணியுருள
வானிற் கதிர்வெண் மதியுருளப்
பொல்லா ருடலங் களத்துருளப்
புலவர் மிடிநோய் புறத்துருளப்
பொன்னூ ரமரர் துயர்முழுதும்
புலைவாள் அவுணர் புரத்துருளக்
கல்லா மனத்துக் கயவர்கொடும்
கண்ணீர் அருவி கரைந்துருளக்

காமர் முழுவெண் திருநீற்றோர்
களிக்கண் தரளம் கனிந்துருளச்
செல்லார் பொழிற்சென் னையிற்றலைவா
சிறுதே ருருட்டி யருள்வாயே
செவ்வேள் அணிந்த புயமுருகா
சிறுதே ருருட்டி யருள்வாயே. 6

99. வெய்ய சமரி னவவீரர்
வெற்பின் மயங்க வுருட்டுமொரு
வேழத் துதிக்கை முதலுறுப்பு
வெவ்வேறுருள வுருட்டி யப்பாற்
சைய மனையபெருஞ் சீயத்
தலையுங் கரமு முருட்டியது
தனையு முருட்டித் தனிச்சூதந்
தறிபட் டுருள வுருட்டியொரு
பையல் பரவிப் பணிவானைப்
பட்சத் துடனோர் மலைக்குவட்டிற்
பற்றுக் குதவா வணமுருட்டிப்
பரிந்தாண் டருளி யுலகில்விடுஞ்
செய்ய புகழோய் சென்னைநகர்ச்
சிறுதே ருருட்டி யருள்வாயே
செவ்வே லணிந்த புயமுருகா
சிறுதே ருருட்டி யருள்வாயே. 7

வேறு

100. இருள்படு மிடியிடை யின்னமு நாயே
மிளைத்து மறுகாதே
யெமன்விட வருபடர் நின்னடி யார்பா
லெதிர்த்து மொழியாதே
கருணையில் வனசர ரன்னவர் மேலோர்
கருத்தை யிகழாதே
கடகரி நிகரொலி துன்னிய பாவார்
கலக்க மடையாதே
மருமலர் சொரிதரு கன்னல்வி லானூர்
வழக்கு மலியாதே

மரகத மணிநிற மஞ்ஞையை நேர்வாண்
மகிழ்ச்சி யுறமேனா
ளொருபர சிவனருள் சண்முக நாதா
வுருட்டு சிறுதேரே
யுயர்புகழ் மருவிய சென்னைவி சாகா
வுருட்டு சிறுதேரே. 8

101\. நம்பறி வின்றிய புன்மையர் தாமே
நடுக்க மடையாரோ
நன்றி யுணர்ந்துனை யெண்ணுநர் மேலாம்
நலத்தி லமிழாரோ
கொம்பவிர் கின்றவை யுண்ணவு நாணார்
குதர்க்க மழியாதோ
கொன்றிட லஞ்சிய நன்னெறி சேர்வார்
குறித்து மகிழாரோ
செம்பது மங்கொளு மின்னனை யாணீர்
திருத்த மருவாதோ
செந்தமி ழின்சுவை மும்மையு மோர்வா
ரதியக்க மறையாதோ
வும்பர் தொழும்பத மன்னிய வேலா
வுருட்டு சிறுதேரே
யொண்புகழ் தங்கிய சென்னைவி சாகா
வுருட்டு சிறுதேரே. 9

102\. தெருணல்கு உத்திர பொன்மயச்
சிறுதே ருருட்டுகவே
சிவனுள்ளு மெய்ப்பத பன்மணிச்
சிறுதே ருருட்டுகவே
செருவல் லவர்க்கெம வன்மரச்
சிறுதே ருருட்டுகவே
சிகிமை களிற்றிவர் தென்னமற்
சிறுதே ருருட்டுகவே
திருவௌவு பொற்பிடி யெண்ணநற்
சிறுதே ருருட்டுகவே
சிறுவள்ளி யைத்தொழு மன்னவிற்
சிறுதே ருருட்டுகவே

தெருவை குமத்திய பின்னவைச்
சிறுதே ருருட்டுகவே
திறன்மல் குகைக்குக சென்னையிற்
சிறுதே ருருட்டுகவே. 10

நேரிசை வெண்பா

103. அந்தரரும் போற்று மணிச்சென்னை மாநகர்வாழ
கந்தனது பிள்ளைக் கவிமுற்றுஞ் - சிந்தனையிற்
கொண்டால் வினைப்பிணிபேங் கோடாநு கோடிநல
முண்டாகு நெஞ்சே யுணர்.

4
தேவைப் பிள்ளைக்கவி
[தேவக்கோட்டை]

காப்பு
நேரிசை வெண்பா

1. ஆழமலி நெஞ்சத் தடியார் பலரரிய
வேழமுகங் கொண்டொளிர்செம் மேகமே - வாழருணைக்
கிள்ளைக் கவிக்குவப்பான் கேட்கப் பகர்தேவைப்
பிள்ளைக் கவிக்குனருட் பெய்.

நூல்
1. காப்புப் பருவம்
திருமால்

2. மணிநிலவு வாயிற் புறத்தரண் மனைத்திரு
மலிந்ததென் மதுரை யாளு
மன்னர் புரியுந் தவமெனத்திரு வுருக்கொண்டு
மாநிலத் துயிர்கள் வாழத்
திணிநிலவு மேருவைச் செண்டா லடித்தெழிற்
றேவை மாநகரில் வந்து
செட்டிகள் குலத்திறை யெனப்பெயர் தரித்துமகிழ்
செவ்வே லனைப்பு ரக்கப்
பணிநிலவு துத்திப் பணாடவி மிதித்தாடல்
பயில்பங் கயத்து ணைத்தாட்
பசுமுகிலை வென்றிவிற் பார்த்தனுயி ருய்யவொரு
பகலை யிரவாக்கி னானை

யணிநிலவு சங்கெடுத் தூதி யிகலோர்குல
மடங்கலு மயங்கல் காணு
மையனைப் பதின்மர் புகழ்துய்யனை நினைந்துருகி
யநுதினம் பணிகு வோமே. 1

பரமசிவன்

3. பாதிமதி தாதகி நனீரிதழி யாதிமர்
பாரமக லாதசடிலக் காட்ட னைப்பொலார்
பாலியம னேநிகர் கிரீடிசிலை மோதவொரு
பாண மருள்வேடனு ருவத்தீர்த் தனைப்பொனேர்
பாவைகொளு மூடலதனால் மெலிகுவா னுரைசெய்
பாடல்விழை வாலவணமனைப் பாற்செ
லொற்றர்போல்
பான்மையனை யாழ்முய னலோனொருவ னாளெமொழி
பாரறிய வோதியுமிசைத் தாற்ற லுற்றதோ
ராதியை மயேசனை யுமாபதியை நாரணனொ
டாரண னநாளம ரிடற்தீர்க்கை நத்தலா
லாரழல் தாநிமிர் சதாசிவனை யீடில்கரு
ணாநிதியை வேள்பொடிபடத் தீய்த்த கட்பரா
யாகுமெலா மொழியு மேலவரு ளாடல்செயு
மார்வனை முனாலவர் களுயப் பார்ப்பதற்கெனா
வாலடியின் மேயகுரு தேசிகனை மாசுதவி
ராகமவி னோதனைமிகப் போற்றிடற் கொள்வார்
மேதினியெ லாநொடியுளே வலம தாகவரும்
வேகமயில் வாகனனைவெற் பாட்சி மிக்கசீர்
மேவிய விசாகனை மகாரதர்கள் பேணுநவ
வீரர்தொழு நாதனை விறற்சூர்ச் செகுத்தகூர்
வேல்குலிசம் வாள்பலகை வாளிசிலை சூலநிகர்
வீறுபடை தோய்தரு திறற்தோட் பெருக்கமார்
மீளியை யெனோடுபல வாய்மைசொலி நாடுதொறும்
வீடுதொறு மேகிவெருளற் காட்டும் வித்தைதேர்
தீதிலரு ணீதியுடை யானையிமை யாவமரர்
சேனைமிகை சூழ்தலை வனைக்கார்த் திகைப்பெணார்
சேலனைய வாள்விழி யெலாநுகரு மேர்கொடவர்
சேயமுலை யீயு மமுதத் தேப்பமிட்டுநீள்

சேயை மகவான் மகளும் வேடர்தரு மாதுநனி
சேருமண வாளனை யடற்கூக் குரற்செயொர்
சேவலுறு கேதனனை யீகைமலி சீர்நிலவு
தேவைநகர் வாழ்முருகனைக் காத்த ளிக்கவே. 2

பார்வதி

4. மேதகு சீரிம வான்மகிழ் கூரெழின்
மேனை மினாடதரு செல்வியைத் தீக்கணால்
வேளுட னீற முனாண்முனி வார்மயன்
மீறிடு மாறுசெய் தையலைப் பாச்சொல்வா
மதமெ லாமறும் வாழ்வருள் வாளைநல்
லீர முளாருணர் கிள்ளையைப் போக்கொணா
ரீரிரு மாமறை மூலம தாமிளி
ரீடுறு கோமள வல்லியைப் போற்றுவா
மாதவ ரியாவரு நாணுற நீடொளி
யார்வடி வேல்புனை கையனைப் பூட்கைமா
வால்வரு போர்வை யுளார்விழி யாலரு
ளாறிரு தோள்பெறு பிள்ளையைப் போர்க்குநேர்
சீதர னாழிகொள் வான்விழ மோதிய
தீரனை வேடுவர் கள்வனைப் பார்த்தனூர்
தேர்தரு வானிகர் சீலனை நீர்மலி
தேவையில் வாழ்முரு கையனைக் காக்கவே. 3

விநாயகர்

5. தானக் கலுழிகொண் மாமுகத் தாற்பலோர்
தாம்முற் கருது கணாதிபற் கார்க்கொண்மூ
வானத் தமுதம தேயெனத் தேக்குநீர்
வாவிக் கரையில்வி நாயகற் போற்றுவா
மேனற் குறமகள் கேள்வனைக் கூர்த்தவே
லேயப் புனைதரு தோளனைப் பூக்கடோய்
தேன்நத் தளிபயில் சோலையிற் சீர்த்ததோர்
தேவைப் பதிமுரு கேசனைக் காக்கவே. 4

திருமகள்

6. நான்முகப் பிரமனைத் தந்தமல ருந்திகமழ்
நாரண னுரத்தில் வைகு
நல்லாளை யும்பர் முதலெம்பரும் விரும்புபல
நாகரி கல்கு வாளை
நூன்முழு துணர்ந்தவர் தொழுங்கலச மாமுனி
நுவன்றருள் புகழ்ச்சி யாளை
நுண்ணிடைச் செந்திரு மடந்தையை நினைந்துதின
நூறு தரமஞ்ச லிப்பாம்
வேன்முதற் பகர்பல படைப்பொலி வுறுங்குமர
வேள தனைக்கு றவரேன்
மேவு முதுவேதியனை வெண்ணிறச் சேவலணி
மின்னு கைக்கோ ளனைசெந்
தேன்முரல் கடப்ப மலர்மாலையொடு தண்டுந்
திருக்கை வேலும் புனைந்து
தேவைமா நகரிலிரு பாவைமார் நடுநிலவு
செட்டி யையளித் தருளவே . 5

சரசுவதி

7. கம்பன் வருந்தி யிரத்தலுந்தன்
கமல மலர்த்தாட் சிலம்புதவுங்
கருணைக் கடலைப் பலகோடி
கலையும் வழுத்தக் களிகூருஞ்
செம்பவள வாயோதி மத்தை
செறியும் நிரைக்கால் வரிப்பூரஞ்
செலுத்து மவளை பலகாலுந்
தினமு நினையச் சலியேமால்
வம்ப ருரத்து நிணங்குடிக்கும்
வடிவேல் பிடித்த கரத்தானை
மணிமா மயிலில் பவனிவரும்
வளமைக் குமர குருபரனை
யும்பர் புகழுந் தமிழ்தேவை
யூரி லிறைவ னறழனயனத்
துதிக்கு முருகப் பெருமாளை
யுரிமையொடு காத்திட வென்றே. 6

நவக்கிரகம்

8. ஆதவன் னம்புலிசேய் புலவன்குரு
வாகு மிரண்டுயர்கோ
ளாயு டருஞ்சனியோ ரிருவெங்கடு
வாரர வென்பனவே
போதவு நன்றெனுநூ லுணர்கின்றவர்
போம்வழி கண்டெழிலார்
பூதடம் பதனாலும் வணங்கிடு
பூரண வன்புறுவாம்
வேதமுடன் சிவனாக மமும்பகர்
வீடு விரும்புநர்நேர்
மேவிநடம் புரிதாபெறு கந்தனை
வேடர் தருங்கொடிபா
நீதயை யின்றுசெய்தா ளெனவும்புகல்
னேயனை யுடம்பரெலா
நேடுநலந்திகழ் தேவையின் மைந்தனை
நீடு புரந்திடவே. 7

மெய்ப்பொருள்

9. கொற்கை யதிபன்றனது கூனுட னிமிர்த்தழற்
கொடுநோய் தவிர்த்த நீற்றைக்
கோதறு முறுத்தி ராக்கத்தை யொருபொதுநலங்
குலவு கல்லாடை தன்னைக்
கற்கையொடு கேட்கையருண் மாதவ முதற்றொன்னூல்
கழறுவன முற்று முற்றுக்
காசினிக் குதவுதிற னாடு மெய்யடியவர்
கழற்று களையஞ் சலிப்பாம்
விற்கைவன வேடுவர் வளர்த்தகிளி யனையாடன்
வியனெழிற் குருகு வானை
வேழமகள் கேள்வனைச் சங்காழி மால்புகழும்
வென்றி வேற்படை யுளானைத்
தெற்கை யிடமாமுடைய னணுகாது பச்சிலைத்
திருநீறு நல்கு வானைத்

தேவைநகர் வாழவரு சிவகுரு பரன்றனைத்
தினமும் புரப்ப தற்கே. 8

பலதெய்வம்

10. சைவ முதலா மறைபகருஞ்
சமைய மாறு முடிவிலுணர்
சமையா தீதப்பதத் தினின்று
தவத்தோர் நினைவே சகளமெனுந்
தெய்வநிலை தேர்ந்துயிர் வருந்தச்
செய்யா விரதத்தினர் குழுவிற்
சேர்ந்து பழகி யவரவர்சொற்
றிறங்கண் டுரைத்துத் தினம்பணிவா
மைவர் மனைவி யலமரல்கண்
டளவில்கலை முன்னளித் தானுக்
கருமை மருகனாங் குகனை
யருணைக் கிளிசொற் றுதிவிழைவார்
மெய்வந்தனை கேட்டு வப்பானை
வேலு மயிலுந் துணையென்பார்
மிகுக்குந் தேவைப் பதியானை
விரும்பு நெறிகாத்திட வென்றே. 9

பொதுத்தெய்வம்

11. ஆரண முற்கண்ட நூல்க ளுரைக்கின்ற
தாகுமருட் பொங்க வாரியைச் சீர்த்தநீ
ராள ருளத்தின் கணூறிய கற்கண்டை
யாவி யனைத்துஞ் செய்சோதியைக் கோட்டுமால்
வாரண மொக்கும்பல் பாவலர் பற்றின்ப
வாழ்வினை யுத்துங்க நீதிவித்தாச் சொல்சீர்
வாய்தறுகட் சிங்க நேர்சிலருட் துன்றும்
வாய்மையினைச் செஞ்சொன் மாலையிட் டேத்துவா
நாரண னற்றங்கை பானுகர் முச்சங்க
நாவலனைச் செங்கை வேலனைத் தாக்குபோர்
நாடுமடற் செம்பொன் மேட நடத்தும்பர்
நாயகனைக் கந்த சாமியைச் சேற்கணார்

காரண மிக்கின்றி யூடல் விளைத்தன்பர்
காண வெறுக்கும் பல்பூணொளிக் காட்சிசால்
காமர் வியப்பொன்று தேவைநகர்த் தொண்டர்
காதலுடைத் தண்ட பாணியைக் காக்கவே. 10

2. செங்கீரைப் பருவம்

12. பந்தைநிகர் மென்முலைப் பார்ப்பதிதன் மணவாளர்
பால லோசன மளித்த
பாலக னெனக்கண் டெடுத்துச்சி மோந்தெழிற்
பங்கயச் செங்கை மிசைவைத்து
தெந்தை யெனமுதலாய வருமைமொழி பலகூறி
யினிது நீராட்டி யாற்றி
யிலகுதிரு வெண்ணீ றணிந்துபுவி யுய்யுநல
மெண்ணி யொருபொட்டு மிட்டுத்
தந்தை யணியும் பணிகளணி யாதுமாதுலன்
றன்மனைவி கண்டு வப்பத்
தக்கபணிபல பூட்டி ஞானமொடு சித்தியுந்
தருமமுத ருத்தி முத்திச்
சிந்தை மகிழ்கூர்வது தெரிந்துவளர் சிறுவனே
செங்கீரை யாடி யருளே
சேவலங் கொடிநிலவு தேவையம் பதிமுருக
செங்கீரை யாடி யருளே. 1

13. மைதரு மிடற்றி னழல்வரையெனப் பரமனொரு
வட நீழலிடை யிருந்து
மணிமுகிலை யனையநெடு மாலலைகடற் கணுறு
மாசுண மிசைக்கி டந்தும்
பொய்தவிரு நான்மறை விதித்த புத்தேளொரு
புதுக்கமல மலர மர்ந்தும்
புரவிமகம் நூறியற்றி மகிப னமையெனப்
பொன்னியின் கரையி நின்றுங்
கைதவர் மனம்பொரு சிறைசாலை யிடையும்பர்
கட்ட முற்றுந் துறந்தோர்
கானிடை திரிந்து முதுசூர் தருபெருந்துயர்
கழிந்து வப்பது குறித்துச்

செய்தவ முழுக்க வொருவடிவான கந்தனே
செங்கீரை யாடி யருளே
சேவலங் கொடிநிலவு தேவையம் பதிமுருக
செங்கீரை யாடி யருளே. 2

இரட்டையாசிரிய விருத்தம்

14. கூர்ந்த மதியாளருக் கானந்த நிலையங்
கொடுத்தருள வல்ல குருவுங்
கொக்கிறகு மதிதழி யாதிய வணிந்தருட்
கூத்தா டுகின்ற சிவனு
மார்ந்தணுவி லணுவாகி நின்றுயிர்த் தொகைமுழு
தருளு மம்மை யாரு
மகிலமொரு பதினாலு முண்டுண் டுமிழ்ந்தளவி
யவதார மாகு வானு
நேர்ந்தவற் பொரிகடலை யாகிய படைப்பவர்
நினைப்பவை முடித்து ளானு
நித்தநித்தங் ககனவெளியி லெவருக் குமவர்
நேரென நிலவு கதிருஞ்
சேர்ந்தறு முகத்தொடொரு திருவுருக் கொண்டவர்
செங்கீரை யாடி யருளே
சேவலங் கொடிநிலவு தேவையம் பதிமுருக
செங்கீரை யாடி யருளே. 3

15. அத்தருக்குங் கலபமயி லனைய சாயலுறு
மலைக்கு மதலை யாகி
யானை முகனுக்கு நவவீரருக்கு பொருவி
லளியுதவு துணைவ னாகிக்
கைத்தலத் தாழிபுனை மாயனுக் குனாதிருக்
கமலைக்கு மருக னாகிக்
கண்ணெட்டு ளானுக்கு மதனனுக் கும்பெருங்
கருணை மைத்துன னாகியோர்
மத்தகக் களிறுதவு மகளுக்கு மானருண்
மகட்கு மணவாள னாகி
மலயமுனி யருணகிரி சிவஞானி போரூரில்
வரதவசி யாதி யாய

சித்தர் பற்பலருக் கொர்குருவான குமரனே
செங்கீரை யாடி யருளே
சேவலங்கொடி நிலவு தேவையம் பதிமுருக
செங்கீரை யாடி யருளே. 4

16. உம்பர் முனிவரர் சித்த ராதியர்க ளுள்ளத்தொ
டுலகங்கள் பலவு மாட
வுயர்மறையு மாகமமு மாதியாகிய நூல்க
ளுள்ளவை யனைத்து மாட
வம்பவிழ் கடம்பு குரவஞ் செச்சை கூதள
மலர்ந்த சிறுசடில மாட
மதியநிகர் வதனங்களிற் சிறிது வெயர்வாட
வார்செவிக் குழைக ளாட
நம்படியர் தலைதொடுங் கரபந்தி யாடவிரு
நளினமல ரடிக ளாட
நகுமணிக் கழலொடு சிலம்பு கலகலவென
நவிற்றொ லிவிளைத் தாடவோர்
செம்பவள வரையசைந் தாடிய தெனச்சிறிது
செங்கீரை யாடி யருளே
சேவலங்கொடி நிலவு தேவையம் பதிமுருக
செங்கீரை யாடி யருளே. 5

17. துங்க மதனன் றனதுவார் துகிற்கொடியினிற்
தோகை நல்லார் கண்களிற்
றொடியணிகை விரலிற் கணைக்கால் களிற்சுருதி
சொன்னெறி வழாத பெரியோர்
தங்கள் செவியிற் புனல்வளங் குறைவுறாதுயர்
தடங்களிற் சாலி வயலிற்
றவயோக மலிகுரவர் சீடரைப் பார்க்கின்ற
தன்மையிற் கதிரு மதியும்
பங்கமொடு நுழைதரப் பெரிதுநீடிப் புலவர்
பதியிலுள தருவை வென்று
பமலர்த் துணர்விரித்துக் குணலை யிடுகின்ற
பசுமலர்த் தலையி லென்று

மங்கய னலங்குலவு தேவைநக ராதிபா
வாடி யருள்செங் கீரையே
யயில்வே லெடுத்திணையில் மயிலேறு மொருவனே
யாடி யருள்செங் கீரையே. 6

பன்னிருசீர் விருத்தம்

18. கருமைக் கரியென்று றையுறுவார்
கனைக்குந் தொனியாற் றெளியவருங்
கவைக்கால் மேதியினம் சிலபோய்க்
கரும்பைச் சுவைத்துக் கடைவாயாற்
பருமைத் தரளமணி யுமிழ்ந்து
பழுதின் றிகழ்ந்தா னெனத்திரும்பிப்
பனிமென் மொழியார் பலரொதுங்கப்
பங்கேருகப் பூந்தடத் துழக்கிப்
பெருமைப் பொழிலின் கனியிடறிப்
பிரசமலர் காலுகுத் தவற்றில்
பிரிய மிவாய்ச்சிறி தருந்திப்
பெய்பாலொடு தந்தொழு விலுறு
மருமைத் திருத்தேவையின் முருகா
வாடி யருளாய் செங்கீரை
யணிசேர் பாண்டித் தமிழ்வணிகா
வாடி யருளாய் செங்கீரை. 7

வேறு

19. நாவல ரியாவரு மூர்தொறு மேகியு
நாண மழிந்தார்க
ணான்மறை தேர்பெரி யோர்களை யேசுமஞ்
ஞானர் மலிந்தார்கள்
காவலர் பூமகள் கோவென வாய்விடல்
காண முயன்றார்கள்
காது தலேதொழி லாமதி பாதகர்
காத லடைந்தார்கள்
சேவ லதேயுயர் வாமென வோதிய
சீலர் குறைந்தார்கள்

சீரியர் வாழ்வுற வேனையர் தாழ்வது
தேடி யுழன்றேனு
ளாவ லெலா முடிவாகிடு மாறினிது
வாடுக செங்கீரை
யாசறு தேவை யில்வாழ் முருகாநனி
யாடுக செங்கீரை. 8

20. நானாவகை மயலா னான மெலிதலை
நாடா யென்றாலுன்
ஞானாமி கரமிது தானோ வெனவெணி
நாவா லுங்கூறி
யூனார் தருமவர் பேரூர் வரைபொரு
ளூடே யுங்காத
லோவா தெழநலி வேன்நீ நவில்வன
வூறார் வம்போசொல்
வானா டருமகல் பூலோ கருமமிக
வாழ்வா னின்றாளின்
மாறா விழைவுற வீணா கிடுமுனம்
வாவா வரன்பேனு
ளானாவரு ளுறுமா தேவை யினெளிது
தாடாய் செங்கீரை
யாறா னமுரு கேசா வொருசிறி
தாடாய் செங்கீரை. 9

21. மந்திர மூல முணர்ந்தினி தோதுபொன்
வண்டே யன்பாளா
வண்டமிழ் மாலை வனைந்து பராவு
மருந்தே நம்பார்செய்
தந்திர யோக மறிந் தணுகாதப
தஞ்சேர் கந்தாமெய்
தங்கிய மாதவர் சிந்தனை யூடமர்
தந்தாய் விண்பேணு
மிந்திர கோடி தொழுங் குமராகுர
வின்றார் கொண்டாய்பொ
யின்றிய நாவின தந்தலை வாமயி
லென்றோதுந் சீர்கொள்

செந்திரு நாதன் வியந்து சொல்சேவக
செங்கோ செங்கீரை
திண்பொலி தேவையில் வந்தமர் தேசிக
செங்கோ செங்கீரை. 10

3. தாலப்பருவம்

22. செங்கண் விடையார் நெடுஞ்செவியிற்
சிவையாதி யராம்பல மடவார்
செழும்பொற் கரத்தின் மணிப்பூணுந்
திருமங்கல முந்திகழ் கழுத்திற்
பங்கப் பழனப் பெரும்பரப்பிற்
பங்கேருகப் பூந்தடங் கரையிற்
பகட்டு மதமநாறிய மறுகிற்
பசுமைக் கதலிளங் குருத்திற்
பொங்கக் கவின்பூ விரிக்கும்வரிப்
பூக மடலி லகன்முன்றில்
புனற்சா லருகிற் பெருஞ்செல்வம்
புனைவார் கங்கைப் பொறிநலத்திற்
சங்க மிளிரும் புகழ்த்தேவைத்
தவமே தாலோ தாலேலோ
தமிழ்சொற் புல்வர் குலத்தினுக்கோர்
தலைவா தாலோ தாலேலோ. 1

23. புண்பட் டுளதோர் குலச்சிறையும்
பொன்னித் துறைக்கோன் றிருமகளும்
பொருவில் களிவாரிதியில் மூழ்கப்
போர்வேல் வழுதி புரைதவிர்தன்
பண்பிற் றிகழ வளமதுரைப்
பரமனருட் பூசனை நடக்கப்
பாண்டித் துயரம் புறம்போகப்
பறிக்குந் தலையார் கழுவேறத்
திண்பெற் றுளதோர் கவுணியனார்
தெண்ணீர்த் தடம்புக் கியற்றுதவஞ்
சிறக்க மறைநூல் பொருள்பலர்க்குந்
தெரியத் திருநீற் றிசைவிளங்கச்

சண்பைப் பதிபோய் வருந்தேவைத்
தருவே தாலோ தாலேலோ
தமிழ்ச்சொற் புலவர் குலத்தினுக்கோர்
தலைவா தாலோ தாலேலோ. 2

24. வண்ணஞ் சிறந்த முலைக்குறப்பெண்
வனப்போர் முனியோதிடல் வினவி
வானத் தமரர் குலந்துதிக்கு
மகவான் மகளுள் கடுத்தயர்
வெண்ணம் பெருக்கிக் கிழமுனிவ
னென்றோர் வடிவு மெடுத்துமுதி
ரெனற்புனத் திற்றடி யொடுபோ
மிசைமிக்கு ரைப்பார்க் கெளியோனே
கண்ணம்புய மாயவன் மருகா
கலச முனிவன் றொழுங்குரவா
கமலாசனத் தானழப் புடைத்தாய்
கடம்புங் குரவுங் கலந்தணிவாய்
தண்ணம் பொழிற் றேவையிலிறைவன்
றனையா தாலோ தாலேலோ
தமிழ்ச்சொற் புலவர் குலத்தினுக்கோர்
தலைவா தாலோ தாலேலோ. 3

25. மழமால் விடையார் நிகரொருவன்
வானத் தினர்க்கு தவத்தோர்க்கு
மறையோர் களுக்கு நலமுதிப்ப
வஞ்சத் தகுவக் குலமடவா
ரழமா மாயைதரும் புதல்வ
ராதி யோர்க ளிறுமாப்போ
டழியக் கருதி மணியெறியு
மலைவாரிதி சூழம் புவியி
னிழலா மயமலை யருகிரி
னேமித் தடுக்கின் மிசையிருந்து
நெல்லின் பொரிநெய்யடை யாதி
நிறையச் சொரிகா னிவந்தொலிக்குந்

தழலூடு தித்துக் கறுவுபெருந்
தகரா தாலோ தாலேலோ
தமிழ்ச்சொற் புலவர் புகழ்தேவைத்
தலைவா தாலோ தலோலா. 4

26. பரவுந் திரைநீர் வயற்சாலிப்
பயிரின் கதிரிற் கழைக்கணுவில்
பாக்கு மரத்திற் பசுமூங்கிற்
பண்ணைப் பெருக்கிற் பலவாழைத்
திரளிற் கமலமலர்த் தடத்திற்
சினைச்சங்கு லவுந்தெருத் தொகையிற்
செவ்வேல் விழியார் முலைத்துணையிற்
சிறியோ ருருகுந் திருநகையி
லுரலிற் றிகழ்காற் கரிமருப்பி
லுலவா மழைமா முகிற்றிரளி
லுதிர்பூ வருந்து மானேயிற்றி
லொண்மைத் தவள முழுமதியிற்
றரளம் பொலியுந் தகைத்தேவைத்
தலத்தாய் தாலோ தாலேலோ
தமிழ்ச்சொற் புலவர் பலர்க்குமொரு
தலைவா தாலோ தாலேலோ. 5

27. நீடு மயக்க தருங்கிரியை
நிணமுண்டு வக்குங்கருங் களிற்றை
நிரைமாமுக மாயிரத் தரியை
நிறைநீர்டு கடலுள் வளர்மாவைக்
கூடு மடியார் புகழருணைக்
குவட்டின் குடபா லெழுவரையைக்
குறைதீர் புலமைத்தி றற்கீரன்
குறுகுங் குகையைக் கொடும்பேயைப்
பாடுங் கிளிவாய்ப் பனுவலிலோர்
பாட லுரைப்பான் றனையுறுக்கும்
பலர்மார் பகத்தைக் கவுமாரப்
பத்தர்க் கிகலாமவர் குலத்தைச்

சாடும் வடிவேற் படைக்குமரா
தாலோ தாலோ தாலேலோ
தமிழ்ச் சீர்த்தேவைப் பதிமுருகா
தாலோ தாலோ தாலேலோ. 6

வேறு

28. பனிமதி வரக்கண் டுவக்குங் கருங்கடற்
படுபுனல் குடித்த மேகம்
பளபள பளீரென்று மின்னியுரு மார்த்துவரல்
பார்த்துள குரங்கி னங்கள்
கனிதரு பலாவதனை மாவை விட்டுச்சிறிய
கமுகினிற் கதலி தன்னிற்
கைந்நொடிப் பளவினிற் பாய்ந்து விரிபாறையுள்
கண்ணிறுக மூடி வைகி
நனிபொழி மழைத்தாரையி சிறிதும் மெலியாத
நன்நலம் பெற்று வந்து
நாரணன் சிறுமகன் விழாநடத்திக் குதிகொன்
ணறுமலர்ப் பொழில்வி சாலத்
தனிவளம் புனைதேவை மாநகரில் வேலவா
தாலேல தாலேலவே
தண்டணி தடங்கைத் தமிழ்க்குமர குருபரா
தாலேல தாலேலவே. 7

வேறு

29. இந்திர னாடு புரந்துயர் சீர்சொலி
லேனோ கேளாய்நீ
யின்ப வினோத மிகுங்குற மாதுடனி
யார்பா னேர்வாயோ
கந்திறு தாளுறு செம்புகர் மால்வரை
காணா மேனாளோர்
கங்கையி னூடு பெறுங்கொடி பேணிய
காணா டேனோயா
னொந்தியல் பாட லணிந்து மையோவினை
நோயூடே சேரே

னொண்டி சொல்பாவல னும்புகழ் மேவில
னோவீணா வேனோ
சந்திர சேகரர் தந்தருள் பாலக
தாலோ தாலேலோ
தண்பொலி தேவையில் வந்தமர் வேலவ
தாலோ தாலேலோ. 8

30. அத்தனு மாயியு நிற்ரு காயின
ராடூர்நீ யான்மீ
தப்படி யேறிய தெத்தின மோவிளை
யாடா தோய்வாயோ
புத்த முதேநிகர் சொற்றிரி வார்கவி
பூணா ளேதாலோ
பொக்கமில் வாய்மை யுரைத்தனை வீணது
போகாதே காகா
முத்தலை வேலிய மற்கய ராதவர்
மோகா காராவோர்
முத்த மெனாமனைத் தருணீர்கொடு
மோவாய் மூடாதே
சத்த சதாசிவன் மெச்சிய தேசிக
தாலோ தாலேலோ
தட்டறு தேவையி லுற்ற மனோகர
தாலோ தாலேலோ. 9

31. ஆரண மந்திர மாகம தந்திர
மானாய் தாலேலோ
வாடன் மடந்தையர் மோக முறுங்குர
வாரா தாலேலோ
வீர மலிந்தெதிர் சூரனை வென்றவை
வேலா தாலேலோ
மேதகு குன்றுதொ றாடல் செயுங்குக
வேளே தலேலோ
கோர மிகுந்தகர் மீதி வருஞ்சிறு
கோவே தாலேலோ
கோதறு தொண்டரு ணாடலில் வந்தவிர்
கோலா தாலேலோ

சீரமை கின்றதொர் தேவை யிடந்திகழ்
தேவே தாலேலோ
சீதர னும்புகழ் கூறு நலம்புனை
சேயே தாலேலோ. 10

4. சப்பாணிப் பருவம்

32. வண்குலவு சோலைதொறு முலவைவந் துலவுதலின்
மலர்கொட்ட முகிலி னங்கள்
வானர நடுங்க மயில்களிகூர வோயாத
மழைகொட்ட வான ளாவுந்
திண்குவடு தொறுநின்று கல்லென விரைந்துபல
தெள்ளருவி கொட்ட விமையாத்
தேவரவர் மாதரொடு வந்தெயின ரறியாது
சிறிதுகண் கொட்ட வொருபாற்
பெண்குடி கொளாதிப் பிரானனையர் பலர்மகப்
பேரழலி லவிகள் கொட்டப்
பெருமுலைக் குறமகளிர் பிணையினது தோல்கொடு
பிணித்த மணமுழவு கொட்டுந்
தண்குறிஞ்சிக் கிறைவான குமரேசனே
சப்பாணி கொட்டி யருளே
தமிழ்வளம் பெறுதேவை நகர்புரந் தருள்வேல
சப்பாணி கொட்டி யருளே. 1

33. வானவர் பிரானரண் மனைக்கோபுரத் தடியின்
மருவு மும்முரசு கொட்ட
மறிதிரைப் பாற்கடலின் மதியொடு பிறந்தபல
மங்கையார்கள் செங்கை கொட்ட
மீனவன் வளர்த்த தமிழ்வாரிநுகர் முகிலனையர்
மிகுகவிதை மாரி கொட்ட
வெண்ணீ றிடாப்புலையர் குலவேரறக் கறுவும்
வீரர் தந்தோள் கொட்டவிற்
கானவர் குறிச்சியிற் றொண்டகங் கொட்டக்
கருங்குழற் கற்றை படருங்
கனகமயில் நிகர்பதும கோமளை முதற்பலோர்
கண்கனீர் கொட்ட லெண்ணித்

தானவர்க ணெஞ்சகம் பறைகொட்ட வொருசிறிது
சப்பாணி கொட்டி யருளே
தமிழ்வளம் பெறுதேவை நகர்புறத்தருள் வேல
சப்பாணி கொட்டி யருளே. 2

34. காமனை யெரித்தவர்சடைக் கொன்றையுங் கவுரி
கார்த்திகை யுடுக்க லென்னுங்
கன்னியர்கள் கண்களுங் கனகநகரிற் குலவு
கறுதவு மகள்கொங் கையுங்
கோமளக் குயிலனைய குறமகள் பதங்களுங்
குட்டுனும் பிரமர் தலையுங்
குளிர்பொழிற் றிருவருணை மாநகரி லொருபழைய
கோபுரத் துய்ந்த கிளியு
நாமகள் படிக்கக் கொடுத்த சுவடியும்வழுதி
நலமுற வெடுத்த நீறு
நம்பியு மறந்தவொரு தொண்டன் மனையிற்களியு
நாடொறுங்கமழ் மலருந்
தாமரை மலர்த்திர ளெனத்தகு கரங்களாற்
சப்பாணி கொட்டி யருளே
தமிழ்வளம் பெறுதேவைநகர் புரந்தருள் வேல
சப்பாணி கொட்டி யருளே. 3

35. இரவுபகன் மாறாடி மலைகளைப் பந்தென
வெடுத்தெறிந் தாழி யேழி
னிடையுழக்கித் திசைப்பா லகரை வென்றுபுவி
யாவும் படைத்த வன்றன்
கரமொடு பதங்களுக் கான தளையிட்டுக்
களிற்று முகனாதி யாய
காரவுணரைச் செற்று வானகத் தமரர்தங்
காற்றளை களைந்து மகவா
னரவபட நிகரல்கு லயிராணியொடு மகிழ
வம்பொன் மணி முடிசூட்டிவெ
ளீனைமக ளாடேற மங்கல மணிந்துண்மை
யடியவர் விருப்ப முற்றுந்
தரவொரு சலிப்பின்றி மிளிர்கின்ற கைகள்கொடு
சப்பாணி கொட்டி யருளே

தமிழ்வளம்பெறு தேவைநகர் புரந்தருள் வேல
சப்பாணி கொட்டி யருளே. 4

36. இமையசையு மவ்வளவு போது முனைமறவா
ரிடர்ப்பிணி யிடைப் படாம
லீரிரு மறைப்பொரு ளுணர்ந்த பெரியோர்பலரு
மீனருக் கொல்கு றாமற்
கமையொடு தராரத மறிந்துதவ வல்லவர்
கலிக்கடலின் மூழ்கி டாமற்
கபிலையொடு கன்றரிந் துண்பவ ரிடத்தினிற்
கமலை குடிகொண் டிடாமற்
சிமைய முழுமைக்குந் தமிழ்க்கவி சொலக்கருது
சீரியர் திகைப்பு றாமற்
சேவலங் கொடியே செயஞ்செய மெனப்பகர்
திருப்புகழ் மறைந்தி டாமற்
சமையங்க ளீராறு நம்பிய தடங்கைகொடு
சப்பாணி கொட்டி யருளே
தமிழ்வளம் பெறுதேவைநகர் புரந்தருள் வேல
சப்பாணி கொட்டி யருளே. 5

37. அளியினின மொகுமொகெனு மிசையொடு பறந்துவந்
தணிபொழிற் றலையின் மலர்வீழ்ந்
ததைவிட்டு மறுகுதொறு முலவுகளி றுமிழ்மத
மருந்தி யதனையு நீத்துமேற்
றெளிபுனற் றடமனந் தந்தொறு மலர்ந்தபல
செங்கமல மாதி நல்குஞ்
சிறுதுளித் தேன்பருகி யமையா தெழுந்தணி
திருந்திழை மடந்தை நல்லார்
களிநலம் பொலியாடல் பயிலரங்கிற் சென்று
கண்கண் முதலா முறுப்பைக்
கருதியிமை குவிதன் முதலாவன குறித்துக்
கழித்தளக மலரில் வைகிக்
குளிர்வியன் றிகழ்தேவை நகரில்வந் தமர்சாமி
கொட்டி யருள்சப் பாணியே
குமரகுரு பரமுருக சரவண பவாசிறிது
சப்பாணி கொட்டி யருளே. 6

வேறு

38. நாலான னத்தான் முதன்மூவர்
நண்ணுந் தலமா மிரவியைப்பு
நளிர்வெண் கதிர்கான் மதியினையு
நடுங்கப் படுத்து மிருபாம்பைக்
காலான வற்றிலிரு பணியாக்
கவினப் புனைந்து கனற்கோபக்
கலுழன் வெருளக் கனன்றகவிக்
கலபச் சுமையாற் களையாமல்
வேலா வலயஞ் சிலகடந்து
வெள்ளைநிறப் பாற்கட னடுப்போய்
விண்டுறங்கு மாசு ணத்தை
விரைவி லெடுத்து நடமாடுங்
கோலாகல மாமயிற் குமரா
கொட்டி யருளாய் சப்பாணி
குலவுந் தேவபுரிக் குகனே
கொட்டி யருளாய் சப்பாணி. 7

வேறு

39. இருநில மாதிகொடு யிர்வரை யோதிடு
மெட்டுரு வுற்றோனு
மெழின்மலி தாமரை மலர்வளர் பூமக
ளிச்சையுடைக் கோனு
மருமறை நூல்பகர் பிரமனு நாடுநின்
றற்புத மெப்போது
மறைதரு பாவலர் பழவினை வேருட
னற்றொழி தற்காக
வொருதர மாயினு மயின்மிசை நீவர
லுட்கருதித் தாழே
னுரிமை யெலாமறி திறவிலி நீயெனி
லொப்பில னத்தாய்கொல்
குருபர தேவையில் வருகும ராநனி
கொட்டுக சப்பாணி
குணமலி சீர்திகழ் கணபதி சோதர
கொட்டுக சப்பாணி. 8

40. இடிநிகர் பேரொலி தருதிசை வேழமி
டுக்கணுறத் தேவ
ரிதுமுடி வூழிகொ லெனமலை யாவு
மிருப்பி மிகப்பேர
வடிவின் மகோததி யலறிட வீரர்
மனத்துணிவைப் போட
வலிகெழு தானவ ரனைவரு நாணி
வனத்தி லொளித்தோட
வடியவர் சேகர முனதருள் பாடி
யளப்பி லுவக்காக
வணிகட காதிக ளொலிதர நீறணி
யத்தனெனச் சீர்கொள்
கொடிநிமிர் தேவையி லமர்கரு ணாகர
கொட்டுக சப்பாணி
குணமலி சீர்திகழ் கணபதி சோதர
கொட்டுக சப்பாணி. 9

41. விற்றகை வேடுவ ருக்குநல் வாழ்வருள்
வெற்பே முத்தேவர்
மெச்சிய தேசிக லொப்பறு தாரக
வித்தே சிற்றேன
லுற்ற மினாள்பிசை யப்படு மாநுக
ருற்சாகக் கார
வுத்தம வீரர் வழுத்திய வேல்புனை
டுற்பாதச் சீல
நற்றமிழ் தேரருணைக் கிளிபா டல்க
ணத்தார்வத் தேவ
நச்சர வேறி நடிக்கு மயூர
நடத்தாண் மைப்பால
குற்றமி றேவை யிடத்தமர் காவல
கொட்டாய் சப்பாணி
கொக்கற மோதி வரத்தகு சேவக
கொட்டாய் சப்பாணி. 10

5. முத்தப் பருவம்

42. பத்தர்க் கெளியா னெனவுலகும்
பழைய மறையு மாகமமும்
பகரும் பெருமான் றரும்புதல்வா
பனிமால் வரையின் றவப்பயனா
மத்தக் கடகக் காக்குயினே
ரம்மை முலைப்பா மணங்கமழ
வலர்செங் குமுத மலர்வாயாய்
யரவிற்றுயில் கூரரி மருகா
சத்தக் கடலி னமுதனைய
தனிமந்திரத் தின்பொரு ளுணர்வாய்
தந்திமுகப் புங்கவன் றுணைவா
தலைமைக் குறுமா முனிமுதலா
முத்தர்க் கினிய குருபரனா
முதல்வா முத்தங் கொடுத்தருளே
முதிருந் தமிழ்த்தேவை யில்வளருங்
முருகா முத்தங் கொடுத்தருளே. 1

43. பொன்னார் சுணங்கு முலைமனையாள்
பொறித்த முடங்கல் வழியுய்ந்த
போரே றியற்றும் பணிவாய்ந்து
பொருநைக் கிடப்பாற் றிகழ்பதியிற்
பன்னா கத்திற் கொடியசினம்
படைத்த சமண னழுக்காற்றா
பவளக் கிரிநேருனை யொருவன்
பார்த்த மலைச்சாரலி னொருபா
லுன்னாரு யிரேநிக ரொருத்தி
யுழை பாலுதித்து வளர்தலத்தி
லுண்மை யறிய வெனதுமன
முருக வுடலும் புளகமுற
முன்னா ளுதவு னலமறவேன்
முறையான முத்தங் கொடுத்தருளே
முதிருந் தமிழ்த்தேவையில் வளரு
முருகா முத்தங் கொடுத்தருளே. 2

44. ஊசலென வால்வளை யிரண்டுற்
றுலவுஞ் செவியார் தமக்குமதி
யொடுசெஞ்சடைக் காட்டு மறுமவட்கு
முயர்சீ ரிமவான் தருமகட்கும்
பாசமலி கார்த்திகை யார்க்கும்
பணியிற் றுயின்மாம னுக்குமவன்
பன்னி யருக்கு மெளிதில்மிகப்
பலிக்கு முனதுபவள முத்த
நேசமிலர் போற்பெரி திகழு
நீலக் குறத்தி தனக்குமுனை
நிதமுந் திருடனெனத் தமிழா
னிகழ்த்துங் கிளிக்கு மளித்திலையோ
மோசம் வருமென் றொருசிறிது
முனியா முத்தங் கொடுத்தருளே
முதிருந் தமிழ்த்தேவையில் வளருந்
முருகா முத்தங் கொடுத்தருளே. 3

45. மலையா மினத்துளுயர் கயிலை
வரல்போ லசைந்து மதத்தருவி
வயங்கக் காட்டுந் தவளநிற
மலிவாரண மன்றெடுத்து வந்து
கொலைவா ளவுணர்க் கெமன்போலுங்
குலிசா யுதத்தோண் மகபதிபாற்
கொடுக்க வமரா பதிநகரிற்
குடிகொண் டிருப்போர் பலர்போற்ற
விலையார் பசும்பொன் கொடியேபோன்
றினிதுவளர்ந் தாளெழின் மார்பத்
திருகுங்குமக் கோடெடன நீடி
யிரதி மதவே ளுருக்காட்டு
முலைதோய்ந் துவப்ப வலிது முத்து
மோகா முத்தங் கொடுத்தருளே
முதிருந் தமிழ்த்தேவையில் வளரு
முருகா முத்தங் கொடுத்தருளே. 4

46. துத்திப் பணப்பாந்தளி னடிக்குந்
தேகைமயில் வாகன முதுகிற்

சுடர்வேற் படையு முத்திரையுஞ்
சுவண நிறக்கண்டிகைப் பொலிவு
மெத்திக்கரு மெச்சிய முழுநீற்
றெழிலாதி யாவுந் துலங்கிடவந்
திலைவெண் டிருநீ றுடளித் தொருநா
ளிரவிற் பகர்ந்தபடி யாண்டு
பத்தித் துறையை யிகழாதார்
பலருங் களிப்பப் பிறர்நாணப்
பாவ மிகையோர் பரிதியெதிர்ப்
பனிபோ லொழியப் பயன்காட்டி
முத்திக் கடலுள் விடனிசமேன்
மூவா முத்தங் கொடுத்தருளே
முதிருந் தமிழ்த் தேவையில் வளரு
முருகா முத்தங் கொடுத்தருளே . 5

வேறு

47. நெய்த்த மலர்சொரிதருங் கற்கப மரங்கண்டு
நிகரில் சந்தம் பொலிந்து
நீடிய திருப்புக ழனந்தங் குலாவியரு
ணெறியுளார்க் குரிமை யினதாய்ப்
புத்தமுதினும் பெரிதினிக்கு நீர்மிகை மல்கு
புனிதத்த தாகி விண்ணூர்ப்
போக மடவார் நனிவியப்பச் சிறந்துபைம்
பொற்கி ரணமிகை மன்னியெண்
சித்தடைந் தழகிய கலாபமயிலும் பொருவில்
சேவலும் விரும்ப மிளிருஞ்
செம்முகத் தினதாய்க் குலத்திலுயர் தலைமையாய்த்
தென்றலங் கிரியை நிகரா
முத்தமிழ்க் கிளியொன் றிருந்த கைக்குருபரா
முத்தங் கொடுத்த ருள்வையே
மூவர்புகழ் தேவைநகர் மேவு குமரேசனே
முத்தங் கொடுத்த ருள்வையே. 6

48. வகைமல்கு முத்தங்க ளுலகிலு ளவெனினுமவை
மாதவந் தருப வன்றம்

மட்டினுமிரா தளவின் மடமலிதரச் செய்து
மமதையி லமிழ்த்து மன்றித்
தகைமலியு நெற்கதிரில் விளைமுத்த மேதித்
தடங்கான் மிதிக்க நெரியுந்
தண்மலர்க்கணை மதன்சிலை முத்த மாலையிற்
றவிடுபடு மூங்கின் முத்த
மிகைபடு நெருப்பி லொவ்வொரு வேளைவேமிந்த
விதமாக மற்ற வைக்கும்
விலையாதி யூறுண்டு விழையே மறைத்தலை
விளம்பு பிரணவ மணக்கு
முகைமுல்லை திகழ்குமுத மனைய திருவாய்கொடொரு
முத்தங் கொடுத்த ருள்வையே
மூவர்புகழ் தேவைநகர் மேவு குமரேசனே
முத்தங் கொடுத்த ருள்வையே. 7

வேறு

49. ஒப்புயர் வோதரு முத்தமிழ் பாடிடு
முத்தமரைப் பழியே
னுக்கிர வாசனை யற்றவர் தாடொழு
முட்டுதுணிவைக் கழியே
னெப்புவி யோரும் வழுத்து நின்வார்கழ
லிட்டம் விடுக்கறியே
னிக்கது போன்மொழி செப்பு மினார்முலை
யிச்சையினைக் குறியேன்
வெப்புறு பாழ்நெறி யிற்சுழல் பாதகர்
வெற்றிசகித் தமையேன்
மெய்த்திரு நீறுடன் முற்றணி சீர்பெறும்
வித்தகரைப் பிரியேன்
முப்புர நீற நகைத்தவர் பாலக
முத்த மளித்தருளே
முற்பகர் தேவை நகர்க்கு மராவொரு
முத்த மளித்தருளே. 8

50. ஒருபொரு ளேபர மெனவுணர் சீரிய
ருட்குந் துன்பொழிவா

ருயிர்வதை யாதிய புரிபவர் யாவரு
முய்த்தங் கண்டழிவார்
தரும மிலாநெறி மருவிய தீயவர்
தர்க்கங் கொண்ரெதிரார்
சதுமறை நூற்பக ரறுமத வாணர்க
டத்தம் பண்படைவார்
திருமகள் தோனு லுனதிசை தேறுநர்
திக்கெங்குந் திகழ்வார்
திரைகடல் சூழ்புவிமக டுயர்போய்மகிழ்
சித்தந் துன்றிடுவாண்
முருகவிழ் தாதகி யணிபவர் பாலக
முத்தந் தந்தருளே
முனைமலி தேவையில் வளர்முரு காயொரு
முத்தந் தந்தருளே. 9

51. கார்மரு பொற்பொன் றாக மறப்பெண்
காதலன் முத்தந் தருகவே
காய்தகு வர்க்குஞ் சாரண ருக்குங்
காதலன் முத்தந் தருகவே
சூர்மடி யக்கொன் றார்வம் விளைக்குந்
தோளினன் முத்தந் தருகவே
தோகை மயிற்கொண் டூர்தரு கொற்றந்
தோய்பவன் முத்தந் தருகவே
பார்மகிழ் தற்கென் றாய்பவர் பற்றும்
பாவகன் முத்தந் தருகவே
பார்வதி பக்கஞ் சேர்பவர் நத்தும்
பாலகன் முத்தந் தருகவே
சீர்மலியத் தென்றேவை புரக்குஞ்
சேவகன் முத்தந் தருகவே
தீயினை யொக்குஞ் சேவ லெடுக்குந்
தேசிகன் முத்தந் தருகவே. 10

6. வாரானைப் பருவம்

52. தளஞ்சேர் கமல மலர்விழியான்
றங்கை மனநெக் குருகமுலைத்

தடத்திற் சுரந்து வழிபான்முன்
றானை நனைப்பக் கரநீட்டிக்
குளஞ்சேர் விழியாலெனை யுடையார்
கொடுத்த மதலா யருண்ஞானக்
குன்றே யிமையார் பலர்க்குமொரு
கோவே யருமைக் குறுமுனிவ
னுளஞ்சேர் குரவா வருகவென
வுரிமையொடு போய்ப்பசி யாறி
யுவகை கடலி லவளொடுதா
னொருங்கு மூழ்கி யுயர்ந்துபல
வளஞ்சேர் தேவைப் பதிபுரக்கும்
வாழ்வே வருக வருகவே
வடிவேல் முருகப் பெருமாளே
வருக வருக வருகவே. 1

53. கந்தா வருக சிவஞானக்
கனியே வருக பரமனுதற்
கண்ணின் மணியே வருகருட்
காரே வருக கருமருப்புக்
குந்தா வருக குறமடந்தைக்
கொழுநா வருக பிரணவச்சற்
குருவே வருகமலை தொறும்வாழ்
கோவே வருக குலவுமறை
யந்தா வருக தமிழ்க்கடலி
னமுதே வருகவினைப் பிணிவே
ரறுப்பாய் வருகச் சகமுழுது
மானாய் வருகவறம் வளர்த்தாண்
மைந்தா வருக தேவைநகர்
வணிகா வருக வருகவே
வடிவேல் முருகப் பெருமாளே
வருக வருக வருகவே. 2

54. சந்தவரை மாமுனி மகிழத்
தைய லொருத்தி கரமுளைக்க
சங்கப் புலவன் றளைநீங்கத்
தழற்பாலை யிலோர்கவி யுய்ய

வந்த ணருண கிரிவாழ
வரைய னொருவ னகங்களிப்ப
வருமைப் பனுவல் பகரொருவ
னம்பொற் பதக்கம் பெறர்மாச்
சிந்தப் பொருதகதை யுரைத்தோன்
றிடுக்கந் தவிரமணி யணிநாத்
தெறித்து விழப்பாடினன் முதலோர்
சிந்தை குளிரச்சிகிப் பரிமேல்
வந்த துளதேற் றேவைநகர்
வரதா வருக வருகவே
வடிவேல் முருகப் பெருமாளே
வருக வருக வருகவே. 3

55. தண்மைக் குலஞ்சார்தரு மூங்கிற்
றடமால் வனத்தி லுருமலையிற்
றயங்குந் திருமாமலைக் குவட்டிற்
றழற்பே ருவாமலை யருகிற்
பெண்மைக் குயர்ச்சி தருநாட்டிற்
பின்னும் பலவாகிய தலத்திற்
பிரியமுளார் போனனி தோன்றிப்
பேசன் முழுதும் பிறழரிதா
முண்மைப் பயனே யாகிலெனை
யுலகோ ரிகழ்தற் கானவித
முஞற்றி மனத்தோடு டலுமிளைத்து
துழகக் காண்ப தியல்பாமோ
வண்மைத் தமிழ்த்தேவையி லொருக்காண்
மயின்மேல் வருக வருகவே
வடிவேன் முருகப் பெருமாளே
வருக வருக வருகவே. 4

56. கொஞ்ச வருக கவுமாரர்
கூட வருக புறநெறியோர்
கொதிக்க வருக திருவருட்சீர்
கொடுக்க வருக தமிழாண்மை
மிஞ்ச வருக பழவினையை
விலக்க வருகவென துளத்துண்

மேவ வருக மயற்பேயை
வெல்ல வருக விரும்பியவா
றஞ்ச லருள வருகவென
வடிமை முறையிட்டிடன் முழுது
மறிந்து மறியாத வரேயொத்
தகிலத் தலையவிடன் முறையோ
வஞ்சர் மருவாத் தேவைநகர்
மன்னே வருக வருகவே
வடிவேன் முருகப் பெருமாளே
வருக வருக வருகவே. 5

வேறு

57. தொண்டலது மற்றொன்றை மதியாத மெய்யன்பர்
துணைய டித்துகளை முடிமேற்
சூடியுன தாறெழுத்துங் கருதி நாள்தொறுந்
துதிசெய்து மறுகு மென்பால்
விண்டலம் புகழ்பழனி மலையினிற் செந்திலை
வியந்துரைத் துதும் தெண்ணி
மேவியது மதங்குவிளை யாடியது மித்துயர்
விளைத்ததுவு முலக ரறியார்
பண்டலகி லருள்பெற்றி ருந்தவுயி றென்றெனைப்
பகரன்முத லாய பிறவும்
பழுதுபடி லெனையவ ரிகழ்ந்திடலி லுன்னைப்
பழிக்கு நின்மன மாதலான்
மண்டலத்துயர் தேவை நகரிலொரு தரமென்முன்
மயிலில் வந்தருள் செய்வாயே
மரகத கலாபம் விரிதருகுடை நிழற்றருபொன்
மயிலில் வந்தருள் செய்வாயே. 6

58. கதமீறி யெதிர்நின்ற கந்தைத் தகர்த்துரற்
காற்றளை முறித்து விண்ணில்
கைந்நிமிர்த்துப் பிளிறலொடு பெயர்ந்த ருகில்வரு
கனபா கரைச்சி தைத்துப்
பதமாறுடைத் தும்பியின மொய்த்திசைப் பமிளிர்
பந்தாடு மாதர் கொங்கை
பார்த்தின மெனக்கருதி யிடைசீய மென்று

பயங்கொண்டு பைம்பொ ழிற்கண்
விதமாயிரம் படுமரங் களைமுறித் துத்தம்
வெம்பகைப் பெயர்பு னைந்த
வெண்பற் குரங்கினம் வெருட்சியுற மகிழ்வெய்தி
மேகத்தி னீர்கு டிக்கு
மதவேழ மலிதேவை நகர்வேல வொருபோது
மயிலில் வந்தருள் செய்வாயே
மரகத கலாபம் விரிதருகுடை நிழறருபொன்
மயிலில் வந்தருள் செவ்வாயே. 7

வேறு

59. அருமை யாது மறிகிலாரை
யணுகி யாசி பகர்தல்போ
யடியர் கூடுமவையில் மேவி
யளவில் பூசை முயலுவே
னுருவ மாரனெனவு மோதி
யுரையுமாதர் மயல்கொளா
துனது பாத மலரை நாடி
யுருகுமார்வ மடைகுவே
னிருமை நாசமுதவு லோப
மெனுமதோடு பழகிடா
திகழும் வானு மறியு மீகை
யிடைவிடாது புரிகுவேன்
மருவு தேவை நகர்வி சாக
மயிலிலேறி வருகவே
மறுவி லாறுமுக வினோத
மயிலிலேறி வருகவே. 8

60. ஆடல் விழையேனோடு பகரு
மாசை மொழிகள் பிழைபடா
தாழி பொருநை வாவிமுதல
வாய புனலி லனலில்வீழ்
பாட லழிவுறாது கொலைசெய்
பாவ நெறியி லமிழ்பொலார்
பாரின் மலிவதான் மெயடியர்
பாறி யுணர்வு மெலிவெய்தா

தூடல் வனிதை போலுட னென்னுவனென்
னோகை முனிவு பலசெய்வே
னூறு தவிர நீடுமகிமை
யோசை யிலக வருள்செய்வான்
மாட நிலவு தேவபுரியில்
வாழு முருக வருகவே
மாசில் வளையொ டாழி புனைகை
மாயன் மருக வருகவே. 9

61. நீல வேடமாது சேர
நீடு தோளன் வருகவே
நேரிலாத வாச மேவு
நீப மார்பன் வருகவே
கால கால னார்பராவு
கால்வி சாகன் வருகவே
காமன் ணாணு மாணிலாவு
காமர் வேலன் வருகவே
சால நாடுவாருண் மேய
தாள்வி னோதன் வருகவே
தாழு நீள்கை வேழமான
தார காரி வருகவே
சீல வேதநூல் வலோர்க
டேடு மேகன் வருகவே
தேவை யூரில் வாழ்குமார
தேவ னேரில் வருகவே . 10

7. அம்புலிப் பருவம்

62. திருமருவு கார்த்திகைப் பெண்கண் முலைதொடுநலஞ்
சித்தித்த வண்மை யாலுஞ்
சேவிலொரு வேளையடன் மேடத்தி லொருவேளை
திகழ்கின்ற தன்மை யாலு
கருமயிற் தொடர்பாலு மனலனைய சோதியைக்
கவினுறப் புணர்த லாலுங்
கனவிசா கத்தினிற் பிரியமுற லாலுமவிர்
கதிர்வட்ட நடுவி லுற்று

வருகின்ற தாலும் பரவழிக் கொண்டுலகை
வலமாத லாலும் விண்ணூர்
மறையவன் சொல்விழை தலாலுமிவ னுன்றனை
மதித்தி ணையெனக் குறித்தா
னருளுததி தருமமுத நிகர்முருக வேளொடினி
தம்புலீ யாட வாவே
யணிபொழிற் றவபுரி வளரயிற் சேவகனொ
டம்புலீ யாட வாவே. 1

63. கடகமரு வுங்கரமிகப் பெறுதலா லுமொரு
கன்னி வலிதிற் புணர்ந்த
காரணத் தாலும் வெண்சிங்கமுக முற்றுங்
கழித்து மகிழ்பெருமை யாலு
மிடமுறுந் துலைகொண்டு செட்டியென் றுலகின
ரியம்பிடக் குலவ லாலு
மீசனொரு கண்ணின் மணியென்று வேதாகம
மெடுத்திசைக் கின்ற தாலுந்
திடமிகுந் தனுசொன்று கொளலாலு மகரமலி
செவியாலு மதன வேடன்
சிரமே னடக்கும் புகழ்ச்சீரி னாலுமயல்
செறிமகளிர் நிந்தை யாலு
லடவுணர் பகையாலு முனையன்ன குமரனுட
னம்புலீ யாட வாவே
யணிபொழிற் றேவபுரி வளரயிற் சேவகனொ
டம்புலீ யாட வாவே. 2

64. காதன் மலிவெய்திக் கசிந்துருகு வாட்கினிது
கைகொ டுத்திட் டதனையுங்
கலைவல்ல புலவனொரு வனையளித் திடலையுங்
கமலமலர் முழுது மொல்குஞ்
சீதள முகந்துன்று தலையுமலை யுச்சியிற்
றினமு நிலவலையு மலைநீர்
சிந்தை மகிழ்வுறவந் துதித்தலையும் வெண்கணஞ்
செறிய நடுநிற்ற லையுமீன்
கேதனத் தெழுது குலம்வாழ வைத்தலையுங்
கிளிக்கிறைவ னாட னீடக்

கிளர்தலையு மொருபதிற் றாறுகலை கொண்டுவளர்
கீர்த்தி யையு மெண்ணின்மீ
தாதர மலிந்தழைக்குங் குமர குருபரனொ
டம்புலீ யாட வாவே
யணிபொழிற் றேவபுரி வளரயிற் சேவகனொ
டம்புலீ யாட வாவே. 3

65. சிற்ற வுணருக்கு மஞ்சுறுவைநீ யிவனவர்
திறற்படைக்கொரு கூற்றுவன்
செங்கதிர் முன்னதொளி மழுங்கு மிவன்முனதொரு
செயலுமில்லாது மறையுங்
கற்றவருனைப் பெரிதிகழ்ந் திடுவரி வனைமெய்க்
கருணையங் குரவனென்பார்
காதன்மட மங்கையர்க் கியமனீ யிவனவர்
களிப்புற முயங்குகாளை
பொற்றடங் கிரியினைச் சூழ்வை நீயிவனது
புலம்பப் புடைத்தகையான்
பொருவரு களங்கனீ யிவன்மறுவில் பேரருட்
புனிதனுனை நனியழைத்தா
னற்றமிது நன்றுநன் றறுமுகக் கடவுளுட
னம்புலீ யாடவாவே
யணிபொழி றேவபுரி வளரயிற் சேவகனொ
டம்புலீ யாடவாவே. 4

66. மின்படு முகிற்றிரளு முனைமறைத் திடுமிவன்
வியன்புகழ் மறைப்பதில்லை
விபுதரு டொருவ னீவனவர்க் கரசனது
வெந்துய ரொழித்தவீரன்
மன்பதைத் திரளன்றி மற்றை யுயிருங்காணும்
வாழ்க்கையுன தளவில்கோடி
மறைகட்கு மறிவரிய நிலையுடைய னிவனொருபுள்
வந்துகொத்தத் தளர்வைநீ
முன்பகர் திறற்புளொரு மூன்றுதொழ மகிழ்வனிவன்
முப்பதுதினத் திளொருநானி
முழுமை யுறுவாயணுவி லணுவா நிறைந்ததனி
முதல்வனிவன் விழைதலெளிதோ

வன்பருக்கோ ரெளியனான முருகை யனுட
னம்புலீ யாடவாவே
யணிபொழிற் தேவபுரி வளரயிற் சேவகனொ
யம்புலீ யாடவாவே. 5

வேறு

67. செங்க ணெடுமாலென வுனது
சீரார் குலத்தில் வருமொருவன்
றிருக்கை நிமிர்த்த கரத்தினுக்குன்
றேகச்சய நோயொரு பெரிதோ
வெங்க ணரவ மிரண்டினையும்
விழுங்கத் தகும்புளி ரண்டிருக்கும்
விதந்தேர்ந் திலையோ விடம்போலு
விழியாரெ ட்டெறி தருமோர்
பங்கம்விழி யார்தவிரப் பெறலரிதோ
பகைச்சூர் முதலோ ரீடழித்துப்
பைம்பொ னகரிற் குடியேற்றும்
பழைய வுதவிமறத் தனையோ
வங்கண் மயில் வாகனக் குகன்பா
லாட வாரா யம்புலியே
யருட்சேர் தேவை முருகனுட
னாட வாரா யம்புலியே 6

68. தோயுந் தமிழ்ச்சீர் குறுமுனிக்குத்
துலங்கப் பகர்ந்தான் பிரமனுக்குத்
தொல்லைப் பிணியா மாணவநோய்
தொலையப் புரிந்தான் சுடராழி
யேயும்படி மாயனுக் களித்தா
னிறைவன் றனக்கும் பிரணவத்தி
னியல்பைத் தெரித்தா னெவரெவர்வந்
தெவைவேண்டி னும்மிக் கீந்துளன்கா
ணீயும் விரும்பு மவைமுழுது
நெறியிற் பெறலா மொருகிளியு
நீபத் தடந்தோண் மிசையேறி
நிலவப்பெறல் கேட்டிலை கொல்லோ

வாயும் பெருமைச் சரவ ணன்பா
லாட வாரா யம்புலியே
யருள்சேர் தேவை முருகனுட
னாட வாரா யம்புலியே. 7

வேறு

69. தந்த வெளானை யதன்பகை நேரில்
தந்தா னுண்டொழிவாய்
தண்டை குலாவு பதம்பெறு மாடு
தருங்கோபங் கொடிதே
பைந்தகை மாமயி லங்கத லூன்னுகர்
பண்பா கின்றதலோ
பண்கொடு கூவு நலந்திகழ் சேவல்
பறந்தாலும் பொடிவாய்
வெந்தழ னேர்விழி கொண்டொளிர் வீரர்
மிகும்பேருண் டறிவாய்
விண்டவரு டொருவன் கதிரோனிகல்
வென்றோ னன்றுகொலோ
மந்தண மீசனு டன்பகர் சேயெதிர்
வந்தா டம்புலியே
வண்பெறு தேவை புரந்த விசாகன்முன்
வந்தா டம்புலியே. 8

70. இத்தனை தூர மழைத்தும் வராம
லிருந்தா யுங்கள்பிரா
னெய்த்தொரு வேய்யுரு வத்தொடு காவிரி
யின்பா னின்றவநா
ளத்தனை பாடு படுத்திய சூரனை
யங்கே வென்றதனா
லத்தம தாந கரிகுடி மேயினை
யன்றோ நன்குணராய்
பித்தரின் மோச முறத்துணி யேன்மருள்
பெண்பாவம் பலநீ
பெற்றுளை யாதுவரப் பெறுவாய்கொல்
பிணங்கேல் பிங்கலநேர்

மத்தக வேழ முகற்கிளை யானுடன்
வந்தா டம்புலியே
மற்பொலி தேவை நகர்க்கும ரேசன்முன்
வந்தா டம்புலியே. 9

71. மாதவ னும்புகழ் சீர்பெறு கந்தன்முன்
வாவா வம்புலியே
மாசறு மைங்கர னார்மகிழ் தம்பிமுன்
வாவா வம்புலியே
மாதர் மனங்கவ ராறிரு மொய்ம்பன்முன்
வாவா வம்புலியே
மாழையு மொஞ்சுவ தாய கடம்பன்முன்
வாவா வம்புலியே
மாதரு மங்கை மணாளன் வருந்துமுன்
வாவா வம்புலியே
மாவை வகிர்ந்துள கோபம் விளங்குமுன்
வாவா வம்புலியே
வாத பயந்தவிர் வாழ்வருண் மைந்தன்முன்
வாவா வம்புலியே
வாய்மை மலிந்துயர் தேவையி னண்பன்முன்
வாவா வம்புலியே. 10

8. சிற்றில் பருவம்

72. காக்குந் திருமான் மருகோனே
கயிலைக் கிரியார் தரும்புதல்வா
கடவாரணத் தோன்மகள் கணவா
கானக் குறத்தி கழல்பணிவா
யாக்குந் தொழிலோன் றனைப்புடைத்திட்
டதுசெய் துவக்கும் புகழ்தோய்வா
யறுமா முகத்தோர் குருபரனே
யருணைக் கிளியொன் றணிதோளா
பாக்குமுலைப் பார்ப்பதி தருபால்
பருகிப் பனுவல் பலபகரும்
பவளக் கனிவா யுறுபாலா
பரவிப் பணியச் சலியாதார்

தேக்கும் மதுரத் தமிழ்புனையுஞ்
செல்வா சிற்றிற் சிதையேலே
தேவைப் பதியில் வாழ்முருகா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே. 1

73. மெய்யர் மனநேர் சரவணத்தின்
மேனாண் மலர்வுற் றறுமீனு
மேனை மகளுமா மெழுவர்
வியனார் மடியில் விழித்தொகையி
லைய ரரத்திற் சடைக்காட்டி
லக்கங் களின்மா முதலோர்த்த
மணிமா முடியி லகவெளியி
லருணைப் புலவன் றமிழ்ப்பாட்டில்
வெய்ய புனத்திற் பலகோடி
வெற்பின் மிளிர்கோபுர முகப்பில்
வேரிக் கடம்பிற் கூதளத்தில்
வெட்சித் துணரின் மிகமணக்குஞ்
செய்ய கமலமலர்த் துணைத்தாட்
சேந்தா சிற்றிற் சிதையேலே
தேவைப் பதியில் வாழ்முருகா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே. 2

74. விந்தைமிகு பேரறத் திலுறும்
வேட்கைப் பொலிவும் பொருணாடி
வீடுதொறும் போம்வினைப் பிணியும்
வேள்கைச்சிலை செய்வியன் போராற்
பந்தை நிகர்மென் முலையார்க்குப்
பலவா றுருகு மதிமோகப்
பரவைப் பெருக்குங் கடந்துனருட்
பார்வை நலத்திற் பழகியதா
னதையணி வார்குழை யானு
நறுஞ்சந்தன மால்வரைக் கோனு
நளிர்பூம் பொழிற்றென் னருணை
நகர்நாவலனும் பெற்றுள நலத்தைச்
சிந்தை யுணறு முனமெமது
சீரார் சிற்றிற் சிதையேலே

தேவைப் பதியில் வாழ்முருகா
சிறியேஞ் சிற்றிற் சிதையேலே. 3

75. அறிவு மறியாமையுங் கடந்த
வருமைப் பொருளென் றருமறையு
மளவில் பெரியோர்களும் பரவு
மம்பொன் மலர்த்தாட் டுணையிடத்து
வெறிமென் கடம்பாதிய கமழும்
வியன்போய்ப் புழுதி பிறழாதோ
விளையாட் டயரற் கருதியுளேம்
வெதும்பிப் புலம்பி மெலியேமோ
வறிதுண் டுவக்கு மணற்சோறுன்
மகிமை குறியா தமைத்தெமோ
வந்தவுனை யாம்வ ரும்போதேன்
வந்தாயிலை யென்றிகழ்ந் தேமோ
சிறிது முனிய முறையுளதோ
செப்பாய் சிற்றிற் சிதையேலே
தேவைப் பதியில் வாழ்முருகா
சிறியேம் சிற்றிற் சிதையேலே. 4

76. அந்நா ளொருமெய்த் தொழும்பனுள
மறியப் புழுதிபிற ழுருக்கொண்
டணுகிச் சிலவா றாடல்செய்தா
யதுநின் தொழிலே யாயிடினு
மிந்நாளெமைத் துன்புறுத் தோலுன்
னிருதாண் மறவேம் நின்னருட்சீ
ரின்றி யமைவதிலை யெனிலிங்கு
யாஞ்செய்து மற்றெவர் செயலோ
முந்நா னெறிக்கும் பொதுவாழ்நீ
முழுதுமெமைச் சோதனை புரிதன்
முறையோ வுனையே கதியெனுஞ் சொல்
மொழிவே மெமக்குண முதலாவாய்
செந்நாவலர் பற்பலர் புகழுஞ்
சேயே சிற்றிற் சிதையேலே
தேவைப் பதியில் வாழ்முருகா
சிறியேம் சிற்றிற் சிதையேலே. 5

வேறு

77. மைம்மருவு சீர்கண்ட மயிலின மகிழ்ந்தகவி
வார்கலபம் விரியவாட
மதுவுண்டு களிகொண்ட வரிவண்டி னங்களிசை
வகைவகை தெரிந்துபாட
மம்மர் மலிவானரத் திரள்களிற் சிலபலவின்
வண்கனிகளைப் பறித்து
வல்லியங் கொடியிற் பிணித்துக் கழுத்திட்டு
மத்தளமெனக் கொட்டலுங்
கைம்மணியெனக் கோங்கி னலர்களைச் சிலகொளக்
கண்டமர ரின்பமெய்தக்
கமழ்சந்த மால்வரைத் தென்றல் வந்துலவலிற்
கவின்மாரி யெனவுகுக்குஞ்
செம்மலர்ப் பொழின்னிலவு தேவைநகர் வேலவா
சிற்றிற் சிதைத்திடேலே
சிவகுரு பரானந்த சரவணபவா வெங்கள்
சிற்றிற் சிதைத்திடேலே. 6

78. மொய்வளம் பொலிதரு மலர்கூந்த லணிநிலவு
முத்தநகை மங்கைநல்லார்
மூரிநடையினை மொழியை விழையெகினமு கிளியுங்
முன்றிலிற் பஞ்சரத்தின
மெய்வளர்த் துறுநாளில் வெள்ளன்ன மற்றதை
வியந்த மூக்காறுமிஞ்சி
விரிதிரைப் புனல்வாவி நடுமலரு முண்டக
மிசைக்குலவினத் தினமேவித்
தைவசித்துக் கலவி யின்பமு நுகர்ந்துமலி
தருசினை பயந்துமோதுந்
தடவரா லினமஞ்சி நெற்பயிர்ச் சோலையிற்
சங்குமிழு முத்தைநத்திச்
செய்வரம்பிற் றுயில்கொ டேவைநக ராதிபா
சிற்றிற் சிதைத்திடேலே
சிவகுரு பரானந்த சரவண பவாவெங்கள்
சிற்றிற் சிதைத்திடேலே. 7

வேறு

79. சற்பம தேறி நடிக்கு மயூர
மதற்குத் தகும்வீரா
தத்துவ ஞான விளக்க மிலாதவர்
தர்க்கத் தொளிராதா
யற்பர்கள் வாசல் களிற ளராம
லளித்திட் டருள்கூர்வாய்
யக்கர மாறும்நினைக்க வலார்த
மகத்திற் திகழ்பாதா
சொற்பன கோடி களிற்பலவாறு
சொலக்கற்ற வினோதா
துர்க்குண நீடு மனத்தின ராதிய
துட்டர்க்கு கொருகாலா
சிற்பர னார்விழி யிற்றரு பாலக
சிற்றிற் சிதையேலே
செட்டுறு தேவை நகர்க்கு மராமெமர்
சிற்றிற் சிதையேலே. 8

80. நீறு மிகப்புனை வாரை வெறுக்கு
நெறிக்குட் படுதீயோர்
நேய மகிழ்ச்சி யுறாம லறத்தொகை
நித்தத் தயராதோ
ராறு பொறிக்கவு மாரர் விருப்ப
மகத்துட் குமுறாதேழ்
மூாய விதப்பவ தேதுயிர் கட்கெனு
மறப்க் குணராவார்
பாறு நரிக்கிறை யாக வுனைப்புகழ்
பத்தித்துறை சேர்வார்
பாத மலர்த்துகள் சூடிடு நற்றொழில்
பற்றிக்கொளல் பாராய்
தேறு புனற்சடை யார ருமைச்சுத
சிற்றிற் சிதையேலே
தேவ புரிக்குக னேமுனி வுற்றெமர்
சிற்றிற் சிதையேலே. 9

வேறு

81. பாவ ருணரா விருபதத் தொருகுமாரா
பாரதியை நேர்பலர் பழிச்சிய வினோதா
வோவ லரிதாய புகழுற் றுயர்விசாகா
ஊறுதவிர் ஞான வெளியுட் டிகழ்குணாலா
மாயலற மோதி வருமற் குலவும்வேலா
மால்வரை தொறாடல் செய்மழக்களிறு போல்வாய்
சேவலணி தோள்வயவ சிற்றி லழியேலே
தேவை முருகா வெமதுசிற்றி லழியேலே. 10

9. சிறுபறைப் பருவம்

82. ஆறு சமயங்களு நின்முகமான வாறுமுன
தடியவர்க் கடிமை யாகி
யவரடித் துகளை முடிமிசை யணியுமெய்யுணர்
வதற்கி ணையி லாதவாறுங்
கோறுதொழி லும்புலைத் தன்மையுந் தவிரில்வினை
குன்றுமென் றுள்ள வாறுங்
குருவடிவமுந் தருமமும் பத்தி யும்பொதுக்
கொள்கை யெனநின்ற வாறுங்
கீறு மதியனைய நுதன்மடவார் கண்மயன்மிகிற்
கீழ்மை வந்தெய்து மாறுங்
கிளர்சந்தமு பொருவில் லியமகமும் விளங்கவரு
கிள்ளை யயர்வுற்ற வாறுஞ்
சேறுறமு நெஞ்சகத்தினரு மறிதா வின்று
சிறுபறை முழக்கி யருளே
செகதலம் புகழ்தேவை நகர்புரந்தருள் சாமி
சிறுபறை முழக்கி யருளே. 1

83. மெஞ்ஞான மாகிய விளக்கி னொளியாவது
விளங் கருட்சித்தி யென்றும்
வியன்மருவு சகளமே நிட்கள சொருபத்தின்
மேன்மையை யுணர்த்து மென்று
மெஞ்ஞான்று மழியாத புகழ்நிறுத் துங்குண
மெவர்க்கு மெய்தாத தென்று

மிந்திராதிய ராய வானவர்கண் முத்தருக்
மிணையா கிடார் ளென்று
மஞ்ஞா னமென வளருமாணவத் தகுவனுக்
கணிமகுட மைய மென்று
மகிலத்தினுக் குதவிசெய்ய நண்ணாத் தவர்க
ளலகையிற் கொடியா ரென்றுஞ்
செஞ்ஞாயி றாமெனத் திகழ்தர விளங்கியொரு
சிறுபறை முழக்கி யருளே
செகதலம் புகழ்தேவை நகர்புரந்தருள் சாமி
சிறுபறை முழக்கி யருளே. 2

84. அருள்வளமை யொடுநிலவு சகளத் தியானத்தை
யன்றியொரு மார்க்க மில்லை
யதுதொட்ட நாளிலொரு சமயமே மிக்கதென்று
றவிர்தரு மதிற்று ணிந்தால்
பொருள்வரவு போக்கற்ற பொதுவா யிலங்குமது
புந்தியிற் றோன்றி னாலும்
பொருவரிய தூலவெளியிற் காணுமவரை முயலல்
போதநன் றதனை நீங்கி
யிருள்வசத் தினராயகம் பிரம வாதத்
தினிற்சென் றிளைக்க வொண்ணா
திருநாலு சித்திகளு மொருநாலு முத்திகளு
மேற்பவர் தமக்கு நல்கத்
தெருள்வரவ ரெனுமுண்மை புவியினுந் திகழ்வுறச்
சிறுபறை முழக்கி யருளே
செகதலம்புகழ் தேவைநகர் புரந்தருள் சாமி
சிறுபறை முழக்கி யருளே. 3

85. முத்துதிர் தரப்பல கணுக்கழை வளைக்குமதன்
முரசத்தினது முழக்கு
மூவகைப்படு நெறியினுட் கருமமு யர்வென்ன
மொழிகின்ற நூன்முழக்குந்
தத்துதவி யளவறு முயிர்த்தொகுதி யடுசமன்
றன்பகட்ட முழக்குஞ்
சாரணர் பவுத்தர் முதலாகிய துடுக்கர்வதி
தருமவைப் பெருமுழக்கு

மத்துவித வநுபூதி வந்ததொத்திறு மாப்படைந்து
மகிழ்வார் முழக்கு
மயர்வுற வெழுத்தாறு மறவாத கவுமார
ரமர்திருப்புகழ் முழங்கச்
சித்து விளையாடித் தினந்தொறுஞ் சலியாது
சிறுபறை முழக்கியருளே
செகதலம் புகழ்தேவை நகர்புரந்தருள் சாமி
சிறுபறை முழக்கியருளே. 4

86. மந்திக் குணக்கயவர் கலைமுழுது மஞ்சமிளிர்
வண்டமிழ்க் கலைமுழங்க
வதைநல மெனச்சொன்ன மறைகளொல்கப் பகவன்
மைந்தனுவன் மறைமுழங்க
வெந்தித்த நீதிபுரிவா ரழிய நீதிபுரி
வேந்தர்தம் புகழ்முழங்க
விடவரவ நிகர்கொடியர் மிடியடைய முகிலனையர்
மிக்கவாழ்வொடு முழங்கத்
தந்திக் கணத்தைநிகர் தகுவர்குலை யப்புலவர்
தமதுபேரிகை முழங்கச்
சரதமறியாப் பதிதர் தட்டழிய மாதவத்
தன்மையோர் நனிமுழங்கச்
சிந்தித்தோர் ரைவகை நிலந்தொறுஞ் சென்றினிது
சிறுபறை முழக்கியருளே
செகதலம் புகழ்தேவைநகர் புரந்தருள் சாமி
சிறுபறை முழக்கியருளே. 5

87. ஐயா னனத்தோர் பரனாகு
மையன் பொதுவி லமரர்குழா
மறிய நடித்தா னவன்மனை
மன்னை தானுமது செய்தாள்
கையார் முகத்துத் துணைவனொரு
கன்னி தனைத்தாங்கியு நடித்தான்
காக்குங் கருணை பெருமாமன்
கவின்மத்தளக் காரனு மானா
னெய்யா தசலந்தொறு நடித்தா
யேறு மயிலு நடிக்கின்ற

திளப்பம் வருமென் றுளத்தொல்கே
வெழிதொண்டகக் கானவர் மகள்கண்
மொய்யார் தடந்தோ ளாறிரண்டால்
முழக்கி யருளாய் சிறுபறையே
முருகார் பொழிறேவையில் வணிகா
முழக்கி யருளாய் சிறுபறையே. 6

88. பற்றுந் தவத்தோ ரனைவரும்
பார்பெண் பொருளாம் பகைமூன்றே
பணிக்கேதனத் தோன்முதற் பலபேர்
படியா லிழிந்து பாடிழந்தா
ரெற்று முரற்காற் றிசைவேழ
மிருநான் கினையும் பொருமார்பத்
திகல்வா ளரக்க னொருமகளா
லெண்ணில் படையோடிறந் தொழிந்தான்
கற்று துறந்துந் திருவேடங்
கவினப் புனைந்தும் பலவாயிற்
கடையி லுழன்றார் சிலரவற்றுட்
காணங் கொடிதா மெனவுலக
முற்று முணர்த்திரு வருளான்
முழக்கி யருளாய் சிறுபறையே
முருகார் பொழிற்றேவையில் வணிகா
முழக்கி யருளாய் சிறுபறையே. 7

வேறு

89. இறுக்கு பூண்முலை மறத்தி தாடொழு
திரக்கு மிசையுடையா
யெதிர்த்த சூரனை வதைத்து வானவ
ரிறைக்கு முடிபுனைவா
யுறுக்கு கார்நம னடித்தி டாதரு
ளுரைத்தை யருட்குரவா
வுமைப்பெணா ளினிதெ டுத்த போதுமுள
முருக்கு நகைபுரிவாய்
கறுக்கு மாமயி னடத்தி யேபல
கணத்தி னடுமிளிர்வாய்

கருப்பு வார்சிலை பிடித்த வேள்படை
களிக்குமெழின் முருகா
முறுக்கு கோடுறு தகர்க்கொள் சேவக
முழக்கு சிறுபறையே
முதற்கொ டேவையில் வசிக்கும் வேலவ
முழக்கு சிறுபறையே. 8

90. சேவல் பொறித்துயர் கேதன நட்பினர்
திடுக்கமற முதுநூ
றேர்ப வரைப்பெரி தேசு மடத்தினர்
செருக்கு நசிவுறவே
ளேவ நகைத்தரு காமக ளிர்க்குள
மிளைக்கு மிளையவர்பா
லேகியு நிற்புகழ் பாவலர் வெட்கமொ
டிரக்கும் வினைகெடவூர்
கோவ றையக் கவுமாரர் பதத்துகள்
குவித்த தலையினனோர்
கூப மமைத்துள பாறை யினிற்புனல்
குதிக்க வதுமுதலா
மூவலில் சத்திய வாழ்வு பெருத்திட
முழக்கு சிறுபறையே
மூதுணர் வைத்தரு தேவையின் முத்தைய
முழக்கு சிறுபறையே. 9

91. மொய்த்தகை சாலள கத்தினர் மோகனன்
முழக்கு சிறுபறையே
முற்றுணர் சீலமு டைக்கரு ணாகரன்
முழக்கு சிறுபறையே
மொத்தமு மாகி வியட்டியு மானவன்
முழக்கு சிறுபறையே
மொக்கணி வேழ முகற்கொரு சோதரன்
முழக்கு சிறுபறையே
முத்தமிழ் நாவல ருக்குயர் தாரகன்
முழக்கு சிறுபறையே
முட்பொலி தாளுறு குக்குட கேதனன்
முழக்கு சிறுபறையே

முத்த ரனேகர் வழுத்திய சேவகன்
முழக்கு சிறுபறையே
முக்கணர் தேவை யினிற்றிகழ் வேலவன்
முழக்கு சிறுபறையே. 10

10. சிறுதேர்ப் பருவம்

92. தவசிலர் பலருக்கு மொருதலைவ னெனநின்ற
சதுமுகன் பாக னாகச்
சத்தமறை பரியாக முடிவாய பிரணவந்
தணவரிய கசைய தாகக்
குவடாயிரத் துளுயர் பைம்பொற் சிலம்பிணையில்
கோதண்ட மாகவுரகக்
குலமகிப ணாணணாக முகிலனைய மாயவன்
கோதறும் பகழி யாக
நவநாத சித்தர்களு மெச்சவள ரிரவிமதி
நல்லாழி யாக வும்பர்
நவிலரும் படையாக வொன்னலர் தமைக்கடிது
நக்கெ ரிப்பது குறித்துச்
சிவனேறி யூர்தரு பெருந்தேரின் மீதிலொரு
சிறுதே ருருட்டி யருளே
செம்பொன் மலிதேவை நகரம்பரவும் வேன்முருக
சிறுதே ருருட்டி யருளே. 1

93. இருவாட் கண்மயி லனையமங்கை யர்க்கரசியா
ரெழுதிய முடங்கல் பற்றி
யெழில்வீழி மிழலையினை விட்டு நாவிற்கர
சியம்பு சொற்றடையை மீறி
வரு கோள்கள் பற்பலவு மடியார்க்கு நல்லவென
வகைபட விரித்து ரைத்து
வைகையந் துறைநீர் நலங்குலவு தென்மதுரை
வளநக ரிடத்தில் வந்து
பொருகோட்டு வேழநிகர் பூமியர் பிரானுளம்
பூரிப் பவிளை யாடியொண்
பொலிதழைக் கையினர் தமைக்கழுவி லேற்றிப்
புவித்த லையினீ நிறுத்துந்

திருநீற்றை யிகழுமவர் தலைகோடி யுருளவொரு
சிறுதே ருருட்டி யருளே
செம்பொன் மலிதேவை நகரம்பரவும் வேல்முருக
சிறுதே ருருட்டி யருளே. 2

94. காரவுணர் கையணியு மங்கலத் தரிவையர்கள்
கண்க ணீர்மிக வுருட்டக்
கழறுமவ ரிதழ்பருகும் வாயுடைத் தலைகளைக்
கனவல கையின முருட்ட
நாரணன் முதற்றேவர் மனைவியர்கண் மகிழ்வெய்தி
நகுமணிப் பந்து ருட்ட
நானிலம் விழுங்கியுமிழ் மலர்முத லனந்தத்தி
னகைவந் துநனி யுருட்டக்
கூரறிவுடைத் தவர்க ளிடையூ றொழிந்துபல
குகைதோறு மணியு ருட்டக்
குளிர்கருணை யில்லாத நெஞ்சகத் தீயரெதிர்
கொடிய நமன்விழி யுருட்டச்
சீரமரு மனையெனத் திகழ்கின்ற கைகள்கொடு
சிறுதே ருருட்டி யருளே
செம்பொன் மலிதேவை நகரம்பரவும் வேல்முருக
சிறுதே ருருட்டி யருளே. 3

95. சத்திரக் கைநிலவு முகிலனைய வேடர்தந்
தவமுழுதும் வடிவ மான
தனிநீலநிற வனிதை மருவுமித ணருகிலொரு
தண்டணிகை முனிவ னாகி
யத்திரக் கவினிலகு விழியினது பார்வைவந்
தகலந் துளைப்ப வுருகி
யவிர்தினைக் கதிர்கொண்டு பின்னிய மதாணிமுலை
யணைவது குறித்து மறுகித்
தத்திரப் பொய்ப்பசி யிளைப்புற்று மாத்தரத்
தரவுண்டு மயிலி னிறகுந்
தழையு கலந்து கொடியிற்பிணைத் திட்டபைந்
தானை புனைதரு மிடைக்கீழ்ச்
சித்திரத் தேரூர்ந்து மகிழ்குமர குருபரா
சிறுதே ருருட்டி யருளே

செம்பொன் மலிதேவை நகரம்பரவும் வேல்முருக
சிறுதே ருருட்டி யருளே. 4

96. ஓவரும் பலவிழிக ளுறுகரிய மேனியா
னுற்ற வேயுருவ மாற
வுததிநடுவள ரவுண ரருகிலயன் வந்துவந்
தொடுங்கிடுங் கொடுமை தீரக்
காவல்புரியுங் கடவுள் கையாழி தாருகன்
களம்விட்டு மகிமை யெய்தக்
கனதுயர்ப்படு மமரரைக் கண்டு கண்டமூங்
கருணையங் கடலு வப்பத்
தேவ மங்கையர் தங்கழுத்தி லணிமங்கலந்
திறமடைய வசுர மடவார்
செறிகூகை யொடுகூடி யழவன்று பலபூதர்
செயசெய வெனப்ப ராவச்
சேவலங் கொடிநிலவு தேரேறு சேவகா
சிறுதே ருருட்டி யருளே
செம்பொன் மலிதேவை நகரம்பரவும் வேன்முருக
சிறுதே ருருட்டி யருளே. 5

வேறு

97. கன்னா ருரித்துக் ககனமலர்
கமல மலரைத் தொடுத்தாங்கு
கவிசொற் றுனக்கே யணியுமவர்க்
கருகப் படுத்துங் கயவர்களும்
பொன்னாதிய மூவேட ணையும்
புறம்போ யகல வாறெழுத்தும்
புகலும் புனிதத்தி னரையிகழ்
பொல்லாக் குணத்துப் புலையர்களுந்
தன்னா மலர்த்தாண் ணிலையுணர்த்துஞ்
சதுமா மறையின் றுசமயத்
தருமத்தினர் பாற்பகை விளைக்குஞ்
சமணர் முதலானவர் களுமா
மொன்னார் குடிக்கோர் நெருப்பாவா
யுருட்டி யருளாய் சிறுதேரே

யோங்கும் புகழ்த்தேவை யின்முருகா
வுருட்டி யருளாய் சிறுதேரே. 6

98. நீருங் குளிரு மலிதருசீர்
நிலவும் பொதியைத் தலைபிறந்து
நெடுஞ்சந்தன வான்பொழி லிடத்து
நிறைபூந் துணரிற் கமழ்மணமும்
பாருங் ககனத்தொடு பிலமும்
பகர்முத் தமிழிற் கசிந்தொழுகும்
பசுந்தேன் மணமு மரமகளிர்
பனிவார் குழலிற் படுமணமுஞ்
சேரும் பெருமை யுடைத்தாகிச்
சிலர்கண் டுவப்பப் பலர்வெருளச்
செந்தாதுதிர் கேதகைச் சுரிகை
தீட்டித் தருதென்ற லம்புதுத்தே
ரூருமத னாணுறு மழகா
வுருட்டி யருளாய் சிறுதேரே
யோங்கும் புகழ்த்தேவை யின்முருகா
வுருட்டி யருளாய் சிறுதேரே. 7

வேறு

99. ஆமை யுறுப்பென வேபொறி முற்றையு
மடக்குமவர் வாழ்வே
யாறு முகத்தொரு சோதி யெனத்தெளி
பவர்க்குளுயிர் போல்வா
யேம வரைச்சிலை நாத ரிடத்தின
ளெடுக்க மகிழ்பாலா
வேழ்புவி யுட்கொளு மாயன் மனத்தினு
மினித்த புகழ்வீரர்
கோமள முத்தை யனேயென மெச்சிய
குணத்தர் துணையாவாய்
கோதறு பொற்க லாமது ரைத்தமிழ்
கொழித்த புலவோர்பா
லூமை யுருக்கொடு போமருள் வித்தக
வுருட்டு சிறுதேரே

யோகை மிகத்தரு தேவை நகர்க்குக
வுருட்டு சிறுதேரே. 8

100. சிவக்கு மாறிரு புயத்து வானவ
செருக்கு மலிதீயோர்
திடுக்க மீறிட வடுத்த பூதர்கள்
சிரிக்க வமர்நேர்வா
யவக்குழா மறவொ ழிக்கு நான்மறை
யருத்த முதலோர்வா
யளக்கர் கோவென முளைத்த மாமர
மதைக்கொய் துயர்தோளா
நவக்கு ராவொடு கடப்ப மாலையை
நயக்கு மணிமார்பா
நரைத்த மாடிவர் பவர்க்க நாளொரு
நலத்தை மொழிவாயா
வுவக்கு மோர்கிளி துதித்த பாவல
வுருட்டு சிறுதேரே
யுலப்பி றேவையில் வசிக்கும் வேலவ
வுருட்டு சிறுதேரே. 9

வேறு

101. இமையார் தமகள்வா யிதழ்ப்பருகும் வாயா
யிதண்மேவு குறமா திடத்துருகு நேயா
கமைதோ யுமுனி வோர்களைப் பிரிகிலாதாய்
கடல்சூழு முலகோர் களிக்கு மருளாளா
வெமையாள் வருதா ளிரட்டை யுடையானே
யெழுதாத மறைநா லிசைக்கரும் வினோதா
வுமைகேள்வர் புதல்வா வுருட்டு சிறுதேரே
யுயர்தேவை முருகா வுருட்டு சிறுதேரே. 10

வெண்பா

102. கள்ளைக் குடித்தவண்டின் கானமலி தேவைநகர்ப்
பிள்ளைக் கவிப்பனுவற் பேணினால் - வெள்ளைக்
கமலமின்னுஞ் செங்கமலக் கன்னியுஞ் சேர்வாழ்வுற்
றமலமதாம் வீட்டுமெய்த லாம்.

5
தில்லை பாண்டிநாயகன்மேற் பிள்ளைக்கவி

காப்பு
நேரிசை வெண்பா

1. வெள்ளைக் கவிகை மிளிர்பாண்டி நாயகன்மேற்
பிள்ளைக் கவிப்பனுவல் பேசுதற்கு - வள்ளைபடர்
மாபுரத்துட் சீரியதாம் வண்மையுறு தில்லைநகர்க்
கோபுரத்துக் கற்பகங்காக் கும்.

2. தில்லைமூ வாயிரருஞ் செந்திலீ ராயிரரு
நல்லையெனச் சொல்பாண்டி நாயகன்மேல் - வல்லையொரு
பிள்ளைக் கவிப்பனுவல் பேசுதுணை யாரென்றால்
வெள்ளைக் கவினுடைய மின்.

நூல்
1. காப்புப் பருவம்
திருமால்

3. சிவசமைய மகுடநிகர் கனகசபை தனிடனடஞ்
செய்கின்ற புனிதன் முதலாந்
தில்லைமூ வாயிரவர் துதிகூறு முருகனைச்
சேவற் பதாகை வேளை
நவமலி தமிழ்ப்புலமை முதிர்பாண்டி நாயகனை
நந்துலவு செந்தின் மேவி
நாகத்து ளாரிகல் கடிந்தோனை யகலாது
நாடொறுங் காக்க வென்றே

புவனமுழு துண்டுமிழும் நெடுமாலை நீலப்
பொருப்பனைய நாலு திண்டோட்
புங்கவனை யாழியொடு சங்கணி தடங்கையிற்
பொற்கசை பிடித்து நண்பன்
றுவளமா வுறுமிரத நடவியவி னோதனைத்
தன்மாம னான கஞ்சன்
றலைகொய்து தாதைதன் றளைகொய்த கடவுளைத்
தலைகொய் திறைஞ்சு வோமே. 1

சிவபிரான்

4. முத்தர் பலரைக் கழைவனத்தினின் மயக்கவென
முத்துமா லிகைதாங்கு மாமுலைச் சோட்டொடோர்
முக்கிய வுறுப்புமிலகக் கலைத விர்த்துவரு
முற்றுமா மயில்போன்ற மோகினிக் கேற்றகோன்
முச்சுடரெ னத்தெளிஞர் செப்பிடவி ளக்கமுறு
முக்கணா யகனேர்ந்த நால்வரைப் பாட்டுமா
மொய்த்த விதழிப்பத முறப்புரியு மெய்க்கடவுண்
முப்புரா தியர்சாம்ப லாகிடத் தோற்றுசீர்
மைத்தடம லைச்சிலையு டைப்பரம ருத்திரன்முன்
மற்செய்வோர் நடுநீண்ட தீயெனப் போய்க்கெடா
மத்தனெனை யொப்பவர்து திப்பதையும் வெற்றிறகு
வைத்ததே யெனவாங்கி மாலையிற் கோத்துளானை
வத்திரமெ னப்புலிய தட்கரிய தட்கொளரன
மட்கிடா வளைதூங்கு காதுடைப் போத்திநீர்
வற்றலின்ம திச்சடில னொப்பில் கனகச்சபையில்
வத்துவா னவனான்ற தாள்களைப் போற்றுவா
மெத்தனைவி தத்தினில்வெ றுக்கினுமெ னைக்கவரு
மிச்சைமே வியசேந்தன் வாரியிற் போட்டநூ
லெப்படியு மிப்பிறவி யிற்பெற வெனக்கருதி
யெய்க்குமா றுரையீந்த வாயுடைத் தீர்க்கவா
னெக்குறியு முற்பகர்கு லத்தவர்வ ளர்த்தகிளி
யிட்டவே லையிலேன்று போமெழிற் கீர்த்தியோ
னிக்குநிகர் சொற்பகரு மத்திமகள் பொற்புமுலை
யிற்கொண்மால் வெளிதோன்றி டாதுளத்தாக் கும்வேள்

வித்தகர்த மக்கரசெ னத்திகழ்மு ழுப்புலவன்
வித்தையோ ரிருநான்கு ஞானமுற் றோர்க்கெலா
மெத்தவுத வத்தகுமொ ருத்தனகி லத்தவரு
மெச்சுகோ மளமார்ந்த தோள்களிற் சேர்ப்பதா
மெய்ப்படு திருப்புகழ் படிப்பவர் தமக்கெளியன்
மிக்கவா ரியில்வாழ்ந்த சூரனைத் தாக்கியே
விட்புலள ளித்தவனெ னப்பக ரெமக்கினிய
வெற்றிவேல் புனைபாண்டி நாயகற் காக்கவே. 2

உமாதேவியார்

5. மந்திரப் பொருளாக்க மென்றிருப் பவள்போற்றும்
வண்கவிக் கமுதாக்கினாள் பொற்பு மிக்குளாள்
வஞ்சகக் கொடியோர்க்கு நஞ்செனத் தகுமூர்க்கம்
வந்தவர்க் கினிதூட்டு பால்வைத்த செப்பினா
ளிந்திரச் சிலைமேற்கொள் சிந்துரப் பொடிவேர்க்க
வெண்பணிப் பரர்பார்க்க வாடச்ச லித்திடா
ளெஞ்சலற் றருளூற்று மஞ்சனத் திருநோக்கி
யெங்களுக் கொருபாட்டி தாள்பற்றி மெச்சுவேன்
வெந்திறற் சமண்மாற்ற வந்தசிற் பரமூர்த்தி
விஞ்சையிற் பொருள்காட்டு ஞானக்கு ருக்களோர்
விண்டுமுற் புகழ்கீர்த்தி கொண்டமற் புயன்வேற்கை
வென்றிவித் தகனார்க்கு மேலுற்று நிற்கும்வேள்
சந்தியிற் கரிவேட்கை மிஞ்சுபிற் றுணைபூத்த
தண்பொழிற் புலியூர்க்குள் வாழ்சித்தர் பெற்றசேய்
சஞ்சலப் பிணிதீர்க்கு மென்றிருப் பவர்வாழ்த்து
சந்தமுத் தமிழ்நாட்டு வேளைப்பு ரக்கவே. 3

விநாயகர்

6. வேண்டல்போ லொளிர்ஞான வல்லவைக் காக்கமாம்
வேந்தைமா மதமேவு கையனைக் கீர்த்திபோ
னீண்டகோ புரமீது தில்லையிற் றோற்றலா
னேர்ந்துளார் வினைசாடு மெய்யனைப் போற்றுவா
மாண்ட சாரணர்தாமும் வைததுர்ச் சேட்டையே

வாய்ந்ததோட மாண்மை பொய்யரக் கேற்றுவாழ்
பாண்டர்வே ரறுமாறு செய்தருட் காட்டுமோர்
பாண்டி நாயகனா மெனையனைக் காக்கவே. 4

நவக்கோள்

7. வெங்கதிர் நெருங்கு வதனந்திகழ் நெடும்பகலை
வெண்சுடரை யங்கிறிகருங் குகனை மிக்கநூல்
வென்றிமரு வும்புதனை யண்டர்பர வுங்குருவை
விஞ்சையுண ரொண்புகரை யண்டினர்த மைக்கொலா
தெங்கணுநி றைந்ததனை நம்பலுத வுஞ்சனியை
யெஞ்சலில் விடம்பொழியு மங்கத மிரட்டையோ
டின்புறவி ரும்பியெழில் விஞ்சுகுளி கன்றனையும்
மெந்திரமவ ரைந்ததி லமைந்தொளிர மெச்சுவேன்
மங்களமி குந்ததொரு குஞ்சரியு டன்குறவர்
மங்கைபுண ருங்கணவ னன்பரைவெ றுத்திடானை
மஞ்சுதவ ழுங்கனக மன்றினட னம்புரிய
வந்தவர்த ருங்குழவி குன்றுதொறு முற்றவேள்
கொங்கவிழ்க டம்புகுர வங்குவளை தங்குகணி
குஞ்சரமு கன்றுணைவ விந்திரர்து திக்கும்வேல்
கொண்ட வயவன்சிகி யிவர்ந்தமுரு கன்றமிழர்
கும்பிட மகிழ்ந்துலவு கந்தனை யளிக்கவே. 5

கலைமகள்

8. கலப மாமயி லழலை நேர்தகர்
கவள மால்கரி யுற்றவேள்
கருணை வாரிதி நெடிய வேல்புனை
கரன்ம காரதர் சுற்றுசே
யுலகெ லாமுணர் சபையு ளானுமை
யுரிமை யானடு வைக்கவா
மொருவ னாகிய செழியர் நாயக
னுவகை மேலிட நித்தமே
யலகி லாமறை பகரு வாயின
ளதர வூறல ளிப்பதா
லகில மானிடர் சிலரும் வானவ
ரனைய ராகவி யற்றுவாள்

சலச வாதன புனித பாரதி
தமியனோ டொருசொற் சொனாள்
சரச கோமள மதுர சாகர
தவள வாணிபு ரக்கவே. 6

இலக்குமி

9. திருட்ட ரக்கன் கடற்கு ளித்துஞ்சினத்
தெதிர்க்கும் போதிலே
திறற்பு யத்தொன் றயிற்செ லுத்துந்
திருக் கரத்தன் றீதுறா
வருட சபைச்சங் கரற்கு வப்பன்றளித்
தமுத்தன் றேவர்கோ
னடத்தினைக் கொண்டிடப் பொறுத்தங் கதற்கு
மெச்சுந் தாரன்மே
லிருட்குழற் பொன்பொருட் களிப்பன பினர்க்குறத்
தன்பார் வையா
லிசைத்தெழிறு பங்கயத் தினிற்றங் கிலக்கு
மிப்பெண் கோதிலா
ளுருட்டு வட்டந் தொனித்த நத்தென்
றுரைப்பவைக்கன் பாகுமா
லுரத்தணைக் குந்துணைத் தனத்திங் கொருத்தி
நித்தங் காவலே. 7

பலதேவர்

10. அலகில் புகழ்ச்சிகொண் முனிவரர் சொற்படி
யாரநறுங் கனிபால
லமுதுநெய் சர்க்கரை யனையவை யிட்டுய
ரார்வமு டன்றினமே
திலமள விற்கொலை முதலிய தற்றவர்
சேகர மன்புறவே
திரிபுவ னத்தினின் மருவிய பற்பல
தேவரை யுந்தொழுவா
நலமுறு முத்தமிழ் மலிய வளர்த்தவர்
நாயக மென்றொளிர்கோன்
னறைமலி செச்சைகொள் வனசரன் விப்பிரர்

நான்மறை யும்புகழ்வேள்
கலகமி கப்புரி சமணொழி யப்பொரு
காளை கடம்பணிசேய்
கனகச பைச்சிவ மதலையு வப்புறு
காவல் புரிந்திடவே. 8

சமயச் சின்னம்

11. வெண்டா மரையாள் செவிகவர
விரும்பும் பலநூல் விரிப்போனை
வேதன் கதறப் புடைத்தானை
விளங்குங் சேவற் கொடியானைத்
தண்டா யுதமும் வடிவேலுந்
தாங்குங் கரத்துப் பெருமானைத்
தகைசேர் புலியூர் தனைவிரும்புந்
தமிழ்நாட் டரசைத் தினங்காப்பான்
கண்டார் வணங்கத் திகழ்காவிக்
கலையைச் சமணர் கழுவேறக்
கமழ்வெண் பொடியைச் சிவனார்தம்
கண்ணின் மணியைப் பெரிதேத்தி
வண்டார் துளவன் றிருநாம
மலைக்கோன் மகள்சிந் துரமுதலாம்
வகையைப் புகழ்ந்து பெரியோர்தாண்
மலரிற் றுகளை வழுத்துதுமே. 9

பொதுத் தெய்வம்

12. வேதவித்தாய பூரணமி யோகியர்க் கானசாதனம்
வேறறக்கூடு ஞானி களுண்மையிற் றேக்குதேன்
வீடெனப் பேசுகோவிலில் வாழ்வதெட் டாததாரகம்
வீறுடைப்பா லர்நாடொறு முன்னலிற் காட்டுசீர்
மேன்மையுற் றோர்கள்சேர் தரும்நால்வகைப்
பூமியோடொரு
வேமழலிற் பாலைமீதினு நண்ணுதற் கேற்றகோ
மேவலர்க் கீறுதோய்தரு போருடைத் தீரராகிய
வீரரைக் கோபியாதது பன்மதத் தாற்கெடா

தோதலிற் றோணாதது வாய்மையிற் சாருமாதவ
ரூழ்கெடச்சாடு பேரருள் விண்முகிற் கூட்டு
ரோதமவற் றாதுமீறலு றாதடக்காண் மைகூர்பொரு
ளூர்சுடர்க் காயிபோல்வது பொன்னதைப் போற்றிவா
மூரவர்க் காவியாம்மட மாதர்பொய்ப் போகமால்கெடு
மோகைமிக் கீயுமாகுரு வென்னநத் தார்க்கெலா
மூறுறிற் பேசிடாதது மாய்வில்சத் தாதியாவொளி
ரோர்பொதுத் தேவெணாநித மெண்ணி மிக்கேத்துவாம்
வாதமிட் டேமுனாளெதிர் சாரணர்க் கேமனானவன்
வாரியிற் சூரர்மாய்வுற மின்னயிற் றூக்கியே
வானகர்த் தேவர்கோன்முடி சூடிமுற் போலநாடொறும்
வாழ்வைத் தோன்மகாரதர் பன்னுமெய்க் கீர்த்தியோன்
மாவலிக் காகவோகுற ளாயிரப்போ னுமாகிய
மாயனுக் கானதோர்மரு கன்முழுத் தீர்க்கவான்
வாரணக் கேதனாதிபன் மோகனக் கோமளாகரன்
மானெனப் பார்வைசேரெம தன்னையர்க் காக்கவா
னேதமற்றோர் கள்சூழ்புலி யூரிலுற் றாடுவார்மக
வேயெனக் கூறுவாரையு மன்னவர்க் காற்றலா
வீறில்சொற் பேசுதேசிக னேயெனப் பேணுவாரையு
மியாவர்சொற் போலும்வாழ்பெரு வண்மையைப்
பாக்களாலி
யாமெனப் பாடுவாரையு நாடுமுற்சா கன்மாமயி
லேறும்வித் தாரவேமலை மன்னன்மற் றோட்களா
வீடில்சொற் சேரவாழ்வுறு பூழியக் கோடிநாயக
னேதிலர்க் கேறதாவள ரண்ணலைக் காக்கவே. 10

2. செங்கீரைப் பருவம்

13. நீர்பூத்த வேணிப் பிரானெழிற் றில்லைநடு
நின்றுநட மாடக் கண்டு
நெக்குருகு மம்மைதிரு முலையமுது மோராறு
நீடொளி மடந்தை மார்தம்
வார்பூத்த கொங்கைதரு பாலும் புசித்தன்பர்
மனமனைய தாம ரைப்பூ
மத்தியிற் கவுமார சமையநிகர் பொய்கைமிசை
வைக்கக் கிடந்து கொஞ்சிப்

பார்பூத்த நாவலர்க் குதவுகர பந்தியிற்
பன்னிரு விரற்சு வைத்துப்
பகரறு மெழுத்தாறு மொழிபவர் சுமக்குமிரு
பாதவிரல் வாய்ம டுக்குஞ்
சீர்பூத்த குழவியென விளையாடு மொருவனே
செங்கீரை யாடி யருளே
செந்தமிழ்க் கிரிநிலவு தென்பாண்டி நாயகா
செங்கீரை யாடி யருளே. 1

14. வல்லையொத் தொளிர்முலைச் சிவகாம வல்லிதிரு
மடிமீது வைத்த ணிந்த
வளைகிலுக் கிடமலர்க் கைகொண்டு நீராட்டி
வன்ன முன்றா னையைக்கொண்
டொல்லையிற் றுவரமெல் லெனவொத்தி யாற்றிப்பி
னுலகெலா முய்ய வேண்டி
மொருவிதப் பொட்டிட்டு ஞானமுட னெண்சித்து
முதவுபா லமுத மூட்டிக்
குல்லையிற் றிகழ்வதன மோராறு மலருங்
குறுஞ்சிரிப் போர்ந்து கொஞ்சிக்
குஞ்சரமு கத்தவன் றொடர்வுறக் கொடுவந்து
குறைவில்சிற் சபையி லாடுந்
தில்லைவித் தகனிடத் துதவவளர் குழவியே
செங்கீரை யாடி யருளே
செந்தமிழ்க் கிரிநிலவு தென்பாண்டி நாயகா
செங்கீரை யாடி யருளே. 2

15. கொங்கவிழ் மலர்த்தரு நிழற்கொண்ட புலவருங்
குவலயப் புலவர் தாமுங்
குறைவில்சீ ரெய்துமென மகிழ்வுறச் சூர்முதற்
கொடிய கோலரச ரன்னோர்
தங்கணத் தினர்புறச் சமையத்து ளார்புலைத்
தன்மையோ ரனையர் தாமே
தபனன்முற் கிருமியிற் றுடிதுடித் தயர்வுறச்
சட்சமைய வாண ரெல்லா
மங்களம் பலசெய்ய மடுவில்வரு மைந்தனே
மறுவில்சிற் சபையி லாடும்

வள்ளலார் தவமுதிர வடிவான தெய்வமே
வதனங்க ளாறு கொண்டாய்
செங்கரும் புடையவேண் மனநாணு மழகனே
செங்கீரை யாடி யருளே
செந்தமிழ்க் கிரிநிலவு தென்பாண்டி நாயகா
செங்கீரை யாடி யருளே. 3

16. தந்தையா கியபரன் கனகசபை யதனிடஞ்
சரணொன்று தூக்கி யாடத்
தாயான சிவகாமி காளியுரு வாகியோர்
சபதத்தி லாட மாமன்
கந்தையினி லவல்கொணருற் மவன்முதற் பலதோழர்
காணவொரு பாம்பி லாடக்
கமலையா கியமாமி யாறெழுத் தோதுமவர்
கவிபகர் தலத்தி லாடப்
பந்தைநிகர் கொங்கைகொளும் வல்லவை தனைக்கொண்ட
பரிவினாற் றமைய னாடப்
பத்தர்வா னவர்முனிவர் முதலினோ ரனைவரும்
பகையொழிவ தெண்ணி யாடச்
சிந்தையினி லாடுநீ திருவருட் களிகொண்டு
செங்கீரை யாடி யருளே
செந்தமிழ்க் கிரிநிலவு தென்பாண்டி நாயகா
செங்கீரை யாடி யருளே. 4

17. புத்தமுதெ னக்கவி தொடுத்தணியு முத்தமப்
புலவர் களுமுடன் முழுக்கப்
புனையும்வெண் ணீறுடைய கவுமார புனிதரும்
புலையாதி தவிரும் வண்மைப்
பத்தர்களு மலைகடலை யுண்டுவிட் டவன்முதற்
பலகோடி முனிவர் தாமும்
பணிகின்ற முருகனே யணிதுங்க வேலிலகு
பன்னி ருபுயத் தண்ணலே
செத்தமக பதியென்பு மலவரன் றலைகளுந்
திருமா லுடற்கு றிப்புஞ்

சீறுபாம் பணியும் புலித்தோலு மாடிடச்
சிற்சபை யிடத்தி லாடுஞ்
சித்தனரு ளக்குலவு சிவகாமி புதல்வனே
செங்கீரை யாடி யருளே
செந்தமிழ்க் கிரிநிலவு தென்பாண்டி நாயகா
செங்கீரை யாடி யருளே. 5

வேறு

18. இன்பக் கடலே யருட்குன்றே
யெளியார்க் கெளியா யெனையாளு
மிறைவா கொடியோ ரீடழிக்கு
மெழில்வேல் பிடித்த பெருமானே
வன்பர்க் கிரங்கா மனத்தானே
மயின்மீ தேறி வருமுருகா
மகவான் மகளும் புனக்குறவர்
வளர்த்த கொடியும் புணர்கணவா
தன்பத் தரின்மேற் சமனொருக்காற்
றன்னை மறந்து வருவானேற்
றடிவா னவனூர் தனைநோக்கிச்
சபையி னடிப்போன் றருங்குகனே
யன்பர்க் கருளுங் குருபரனே
யாடி யருளாய் செங்கீரை
யணிசேர் பாண்டி நாயகனே
யாடி யருளாய் செங்கீரை. 6

19. பத்தி நெறியோ ரிகழ்ந்தாலும்
பரிந்தாண் டருளு முருகோனே
படிற்றுச் சமணர் குலமாளப்
படித்தாற் குதவுங் கலையுடையாய்
தித்தித் திருந்து வினையொழிக்குந்
தெவிட்டா வமுதே யெனைச்சூழுந்
திருக்கண் ணுடையா யடற்சேவல்
சிறக்குங் கரத்தாய் தினந்தோறுந்
துத்திப் பணப்பாம் பணிகளையுஞ்
சுமந்து நடிப்போன் றொழுங்குரவா

துதிகூர் வளமைப் புலியூரிற்
றூயோர் பரவுந் துணைத்தாளா
யத்தி முகவன் றுணையானாய்
யாடி யருளாய் செங்கீரை
யணிசேர் பாண்டி நாயகனே
யாடி யருளாய் செங்கீரை. 7

வேறு

20. தமருட னலைகட லதனிடை மருவிய
தானவ ருங்கூறை
தனையிகழ் சமணர் கண்மு தலிய
சமையர்கடாமு மெலிந்தோட
நமதெனன் முதலிய பிழைதவிர் முனிவரர்
நாகரி கம்பேச
நறைமலி துளவனு மலர்மிசை யுறைதரு
நான்முக னும்பேண
விமகரன் னெரிகதிர் விழியென மருவிடு
மீசன் மகிழ்ந்தாட
வெழில்மிகு சபையினி லனைவரும் வசமற
வீடில் வளஞ்சேரு
மமரர்கள் பதிகொளு மரசுறு துயர்கெட
வாடுக செங்கீரை
யணிமிகு தமிழுடை யவர்புகழ் குருபர
வாடுக செங்கீரை. 8

21. கடலிடை மலிவுறு கொடியவர் குலமறல்
காணவி ழைந்தோர்கள்
கலபியி லயில்புனை புயமொடு வருமொரு
காரண னென்றோர்கண்
மடவியர் மயல்கெடு மநுபவ துபெற
வாடிமெ லிந்தோர்கண்
மலைதொறு முனதருள் பரவிடு மதுபெரு
வாழ்வென நின்றோர்க
ளிடர்கெட வொருசபை யதனிட நடமிடு
மீசனு மன்பாரு

மிணைதவிர் முனிவரு மளவறு மகிழ்வுற
வேதிலர் கண்கூச
வடவுறு மமரர்க ளதிபதி முடிகொள
வாடுக செங்கீரை
யணிமிகு தமிழுடை யவர்புகழ் குருபர
வாடுக செங்கீரை. 9

22. செங்கன கந்திக முஞ்சபை யன்சுத
செங்கோ செங்கீரை
செந்திலில் வந்தவு ணன்றனை வென்றவ
செங்கோ செங்கீரை
செங்கண் முகுந்தன் விரும்பிய சுந்தர
செங்கோ செங்கீரை
தெம்புறு பைங்கிளித் தங்கு நெடும்புய
செங்கோ செங்கீரை
சிங்கள ரும்பர வும்படி நின்றவ
செங்கோ செங்கீரை
செண்டல ருங்கர மங்கையர் வங்கண
செங்கோ செங்கீரை
சிங்கமு மஞ்சவ ரந்தரு புங்கவ
செங்கோ செங்கீரை
தென்பொதி யந்தரு தண்டமிழ் கொண்டவ
செங்கோ செங்கீரை. 10

3. தாலப் பருவம்

23. கங்கை குலுங்கச் சடைதுவளக்
கனக சபையி னடிப்போனுங்
கரிய குயில்போ லருகினிற்குங்
கருணைக் கொடியுங் களிகூர்ந்து
செங்கை மலரைப் பதமலரைச்
சென்னிக் கணிந்து விழிமலரிற்
சேர்த்து முகர்ந்து முத்தமிடுஞ்
செல்வக் குமரா தினைப்புனத்து
மங்கைப் பருவக் குறத்திமன
மகிழுங் கணவா மகவான்றன்

மகளுக் கினிய மணவாளா
வடிவேற் குகனே வழிபடுவோர்
சங்கை தவிர்க்கு குருபரனே
தாலோ தாலோ தாலேலோ
தமிழ்சேர் பாண்டி நாயகனே
தாலோ தாலோ தாலேலோ. 1

.24. சிந்திற் றவழு மலைக்கூட்டடந்
திகழ்மா மணியைத் தினமெறியுந்
திருச்செந் தூரிற் றன்னனைய
தெளிந்த மறையோர் பணிகொண்டு
கந்திப் பொதும்பர் சூழ்புலியூர்
கனக சபையிற் றாதைநிகர்
கல்விக் கடலா மந்தணர்தங்
கரங்கூப் பிடக்கண் டுளங்களித்து
வந்திப் பவர்க்கு மெழுத்தாறு
மனத்துட் கருது மாதவர்க்கும்
வரமீந் தருளச் சலியாது
வளருங் குமர குருபரனே
தந்திக் கிளைய முருகோனே
தாலோ தாலோ தாலேலோ
தமிழ்சேர் பாண்டி நாயகனே
தாலோ தாலோ தாலேலோ. 2

25. அத்தி முகவன் கனகசபை
யதனி லாடு மருட்பெருமா
னளவி லுயிர்க்குந் தாயானா
ளரவிற் றுயிலு நெடுமாயோன்
பத்தி யுடையா ருணர்ந்துபணி
புனிதக் குரவ னருக்கனெனப்
போற்றுஞ் சமைய மோராறும்
பொருந்து முகங்க ளுடையானே
பத்தி நெறியோர்க் கெளியோனே
பழியும் புலையும் பெருக்குகின்ற
படிற்றுச் சமையத் தினர்காலா
பகைவே ரறுத்துத் திரும்பிவருஞ்

சத்தி வடிவேற் பெருமாளே
தாலோ தாலோ தாலேலோ
தமிழ்சேர் பாண்டி நாயகனே
தாலோ தாலோ தாலேலோ. 3

26. வன்பே யனைய பிடகரையும்
வணக்கும் பெருமைப் புலியூரில்
வரத னாருஞ் சிவகாம
வல்லி யாரு மகிழ்புதல்வா
பொன்பே ணியர்சீர்க் குறிஞ்சிதொறும்
பொருந்துந் திருத்தாட் பெருமானே
பூதர் மனம்போற் சமராடும்
புனிதக் குகனே பொறைக்கடலே
முன்பே மயின்மேல் வரவேண்டு
முழுநீற் றினரை முனியாத
முருக வேளே முகந்தோறு
முக்கண் ணுடையாய் முறைப்படியே
தன்பே ருரைப்பார்க் கெளியோனே
தாலோ தாலோ தாலேலோ
தமிழ்சேர் பாண்டி நாயகனே
தாலோ தாலோ தாலேலோ. 4

27. வலியோர் புகழ்போன் மிகநீண்ட
வளஞ்சேர் பொழிலிற் குரக்கினங்கள்
வாழைக் கனியு மாங்கனியும்
வயிற்றுக் கருந்தி மனக்களிப்பான்
மலிவார் பலவில் வெடித்தகனி
வகிர்ந்து சுளையிற் சிறிதடக்கி
மற்றச் சுளையை யெடுத்தெறிந்து
மருவித் திரிந்து களிறார்க்கு
மொலிகேட் டிடியென் றுளம்பதறி
யுயரும் பூகத் தகல்பாளை
யுட்போ யொதுங்கும் புலியூரி
லொளிருங் கனக சபைநடுவிற்
சலியா தாடு மரன்புதல்வா
தாலோ தாலோ தாலேலோ

தமிழ்சேர் பாண்டிய நாயகனே
தாலோ தாலோ தாலேலோ. 5

வேறு

28. வெங்கண் மடந்தையர் விழைவா லெளியேன்
வீணே மாயாதே
வெண்கொடி யின்புறும் விதிநூன் முழுதோர்
மேலோர் தாழாதே
பங்கய மின்பல பழிசேர் கொடியோர்
பாலே வாழாதே
பங்கமி லுன்றுதி பகர்வார் கொளுமால்
பாழே போகாதே
செங்கன கங்கொடு திகழோர் சபைசேர்
சீரார் மாளாதார்
சிந்தையி னின்றொளிர் சிவனா ரெழிலார்
சேணூர் வானோர்தாழ்
சங்கரர் முன்புரி தவமா முருகா
தாலோ தாலேலோ
தண்டமிழ் கொண்டவர் தனிநா யகனே
தாலோ தாலேலோ. 6

29. கஞ்ச மெனுங்கொடி கமழ்தா ணினைவார்
காசால் வாடாதே
கங்குல் பொருங்குடை கவியா தொழிசீர்
காணா தாயாதே
நெஞ்சறி யும்பெரு நெறியோர் புலையோர்
நீரான் மாயாதே
நிந்தையெ னும்பிழை நிறைவா ரிலர்பா
னீள்வா தாடாதே
மஞ்சட ரும்பொழின் மலிவார் புலியூர்
வாழ்வா னார்பாலா
வண்டரு டம்பினை வகிர்கூர் மிகுமோர்
வார்வேல் சேர்தோளா
தஞ்சம்வி ரும்புநர் தமையாள் குகனே
தாலோ தாலேலோ

தண்டமிழ் கொண்டவர் தனிநா யகனே
தாலோ தாலேலோ. 7

வேறு

30. கொண்டல் பொழிந்திடல் குறைவா கிடுமோர்
கோதூர் தோயாதே
கொன்றவை தின்றிடு கொடியோர் களிகூர்
கோலூ டாடாதே
மண்டல மெங்குநென் மலிவா விளைசீர
மாறாதே வாளால்
வம்பரு டம்பரி வயமே வியகோன்
வாழ்வூ றாகாதே
தெண்டனி டுந்தவர் சிரமீ தவிர்தாள்
சேர்சே யாம்வேளே
சிங்க முகம்பெறு திருமான் மருகா
தீநேர் வேலோனே
சண்டனை வென்றுயர் சபையார் மகனே
தாலோ தாலேலே
தண்டமிழ் கொண்டவர் தனிநா யகனே
தாலோ தாலேலோ. 8

வேறு

31. சிகிமிசை யடியவ ரெதிர்வரு நலமுறு
சிறுவா தாலேலோ
திரைகட லிடைவளர் பவர்கெட வமர்பொரு
திறலோய் தாலேலோ
சகியின முடனிதண் மருவிய கொடிபுணர்
தலைவா தாலேலோ
சரவண மடுவினில லர்தரு மலர்நிகர்
சரணா தாலேலோ
வகியணி பெருவயி றுடையவ னுடன்வரு
மரசே தாலேலோ
வமரர்கள் ளதிபதி மகளொடு ரகசிய
மறைவாய் தாலேலோ

மகிதல முழுமையும் வழிபடு சபையினர்
மகனே தாலேலோ
வழுதியர் குலமணி யெனவயி லுடனொளிர்
வயவா தாலேலோ. 9

32. புலியர வுடன்மகிழ் வுறநட மிடுமவர்
புதல்வா தாலேலோ
புணரியில் விடுசில பனுவல்க ளருள்வது
புகல்வாய் தாலேலோ
கலியொடு சனியனு நசிவுறு நலமருள்
கரனே தாலேலோ
கதியினை யளவறு புகழொடு தருமிரு
கழலோய் தாலேலோ
கெலிமிகும் வனசரர் சிறைகவர் திறலுறு
கிழவா தாலேலோ
கெடுதியின் முயல்பவர் குலமற வருமொரு
கிளியாய் தாலேலோ
மலிவுறு தமிழுணர் புலவர்க ளரசென
வளர்வாய் தாலேலோ
வழுதியர் குலமணி யெனவ்யி லுடனொளிர்
வயவா தாலேலோ. 10

4. சப்பாணிப் பருவம்

33. விண்பூத்த தேவர்குல மும்முரசு கொட்டமுது
வேதங்க ளோசை கொட்ட
வெண்பொடிப் பூதகணர் தோள்கொட்ட மேகங்கள்
வேலைநீர் மொண்டு கொட்டப்
பண்பூத்த கந்தருவர் மலர்மாரி கொட்டவவர்
பாரிமார் வீணை கொட்டப்
பாவலவர் துதிகொட்ட வோராறு சமயப்
பகுப்புளா ருவகை கொட்டத்
திண்பூத்த கொடுமைநிறை தானவர்க ணெஞ்சுந்
திடுக்கென்று கொட்ட மருள்சேர்
தீயசம யத்துளார் கண்ணருவி கொட்டச்
செழுந்தாது கொட்ட மலருந்

தண்பூத்த நிபமுறு பன்னிரு புயத்தனே
சப்பாணி கொட்டி யருளே
தருமமிகு புலியூரில் வருபாண்டி நாயகா
சப்பாணி கொட்டி யருளே. 1

34. இந்திரன் மகட்கினிய கணவனே மறமக
ளிரக்கமுற் றுதவு மாவுண்
டேப்பமிட் டொருநெடிய தடியோடு தள்ளாடு
மெழினரைக் கிழமு னிவனே
மந்திர முதற்குறியெனும் பிரண வப்பொருளை
வழிபடு மவர்க்க ளிக்கும்
வள்ளலே மலைதோறும் விளையாடி மயிலேறி
வருகின்ற குமர வேளே
யெந்திர மனைத்தினு நிறைந்தவை கடந்தொளிரு
மேகனா மெம்பி ரானே
யேதமற் றென்றைக்கு மொருபடித்தா யன்ப
ரிதயமலர் தோறு மொளிருஞ்
சந்திர ரெனக்குலவு சண்முகத் தொருவனே
சப்பாணி கொட்டி யருளே
தருமமிகு புலியூரில் வருபாண்டி நாயக
சப்பாணி கொட்டி யருளே. 2

35. மகபதியு மவன்மகனு மற்றவா னவர்களு
வமதுவ தொழித்து யர்ந்தாய்
வாரியொடு கிரவுஞ்ச மலையையும் பொடிசெய்து
வருதுங்க வேல்பு னைந்தாய்
குகனெனும் பெயர்தழைய வெனவளவில் பல்சீவ
கோடியி னிறைந்தி ருந்தாய்
கோலா கலக்கலப மயிலேறி யரன்முன்பு
குவலயஞ் சுற்றி வந்தா
யிகமொடு பரத்துமெய் யடியவர் நிமித்தமே
யெண்ணரிய வாடல் செய்தா
யென்னையும் பொருளெனக் கொண்டுசில வாசக
மியம்பிடு மிரக்க முற்றாய்
சகளமொடு நிட்களமு மாகிநின் றாய்சிறிது
சப்பாணி கொட்டி யருளே.

தருமமிகு புலியூரில் வருபாண்டி நாயக
சப்பாணி கொட்டி யருளே. 3

36. செங்கடம் புங்குவளை யுங்குரவும் வெட்சியுஞ்
செவ்வந்தி யுங்கொன் றையுஞ்
செழுமைதிகழ் புனலியுங் கூதளமு மறுகுந்
திருத்து ழாயும் பிச்சியும்
பங்கயமு மணிகின்ற பன்னிரு புயத்தனே
பைந்தமிழ்க் கிள்ளை யுடையாய்
பற்றலர் நடுக்குறக் கூவும்வெண் சேவற்
பதா கைக்கரத் தண்ணலே
யெங்கணு நிறைந்துமடி யவர்களா லொருவடி
வெடுத்து விளையாடு முருகா
வீரைந்தொ டொருவகை யுருத்திரப் படைகளோ
டெழில்வேல் சுமந்து நின்றாய்
தங்கமலை வில்லியார் தரவந்த பாலனே
சப்பாணி கொட்டி யருளே
தருமமிகு புலியூரில் வருபாண்டி நாயக
சப்பாணி கொட்டி யருளே. 4

37. கெருவமுட னெதிர்சிங்க னுயிர்கவரும் வச்சிரங்
கீழ்மே லிலாத சூலங்
கிளர்புனத் தொருபேதை புருவமொடு கண்ணிற்
கிளத்தும் வில்லொளிர் சாயகந்
தருவரசன் மகணுதலை யனையவாள் கேடகஞ்
சரபமே யென்ற கோழி
தனியாழி யங்குசம் பாசமொடு சுரிகையுஞ்
சத்தி வேலும்பு னைந்து
திருவளரு மலர்நிகரு மபயவர தங்கொண்டு
செங்கு முதநீல மேன்னத்
திகழும்வாய் விழிகளு முகமாறொறு டெதிர்வந்து
சேவடி யளிக்கு மெந்தாய்
சருவசத் துருநாச னெனநின்ற முருகனே
சப்பாணி கொட்டி யருளே
தருமமிகு புலியூரில் வருபாண்டி நாயக
சப்பாணி கொட்டி யருளே. 5

வேறு

38. நிலவிற் றிகழும் வெண்ணீறு
நிறைந்த மேனி யுடையாரு
நீதி வழுவா மன்னர்களு
நிசநூ லுணர்ந்த புலவோருங்
கலகச் சமணர் முதலோரைக்
கறுவித் தவஞ்செய் பெரியோருங்
கறைதீர் சுருதிப் பொருளுணர்ந்து
களிகூர்ந் துலவு மறையோரு
மலமுப் பிணிதீர்த் தருள்வழங்கு
மலர்த்தாள் வழுத்தச் சிவபெருமான்
மழைக்கா ரிருணேர் முயலகன்மேல்
வானோர் புகழ நடம்புரிசீர்
குலவும் புலியூர்க் குருபரனே
கொட்டி யருளாய் சப்பாணி
குறைதீர் பாண்டி நாயகனே
கொட்டி யருளாய் சப்பாணி. 6

39. உழவ ரவிழ்த்த பகட்டினங்க
ளுவகை மிகலாற் குதித்தோடி
யோரா யிரநெட் டிதழ்விரிக்கு
முயர்பூந் தடத்திற் புகுந்துழக்கிக்
கழக மனைய வளைக்கூட்டங்
கதறத் திரும்பிப் பெருவேலி
கடந்து கருப்பஞ் சோலையிற்போய்க்
கனுமுத் துமிழ்ந்து கறித்தருந்திப்
பழகுந் தொழுவைக் கருதிவரும்
பான்மை தவிராப் புலியூரிற்
பரமன் மகிழவவன மனைதன்
பருகா முலையிற் பால்சுரக்கக்
குழவி யெனவந் தருள்குமரா
கொட்டி யருளாய் சப்பாணி
குறைதீர் பாண்டி நாயகனே
கொட்டி யருளாய் சப்பாணி. 7

வேறு

40. அடியவர் மகிமையொ ரணுவள வறிவரு
மற்பர் குதித்தோட
வலைகடன் மிசைதுயி னெடியவ னுறுதுயி
லற்று விழிப்பாக
மடிவறு மடிவின ருணர்வொடு னயில்செயு
மற்றொழி லைக்காண
மகிதல முழுமையு நிறைவுறு மிடிகெட
மற்றம தத்தோர்க
ளிடியொலி கொளுமர வினமென மனமிக
வெய்த்து விழக்கேடி
லிமையவர் குதிகொள வெளியனு மகிழ்வுற
விக்கதெ னப்பேசு
கொடியெதிர் சபைநடு நடமிடு மவர்சுத
கொட்டுக சப்பாணி
கொழிதமி ழுடையவர் வழிபடு குருபர
கொட்டுக சப்பாணி. 8

41. மதியினில் வலியவர் கொளுமறு சமையமு
மட்கல றத்தேவர்
மகபதி னயனரி முதலினர் துயர்கெட
வக்கிர முற்றாதி
விதிதவ றியசிலர் குலமொடு நசிவுற
வெட்டும் விறற்பூதர்
மிகுபவு தணிவுறு மெனமகிழ் றவுயர்
விற்பனர் சொற்கூற
முதிரொளி மருவிய சபையின ரிணைதவிர்
முத்தி பெறப்பாடு
முறையினர் சதுரர்கள் கருதிய பொருள்பல
முற்றரு கைக்காரர்
குதிரையில் விடைமிசை யிவர்பவர் விழிமணி
கொட்டுக சப்பாணி
கொழிதமி ழுடையவர் வழிபடு குருபர
கொட்டுக சப்பாணி. 9

வேறு

42. குன்று தொறுந்தின முந்திகழ் சுந்தர
கொட்டாய் சப்பாணி
கொந்தல ருங்குர வம்புனை யுங்குக
கொட்டாய் சப்பாணி
குன்று நலந்தழை யும்படி வந்தவ
கொட்டாய் சப்பாணி
கொம்பெனு மங்கையர் பங்கிலி ருந்தவ
கொட்டாய் சப்பாணி
கொன்றுணும் வன்தற வன்றனை வென்றவ
கொட்டாய் சப்பாணி
கொன்றையன் மபக மன்றரு ளுஞ்சுத
கொட்டாய் சப்பாணி
கொன்றுடி யென்ற நடம்புரி யும்பத
கொட்டாய் சப்பாணி
கொஞ்சு நறுந்தமிழ் தந்தவர் தங்குரு
கொட்டாய் சப்பாணி. 10

5. முத்தப்பருவம்

43. கன்னற் சிலையான் மனநாணுங்
கவின்மிக் குடையாய் நடமாடுங்
கலப மயின்மேற் பவனிவருங்
கந்தா கருணைக் கடலமுதே
பன்னற் கரிய பிரணவச்சீர்
பகருங் கனிவாய்க் குருபரனே
பாலை நிலத்தி லொருகவிக்காப்
பதத்தா னடந்த பான்மையனே
துன்னற் றனத்துச் சிவகாமி
துதிக்க நடிப்போன் மடிமீதிற்
றொழுவார் வினையைக் களையுமொரு
தும்பி முகனோ டிருப்போனே
முன்னற் கரிய பெரும்புகழ்சேர்
முருகா முத்தந் தருகவே
முழங்குந் தமிழ்ப்பாண் டியர்குலத்து
முதல்வா முத்தம் தருகவே. 1

44. வருந்தித் துதிப்போர் விழிகாண
மயின்மீ தேறி வருங்குரவா
வாளேந் தியகை யிரணியன்றன்
மார்பைப் பிளந்தோன் மருகோனே
குருந்தி லுமையாண் மலர்க்கரத்திற்
குலவும் விளையாட் டுடையானே
கொல்லா விரதக் கவுமாரர்
குறிக்கும் பொருளே குறத்தியித
ழருந்திக் களிக்க முனியானாய்
யமரர் பதியிற் களிறெடுக்கு
மரிவை கணவா புலியூரி
லமரோர் விரும்பு மருட்கடலே
முருந்திற் றிகழும் நகைக்குமரா
முறையான முத்தந் தருகவே
முழங்குந் தமிழ்ப்பாண் டியர்குலத்து
முதல்வா முத்தந் தருகவே. 2

45. பாவா ணருக்கின் னருள்வழங்கும்
பரம குருவே யடியாருட்
பதியுந் திருத்தாட் பெருமானே
பங்கே ருகப்பூ வுடையானை
நாவா லொருசொற் புகன்றுதலை
நான்குங் குலுங்கப் புடைத்தோனே
நல்லோ ரெவர்க்குந் துணையாவாய்
நறைப்பூங் கடம்பு புனைதோளா
பூவா முயிர்க்கோர் கயிலையெனப்
புகன்று தொழுதோன் கதியடைந்த
புலியூர் தனைவிட் டகலாமற்
பொருந்தும் புகழ்சேர் புனிதர்களா
மூவா யிரவர் பணிகுமரா
முகிழ்வாய் முத்தந் தருகவே
முழங்குந் தமிழ்ப்பாண் டியர்குலத்து
முதல்வா முத்தந் தருகவே. 3

46. மாதுங் களிறு மழைமுகிலும்
வளையுங் கரும்பும் வரைக்கணுவும்

வாழை முதலா மற்றவையும்
வழங்கு முத்தங் களைவிரும்பே
னோதுங் கடவுள் பலர்தாமு
முலவாத் திருப்பாற் கடற்பிறந்த
வுண்கண் ணணங்கார் களுங்கொடுக்கு
மொருமுத் தமுநன் றெனவுரையேன்
காதுங் குளிரத் துதிகூறிக்
கவுமா ரத்தோர் மொழிப்படியே
கடம்பு குவளை குரவாதிக்
கமழ்பூ வெடுத்துன் பதத்தணிவேன்
மோதுங் கடற்சூர தனைத்தடிந்த
மொய்ம்பா முத்தந் தருகவே
முழங்குந் தமிழ்ப்பாண் டியர்குலத்து
முதல்வா முத்தந் தருகவே. 4

47. செய்யார் வரம்பின் முகிலூர்வான்
செயலைப் பரவிக் குரவையொலி
சிறக்கத் தொழியி லிறங்கியிரு
செம்பொற் குடநேர் முலைகுலுங்கக்
கையா னாற்று முடியுலைத்துக்
கவிழ்ந்து நிமிர்ந்து நடுமகளிர்
கண்வேல் பாயச் சிலவுழவர்
காம வெறிகொண் டவரருகி
னெய்யார் குழலைத் திருத்துநர்போ
னெருங்கும் புலியூர்க் கனகசபை
நிமலன் மகிழப் பலதேவர்
நிதமும் புகழப் பகைதடிந்து
மொய்யார் கடம்பு புனைதோளா
முன்போன முத்தந் தருகவே
முழங்குந் தமிழ்ப்பாண் டியர்குலத்து
முதல்வா முத்தந் தருகவே. 5

வேறு

48. செப்புறழ் முலைச்சியர் மயக்குற விளங்கெழிற்
றிண்டோ ளுடைக்கந்தனே

சித்தர்பல ருக்குமொரு குருவாகி மலைதொறு
திருநடம் புரிதெய்வமே
வெப்புறு குணத்தவுணர் சமணர்முத லாகுமவர்
வேரறுத்துத் திரும்பும்
வேலாயு தங்கொண்டு மயிலேறி விளையாடும்
வீராதி வீரமுருகா
மைப்புய னடத்திவரு மகபதிக் கரசுதவும்
வள்ளலேயென் னையொருநாள்
வண்டமிழ்க் கிள்ளையென முக்காலு முரைசெய்த
வாயுடைய குருநாதனே
முப்புர மெரித்துநட மாடியவன் மைந்தனே
முத்தங்கொடுத் தருள்வையே
முதிர்புகழ்ப் பாண்டியரின் முதன்மைபெறும் வயவனே
முத்தங்கொடுத் தருள்வையே. 6

49. மைக்கடலதி பொருநை மாநதியிற் னெல்லைநடு
வருகாலி லொருகிணற்றில்
வைப்பாறதிற் கழுகு மலைவாவி யிற்கனலில்
வண்டமிழ்ப் பனுவலெல்லாந்
தக்கவர் கொளத்தமிய னுதவவுங் கழுவேறு
சமணரிற்கொ டியபுலையோர்
தம்மைநரி நாய்கழுகு பேய்பருந் தாதியவை
தாமுணப் போர்புரிந்து
மிக்கபுகழ் சூடுமவர் தம்பெருமை கண்டுமன
மெலிவறவு நின்சொல்லெலாம்
மெய்யாக வும்பிறவி பொய்யாக வுங்கலபி
மீதேறி யென்முன்வந்து
முக்கணுடை யானுமவன் மனைவியுங் கொள்ளுமுயர்
முத்தங்கொடுத் தருள்வையே
முதிர்புகழ்ப் பாண்டியரின் முதன்மைபெறும் வயவனே
முத்தங்கொடுத் தருள்வையே. 7

வேறு

50. சுத்த மறைத்துணி வைத்தெளி வுற்றவர்
சொற்படி நிற்கிலனோ

துட்டர் தமைக்கறு வத்தகு நற்றவர்
சொற்பன முற்றிலனோ
வித்தக ருக்குள நெக்குரு கத்தகு
மெய்த்துதி கற்றிலனோ
மிக்க திருப்பொடி யக்கம ணித்தொடை
வெற்றி நினைத்திலனோ
சித்தனெ னக்கன கச்சபை யிற்றிகழ்
சிற்பர னுக்கினியோய்
செட்டி யெனப்பெய ரிட்டுவி ழுப்பொருள்
செப்பு முழுப்புலவா
முத்த நகைச்சியர் பக்கலி ருப்பவ
முத்த மளித்தருளே
முத்தமிழ் கற்பவ ருக்கொரு சற்குரு
முத்த மளித்தருளே. 8

51. சத்திய மற்றும னப்படி நிற்பவர்
தட்டழியப் புரிவாய்
தத்துவ நிச்சய முற்றுய ரத்தகு
சட்சமையத் தொளிர்வாய்
பத்தியி னைக்கொடு நத்துநர் சொற்படி
பற்பலசித் தருள்வாய்
பக்குவ முற்றும்வ ருத்திம றைப்பொருள்
பற்றிடெனத் தருவாய்
தித்தியின மத்தள மொத்து நடிப்பவர்
சிற்சபையிற் சிவனார்
சித்த மகிழ்ச்சி யுறத்திறன் மிக்குள
செற்றலரைக் களைவாய்
முத்தி யினுக்குயர் வித்தெனு முத்தம
முத்தமளித் தருளே
முத்தமிழ் கறபவ ருக்கொரு சற்குரு
முத்தமளித் தருளே. 9

வேறு

52. முருகவிழ் குரவொடு புனலியு
மணிபுய முத்தந் தருவாயே

முரண்மிகு மவுணர்க ளறவமர்
பொருதவ முத்தந் தருவாயே
முருகவென் மொழிபகர் கொடியெதிர்
வருபர முத்தந் தருவாயே
முதனடு கடையெனு மவைபுகழ்
புரவல முத்தந் தருவாயே
முருகொடு பலபல யுகம்வரை
மிளிர்குக முத்தந் தருவாயே
முலையமு துதவிடு முமையவள்
கொளுமுயர் முத்தந் தருவாயே
முருகுறு சபையினி னடமிடு
மவர்சுத முத்தந் தருவாயே
முதிர்தமிழ் மலிவுற முயல்பவர்
நடுமணி முத்தந் தருவாயே. 10

6. வாரானைப் பருவம்

53. கடியார் மலர்த்தண் பொழில்சூழுங்
கவின்றோய் புலியூர் நடுவிளங்குங்
கனக சபையிற் சிவபெருமான்
கண்ணின் மணியா வருங்குகனே
மடிமீ திருந்து சிவகாமி
மகிழ வொருபான் முலைசுவைத்து
மற்றோர் முலையை நெருடியவள்
வதனத் தணிநோக் கிடுமதலாய்
யிடிபோன் முழங்குங் குரற்சேவ
லெடுக்குங் கரத்தாய் கீரன்முத
லெண்ணில் பெரியோர் தொடுத்ததமி
ழிலங்கும் புயத்தி லெழிலாரும்
வடிவேல் புனைந்த குருபரனே
மயின்மீ தேறி வருகவே
வளஞ்சேர் பாண்டி நாயகனே
வருக வருக வருகவே. 1

54. கொலையோர் புலையோர் செயுங்கொடிதாற்
கொதிக்குந் துயரு மறுசமயங்

கொண்டோர் வருந்தல் சகியாமற்
குலையுந் துயருங் குவடனைய
முலையார் விழியாங் கணைபாய
மோகக் கடலிற் றினந்தோறு
முழுகுந் துயரும் பனுவல்பல
முந்நீர் கவர்ந்த முழுத்துயரு
நிலையா வுனையே கருதாம
னேர்ந்த படிபோ மனத்துயரு
நிகழ்த்து மிநர்பல துயரு
நீற்றா லொழித்துன் னருள்கொடுப்பான்
மலைதோ றாடும் பதத்தானே
மயில்மீ தேறி வருகவே
வளஞ்சேர் பாண்டி நாயகனே
வருக வருக வருகவே. 2

55. பொருநை நதியினடு விளங்கும்
புகழ்சே ருருமா மலையிடத்திற்
புகன்ற மொழியுந் திருமலையிற்
புரிந்த செயலுஞ் செந்தூரி
லொருவா றுணர்த்தும் பெருநிலையு
மோங்கும் புனிதத் திருநெல்லை
யூரிற் றிகழ்ந்த விளையாட்டு
மூலவாக் கழுகு மலைக்கூத்து
மருணா புரியிற் றரும்வாக்கு
மனைய பிறவும் புவியினரு
மறியப் புரிதற் காசையுற்றே
னனைத்து மறிவா யசைப்பிப்பாய்
மருவார் பொழில்சூழ் புலியூரா
மயின்மீ தேறி வருகவே
வளஞ்சேர் பாண்டி நாயகனே
வருக வருக வருகவே. 3

56. கண்ணே வருகச் சிவஞானக்
கனியே வருக வெனையாண்ட
கணவன் றவமே வருகவருட்
காரே வருக கழறரிதா

மெண்ணே யெழுத்தே வருகவென
விமவான் மகளன் றழைத்துமடி
யிருத்திக் கலையால் வெயர்த்தமுக
மிலங்கத் துடைத்து முலையருத்திப்
பண்ணேர் மழலை மொழிகேட்டுப்
பலகான் மோந்து களிகூரும்
பவளக் குவடே யுனதடியார்
பதமா மலரிற் றுகளாய்
மண்ணே றியநற்றலை யேன்முன்
மயின்மீ தேறி வருகவே
வளஞ்சேர் பாண்டி நாயகனே
வருக வருக வருகவே. 4

57. காவிப் பனிமா மலர்ப்பெருக்குங்
கமலப் போதுங் களையாகக்
கருதிக் களையுங் கடைசியர்தங்
கண்ணாற் பயந்து கழனிவிட்டுத்
தாவிப் பகட்டு நெடும்வாளை
தடித்தென் றரவக் குலம்வெருளத்
தண்பூம் பொழிலிற் குரக்கினங்க
டாமும் பயந்து விழிமூடக்
காவிற் குரியான் பரியேழுங்
கதற வயிற்றைக் கிழித்துவருங்
கவினார் புலியூர்ச் சிவன்புதல்வா
கருங்கட் குறத்தி களித்தளிக்கு
மாவிற் குருகுங் கிழமுனிவா
மயின்மீ தேறி வருகவே
வளஞ்சேர் பாண்டி நாயகனே
வருக வருக வருகவே. 5

வேறு

58. சத்தப் பெருங்கடலி னுட்புக் கிருந்துவரு
தகுவனுயிர் கொன்று வந்த
தனிவேன் முதற்பகரு மாயுதங் களும்வதன
தாமரை களுங்க டம்பு

மெத்தப் புனைந்தபுய மீராறு மகுடமுதல்
வியனுற்ற பணிகள் பலவும்
விண்ணோர் தருங்கொடியும் வேள்விமலை யிற்றிரியும்
வேடுவர் வளர்த்த கிளியுஞ்
சுத்தத் திலங்குமொரு வேழமுஞ் சேவலுந்
தோகை மயிலுந் துலங்குந்
தூயமன மும்பொருவில் வாய்மையுங் கருணையுந்
தோய்வுறத் தொண்டு செய்யும்
பத்தர்க் கிரங்கியருள் பதமலர்த் துணைகொண்ட
பலமலைக் குகன்வ ருகவே
பைந்தமிழ்ப் புலியூரில் வந்தசற் குருவான
பாண்டி நாயகன் வருகவே. 6

59. தற்பர னெனக்குலவு தந்தைக்கு மலையமலை
தன்னிலுறு குறுமு னிக்குந்
தண்டமிழ்க் கீரனொடு பொய்யாமொ ழிக்குமொரு
தையற்கு மருண கிரியாம்
விற்பன னெழிற்பனுவல் விற்றபக ழிக்கூத்தன்
வெண்டளை முறித்த புலவன்
வேதமுனி சொன்னகதை தமிழ்செய்த வன்போரி
மேய வன்மணற் கொணர்ந்த
வற்பரும் வணங்கிட நகைத்தவன் செந்திலிற்
கந்தாதி சொன்ன வல்லோ
னணிமேவு பாடல் புரத்தொருவன் முதலாகு
மளவிலாத் தொண்ட ருக்கும்
பற்பல புகழ்ச்சிதரு பவளவா யுடையவன்
பச்சை மயின்மேல் வருகவே
பைந்தமிழ்ப் புலியூரில் வந்தசற் குருவான
பாண்டி நாயகன் வருகவே. 7

வேறு

60. கரக முனிவர் பரவு சரண
கமலன் வருக வருகவே
கனக மனைய பலகை மருவு
கழகன் வருக வருகவே

குரவு குவளை புனலி யுடைய
குழகன் வருக வருகவே
குறவர் குடிலின் மகள்முன் மருகு
குமரன் வருக வருகவே
யிரவி லடியர் கனவி லலையு
மிறைவன் வருக வருகவே
யெனது பழைய பிறவி பகரு
மெளியன் வருக வருகவே
மரமொ லைகொள் கடலை முனியும்
வயவன் வருக வருகவே
வனிதை மகிழு நடன பரமர்
மதலை வருக வருகவே. 8

61. எலியி னரசை யிவரு மொருவ
னிளவல் வருக வருகவே
யெமது பகைவர் தொலைய முனியு
மிகலன் வருக வருகவே
மலியு மகிமை குலவு மபய
வரதன் வருக வருகவே
மலரின் மருவு கமலை கணவன்
மருகன் வருக வருகவே
புலியி லெதிரு மவுணர் கலக
புனிதன் வருக வருகவே
புலவர் மகளை யணையு மிணையில்
புளகன் வருக வருகவே
வலிய புவியை நொடியில் வளையும்
மயிலன் வருக வருகவே
வனிதை மகிழு நடன பரமர்
மதலை வருக வருகவே. 9

62. மறவர் மகளை யணையு முருக
வருக வருக வருகவே
வழுவை யுதவு குமரி கணவ
வருக வருக வருகவே
மறலி பகைத னினிய புதல்வ
வருக வருக வருகவே

வளைகொள் கரிய முகிலின் மருக
வருக வருக வருகவே
மறவ லசுரர் சமர குமர
வருக வருக வருகவே
வகுள மணியு மதன னெதிரி
வருக வருக வருகவே
மறதி தவிர வருள்செய் குரவ
வருக வருக வருகவே
வழுதி யெனமுன் வருநலி றைவ
வருக வருக வருகவே. 10

7. அம்புலிப் பருவம்

63. தெருளறிஞர் பரவுசிற் சபைநாத னன்பிற்
சிறக்கின்ற தன்மை யாலுஞ்
செங்கன லெனக்குலவு மேடத்தி லொருவேளை
திகழவரு பெருமை யாலு
மிருளறச் செய்துகண் ணுடையவர் தமக்கெலா
மின்பம்விளை வித்த லாலு
மிக்குவிற் காமனது விழவினுக் கினியனென்
றிகமெலா மொழித லாலுஞ்
சுருள்குழற் பேதையர்கள் வலியவந் தணையத்
துலங்குமெழி லாலு நீயுஞ்
சொல்லுமி வனுக்குநிக ராமென்ன வுலகருந்
துதிகூற லுண்டு கண்டாய்
யருள்வடிவ மாகவளர் குமரகுரு பரவேளொ
டம்புலீ யாட வாவே
யணிபொழிற் புலியூரில் வருபாண்டி நாயகனொ
டம்புலீ யாட வாவே. 1

64. உற்பலத் துரிமையுட னுடுமகளிர் காதலனென்
னொருநாம முடைமை யாலு
முலகமெங் கணுநிறையு மொளியாலும் விண்ணவர்க்
குவகைதரு தன்மை யாலு
நற்பனுவல் பகர்புலவ னுக்காவல் கொளலாலு
ஞாலந் தனைச்சுற் றியே

நாகத்தில் வரலாலு மலைவாரி யோதமிக
நன்குதய மாத லாலும்
பற்பல வுயிர்க்கிதம் புரிகின்ற தாலுமொரு
பதினாறு கலையி னாலும்
பகருமி வனுக்குநிக ராவையென் றுன்னைப்
பரிந்தழைத் திடல றிதியே
லற்பருணர் தற்கரிய புகழுடைய முருகனுட
னம்புலீ யாட வாவே
யணிபொழிற் புலியூரில் வருபாண்டி நாயகனொ
டம்புலீ யாட வாவே. 2

65. இன்பமுறு மமுதத்தி னாற்றவள மாவைநீ
யிவன்வெள்ளை நீற ணிந்தோ
னிருள்கடிய வல்லைநீ கருநிறத் தானவர்க்
கியமனிவ னீயி ரங்கா
வன்பருங் களிகூர வருவையிவன் வேறுமத
வாணரும் பரவ மகிழ்வான்
மலையினிற் போவைநீ யிவனெழிற் குன்றுதொறு
மாறாம லாடல் செய்வான்
றுன்பமுஞ் சிலருறப் புரிவைநீ யிவன்முழுத்
துட்டரைக் காய்ந்து நிற்பான்
சொல்லுமிவை யனையபல தொழிலாலு நீயிவன்
றோழனா மாகை யாலே
யன்பர்பலர் கைதொழத் திகழுமுரு கையனுட
னம்புலீ யாட வாவே
யணிபொழிற் புலியூரில் வருபாண்டி நாயகனொ
டம்புலீ யாட வாவே. 3

66. செங்கதி ரவன்புசித் துப்புசித் துமிழத்
தியங்கு வாயிவ னெண்ணிலாத்
தெய்வமுந் தனதுமய மாமெனப் பேரறிஞர்
சிந்தையிற் றிகழ வல்லான்
பங்கமுறு மறுவாரு முடலனீ யிவனெழிற்
பவள மேனியி தில்லைப்
பரவையிற் றணிவைநீ யிவனதனில் வாழ்வுணர்

பற்றறக் களையும் வீரன்
வெங்கண ரவிற்கஞ்சி மெலிவை யிவன்மயில்
விழுங்கிக் களிக்கு மிதனால்
விளையாட வரிலுனக் கேபெருமை யுனதுநல்
வேளை யிவனுனை யழைத்தா
ணங்கசனு நாணுமழ குடையகும ரேசனுட
னம்புலீ யாட வாவே
யணிபொழிற் புலியூரில் வருபாண்டி நாயகனொ
டம்புலீ யாட வாவே. 4

67. ஒருவட்ட மாவைநீ யோராறு வட்டமா
மொள்ளிய முகத்த னிவன்னீ
யும்பரூர் வளர்குரவ னடிமையிவனி யாவர்க்கு
முபதேச முதவு பெருமான்
றருவரச னிட்டபணி செய்வைநீ யிவனவன்
றன்றுயர் தவிர்த்த தெய்வந்
தன்மைபல வாறாவை நீயிவன் குறைவுறாத்
தகையுடை யன்மத் தாகியோர்
பருவதத் தடியிலுற் றனையிவ னவற்றின்முடி
பலவினு நடித்து நிற்கும்
பாததா மரையுடைய னுன்னைவா வென்னப்
பரிந்தழைக் கின்ற தறிவாய்
யருவமுட னுருவமா யருவுருவு மானவனொ
டம்புலீ யாட வாவே
யணிபொழிற் புலியூரில் வருபாண்டி நாயகனொ
டம்புலீ யாட வாவே. 5

68. உமையவ ளுனைப்பதத் தாலுரைத் தனளிவனை
யுரிமையொடு முத்த மிட்டா
ளுரகமணி வோனிடக் கண்ணீ யிவன்பொதுவி
லுறுநுதற் கண்ணில் வருசே
யிமையவரி லொருவனீ யிவனவர்க் குயிரென்
றிலங்கயிற் சேனாபதி யிளமகளிர்
துயர்கண்டு போவை நீயி வன்வரக்
கின்பமருள் கின்ற செவ்வேள்
சமைய கோடிகளெலா முலகினுக் காகச்

சமைத்தபொரு ளென்னு முன்னைத்
தந்தமது தலைவனென் றிவனைப் பராவுமிவை
சத்தியந் தவறில் லைகா
ணமையனைய தோளுடைக் குறமாது கேள்வனுடன
மம்புலீ யாட வாவே
யணிபொழிற் புலியூரில் வருபாண்டி நாயகனொ
டம்புலீ யாட வாவே. 6

69. கருணைபெற லாமளவில் கவிதைபெற லாமழைக்
காரெனக் கொடைகொ டுக்குங்
கைகள்பெற லாமெதிர்த் தமராடு வோர்குலங்
களைகின்ற திறமை பெறலா
மருணலியு மெய்யன்பர் களிகூர விளையாடும்
வாழ்வு பெறலாங் கயிலைநேர்
மாதங்க வாணனமுத லெண்மரும் புகழ்கூறி
வழிபடும் பெருமை பெறலாந்
தருணத் திலிதவு திருமந்திரம் பகுதியொரு
சத்த கோடிக்கு முயிராத
தழையுமுயர் பிரணவப் பொருளாய் வண்மையைத்
தருமிலை விபூதி பெறலா
மருணகிரி யதனில்வரு கிளியுடைய கடவுளுட
னம்புலீ யாட வாவே
யணிபொழிற் புலியூரில் வருபாண்டி நாயகனொ
டம்புலீ யாட வாவே. 7

70. செந்நிறக் கருநிறச் சற்பங்க ளாலொறு
திடுக்கந் தவிரப் பதற்குச்
சேவற் பதாகையொடு மாமயிலுண்டு
தேய்கின்ற கொடுமை முதலா
மெந்நிலைப் பிணியிந் தகைத்திடப் பன்னீ
நிலைகரு லொருநீறு நல்கு
மீராறு செங்கை யுண்டுனி வருஞ்செயல்
சொல்லவிரு மூன்று வாய்களுண்டு
வெந்நி ணம்பரு கவுணர் கலகமுற
முனிய வடிவேலுண்டு சன்ன

மாண்வே ராயவினை யறச்சூடுமிரு தாளுண்டு
மேதினி முதற்சொ லெங்கு
மந்நிய மிலாதுற்றும் வடிவான குறவனுட
னம்புலீ யாட வாவே
யனிபொடிற் புலியூரில் வருபாண்டி நாயகனொ
டம்புலீ யாட வாவே. 8

71. மதிள கூற்றுகன் கந்தருடைப் பருடையகோன்
மதுரை யினில்வந்து முன்பட்ட
பாடுமற்றே ழுவரொடு கூடுயமர் புரிந்துயிர
தப்பிவர் வன்றுபட்ட பாடும்
விதிபட்ட பாடுநெடு மாலஞ் தாருகனும்
வெற்ப ருன்பட்ட பாடும்
வேலனரி வேலவென்று வில்லாயிரங் கோடதிர்
வினைய வான்பட்ட பாடுஞ்
சதிமுற் றுமமர்த் தோடலை முழங்கெழிற்
சாகரம் பட்ட பாடுஞ்
சாரணக் கொடுமுனிவர்ப் பட்ட பாடுங்
கருதன்மை யேராபனக செய்வரோ
வதிருற்ற கழலணிந் தாடுமுரு கேசனுட
னம்புலீ யாட வாவே
யணிபொழிற் புலியூரில் வருபாண்டி நாயகனோ
டம்புலீ யாட வாவே. 9

72. வெம்மதம் பெருகநெடு வேலையமு தம்பருகும்
வெள்ளானை யுண்டி டாமல்
வீராதி வீரரு நடுக்குறக் குலவுதகர்
மேல்வந்து முட்டி டாமற்
பொய்ம்மனத் தினர்தாமு நெக்குருக நடமிடும்
புள்ளிமயில் கொத்தி டாமற்
போர்வேண்டி யநுதினங் கூவுமுயர் சேவற்
புறங்கால் கிழித்தி டாமன்
மெய்ம்மறைப் பகுதியொரு நாலுக்கு முயிரான
வேல்கொன் றிடாம லிந்த
வியனுலக முள்ளவரை யழியாது வாழுநலமே
மேவிடும் விருப்ப முண்டே

லம்மனிரு வர்க்குநடு நின்றகுரு சாமியுட
        னம்புலீ யாட வாவே
    யணிபொழிற் புலியூரில் வருபாண்டி நாயகனொ
        டம்புலீ யாட வாவே. 10

8. சிற்றிற் பருவம்

73. மயில்வா கனத்துப் பெருமாளே
        மறைமே னடிக்கு மலர்த்தாளா
    மழைசூழ் குறிஞ்சிக் கினியோனே
        வலிசேர் தகுவர் குலகாலா
வெயின்மூன் றெரித்துக் கனகசபை
        யிடத்தி னடிப்போன் றரும்புதல்வா
    விமயப் பிடிதன் முலைப்பருகு
        மெழில்வா யுடைய முருகோனே
குயினேர் குறத்தி மணவாளா
        கோலே யனைய விழியிமையாக்
    கொடிதன் றூடற் குளமுருகுங்
        கோலா கலச்சண் முகவேளே
யயில்வேற் குமர குருபரனா
        மரசே சிற்றி லழியேலே
    யருட்சீர்ப் பாண்டி நாயகனே
        யடியேஞ் சிற்றி லழியேலே. 1

74. சத்தி வடிவேற் படையெடுத்துத்
        தகர்மீ தேறிச் சமராடித்
    தகுவர் குலமுந் திருநீற்றைத்
        தளவோர் குலமு மறக்களைந்து
பத்தி யுடையார் களிகூரப்
        பவனி வருவாய் மயிலேறிப்
    பாருங் கடலும் பலமலையும்
        பரிந்து திரிவாய் களிறூர்ந்து
சித்தி விரும்பு மவர்பாலுந்
        திரும்பா வீடு பெறநாடுந்
    திறத்தோர் பாலுந் தினந்தோறுஞ்
        செல்வா யிணைதீர் சிவகுருவே

யத்தி மகள்கண் களிகூரு
மழகா சிற்றி லழியேலே
யருட்சீர்ப் பாண்டி நாயகனே
யடியேஞ் சிற்றி லழியேலே. 2

75. எம்போ னீயு மொருகுழவி
யெனச்சொன் னேமா நீகளிப்புற்
றியானு மும்மோ டிருப்பேனென்
றியம்புங் காலை யிசைந்திலமா
நம்போல் வருந்தா னிவன்வேறு
நாம்வே றெனல்போற் பலவாறு
நவின்று மணந்து மணற்சோற்றை
நல்கா தருந்தித் துயின்றேமா
வம்போ வழக்கோ வெனக்கூறி
வாதா டினமா யாங்கள்பகர்
மழலை மொழியிற் சிறிதிரக்கம்
வைத்தான் மகிமை குறைவாமா
வம்போ ருகத்தாட் குருபரனே
யணிசேர் சிற்றி லழியேலே
யருட்சீர்ப் பாண்டி நாயகனே
யடியேஞ் சிற்றி லழியேலே. 3

76. பானா றியவாய்ச் சிறியேடப்
பகிர்ந்து சிலர்தா முச்சிலினாற்
பரிந்து கொழித்த மணற்பாராய்
பதும மனைய கரநோவத்
தானா வருந்தி நிலம்பெருக்குந்
தயக்கம் பாராய் நுதல்வெயர்க்குந்
தளர்ச்சி பாராய் சிலரேங்கித்
தவித்தல் பாராய் தனித்தனியே
நானா விதமாச் சமைத்தொழித்து
நன்றா யமைத்த வெழில்பாராய்
நாங்க ளுனது மொழிப்படியே
நடப்பே மிருந்து விளையாடா
யானா வமுதே மயிலேறு
மமலா சிற்றி லழியேலே

யருட்சீர்ப் பாண்டி நாயகனே
யடியேஞ் சிற்றி லழியேலே. 4

77. ஒருசட் சமய நெறிதோறு
மொவ்வோர் முகமே யுயர்வெனக்கொண்
டுழன்ற நலத்தா லாறுமுக
முடைய பரமொன் றெனத்தேறும்
பெருமைக் குரியார் சிரஞ்சூடு
பிரச மலர்த்தாள் வருந்தாதோ
பிழைதீர் கனக சபையுடைய
பெருமா னுரமு முமைமடியுங்
கருணைத் திருமான் முதலாய
கடவு ளார்தந் திருமுடியுங்
கழலிற் றுகள்போய்ப் படியாதோ
கடையே மனநொந் தயரேமோ
வருமைப் புலவர் விருப்பமெலா
மருள்வாய் சிற்றி லழியேலே
யருட்சீர்ப் பாண்டி நாயகனே
யடியேஞ் சிற்றி லழியேலே. 5

வேறு

78. கழும்வளை முத்தமுந் தையலார் மேடைதொறு
முரிமைமிகு கணவர் தம்பா
லூடியெறி யும்பணிக் குவையும்விலை மகளிர்முலை
யொழுக விடுகத் தூரியும்
பகடுசொரி மும்மதச் சேறுமூ வாயிரவர்
பலகோடி முனிவர் புலவோர்
பாதமல ரிற்குலவு மகரந்த முந்தினம்
பழகுமறு குடைய தில்லை
நகர்நடுவி னிற்கனக சபையினட னம்புரியுந்
நம்பனருள் கொண்டு முன்னா
ணான்மறை களும்பொருவி லாகமங்க ளுமொழியு
நற்பவள வாய்கண் முத்தத்
திகழுமிரு தாள்களாற் சிறியனேஞ் செய்ததொரு
சிற்றிற் சிதைத்தி டேலே

செங்கண்மால் மருகனே தென்பாண்டி நாயகா
சிற்றிற் சிதைத்தி டேலே . 6

79. முல்லைநகை மெல்லியர்கள் குழலெனத் திகழ்பொழிலின்
முகிழ்மல ருகுத்த தேனு
முடகுடக் கனிவெடித் துச்சொரிந் திடுதேனு
முதிர்தென்னை யனைய வாழைக்
கொல்லையிற் கனிகசிந் தொழுகுதே னும்பெருகு
குவளையுங் கமல மலருங்
கூடிய தடம்பொய்க்கை தருதேனு நெட்டிறால்
கொப்பளிக் கின்ற தேனுந்
தொல்லைமா நதியெனக் கடல்வயிறு கிழிவுறத்
தோயும்வள மார்ந்து விண்ணோர்
தொழுமோதை யுங்கழலி லெழுமோதை யுங்கவிஞர்
துதியோ தையுங் குலாவுந்
தில்லைநட ராயனருள் சிறுமைந்த னேயெமது
சிற்றிற் சிதைத்தி டேலே
செங்கண்மான் மருகனே தென்பாண்டி நாயகா
சிற்றிற் சிதைத்தி டேலே. 7

வேறு

80. வெட்டும ருப்புறு மைக்கட விற்சமன்
வெப்புற் றெதிராதே
மெத்தவு நித்திரை யுட்கன விற்பகர்
மெய்ச்சொற் றவிராதே
யெட்டுவ கைத்திசை யுற்றம னுத்திர
ளெய்த்துத் தவியாதே
யெட்டியெ னத்தகு துட்டர்க ளிப்புட
னெற்றித் திரியாதே
கொட்டுமி ழற்றிய ருச்சனை யிட்டுயர்
கொற்றத் தனிவேலே
குற்றம றுப்பதெ னப்பகர் சற்சனர்
கொக்கிற் குறுகாதே
திட்டுத மிழ்க்கும ருட்புரி வித்தக
சிற்றிற் சிதையேலே

சிற்சபை யிற்சிவன் முற்றரு தற்பர
சிற்றிற் சிதையேலே. 8

81. கொச்சைமொ ழிக்கவி யைப்புக ழற்பர்கை
கொட்டிச் சிரியாதே
குக்கலை யொத்தவி டக்கின ருக்குள
கொட்டிற் றழையாதே
பிச்சையி டத்தகு நற்றொழில கைத்திடு
பெட்புப் பெருகாதே
பிற்பிற விக்கயர் வற்றம தத்தினர்
பித்துப் படராதே
பச்சைம யிற்பரி யைப்புகழ் விற்பனர்
பக்கத் துணையாவாய்
பற்றல ரைக்களை சத்தி வயப்படை
பற்றித் திகழ்சேயே
செச்சை மலர்ப்பொரு முத்தமிழ் கற்பவர்
சிற்றிற் சிதையேலே
சிற்சபை யிற்சிவன் முற்றரு தற்பர
சிற்றிற் சிதையேலே. 9

வேறு

82. சிக்கலுறு முத்தமிழ்தி ருத்தமது ரைக்குளொரு
செட்டிமனை யுற்றகுக சிற்றி லழியேலே
செப்பெனுமு லைக்குரிய பத்தினிக ளுக்கினிய
சித்திரமொ ழிக்குமர சிற்றி லழியேலே
செக்கரிலு றுப்பமைவ தொத்திலகு பொற்புமலர்
செச்சையு முடைப்புனித சிற்றி லழியேலே
சிட்டர்பல ருக்குமவர் நிச்சயமெ னக்குலவு
சித்துறுத னிக்குரவ சிற்றி லழியேலே
திக்கடைய வெற்றிகொள்வி றற்பெறு தயித்தியர்கள்
செத்தொழிய வட்டபுய சிற்றி லழியேலே
தித்தியொடு மத்தளமு ழக்கநட மிட்டசிவ
சித்தர்விழி பெற்றசுத சிற்றி லழியேலே
தெக்கணமி ருப்பவனு மச்சமொடு மெச்சவளர்
செற்றயில் பற்றுகர சிற்றி லழியேலே

செப்பரிய நட்புறுதி ருப்புகழ்ப டிப்பவர்கள்
சித்தமறி பொற்சரண சிற்றி லழியேலே. 10

9. சிறுபறைப் பருவம்

83. உரையுணர் விறந்தமுழு மோனமே யினிதென்று
மொருவனே கடவுளென்று
மொருகோடி சமையத்து ளோராறு சமையமே
யுயர்வென்று முயிர்கொன்றிடா
திரைநுகரும் விருகத்து மேனைமா னிடராகு
மீனரிழி வுள்ளார்களே
யென்றுமறை பலகோடி யொன்றொடொன் றொவ்வாம
லிகலுவது பழமையென்றுங்
கரைதவிரு மானந்த வாரிதரு மமுதெனக்
காணல்குரு பாதமென்றுங்
கயலனைய விழிமகளிர் மயலொழியு நலமடைதல்
கடினமே யாகுமென்றுந்
திரைகடற் கலையே மூடுத்தவுல கெங்கெணுஞ்
சிறுபறை முழக்கியருளே
சிவசிதம் பரர்மகிழ வருபாண்டி நாயகா
சிறுபறை முழக்கியருளே. 1

84. எப்படித் தக்கநல முற்றார்க ளேனுமரு
ளில்லார்க ளௗிஞ ரென்று
மிழிவெலா முடையார்க ளெனினுமது பெற்றோர்க
ளியாவர்க்கு மேற்ற மென்று
முப்பழச் சாறனைய செந்தமிழை யன்னகலை
மொழிவதற் கில்லை யென்று
முற்பிறவி பிற்பிறவி யொப்பாத மூடர்பகர்
முத்தியு முழுப்பொ யென்று
மெய்ப்பிரம நிலைசச்சி தானந்த மயமென்று
வெவ்வேறு வாறு கூறி
வெறுவாயை மெல்வோரு முயர்பத்தி யாலுணர்வின்
மேவுவது சகச மென்றுஞ்
செப்பனைய பலகோடி யண்டத்தி னுஞ்சென்று
சிறுபறை முழக்கி யருளே

சிவசிதம் பரர்மகிழ வருபாண்டி நாயகா
சிறுபறை முழக்கி யருளே. 2

85. ஒருமதத் தொருதலைவ னுண்டாகி மற்றவ
ருளம்பதற மோதும் வேளை
யொத்திருப் பதுதிரு வருட்செயல் வழக்கென்று
முன்னுவது போல வெல்லாந்
தருமமொடு சத்தியமும் வடிவான தெய்வந்
தழைப்பதுண் டென்று மழியாச்
சமரச சுபாவந் துலக்குவது முன்செய்த
தவமென்று மாநி லத்திற்
குருமர பிலாதமத மிலையென்று மருள்வலிமை
கொள்ளாத ஞான மெல்லாங்
கொற்றவர்கண் முதலான பொருளா ளரைக்கண்டு
கூசிக் கிடக்கு மென்று
திருமறுகு தொறுமறிஞர் சித்ததொறுஞ் சென்று
சிறுபறை முழக்கி யருளே
சிவசிதம் பரர்மகிழ வருபாண்டி நாயகா
சிறுபறை முழக்கி யருளே. 3

86. எம்மதத் தாடல்களு மென்றாதை யாடலே
யென்றுமவை தோறு மேவி
யிகலறுத் தவரவர்க் குவகைதரு குருவெலா
மியானன்றி யில்லை யென்று
மெய்ம்மதத் தொருதீது மதுபோல மற்றதில்
வியப்பொன்று மேவு மென்றும்
வீடுணரு ஞானியே விழியுடைய னென்றுமவன்
மெல்லமலர் வாய்தி றந்தாற்
பொய்ம்மனத் தினர்தாமு மொத்துரை பயிற்றுவது
புதுமை யென்றுங் கருத்துப்
போனபடி யொருநாம ரூபம்வைத் தாலுமது
பூரணத் துடைமை யென்றுஞ்
செம்மணிக் குவடனைய பன்னிரு புயங்களாற்
சிறுபறை முழக்கி யருளே

சிவசிதம் பரர்மகிழ வருபாண்டி நாயகா
சிறுபறை முழக்கி யருளே. 4

87. உன்றனை யலாமலொரு தெய்வமுண் டென்னநா
னுன்னி டேனின் முகங்க
ளோராறு திசையுமே யீராறு சமையமு
முனக்குள்ள தோள்க ளிச்சை
குன்றவர் வளர்த்தகொடி கிரியைமக வான்மகள்
குறிக்கரிய ஞானம் வைவேல்
குணமூன்று மயிலுட றகரும்வெண் களிறுங்
குகுக்குகூ வென்று கூவி
நின்றதொரு சேவலே நிறைவாய புகழென்கை
நீயுணர்த் திடவு ணர்ந்தே
னிசமான பிரணவப் பொருளுங் கொடுத்தாயு
னேயமே போது மென்று
தென்றலங் கிரிமுனிவன் வழிபடுங் குருபரா
சிறுபறை முழக்கி யருளே
சிவசிதம் பரர்மகிழ வருபாண்டி நாயகா
சிறுபறை முழக்கி யருளே. 5

வேறு

88. காவாழ் புலவர் முடிபொலியுங்
கனக சபையிற் சிவனாடுங்
கழலி னொலியுஞ் சிலம்பொலியுங்
களிக்கு முமையாள் களத்தொலியுந்
தேவா ரங்கண் முதலாய
திருநூ லொலியு மரிபிரமர்
சிறக்குங் கணங்கள் கொளுங்கருவித்
திரட்பே ரொலியுந் தெருநிறையப்
போவா ரொலியுங் களிற்றொலியும்
புரவி யொலியும் விடையொலியும்
பொழிற்புள் ளொலியு ளையொலியும்
பொலியும் பெருமை சிறிதேனு
மூவாப் புலியூர் முருகோனே
முழக்கி யருளாய் சிறுபறையே

முதன்மைப் பாண்டி நாயகனே
முழக்கி யருளாய் சிறுபறையே. 6

89. வன்னக் கதலிப் பெருந்தாற்றில்
வயலிற் பொலிநெற் கதிர்க்குலையில்
வாவிக் கமல மலர்ப்பொகுட்டின்
மறுகிற் றிரியும் வளைவாயில்
கன்னற் கணுவி னெடும்வேயிற்
கலிக்கும் பலமுத் தமுஞ்சேர்த்துக்
கன்னிப் பருவக் கடைசியர்கள்
கள்ளுக் களந்து களித்தவர்நேர்
சின்னப் பயல்க ளுடன்கூடிச்
சிலவா றாடி மகிழ்கூறத்
திகழும் புலியூர் நலம்விளக்கும்
தீப மனைசெழுஞ் சுடரே
முன்னற் கரிய வடிவுடையாய்
முழக்கி யருளாய் சிறுபறையே
முதன்மைப் பாண்டி நாயகனே
முழக்கி யருளாய் சிறுபறையே. 7

வேறு

90. பிணியா மெனவுல கோர்பகர்
பிழையோர்குடி கெடவே
பெருகார் வமொடுனை யேபணி
பெரியோர்மகிழ் வுறவே
துணிவோ டுயிர்வதை யேபுரி
துகளார்மத மறவே
சுடர்வேன் மயிலென வோதிய
தொழிலாளர்கண் மிகவே
கணியா மெனவன மூடுறு
கருணாகர முருகா
கதியா மதின்விதை யாகிய
கழல்சேர்குரு பரனே
யணிசேர் சபையினர் பாலக
வறையாய்சிறு பறையே

யழியா துயர்தமிழ் நாயக
வறையாய்சிறு பறையே. 8

91. கொடியோர் கொளுமத வேரொடு
குலவே ரறமுனிவாய்
குறமா துடன்மக வான்மகள்
குணமியாவையு முணர்வாய்
விடிநேர மதுணர் சேவலை
விறல்வேலொடு புனைவாய்
விளையா டலைநிதம் நாடியுண்
மெலிவார்தமை யகலாய்
துடிநாடக மிருதாள் கொடுசுக
வாரிதி யருள்வாய்
சுரர்மீ தொருமுது சூரிடு
சுமைதீர்சமர் புரிவா
யடியார் மிகுபொது வார்சுத
வறையாய்சிறு பறையே
யழியா துயர்தமிழ் நாயக
வறையாய்சிறு பறையே. 9

92. அரியா ழியையருள்வேலவ
வறையாய்சிறு பறையே
யதிமோ கனவடி வார்குக
வறையாய்சிறு பறையே
யரிமா மகள்புணர் சேவக
வறையாய்சிறு பறையே
யடல்சேர் குறமகள் காவல
வறையாய்சிறு பறையே
யரியா கியமயி லூர்பவ
வறையாய்சிறு பறையே
யவவே ரறவரு தேசிக
வறையாய்சிறு பறையே
யரியார் கழலர ணார்சுத
வறையாய்சிறு பறையே

யழியா துயர்தமிழ் நாயக
வறையாய்சிறு பறையே. 10

10. சிறுதேர்ப் பருவம்

93. மாதவன் கரமனைய செந்தாம ரைப்போதில்
வளையினந் துயிலு மெழிலும்
வாணிநிக ரோதிமந்த வளவா ரிசமலரில்
வதிகின்ற சீரு மின்னார்
காதளவி னீளவிழிக் கயலஞ்சி முதுவரால்
கமுகிலுறு குருகு வெருளக்
கல்லென் றுதுவருப் வியனுமலை யினமெலாங்
கரையினிற் சென்று சென்று
மோதமிகு பேரொலியு வரிவண்டு மதுவுண்டு
மொகுமொகென மொய்க்கு மிசையு
மும்மதக் கரிவந்து முழுகெருமை தலைகண்டு
முதலை யென்லல றோதையுஞ்
சீதமலி வாவிதொறு நிலவுபுலி யூரனே
சிறுதே ருருட்டி யருளே
செம்புநதி வைகையொடு திகழ்பாண்டி நாயகா
சிறுதே ருருட்டி யருளே. 1

94. துங்கமுறு கோடொன்று கொண்டகரி தழுவிமகிழ்
துணையாய பவள மலையே
சூரியன் முதற்பகரு முச்சுடரும் விழியாத்
துலங்குமர னீன்ற சுடரே
கொங்கவிழு மலர்பூத்த பைங்குழற் சிவகாமி
கொஞ்சு மொருசெங் கிள்ளையே
குறமகளு மமரர்தரு மகளும் புணர்ந்துளங்
குளிரவரு கொற்ற வேளே
பங்கய மலர்ப்பொகுட் டுடையமைத் துனனுளம்
பதறவிளை யாடு முருகா
பாரதி யெனுந்தங்கை களிகூர முதுநூல்
பயிற்றியருள் பழைய புலவா
செங்கண்முர கரிமருக னானகும ரேசனே
சிறுதே ருருட்டி யருளே

செம்புநதி வைகையொடு திகழ்பாண்டி நாயகா
சிறுதே ருருட்டி யருளே. 2

95. மேகமோ ரேழுக்கு முனியரச னுறுமலய
வெற்பின்முன் றளைய மைத்தாய்
விரைகமழ் கடம்புகுர வங்குவளை வெட்சியொடு
வேம்பும் புனைந்து நின்றாய்
பூகநிகர் களமுடைய பொறியாய மாமிதன்
பொன்மேனி குன்ற நாணிப்
போகாமன் முத்தமிட் டளிகூர விளமைப்
பொருத்த மகலா திருந்தாய்
சாகரத் துறுகொடியர் குலவேர் களைந்துவரு
சத்திவேல் கொண்டு யர்ந்தாய்
தமிழ்வாணர் கலகந் தவிர்த்துவப் புதவமுச்
சங்கந் தொறும் புகுந்தாய்
சேகரமெ னப்பரமர் புனைமலர்க் கையனே
சிறுதே ருருட்டி யருளே
செம்புநதி வைகையொடு திகழ்பாண்டி நாயகா
சிறுதே ருருட்டி யருளே. 3

96. வெட்டுற்ற பாம்பிற் றுடித்தருள வன்றுகரு
வேழத் துதிக்கை கொய்தாய்
வில்லா யிரங்கொண்ட சிங்கனது சிரமெலாம்
வெங்களத் துருள வெய்தாய்
மட்டுற்ற மாலைபுனை சூரனிரு புள்ளாகி
மகுட முருளப் புரிந்தாய்
மதுரையின்முன் வருசமண மதமகளிர் கோவென்று
மண்ணி ருருளப் படித்தாய்
கொட்டுற்ற தொன்மைக் குறிஞ்சிதொறும் வெள்ளருவி
கொழிமுத்த முருள நின்றாய்
குலவுதிரு மலைமீதி லுருளு மொருவனையு
குறுஞ்சி ரிப்பா ளித்தாய்
செட்டுற்ற நெஞ்சினர்க ளுணராத பரதனே
சிறுதே ருருட்டி யருளே
செம்புநதி வைகையொடு திகழ்பாண்டி நாயகா
சிறுதே ருருட்டி யருளே. 4

97. வெண்ணீறு முதலாய தணியாம லூனுண்டு
வீணே திரிந்த தலைகள்
வெட்டுண்டு மிதியுண்டு கடிடுண்டு கொத்துண்டு
வெம்பாலை யதனி லுருளத்
தண்ணீர் வளங்குலவு நானிலத் தறுவகைச்
சமயத்தி னோர்கள் செங்கைத்
தடமலரின் மணியுருள நாவிலவர் மந்திரந்
தாரகத் தோடு முருள
பெண்ணீலி யர்க்குருகி டாதசிலர் நெஞ்சிலுறு
பேரின்ப வாரி பொங்கிப்
பிரவாள மெனவிழிகள் வழியுருள வுணர்வரிய
பேரம் பலத்தின் னின்று
தெண்ணீர் குலுங்கநட மிடுபரமர் மைந்தனே
சிறுதே ருருட்டி யருளே
செம்புநதி வைகையொடு திகழ்பாண்டி நாயகா
சிறுதே ருருட்டி யருளே. 5

வேறு

98. மகளிர் கழங்காடிய கரத்தின்
மணிப்பூ ணொதுக்கும் பலமறுகில்
வாவி யலரு மலர்ப்பொகுட்டில்
வளருஞ் சாலி வயல்வரம்பிற்
றிகழு மாட மனைமுன்றிற்
றெண்ணீர்ச் சாலிற் செழும்பொழிலிற்
றிருமான் முதலோர் சிலர்வாயிற்
சிற்றம் பலத்தோன் செவித்துணையின்
மகரக் கொடியோன் சிலைப்பெருக்கில்
வாழை நிழலிற் புனலூறு
மள்ளர் குடிலில் வளைமுழங்கு
வளத்தா லுயரும் புலியூரி
லொகரப் பரிமேல் வருங்குமரா
வுருட்டி யருளாய் சிறுதேரே
யொளிர்வேல் பிடித்த பாண்டியனே
யுருட்டி யருளாய் சிறுதேரே. 6

99. எட்டா விளங்கிப் பலவாறா
யிசைந்து கிடக்குந் தமிழ்வண்ணத்
றியல்பிற் றவறாத் திருப்புகழ்நூ
லியம்பு முதுமைப் புலவோர்க்குந்
தட்டா தொழுகு நயமுணருந்
தக்கோர் தமக்குந் தினம்படிக்குந்
தகைமை யினர்க்குஞ் செவிகொடுக்கச்
சலியா தவர்க்குஞ் சார்ந்தோர்க்கும்
நட்டார் பலர்க்கு மவர்பெருமை
நவிலத் துணியு நல்லோர்க்கு
நமன்வேள் பிரம னணுகாத
ஞானா னந்தப் பேறருளி
யொட்டார் குடிக்கு நெருப்பாவா
யுருட்டி யருளாய் சிறுதேரே
யொளிர்வேல் பிடித்த பாண்டியனே
யுருட்டி யருளாய் சிறுதேரே. 7

வேறு

100. முருக்கா மிதழுடைப் பாவையர்
முலைச்சோடுறு மார்பா
முதற்கா ரணனெனத் தேறிய
முனிக்கோனணி தாளா
பெருக்கா வருதிறற் றானவர்
பிழைத்தோடவி டாதாய்
பிறப்பேழை யுமறுத் தோர்கதி
பெறப்பேசிடும் வாயாய்
தருக்கா லெதிர்திரட் சாரணர்
தமக்கோர்நம னானாய்
தனித்தா ரகமதிற் சேரொளி
தனிற்றோய்தரு சீலா
வுருக்கா முயரயிற் சேவக
வுருட்டாய் சிறுதேரே
யுவப்பா னடம்நடிப் பார்சுத
வுருட்டாய் சிறுதேரே. 8

101. மரத்தோ டலைகடற் சாடிய
வலுச்சேர்கதிர் வேலா
மழைக்கோன் முடிகவித் தேயவன்
மகட்சேர்மண வாளா
கரத்தோ வறுகிளிக் கோநுவல்
கவிக்காவலு ளானே
கருத்தோ டொருகுறக் கோமளை
கழற்பேணிய வேடா
சரத்தோர் தொழுநவச் சேவகர்
தமக்காதர வானாய்
சழக்கா கியமதத் தீயவர்
சபைக்கோரிடி யேறே
யுரத்தோள் புனைசமர்ச் சேவல
வுருட்டாய் சிறுதேரே
யுவப்பா னடநடிப் பார்சுத
வுருட்டாய் சிறுதேரே. *9*

வேறு

102. சிவனார் நுதற்சுத னேயெழிற்
சிறுதே ருருட்டுகவே
திறல்வேலு டைக்குக னேதிருச்
சிறுதே ருருட்டுகவே
சிவலோக சற்குரு வேதனிச்
சிறுதே ருருட்டுகவே
திகழ்மா மயிற்பரி யாய்மணிச்
சிறுதே ருருட்டுகவே
சிவமான பொற்சர ணாவருட்
சிறுதே ருருட்டுகவே
தெருள்பா வலர்க்கருள் வாய்பொலச்
சிறுதே ருருட்டுகவே
சிவமார் தமிழ்ப்புல வாபுதுச்
சிறுதே ருருட்டுகவே
செறிவார் பொழிற்புலி யூர்தொழச்
சிறுதே ருருட்டுகவே. *10*

முற்றிற்று.

நூற்பயன் - வெண்பா

103. நந்தா விறற்பாண்டி நாயகன்பிள் ளைக்கவியாற்
சிந்தா குலந்தவிருஞ் சீருண்டாங் - கொந்தார்
குழலா ரிருவரொடு கொற்றமயி லூருந்
தழலாகங் காணத் தகும்.

பாடற் முதற் குறிப்பு அகராதி

[எண் - நூல், பாடல் எண்]

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் அனைத்துப் படைப்புகளும் திருத்தமான பாடத்துன் கூடிய ஆய்வுப் பதிப்பினைக் கொண்டுவரும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படும் இம்முதல் தொகுதியில் ஐந்து பிள்ளைத்தமிழ் நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவை,

1. திருச்செந்தூர் வள்ளியம்மன் பிள்ளைக்கவி
2. பழனிப் பிள்ளைக்கவி
3. சென்னை மாநகர்க் கந்தசுவாமி பேரிற் பிள்ளைக்கவி
4. தேவைப் பிள்ளைக்கவி (தேவக்கோட்டை)
5. தில்லை பாண்டிநாயகன்மேற் பிள்ளைக்கவி

இத்திட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள மற்றொரு நூல்
வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள்
ஆய்வுப் பதிப்பு - தொகுதி 2 - கலம்பகம்
விலை: ₹ **225**

ISBN 978-93-88972-15-4

9 789388 972154

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

₹ 225/-